2982

T.N.C.A. Debates

Official Report

Vol. XII No. 2

28th April, 1987

©

D
S211, 31 1987
N87. 41. 2
136527

வெளியீடு 25-4-1988 ,Issued 25-4-1988

A. Lib.
2982
12161
529/AL/88

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 28, 1987-தொகுதி 41-எண் 2
Tuesday, the 28th April 1987-Volume 41-No 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat Fort St. George,
Madras-600 009

நிலை ரூ.3.00 காசுகள்] [Price Rs-3.00 paise

N811,31 N87
N87.41.2
136527

## உள்ளடக்கம்.

28—4—1987


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 185—227 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) காஞ்சிபுரம் ஒன்றியக் கிராமங்களில் குடிநீர் இணைப்பைத் துண்டிப்பது குறித்து .. .. .. .. | 227 |
| (ஆ) அரசு விழாக்களில் உறுப்பினர்கள் பங்கேற்கும் வாய்ப்பு .. .. | 228 |
| 3. கவன ஈர்ப்பு— | |
| (அ) மதுரை பசுமலை மகாலட்சுமி மில் மூடப்பட்டிருத்தல் .. .. .. | 228—234 |
| (ஆ) சிதம்பரம் அருகில் தாசில்தார் கடப்பட்டு பணம் பறிக்கப்பட்டது .. .. | 234—238 |
| (இ) இராசபாளையம் இ. எஸ். ஐ. மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் இன்மை .. .. .. .. | 238 |
| (ஈ) விருதுநகர் வட்டத்தில் சில ஊர்களில் ஆற்று நீரில் கழிவுநீர் கலத்தல் .. | 239—242 |
| (உ) பெரம்பலூர் நேரு சர்க்கரை ஆலைக் கழிவு நீரால் பாதிப்பு .. .. | 242—245 |
| (ஊ) அம்பாசமுத்திரம் வட்டம் அரசன் குளத்தில் பள்ளியில்லாதது .. .. | 245—246 |
| (எ) சைதாப்பேட்டையிலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குத் தேவையான வசதிகள் இல்லாமை .. .. | 246—248 |
| (ஏ) அய்யம்பேட்டையில் துணை மின் நிலையம் அமைக்கும் பணி .. .. | 248—249 |
| (ஐ) வட ஆற்காடு மாவட்டம் தெக்குப்பட்டியிலுள்ள சந்தனபரப் பொருட்கள் தொழிற்சாலைப் பராமரிப்புப் பணிகள் | 249—251 |
| (ஒ) சேலம் மாவட்டம் மோளப் பாறையில் கொத்தடிமை குடும்பங்களின் நலனுக்கென அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கம் .. .. .. .. | 251—254 |

என்ன விவசாயிகள் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் நேரடிக் கொள்முதல் நிலையங்களுக்கு நெல் கொடுக்கும்போது குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 35 மதிப்புள்ள இடுபொருள்கள் உற்பத்திப் பெருக்க ஊக்கமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் இவ்வாண்டு சம்பா பருவத்திற்கும் நீட்டிக்கப்பட்டு 31—3—1987 வரை செயல்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

(ஆ) சென்ற ஆண்டும் இதே அளவுக்குத்தான் ஊக்கத் தொகையாக இடுபொருள் வழங்கப்பட்டது.

**திரு. கோ. வீரய்யன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, மற்ற மாவட்டங்களில் இல்லாத அளவுக்கு காவிரி பாசனப் பகுதியிலே ரூ. 35 மானியமாக வழங்குவதாகக் குறிப்பிட்டார்கள். குறிப்பாக, காவிரிப் பாசனப் பகுதியில் தஞ்சை மாவட்டம் முழுவதும் தனியாரிடம் ஒரு படி நெல்கூட விவசாயிகள் விற்க முடியாது. அரசு சிவில் சப்ளைஸ் துறையிடம்தான் விற்க வேண்டும். எனவே, ஏகபோகக் கொள்முதலை அரசு செய்யும்போது, ரூ. 35 மானியமாகக் கிடைக்கிறது. மற்ற இடங்களில் எல்லாம் அதிக மான விலைக்குப் பகிரங்க மார்க்கெட்டிலே விற்றாலும், அந்தப் பலனை தஞ்சை மாவட்ட விவசாயிகள் பெற முடியாமல் அரசு கொள்முதல் செய்கிறது. அரசு தேவையை உத்தேசித்து கொள்முதல் செய்கிறது என்பதிலே எனக்கு மாறுபட்ட கருத்தில்லை. ஆனால், ரூ. 35 மானியம் விவசாயிகளுக்குக் கொடுக்கும்போது அதன் பயனை முழுமையாக அவர்கள் அடைய முடியாத நிலைமையிருக்கிறது. குறிப்பாக, சில விவசாயிகளுக்கு ரூ. 2,000 லிருந்து, ரூ. 5,000 வரைக்கும் உரக் கூப்பனாக அவர்கள் தருகிறார்கள். அதை முழுவதும் உரமாக அவர்கள் பயன்படுத்த முடியாமல் உரக் கூப்பனையே அவர்கள் விற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே உரக் கூப்பனை வாங்கி விற்பனை செய்வதென்ற வியாபாரமே. பெரும் தொழிலே அங்கே நடந்து கொண்டிருக்கிறது. எனவே, அப்படி விவசாயிகள் உரக் கூப்பனை விற்கும்போது 100-க்கு ரூ. 35.



தள்ளுபடி செய்து, ரூ. 65 தான் அவர்கள் வாங்குகிறார்கள். எனவே, குவிண்டாலுக்கு ரூ. 35 கொடுத்தாலும், ரூ. 25 அளவுக்குக்கூட அந்த விவசாயிகளுக்குச் சேராத நிலைமை இருக்கிறது. எனவே, அந்த விவசாயிகள் முழுப் பயனை அடைவதற்கு, அந்த ரூ. 35 தொகையை, ரொக்கமாக, வண்டிச் சத்தம் என்ற பெயரிலோ அல்லது போனஸ் என்ற பெயரிலோ . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எவ்வளவு பெரிய கேள்வி?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி அல்ல, நான் சொல்ல வேண்டிய விடை பூராவையும் அவரே சொல்லிக் கொண்டிருக்கிறார். ரூ. 35 மானியம் கொடுத்து கொள்முதல் செய்து வருகிறோம். அதை விவசாயிகளே விரும்புகிறார்கள். அரசே கொள்முதல் செய்வது நல்லது என்று விவசாயிகளே விரும்புகிறார்கள், மாண்புமிகு உறுப்பினருக்கும் தெரியும். மாண்புமிகு திரு. உத்திராபதி அவர்களும் திரு. வீரய்யன் அவர்களும் முதல் அமைச்சரிடத்திலே இதுபற்றிக் கலந்து பேசியிருக்கிறார்கள். முதல் அமைச்சரும் ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். ரூ. 20 ரொக்கமாகக் கொடுத்து விடலாம்; ரூ. 15 உரமாகக் கொடுக்கலாம் என்ற எண்ணத்தைக்கூட அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இவை இரண்டும் அரசின் ஆய்விலே இருக்கின்றன.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு முழுமையாகக் கொள்முதல் செய்வதை நாங்கள் வரவேற்கிறோம், அதிலே ஒன்றும் பிரச்னை கிடையாது. கொள்முதல் செய்யும்போது, ரூ. 35 ஊக்கத் தொகை கொடுப்பதையும் நாங்கள் வரவேற்கிறோம். அது விவசாயிகளுக்கு நன்மைதான். ஆனால், இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலே விற்கக் கூடிய உரத்திற்கும் தனியார் கடையிலே விற்கக்கூடிய உரத்திற்கும் மூட்டைக்கு ரூ. 10 வித்தியாசமிருக்கிறது. அது டி.எப். ஆக இருந்தாலும், யூரியாவாக இருந்தாலும், கூட்டுறவுத் துறையிலே ரூ. 10 கூடுதலாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. தனியார் கடைகளிலே ரூ. 10 குறைத்து வியாபாரம் நடக்கிறது. அதிலே ரூ. 10 விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. உரம்

[1987 ஏப்ரல் 28

வேண்டாத பொருள் அல்ல; ஆனால், கொடுக்கப்படுகின்ற [illegible] கடைபாதனால், விவசாயிகள் தங்களுக்கு இருக்கக்கூடிய நெருக்கடியைப் போக்க, விற்கக்கூடிய நெருக்கடி அவர்களுக்கு ஏற்படுகிறது. ஆகவே, இடைத்தரகர்கள் தோன்றி, தொழிலை [illegible] செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, [illegible] விவசாயிகளுக்கு நன்மை செய்யக்கூடிய அரசு, [illegible] தன்மை செய்யக்கூடிய அளவுக்கு, கட்டுப்பாடு [illegible] [illegible] கடைக்கூட [illegible] இல்லாமல், கட்டுப்பாடு [illegible] [illegible] கடையிலும் நல்ல விலை கொடுப்பதற்கும், ஊக்கத் தொகையை ரூ. 20 [illegible], ரூ. 15 [illegible] [illegible] கொடுத்தாலும் விவசாயிகளுக்குப் பலன் கொடுக்கக்கூடிய வகையில் அமையும். [illegible] அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் இடைத் தரகர்களைத் தவிர்க்க வேண்டுமென்பதுதான் தலையாய கொள்கையாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக, விவசாயக் [illegible], உழைக்கின்ற வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப் படக்கூடாது என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறையோடு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு [illegible] நாம் குறைந்தது ரூ. 350-க்கு உரம் போட வேண்டி [illegible]. ஆனால், உரம் அதிக அளவுக்குப் போகாத வகையில் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அதை வலியுறுத்திக்கொண்டே வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அந்த வகையிலே ஒரு எண்ணத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதன் முடிவு இந்த மாண்புமிகு அவையின் மூலமாக நாட்டுக்கு அறிவிக்கப்படும் என்று தெரி வித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவசாயிகளுக்குக் கொடுக்கிற ரூ. 35-ஐ உரமாகக் கொடுப்பதால் அது அவர்களுக்கு உண்மையில் போய்ச் சேரவில்லை. அந்தக் கூப்பனை வாங்கி உர வியாபாரம்



1987 ஏப்ரல் 28]

செய்கின்றவர்கள்தான் பலன் பெறுகிறார்கள். இந்தக் கருத்து மாண்புமிகு முதல்வருக்குத் தெரிவிக்கப்பட்டு 35 ரூபாயும் உண்மையான விவசாயிகளுக்கே போய்ச் சேருவதற்கு என்ன வழிவகைகள் என்பதைப் பற்றி ஆராயச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே இருக்கிற சங்கடம் என்னவென்றால், இந்த ரூ. 35 நாம கொடுக்கும்போது, ரிசர்வ் வங்கி அதை எதிர்க்கிறது; மத்திய வங்கி அதைக் கொடுக்கக்கூடாது என்று எதிர்க்கிறது. அதனாலே [illegible] நான் ஏற்கனவே இந்த மன்றத்திலே தெரிவித்ததைப் போல [illegible] விலையை நிர்ணயிக்கின்ற அதிகாரமேகூட மாநில அரசுக்கு இருக்க வேண்டுமென்றுதான் அதற்காக நாம் வற்புறுத்தி வருகிறோம். உண்மையிலேயே இந்த ரூ. 35 ஊக்கத் தொகை, நேராக உழவர்களுக்குப் போய்ச் சேருகின்ற வகையில் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் சொன்னதைப் போல அரசு ஆய்ந்து வருகிறது.

**திரு. கே. ஆர். கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசு ரூ. 35 [illegible] பகுதியில் [illegible]. குறுவையில் கொடுக் [illegible] [illegible] [illegible] பயிருக்குப் பயன்படுத்த [illegible]. [illegible] பயிர்களுக்கு அவர்களுக்குக் கூப்பன் [illegible]. [illegible] ரூ. 35 கொடுப் [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] மக்கள் இல்லை. [illegible] அரசின் பரிசீலனையில் [illegible] [illegible] அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, மாண்புமிகு [illegible] துறை அமைச்சரும் அதைத்தான் சொன்னார்கள். நான்காவது கேள்வியிலும் அதுதான் வருகிறது. மத்திய வங்கி, ரிசர்வ் வங்கி, இந்தத் திட்டத்தையெல்லாம் எதிர்க்கிறது

[1987 ஏப்ரல் 28

என்றெல்லாம் தெரிவித்தார். அதுதான் உண்மை. விவசாயிகளாக முன்வந்து, கூட்டுறவுக் கடனிலே ரூ. 35-ஐக் கழித்துக் கொள்ளலாம் என்று சொன்னால், அது மிகவும் வரவேற்கத் தக்கது. இரண்டையும் அரசு பரிசீலித்து வருகிறது.

## 1985-ல் தமிழகத்தில் மாம்பழ உற்பத்தி

515—(*வினா எண் 5922) **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1985 ஆம் ஆண்டு மாம்பழ உற்பத்தி எவ்வளவு?

(ஆ) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(இ) அதன் மதிப்பு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ் நாட்டில் 1984-85 ஆம் ஆண்டு மாம்பழ உற்பத்தி மதிப்பீடு 3.31 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும்.

(ஆ) ஆம்.

(இ) அதன் மதிப்பு ரூ. 0.98 இலட்சம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பழத்தைத் தனியார் ஏற்றுமதி செய்வது தடைபடுத்தப் பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் மாம்பழம் 20 சதவிகிதம்தான் உற்பத்தியாகிறது. மீதி 80 சதவிகிதம் ஆந்திராவிலிருந்துதான் வருகிறது. ஆகவே, மாம்பழ உற்பத்தியைப் பெருக்குகிற வகையில், மாம்பழ வாரியம் என்று அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, மாம்பழ வாரியம் இல்லாமலேயே மாமரம் ரொம்பக் கருணை காட்டி இருக்கிறது. 1983-84 ஆம் ஆண்டு 71,007 டன்கள்தான் உற்பத்தி: 1984-85 ஆம் ஆண்டு 3.31 இலட்சம் டன்கள் உற்பத்தியாகியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 28]

(முற்பகல் 10-10)

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகத்தில் மாம்பழங்களெல்லாம் புளிப்பதே கிடையாது. அப்படிப் புளித்தாலும் இன்ஜெக்ஷன் போட்டு அதை இனிப்பாக்கி விடுகிறார்கள். நம் தமிழ்நாட்டில் சில வகை மாம்பழங்கள் புளிப்பாக இருக்கின்றன. அதே மாதிரி இன்ஜெக்ஷன் போட்டு மாம்பழங்கள் கர்நாடகத்தில் இருப்பதைப்போல இனிப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இந்த ஆராய்ச்சியெல்லாம் தமிழ்நாட்டிலே ஏற்கனவே கோயம்புத்தூரில் ஜி. டி. நாயுடு அவர்களாலே செய்யப்பட்டிருக்கிறது. இது ஒன்றும் புதுமை அல்ல.

**டாக்டர் த. முகம்மது சலீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரியகுளம் வட்டத்தில் ஏறக்குறைய மூன்று கோடி ரூபாய் அளவில் ஒவ்வொரு ஆண்டும் மாம்பழம் உற்பத்தி செய்யப்பட்டு, பெங்களூர், பம்பாய், நாக்பூர் போன்ற இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. பெரியகுளம் தொகுதி ஒரு வறட்சி தொகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், அங்கே எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லாத காரணத்தினாலும் மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் குறிப்பு அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, மதுரையைவிட தர்மபுரி மாவட்டத்திலேதான் அதிகமான மாம்பழங்கள் உற்பத்தி ஆகின்றன. ஆகவே, தற்பொழுது அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப்போல, தர்மபுரி மாவட்டத்தில் மாம்பழம் மிக அதிக அளவிலே உற்பத்தி ஆகிறது. சேலத்து மாங்கனி என்றுகூடப் பெயர்பெற்றது தர்மபுரி மாவட்டத்திலே உற்பத்தியாகி, சேலம் ஒன்றாக இருந்தபொழுது அங்கு மார்க்கெட்டுக்கு வந்த காரணத்தினால்தான். அந்த மாம்பழத்தை இப்பொழுது தனியார் பல்வேறு மாநிலங்களுக்கும்,

வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த மாம்பழத்தை நல்லமுறையில் பக்குவப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் அரசுத் துறையிலேயோ அல்லது கூட்டுறவுத் துறையிலேயோ அதற்கேற்ற தொழிற்சாலையை அமைக்க அரசு ஏதேனும் செயற்குறிப்பு வைத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவரவர்களே, மாம்பழம் ஏற்றுமதி ஆகிறது. விமானங்கள் மூலம் வெளிநாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி ஆகிறது, கப்பல்கள் மூலமாகவும் சென்ற ஆண்டு 24,384 கிலோ மாம்பழம் ஏற்றுமதியாகியிருக்கிறது. ஆனால் அது தமிழ்நாட்டில் மட்டும் விளைந்த மாம்பழமா என்று தெரியவில்லை. ஏனென்றால் ஆந்திராவிலிருந்தும் இந்தத் துறைமுகத்தின் மூலமாகத்தான் மாம்பழங்கள் ஏற்றுமதி யாகின்றன. தற்பொழுது மாம்பழம் சாறு பிழிகின்ற அளவிற்கு மீதம் இருப்பதும் இல்லை; தங்குவதும் இல்லை. ஒரேயொரு தொழிற்சாலை பெங்களூரிலே இருக்கிறது. அதற்கே மாம்பழம் கொஞ்சம்தான் கிடைக்கிறது.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்:** பேரவைத் தலைவரவர்களே, இமாசலப் பிரதேசத்தில் அந்த மாநில அரசே ஆப்பிள் பழங்களையெல்லாம் சாறாகப் பிழிந்து பாட்டில்களிலேயும், பாலிதீன் பேக்குகளிலேயும், டின்களிலேயும் அடைத்து நாடு முழுவதும் விற்பனைக்கு அனுப்பி அதிக அளவிலே அந்த அரசு இலாபம் சம்பாதித்துக்கொண்டு இருக்கிறது. அதைப்போல நாது அரசும் இந்த மாம்பழங்களையெல்லாம் சாறாக எடுத்துப் பாட்டில்களிலேயும் மற்ற டின்களிலேயும் அடைத்து நாடு முழுவதும் விற்பனை செய்து இலாபம் பெற கருத்து உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, சில தனியார்கள் மாம்பழ ஜூஸ் எல்லாம் செய்து விற்பனை செய்கிறார்கள். மற்றபடி மாம்பழங்கள் அதிகமாக இல்லை. நான் ஏற்கனவே சொன்னதைப்போல சென்ற ஆண்டே 71,000 டன்தான் நமக்குக் கிடைத்தது. இந்த ஆண்டு மூன்று இலட்சத்து



முப்பத்தோறாயிரம் டன் விளைந்திருக்கிறது. ஆகவே, அதிகமாக இல்லை. அதுவும் நம்முடைய தமிழ் நாட்டில் மக்களுடைய சுபாவம், பழத்தை அப்படியே மார்க்கெட்டிலேயிருந்து வாங்கிச் சாப்பிடுவதுதான். பழ ரசமாகப் பிழிந்து சில கம்பெனிகள் விற்கிறார்கள். அவர்களுடைய முயற்சி, கர்நாடக மாநிலத்திலே இருக்கிறது. இங்கேயிருந்தும் மாம்பழங்களை அங்கே வாங்கிக் கொண்டு போய் பழ ஜூஸாகச் செய்து மற்ற மாநிலங்களுக்கு விற்கிறார்கள்.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாம்பழ ஏற்றுமதி தர்மபுரி மாவட்டத்தைவிட வடார்க்காடு மாவட்டம் திருப்பத்தூரிலேயிருந்து அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆகவே, அதைப் பயன்படுத்தி அங்கே பதப்படுத்துகின்ற தொழிற்சாலை ஏற்படுத்தப்படுமா? வடார்க்காடு மாவட்டத்தில் வேலூரிலே ஏற்கனவே ஏற்படுத்தப் பட்டு மூடியுள்ள அந்தப் பழத் தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்ன பதிலைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. இங்கே பழம் அதிகமாக இல்லை. இமாசலப் பிரதேசத்தில் ஆப்பிள் ஜூஸ் எடுக்கிறார்கள் என்று சொன்னால், ஒரு நாளைக்கு இமாசலப் பிரதேசத்திலேயிருந்து சென்னைக்கு மட்டும் 15 லாரிகள் லோடு வெறும் ஆப்பிள் பழம் மட்டும் வருகிறது. அந்த அளவிற்கு அங்கே விளைச்சல் அதிகமாக இருக்கிறது. இங்கே இரண்டு மூன்று மாவட்டங்களிலேதான் இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்துக்காரரும் தங்களுடைய மாவட்டத்தில்தான் அதிகமாக விளைவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் அது அல்ல உண்மை. தர்மபுரி மாவட்டத்திலே தான் அதிகமாக விளைகிறது.

[1987 ஏப்ரல் 28

**பத்மநாபபுரம் தொகுதி புலியூர்குறிச்சி உதயகிரிக்கோட்டையில் விவசாயக் கல்லூரி.**

516—(* வினா எண். 7615) **திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதியில் புலியூர்குறிச்சி உதயகிரிக் கோட்டையில் விவசாயக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவரவர்களே, கன்னியாகுமரி
மாவட்டத்தில் தென்னை, இரப்பர், கரும்பு போன்ற பயிர்கள்
நெல்லுக்கு அடுத்தபடியாக இருந்துகொண்டிருக்கின்றன. அந்தப்
பயிர்கள் பல்வேறுபட்ட நோய்களினால் பாதிக்கக்கூடிய சூழ்நிலை
இருக்கிறது. அதன் காரணமாக விவசாயிகள் **பாதிக்கப்படக்**
கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பதால் அந்த விவசாயிகளுக்கு உதவி
செய்கின்ற முறையில் ஒரு வேளாண்மைக் கல்லூரியை ஆராய்ச்சி
நிலையத்தோடு சேர்த்து ஆரம்பிக்க அரசு நடவடிக்கை
எடுக்குமா ? அரசுக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலம் அங்கே
காலியாக இருக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் வேளாண்மைக்
கல்லூரியும், ஆராய்ச்சி நிலையமும் அமைக்க நடவடிக்கை
எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே,
கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி
1984-85 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அது அங்குள்ள
மக்களுக்குப் பயனுடையதாக இருக்கிறது ; தேவையைப் பூர்த்தி
செய்துகொண்டு வருகிறது.



1987 ஏப்ரல் 28]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவரவர்களே, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு
வேளாண்மைக் கல்லூரி இருக்கிறது என்று சொன்னார்கள்.
இன்றைக்கு அது மிகச் சிறிய அளவில், ஏற்கெனவே உள்ள ஒரு
விவசாயக் கிடங்கோடு சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறதே தவிர
கல்லூரி என்ற அளவில் செயல்படவில்லை. இந்தியன் கவுன்சில்
ஃபார் அக்ரிகல்சுரல் ரிசர்ச் சென்டர் ஏற்கெனவே பல்வேறு
விவசாயப் பயிர்கள் இருப்பதால் அங்கே ஆராய்ச்சி நிலையம்
அமைக்க திட்டம் போட்டு, மாநில அரசிடம் இடமும்
கேட்டிருக்கிறது. ஆகவே, பத்மநாபபுரத்தில், அரசுக்குச்
சொந்தமான 100 ஏக்கர் நிலம் காலியாக இருப்பதால் அந்த
இடத்தில், அக்ரிகல்சுரல் ரிசர்ச் சென்டரும் வேளாண்மைக்
கல்லூரியும் ஏற்படுத்த மத்திய அரசோடு தொடர்பு கொண்டு
தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, எல்லா
மாவட்டங்களிலும் ஒவ்வொரு ஆராய்ச்சிப் பண்ணை வைப்பது
என்பது கடினமான காரியம். தேவையின் அடிப்படையில்
அதுபற்றி யோசிக்கலாம். இன்றைக்கு கிள்ளிகுளம் என்ற
இடத்தில் மூன்றாவது வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட
உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. பாலச்சந்திரன் :** தலைவரவர்களே, இது
என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட கேள்வி. இந்தக் கேள்வி
சம்பந்தப்பட்ட புலியூர்குறிச்சி உதயகிரிக்கோட்டையில்
அரசுக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம்
காலியாக இருக்கிறது. நாஞ்சில்நாடு இருக்கிற கன்னியாகுமரி
மாவட்டம் நெல் நிறைந்த மாவட்டம். அங்கே விவசாய மக்களும்
அதிகமாக இருக்கிறார்கள். இயற்கையின் காரணமாக பல்வகைப்
பட்ட பயிர்கள் வளர்கின்றன. அவற்றை எல்லாம் கருத்திற்
கொண்டு அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்த வேண்டு
மென்று நீண்டகாலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே,
இந்தக் கோரிக்கையை அரசு கனிவோடு கவனிக்குமா என்று
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல மூன்றாவது வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு இருக்கிறது. ஆராய்ச்சிப் பண்ணை அமைப்பதுபற்றி அதிகாரிகளைக் கலந்துபேசி ஆலோசனை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** தலைவரவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் எந்த ஒரு 'ப்ரஃபஷனல் காலேஜும்' கிடையாது. அங்கே அக்ரிகல்சர் காலேஜ் அமைப்பதற்கு நல்ல சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. அங்கே கல்லூரி தொடங்கவில்லை என்றாலும் ரீசர்ச் சென்டர் தொடங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, மத்திய அரசின் உதவியோடு ஒரு ரீசர்ச் சென்டர் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, மத்திய அரசு இப்படிப்பட்ட உதவியைச் செய்வதாக தற்போது என்னிடம் தகவல் இல்லை. உதவி செய்வதாக இருந்தால் அதுபற்றி ஆலோசனை செய்யலாம்.

**திரு. எப். எம். இராசரத்தினம்:** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயத்தையே நம்பியிருக்கிற விவசாய மக்கள் நிறைந்திருக்கிறார்கள். அந்தத் தன்மையைக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை வழங்கு கின்ற அடிப்படையில், திருப்பதிசாரம் என்ற இடத்தில் ஏற்கெனவே ஒரு விவசாயப் பயிற்சி நிலையம் இயங்குகிறது; அந்தப் பயிற்சி நிலையத்தை விஸ்தரித்து விவசாயக் கல்லூரி யாகவோ அல்லது ஆராய்ச்சிப் பண்ணையாகவோ அமைக்க அரசு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, கோவையில் இருக்கிற விவசாயப் பல்கலைக் கழகம் பல ஆராய்ச்சிப் பண்ணைகளை ஆங்காங்கே வைத்திருக்கிறது. தேவைப்பட்டால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ஆராய்ச்சிப் பண்ணை வைப்பதுபற்றி, அது சம்பந்தப்பட்ட விஞ்ஞானி களைக் கலந்து ஆலோசிக்கலாம்.





**திரு. அ. வெங்கடாசலம்:** தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியான்மலையில் அண்ணா வேளாண்மைப் பயிற்சி மையம் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைப்பதுபற்றி அரசு அதிகாரிகள் பரிந்துரை அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்குப் போதிய கட்டடங்களும் போதிய இடவசதியும், போதிய நீர் வசதியும் குடுமியான்மலையில்

சிறப்பாக அமைந்திருக்கின்றன. புதுக்கோட்டையிலே 2,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் பயிர் ஆராய்ச்சி நிலையம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. எனவே புதுக்கோட்டை மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம் என்பதைக் கருத்தில் கொண்டு, அங்கே அனைத்து வசதி இருக்கின்ற காரணத் தால் புதுக்கோட்டையில் ஒரு வேளாண்மைக் கல்லூரியை அமைக் கின்ற கருத்துருவும் வந்திருக்கின்ற நிலைமையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை அமைக்கின்ற நடவடிக்கையை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு வசதியும் இருக்கிற இடத்தில் கல்லூரி வைப்பது நல்லதல்ல. அவையெல்லாம் இல்லாத இடத்தில் கல்லூரியை வைத்து அந்த இடத்தை வளர்ப்பதுதான் இந்த அரசின் நோக்கமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### விவசாயிகளுக்கு உரம், பூச்சி மருந்து மானியம்.

***517—(*வினா எண். 7980) திரு. பாப்பா சுப்பிரமணியன்:*** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உரம், பூச்சி மருந்து வழங்கும் மானியத்தில் ஒரு பகுதியை கூட்டுறவுக் கடனுக்காக நிலுவையில் வரவு வைத்து விவசாயி களின் கடனை அடைத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது காவேரிப்படுகைப்பகுதியில் அமுலில் உள்ள உற்பத்தி ஊக்கத் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு மானியமாக வேளாண்மை இடு பொருள், கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. வேளாண்மை இடு பொருள் மானியத்தில் ஒரு பகுதியை கூட்டுறவுக் கடன் நிலுவைக்காக வரவு வைத்து, விவசாயிகளின் கடனை அடைத்திடும் யோசனை ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்துக்கு நன்றி. கூட்டுறவுச் சங்கங்களிலே ஒரு ஏக்கருக்குக் கடன் பெறுகிறபோது அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே இருந்து உரம், பூச்சிமருந்துக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்குகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் டி.பி.சி.-யில் நெல்லைப் போடுகிறபோது அந்த சென்டரில் உர டோக்கன்களை மானியமாகத் தருகிறார்கள். இப்படி இரண்டு ரூபங்களில் உரம் கொடுக்கின்ற காரணத்தால் விவசாயத்திற்கான தேவையை விட அதிக அளவில் உரம் இருப்பதால், அவ்வாறு அதிகமாக இருக்கின்ற உரங்களை ஒரு மூட்டைக்கு 30 ரூபாய், 40 ரூபாய் என்று விலையைக் குறைத்து தனியாரிடம் விற்பனை செய்கிற நிலைமை ஏற்படுகிறது. எனவே அதைக் கருத்தில் கொண்டு உடனடியாக இந்த ஆண்டே அந்த உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்க முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல் உர ஊக்கக் கூப்பன் கொடுக்கின்ற முறையினைப் பொறுத்தவரையில் ஒரு பகுதியை ரொக்கமாகக் கொடுப்பதற்கோ, கூட்டுறவுக் கடனில் வரவு வைத்துச் சேர்ப்பதற்கோ மத்திய அரசு மற்றும் ரிசர்வ் வங்கியின் மறுப்புக்கு இலக்காகக்கூடும் என்கிற கருத்தினைத் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே மத்திய அரசும் ரிசர்வ் வங்கியும் இதனை எதிர்க்கிறார்கள். ஆகவேதான் உரக் கூப்பன்





களாகத் தந்துகொண்டிருக்கிறோம். நான் ஏற்கெனவே சொன்னதுபோல் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 20 ரூபாய் பணமாகவும் மீதி 15 ரூபாயை உரமாகவும் வழங்குவது பயன் உள்ளதாக இருக்கும் என்ற கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள். அது அரசின் ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இல்லை என்று சொன்னால்— கூட்டுறவுச் சங்கங்களில் உரம், பூச்சிமருந்துக்கு ஒரு ஏக்கருக்கு இவ்வளவு என்று ஒதுக்கீடு செய்து கடனில் தருகிறார்கள். அப்படி உரம், பூச்சி மருந்து கட்டாயமாகப் பெற்றாகவேண்டும் என்ற நிலைமை இல்லாமல் அந்த உரம் மற்றும் பூச்சிமருந்துக்குப் பதிலாக பணமாகவே கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து பெறக் கூடிய அளவுக்கு இந்த அரசு ஒரு உத்தரவைப் பிறப்பிக்குமா அல்லது கூட்டுறவுத் துறைக்கு ஆலோசனை சொல்லுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலானவர்கள் பணத்தைத்தான் எதிர்பார்ப்பதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சொல்கிறார்கள். ஆகவேதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 20 ரூபாயை பணமாகத் தரலாம் என்றும் 15 ரூபாய்க்கு உரமாகத் தரலாம் என்றும் கருத்து தெரிவித்தார்கள். அது அரசின் ஆய்வில் இருக்கிறது. அது வந்ததற்குப் பிறகு நல்ல முடிவு நாட்டுக்கு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. வீரய்யன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 20 ரூபாய் ரொக்கமாகவும், 15 ரூபாய் அளவில் உரமாகவும் கொடுக்கலாம் என்பது குறித்து அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பரிசீலனை முடிந்தபிறகு, இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து கொடுக்கப்பட்டிருக்கின்ற கூப்பன்களைப் பொறுத்தவரையில்கூட இதனை அமலாக்கக்கூடிய வகையில் அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 28

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிற கூப்பன்களை எல்லாம் திரும்பப் பெறுகிற உத்தேசம் இல்லை. எதிர்காலத்தில் நல்ல திட்டங்களைத் திட்டலாம்.

**திரு. துரை. கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காவேரிப்படுகைப் பகுதியில் விவசாயம் செய்கிற விவசாயிகளுக்கு நெல்லுக்கு மானியமாகத் தரப்படுகின்ற பணத்தைப் பொறுத்தவரையில் 35 ரூபாயை நேரடியாகக் கொடுப்பதற்கு சிக்கல்கள் இருக்கின்றன என்று அறிவிக்கிறார்கள். நெல்லை உற்பத்தி செய்கிறபோது முதலில் கூட்டுறவு நாணயச் சங்கத்தின் மூலமாகக் கடன் பெற்று அந்த வகையிலே 30 சதவீதத்தை உரமாகப் பெற்றுத்தான் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. அதற்குப் பின்னாலே நெல்லை சென்டருக்கு எடுத்துக்கொண்டு போகிறபோது அங்கே ஒரு ஏக்கருக்கு ஏறத்தாழ 20 குவிண்டால் அளவுக்கு அதாவது கிட்டத்தட்ட 500 ரூபாய் மதிப்பிற்குரிய உரம் வழங்கப்படுகிறது. அந்த 600 ரூபாய் மதிப்புள்ள உரத்தை ஒரு ஏக்கர் நிலத்திலே போடுவதற்கான வசதி இல்லை. அதோடு மட்டுமல்லாமல் ரொண்டுக் காலத்திற்கு அந்த உரங்களை வாங்கி வீட்டில் வைத்துக்கொண்டிருந்து மறு ஆண்டிலே விவசாயத்தை தொடங்குகிறபோது அதற்குப் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு சேமித்து வைக்கக்கூடிய போதிய இடவசதியும், கிடங்கு வசதியும் அவர்களுக்கு இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு விவசாயத் துறையின் மூலமாக வைக்க போனஸ் என்பதைவிட கூட்டுறவு நாணயச் சங்கத்திற்கு அந்தப் பணத்தைச் செலுத்தி— கூட்டுறவு நாணயச் சங்கத்தின் மூலமாக உரத்தை விவசாயத்திற்கு இப்போது தந்துகொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் முதலில்—கூட்டுறவு நாணயச் சங்கத்தில் வாங்கிய கடனுக்கு வரவு வைத்துக்கொள்வதுபோல் பணமாக வழங்குவதற்குரிய வகையில் அரசு யோசிக்குமா, அதிகாரிகளிடத்தில் கலந்தாலோசிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல கூட்டுறவுக் கடனுக்கு அதை வரவு வைத்துக் கொள்வதற்கு எந்த அட்டியும் கிடையாது. ஆனால் ரிசர்வ் பாங்கும், மத்திய அரசும் அப்படிப்பட்ட முறைகளில் ஈடுபடக் கூடாது என்று நமக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள்.... விவசாயிகளிடத்தில் இடம் இல்லை, அந்த உரத்தை வைத்து காப்பாற்ற முடியாது என்ற எண்ணங்களை அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. அதனால்தான் புதிய எண்ணம் ஒன்றை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன்படி 20 ரூபாய் பணமும் 15 ரூபாய்க்கு உரமும் தந்தால் அது விவசாயிகளுக்கு ஏற்புடையதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். சராசரி கணக்கை நாம் எடுத்திருக்கிறோம். அதன்படி ரூ. 600 உரம் என்பதை கணிசமாக குறைத்து 300 ரூபாய்க்கு வழங்கினால் அது விவசாயிகளுக்குப் பயன்படும் என்று நான் கருதுகிறேன்.

### பெரியகுளத்தில் மாம்பழத் தொழிற்சாலை.

**518—(*வினா எண். 10244) டாக்டர் த. முகம்மது சலீம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளத்தில் மாம்பழங்களைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்ப தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை

[1987 ஏப்ரல் 28

**சிமெண்ட் நிறுவனங்களுக்கு சுண்ணாம்புக்கல் சுரங்க குத்தகை.**

519—(* வினா எண். 10486) திரு. ஆர். செங்கசாமி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சிமெண்ட் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள் சுரங்கச் சட்டத்தின்படி 20 ஆண்டுகால இடைவெளியில் புதுப்பிக்கப்படாத காரணத்தால் சுரங்கங்களில் வேலைவாய்ப்பும் சிமெண்ட் தொழிற்சாலைகளில் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கனிமக் கொள்கையை செவ்வனே செயல்படுத்த, ஏற்கனவே சுண்ணாம்புக்கல்லை அகழ்ந்தெடுக்க உரிமம் வழங்கப்பட்ட பிரதம சிமெண்ட் ஆலைகளுக்கு, அரசின் கனிமக் கொள்கைப்படி. அதிகபட்சமாக ஆறு ஆண்டுகளுக்கு சுரங்கக் குத்தகை புதுப்பிக்கப்பட்டு வருகிறது. ஆகவே சுரங்க வேலைவாய்ப்பும் சிமெண்ட் உற்பத்தியும் பாதிக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சிமெண்ட் ஆலைகள், சுரங்கக் குத்தகையைப் புதுப்பிக்கக் கோரி அரசுக்கு விண்ணப்பங்கள் அனுப்பி பல மாதங்களாக அப்படியே இருக்கிறது. இது தவிர தமிழ்நாட்டில் புதிய மினி சிமெண்ட் ஆலைகள் துவக்க மத்திய அரசிடம் அனுமதி பெற்று அதற்காக சுண்ணாம்புக்கல்லை வெட்டி எடுக்க புதியதாக உரிமங்கள் கோரி வந்த விண்ணப்பங்கள் எல்லாம் பரிசீலனை செய்யப்படாமல் நீண்ட நாட்களாக இருக்கின்றன. நான் அமைச்சரைக் கேட்டுக் கொள்வதெல்லாம் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியைக் கருதி, அந்த மினி சிமெண்ட் பாக்டரிகளுக்கு புதிய உரிமங்கள் கொடுக்கின்ற வகையிலும் பழைய உரிமங்களை புதுப்பிக்கின்ற வகையிலும் விரைவாக அரசு நடவடிக்கை எடுக்குமா? ஏனென்றால் ஆந்திர மாநிலத்தில் மினி



1987 ஏப்ரல் 28]

சிமெண்ட் பாக்டரிகளுக்கு அவர்கள் நிறைய உரிமங்கள் தந்து அங்கு தயாராகும் சிமெண்டுகள் தமிழகத்திலே நிறைய விற்கப் பட்டு வருகின்றன. ஆகவே விரைவாக விண்ணப்பங்களை கவனித்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்திலும், மத்திய பிரதேசத்திலும் நிறைய சுண்ணாம்புக்கற்கள் இருக்கின்றன. அந்த அளவுக்கு தமிழ்நாட்டில் இல்லை என்பதை நான் உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் பெரிய சிமெண்ட் ஆலைகளுக்கு அனைத்து விண்ணப்பங்களும் இந்த அரசால் வரவேற்கப் பட்டன. ஒன்பது விண்ணப்பங்கள் வந்தன. ஆறு புதிய ஆலைகள் திறக்க மத்திய அரசின் தொழில் நுட்ப மேம்பாட்டு இயக்ககம் அனுமதி வழங்கி இருக்கிறது. அதிலே இரண்டு சிறிய சிமெண்ட் ஆலைகள் உற்பத்தியைத் தொடங்கி இருக்கின்றன.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். மதுக்கரையில் இருக்கின்ற ஏ.சி.சி. சிமெண்ட் தொழிற்சாலைக்கும் அதுபோல அரியலூருக்குப் பக்கத்தில் இருக்கிற மினி சிமெண்ட் ஆலைக்கும் கொடுக்கப்பட்ட லைசன்சுகள் இன்னும் புதுப்பிக்கப்படாமல் தற்காலிகமாக கொடுக்கப்பட்டு வருகிறதே. அந்த நிலையை மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, மதுக்கரை சிமெண்ட் ஆலைக்கு சுண்ணாம்புக் கல் தாமதப்படுகிற குறிப்பு என்னிடத்தில் இல்லை. மதுக்கரையில் அசோசியேட். சிமெண்ட் கம்பெனி விண்ணப்பித்து இருக்கிறார்கள். சுண்ணாம்புக்கல் வெட்டியெடுக்கும் குத்தகையைப் பொறுத்த வரையில் மூன்று சுரங்கக் குத்தகைகளைப் புதுப்பிக்க அவர்கள் விண்ணப்பித்து இருக்கிறார்கள். அவை அரசினுடைய ஆய்வில் இருக்கின்றன.

[1987 ஏப்ரல் 28

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்):** தலைவர் அவர்களே, 6 ஆண்டு காலத்திற்கு உரிமங்கள் வழங்கப்படுகின்றன என்ற விவரத்தைச் சொன்னார்கள். சில பிரபல சிமெண்ட் ஆலைகள் தங்கள் தேவைக்கு மேல் பல இடங்களில் 100 ஏக்கர், 200 ஏக்கர் என்று லைசென்ஸ் வாங்கி வைத்துக்கொண்டு உபயோகப்படுத்தாமல் இருக்கிறார்கள். மற்ற ஆலைகள் வருவதையும் தடுக்கிற நிலையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆறாண்டு காலம் அல்லது பத்தாண்டு காலமாக இருந்தாலும் உரிமம் வழங்கி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வேலை துவங்கவில்லையென்றால அதனை ரத்து செய்கிற நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அது அரசினுடைய பரிசீலனையில்தான் இருக்கிறது. டால்மியா சிமெண்ட்ஸ் நிறுவனம் அதிக உரிமங்களை வைத்திருக்கிறது. அதற்கு திருச்சி மாவட்டத்திலும், பெரிய நகரங்களிலும் இருக்கிற சுரங்கக் குத்தகையை புதுப்பிக்கும் விண்ணப்பத்தை அரசு நிராகரித்து, அதைத் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்திற்கு ஒதுக்கியிருக்கிறது. அந்தமாதிரியான வேலைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ்:** தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம், பாளையத்தில் சிமெண்ட் ஆலை நிறுவ வேண்டுமென்று பல ஆண்டுகளாக கோரிக்கை வைக்கப்பட்டு, அது சம்பந்தமாக மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையில் பல தடவை பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. எனவே பாளையத்தில் ஒரு சிமெண்ட் ஆலை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் நடைபெற்ற தொழில் மானியத்தில் அதுபற்றி குறிப்பிட்டு இருக்கிறேன். பாளையத்தில் சிமெண்ட் ஆலை அமைக்க அரசு ஆய்வு செய்து வருகிறது.



1987 ஏப்ரல் 28]

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, மதுக்கரை அசோசியேட் கம்பெனி, சுண்ணாம்புக் கல்லை வெட்டியெடுக்கிற உரிமையைப் பெற்று அந்தப் பகுதியில் இருக்கிற மலை முழுவதையும் நீண்டகாலமாக தங்கள் கையில் வைத்திருக்கிறார்கள். அதனைப் புதுப்பித்தும் வருகிறார்கள். குறைந்த மூலதனத்தைக் கொண்டு மினி சிமெண்ட் ஆலைத் தொழிலை செய்ய வரக்கூடியவர்களுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய முறையில், குறைந்த விலையில் அவர்களுக்கு மூலப்பொருளாக இருக்கிற சுண்ணாம்புக் கல் கிடைப்பதற்கு அவர்களுக்கு உரிமம் வழங்குவதில் அதற்குரிய கட்டணங்களைக் குறைத்து சலுகை காட்டப்படுமா? அதிகமாக கற்கள் டெபாசிட் இருக்கிற இடத்திலிருந்து அவர்கள் அதனைக் கொண்டு வருவதற்கு அனுமதி கொடுத்து அந்தச் சிறு தொழிலை வளர்ப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே. மதுக்கரை சிமெண்ட் ஆலையைப் பொறுத்தவரையில் இது ஒரு தனியார் நிறுவனமாகும். ஆகவே உரிமம் கிடைப்பதில் எந்த சங்கடமும் இருக்காது. எங்கே சுண்ணாம்புக் கல், சிமெண்ட் கிரேடு கிடைக்கிறதோ அவைகளையெல்லாம் சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு ஒதுக்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

### கோவை மாவட்டத்தில் உலக வங்கி குடிநீர்த் திட்டம்.

**520—(*வினா எண். 11556) திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள உலக வங்கி குடிநீர்த் திட்டத்தில் (பவானி ஆற்றுத் திட்டம்) காரமடை ஒன்றியத்தில் பயன்பெறும் கிராமங்கள் எத்தனை?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி உதவியோடு செயல்படுத்த இருக்கும் அத்திக்கடவு திட்டத்தில், காரமடை ஊராட்சி

[1987 ஏப்ரல் 28

ஒன்றியத்தைச் சேர்ந்த பெள்ளாதி ஊராட்சியில் 9 குக்கிராமங்
களும் சிக்காரம்பாளையப் ஊராட்சியில் 12 குக்கிராமங்களும்
பயன்பெறும்.

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, உலக வங்கித்
திட்டமான அத்திக்கடவு குடிதண்ணீர் திட்டத்தில் முகப்பு
வாயிலே காரமடை ஒன்றியத்தில்தான் துவங்குகிறது. நானூ
றக்கும் மேற்பட்ட கிராமங்கள் இதில் பயன்படுவதாக திட்ட
மிட்டு வரையறுக்கப்பட்டிருக்கிறது. காரமடை ஒன்றியத்தில்
இருக்கிற மற்ற பகுதிகள் இன்னும் ஏழு கிராமங்கள் இதில்
சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்தத் திட்டம் துவங்கிய
காலத்திலிருந்தே வற்புறுத்தி வருகிறேன். அதிகாரிகள் நான்கு
கி.மீ. வரையில் உள்ள கிராமங்கள் மெயின் குழாயிலிருந்து குடி
தண்ணீர் சப்ளைக்காக எடுத்துக் கொள்ளப்படுமென்று தெரிவித்
திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைக்
கருத்தில் கொண்டு, காரமடை ஒன்றியத்தில் இருக்கிற ஏற்கனவே
கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிற அந்த ஏழு கிராமங்களை
எடுத்துக்கொள்வதற்கான உத்தரவைப் பிறப்பிப்பார்களா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே,
சம்பந்தப்பட்ட பொறியாளர்களைக் கலந்து, மாண்புமிகு உறுப்
பினர்களுடைய ஆலோசனையை ஏற்று நடவடிக்கை மேற்
கொள்ளலாமென்று கருதுகிறேன்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, இந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது
என்பதையும் எப்போது முடிவுறும் என்பதையும் அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இந்தத்
திட்டத்தில் மொத்தம் 12 குக்கிராமங்கள் அடங்கியிருக்கின்றன.
மொத்தம் 16 ஆயிரம் பேர்களுக்கு தண்ணீர் வழங்க இருக்கிறது.
இந்தத் திட்டம் முடிவடையும் நாள் குறிப்பிடப்படவில்லை என்
றாலும், இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக முடிவு அடையும்.



1987 ஏப்ரல் 28]

**தமிழக அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சி மொழி.**

521—(*வினா எண். 3340) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி.**
**பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)**: மாண்பு
மிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா
வுக்கு விடையளிப்பாரா—

தலைமைச் செயலகம், மாவட்ட, வட்ட அலுவலகங்களில்
அலுவல்கள் முழுமையும் தமிழ் ஆட்சி மொழியிலேயே அமைய
கால வரையறை நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீல
னையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே,
தலைமைச் செயலகம், அரசின் துறைகள், சார்பு நிறுவனங்கள்,
மாநகராட்சிகள், வாரியங்கள், கழகங்கள், மற்றும் கூட்டுறவு
இணையங்கள் அனைத்திலும் தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தை
விரிவுபடுத்திட 31—10—1986 அன்று ஆணை வெளியிடப்பட்
டுள்ளது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்**
**(பேரவைத் துணைத் தலைவர்)**: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வட்ட, மாவட்ட அளவிலே இருக்கிற அலுவலகங்
களில் ஒரு தேதியைக் குறிப்பிட்டு, அந்தக் காலக் கெடுவிற்குள்
ஆட்சி மொழியாகத் தமிழை நிருவாகத்தில் கொண்டு வர உத்தர
விட்டு இருந்தாலும், பல அலுவலகங்களில் பாதி தமிழிலும்,
மீதியை ஆங்கிலத்திலும் உத்தரவுகளை—பொதுமக்களுக்கு
எழுதுகிற கடிதங்களுக்குக் கூட—இன்னும் எழுதிக் கொண்டிருக்
கிறார்கள். சில அலுவலகங்களில் இதுபற்றிக் கேட்கிறபோது,
தமிழ்த் தட்டச்சு இயந்திரங்கள் போதிய அளவில் இல்லாமல்
இருக்கிற காரணத்தால் நாங்கள் செய்யவில்லை என்ற விவரங்
களைச் சொல்லுகிறார்கள். எனவே மாநிலம் முழுவதும்
இருக்கிற எல்லாத் துறைகளிலும், ஆய்வு நடத்தி, தமிழ்த் தட்
டச்சு இயந்திரத்தை வழங்குவதற்கு அரசு விரைவாக நடவ
டிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 28

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே,
போதிய அளவிற்குத் தமிழ்த் தட்டச்சுப் பொறிகளை வழங்கு
வதற்கு அரசு ஏற்கெனவே ஆணையிட்டு இருக்கிறது; தக்க நடவ
டிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்**
**(பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழிலே சிறந்த கோப்புகளை எழுதுவதை ஊக்கு
விப்பதற்கு, அரசு ஊழியர்களுக்குப் பரிசுத் திட்டம் ஒன்றை
வைத்திருந்தது. இருந்தாலும் கூட, இந்தப் பரிசுத் திட்டம்
மாவட்ட அளவிலே யாருக்காவது ஒருவருக்கு அல்லது இரண்டு
பேர்களுக்கு என்று வழங்கும் நிலைமையிருக்கிறது. எனவே,
தமிழிலே கோப்புகளை உருவாக்குகிற முறையும், உத்தரவுகளை
வெளியிடுகிற முறையும், அரசு ஊழியர்கள் மத்தியில் ஊக்குவிப்ப
தற்காக வட்ட அளவிலே என்று எடுத்து, வட்ட அளவிலே கூட
ஒவ்வொரு துறைக்கும் பரிசு கொடுத்து, அவர்களை ஊக்குவிக்கிற
திட்டத்தை அரசு செயற்படுத்துமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தைப்
பொறுத்தவரைக்கும் வட்ட அளவிலே ஏற்கெனவே செம்மையாக
செயற்பட்டு வருகிற காரணத்தால் அதற்கு மேற்பட்ட அளவிலே
இந்த ஊக்குவிப்பு தேவை என்ற கருத்தை தமிழ் வளர்ச்சி பண்
பாட்டுத் துறை கூறியதையொட்டித்தான் இந்த நடவடிக்கை
எடுக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய
ஆலோசனையையும் அரசு ஆயும்.

**மானாமதுரை அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி.**

**522—(*வினா எண்: 6617) திரு. க. பாரமலை:** மாண்புமிகு
கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா—

மானாமதுரையிலுள்ள அரசு பெண்கள் உயர்நிலைப்
பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் செயற்
குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1987 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இப்பள்ளி 1986-87 ஆம் ஆண்டிலிருந்து
மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, நான் இந்தக் கேள்வியைப் போடுகிறபோது, இந்த உயர்
நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசின்
கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கேள்வி
யைப் போட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன
தைப்போல, பள்ளி துவங்கி, பெரிய விழாவும் நடந்துவிட்டது.
அது தவிர, ரூ. 1.6 லட்சம் பணம் கொடுத்து, புதிய கட்டிடம்
கட்டப்பட்டு இருக்கிறது. நன்கொடையாளர்கள் இரண்டு
பேர்கள் 60 ஆயிரம் ரூபாய்ச் செலவில் இரண்டு புதிய கட்டிடங்
களைக் கட்டித் தந்திருக்கிறார்கள். அது அமைச்சருடைய
வருகைக்காக காத்துக்கொண்டு இருக்கிறது. அங்கே இன்ஃப்ரா
ஸ்ட்ரக்சர் பெசிலிட்டீஸ் இருக்கிற காரணத்தால், வருகின்ற
ஆண்டில், ஆசிரியர்கள் பயிற்சி வகுப்பைத் துவக்குவதற்கு அரசு
நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை
யைக் குறித்து அரசு ஆயும்.

**இரண்டாவது வகுப்பு மற்றும் உதவி நீதிபதிகளுக்கு ஊர்திகள் வழங்கல்**

**523—(*வினா எண். 9566) திரு. கோ. பெருமாள் பிள்ளை:**
மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டாவது வகுப்பு நீதிபதிகள் மற்றும் உதவி
நீதிபதிகளுக்கு ஊர்திகள் அல்லது ஸ்கூட்டர்கள் வழங்க
அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆமெனில், எப்போது வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1987 ஏப்ரல் 28

**தஞ்சை துணைக்கோட்ட குற்றவியல் நீதிமன்றம்.**

524—(*வினா எண். 9771) **திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாநகரில் இயங்கிவரும் துணைக் கோட்ட குற்றவியல் நீதிமன்றத்தை மாவட்ட நீதிமன்ற வளாகத்தினுள் அமைக்க திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

மாவட்டங்களில் மக்கள் நீதிமன்றங்கள்

525—(*வினா எண். 10805) **திரு. சைதை சா. துரைசாமி, திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட தலைநகரங்களில் மக்கள் நீதிமன்றங்கள் துவக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மக்கள் நீதிமன்றங்கள் எப்போது துவக்கப்படும்? எந்தெந்த மாவட்டத் தலைநகரங்களிலே முதன் முதலிலே அமைக்க உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது என்கிற விவரத்தையும், இந்த மக்கள் நீதிமன்றத்தில் என்னென்ன வழக்குகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிட்சார்த்தமாக 15—2—1986 அன்று தமிழகத்திலே மக்கள் நீதிமன்றம் முதன் முதலாகத் துவக்கப்பட்டது. அது நல்ல வெற்றியை, பலனைத் தந்திருப்பதை அரசு அறிந்திருக்கிறது. அதன் காரணமாக அனைத்து மாவட்டத்திற்குமே



1987 ஏப்ரல் 28]

இதை நீட்டிக்க வேண்டும் என்று அரசு முடிவு எடுத்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது. தகராறுகளை சுமுகமாகத் தீர்த்து வைப்பதின் மூலம் நீதிமன்றங்களில் வழக்காடுவதைத் தடுத்திடுவது இதனுடைய முதல் நோக்கம். அடுத்து, நீதிமன்றங்களிலும், நடுவர் மன்றங்களிலும் முடிவுறாமல் இருக்கும் வழக்குகளையும், தகராறுகளையும் உயர்நீதிமன்றம் ஏற்கனவே அனுமதித்திருக்கிற நடைமுறையின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட தரப்பினருடைய இசைவைப் பெற்று தீர்த்து வைத்தல் இந்த மக்கள் நீதிமன்றத்தினுடைய அடுத்த நோக்கம்.

இதில் குறிப்பாக ஏழைகள், தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு முன்னுரிமை தந்து, முதற்கட்டமாக எடுக்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 10-40)

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மக்கள் நீதிமன்றம் பரிட்சார்த்தமாக, வெற்றிகரமாக நடந்து வருகின்றது என்று அமைச்சர் அவர்கள் தகவல் தந்திருக்கின்றார்கள். ஆனால் இந்த மக்கள் நீதிமன்றம் என்பது இன்றைக்கு இந்தியாவில் பல இடங்களில் பரவலாக இயங்க ஆரம்பித்திருந்தாலும் அதற்கு ஒரு லீகல் பேசிஸ், சட்டப்படியான அனுமதி இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அந்தச் சட்ட அனுமதியை, அதற்கான ஒரு லீகல் ஸ்டான்டிங்கை, ஒரு லீகல் புரசீஜரை வழங்குவதற்காக, தமிழக அரசு முதன் முதலிலே, Legal standing and Legal Procedure என்று சொல்லப்படுகிற அந்த நீதிமன்றச் சட்டத்தைத் திருத்தி இதற்கு ஒரு லீகல் பேசிஸைக் கொடுக்க முன்வருமா? ஆம் என்றால், அதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்து அகில இந்திய மட்டத்தில், நீதித்துறை மத்தியிலும், அரசு மத்தியிலும் ஆயப்பட்டது. If legal basis is given, then this become a judicial system

[மாண்புமிகு திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 23

கின்றது. இருந்தாலும் என்ற காரணத்தால் அதற்கு மாறாக 'Contempt of Court' என்று இதைக் கணக்கில் எடுக்கவேண்டுமென்றும், இருதரப்பினருடைய இசைவைப் பெற்று வழக்குகளைத் தீர்ப்பதில்தான் வெற்றி அதிகமாக இருக்கிறது என்பதை கருத்தில்கொண்டுதான் உச்ச நீதிமன்றமும், பல உயர்நீதிமன்றங்களும் மத்திய அரசுக்கு கருத்தைக் கூறி, மாநில அரசுகள் அதை ஏற்று நடைமுறைப்படுத்துகின்றன.

திரு. கவிதை ச. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீதிமன்றங்கள் பெண்கள் வழக்குகளை விசாரிக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பெண்கள் வழக்குகள் என்றால், வரதட்சணை போன்ற அந்த வழக்குகளையா அல்லது மாமியார் மருமகள் தகராறில் தீ வைத்து, கொளுத்திக் கொள்கிறார்களே, அதுபோன்ற வழக்குகளையா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பத் தகராறு வழக்குகளை இதில் முன்னுரிமை கொடுத்து விசாரிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. வரதட்சணை, கற்பழிப்பு போன்ற கொடிய வழக்குகள் சம்பந்தப்பட்டவை பெரும்பாலானவைக்கும், தனியாக, பெண்களுக்காக 'ஃபேமிலி கோர்ட்ஸ்'—குடும்ப நீதிமன்றங்கள் என்று அனைத்து மாவட்ட அளவிலேயும் கொண்டுவர அரசு முடிவெடுத்து இருக்கிறது.

### அண்ணா மாவட்டம், திண்டுக்கல் தலைமை குற்ற விசாரணை நீதிமன்றம்

526—(*வினா எண். 12319) திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம், திண்டுக்கல்லில் 'Chief Judicial Magistrate Court' அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1987 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம், திண்டுக்கல்லில் தலைமை குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம் திண்டுக்கல்லில் டிஸ்டிரிக்ட் கோர்ட் வந்து ஏறத்தாழ 3 ஆண்டுகள் ஆகின்றன. சீப் ஜுடிஷியல் கோர்ட்டை இந்த ஆண்டிற்குள் ஆரம்பிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தினுடைய செயற்குறிப்பைப் பெற்று விரைவில் இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம், திண்டுக்கல்லில் இருக்கக்கூடிய மாவட்ட நீதிமன்றத்திற்கு 'அப்பீல் ஜுரிஸ்டிக்ஷன்' என்று சொல்லக்கூடியது நத்தம், நிலக்கோட்டை மற்றும் கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய வழக்குகளுடைய 'அப்பீல் ஜுரிஸ்டிக்ஷன்' திண்டுக்கல்லில் இருந்தும், மதுரையிலேதான் இன்னும் அந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையை மாற்றி அதை அண்ணா மாவட்டம் திண்டுக்கல்லில் விசாரிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்திலிருந்து இதற்கான செயற்குறிப்பு கோரப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன் விரைவில் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பொ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி பிள்ளையார் நத்தத்திலிருந்து திண்டுக்கல் கோர்ட்டுக்குச் செல்லவேண்டுமென்றால் 80 கிலோ மீட்டர் செல்லவேண்டும்; மதுரைக்குச் செல்லவேண்டுமென்றாலும் 80 கிலோ மீட்டர் செல்லவேண்டும்; மேலூர் செல்ல

வேண்டுமென்றாலும் 80 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டியுள்ளது. நத்தம் தனியாக தாலுக்காவாகப் பிரிக்கப்பட்டு பல வருடங்கள் ஆகின்றன. நான் அமைச்சர் அவர்களிடத்திலே பலமுறை நத்தம் பகுதிக்கு நீதி மன்றம், முன்சீப் கோர்ட் வேண்டுமென்று கோரியிருக்கிறேன். அதை இந்த ஆண்டாவது நடைமுறைக்குக் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு உரிமையியல் நீதிமன்றம் என்ற முறையிலே அமைக்க வேண்டுமென்று அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு ஆய்ந்து வருகிறது. உயர்நீதி மன்றத்தினுடைய செயற்குறிப்பை அரசு கோரியிருக்கிறது. வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. குப்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியில் தற்போது சப்-மேஜிஸ்டிரேட் கோர்ட் ஒன்றும், முன்சீப் கோர்ட் ஒன்றும் மட்டுமே இருக்கின்றது. அங்கே முதல் வகுப்பு நீதிமன்றம் அல்லது எஸ்.டி.எம். கோர்ட் ஆரம்பிக்க வேண்டுமென்று நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. சென்ற ஆண்டே இதை ஆரம்பிக்கவேண்டிய கட்டத்திற்கு வந்து நின்று விட்டது. எனவே அண்ணா மாவட்டம், திண்டுக்கல்லில் சி.ஜே.எம். கோர்ட் வந்தவுடன் அங்கே இருக்கும் எஸ்.டி.எம். கோர்ட்டையோ அல்லது முதல் வகுப்பு மேஜிஸ்டிரேட் கோர்ட்டையோ பழனியில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த கோரிக்கை உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. உயர்நீதிமன்றம் அதற்கு பரிந்துரை செய்திருக்கிறது. அரசு அது குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கும்.



## உதகை மண்டல மறுவாழ்வு மையம்.

*527—(* வினா எண். 11514)* **திரு. கே. உச்சி:** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகையில் மண்டல மறுவாழ்வு மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலுள்ள மண்டல மறுவாழ்வு மையம் உதகையில் உள்ள உடல் ஊனமுற்றவர்களின் நலன்களையும் கவனித்து வருவதால் தனியாக உதகையில் மண்டல மறுவாழ்வு மையம் ஏற்படுத்தும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. எம். அண்ணாதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்டல மறுவாழ்வு மையம் எந்த எந்த ஊரில் செயல்படுகிறது? செயல்படுகிற இந்த மையங்கள் எந்த எந்த மாவட்டங்களில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வதேச ஊனமுற்றோர் ஆண்டான 1981-ல் தமிழக அரசு ஐந்து மண்டல மறுவாழ்வு மையங்களை நம்முடைய மாநிலத்தில் அமைத்து இருக்கிறது. இந்த ஐந்து மண்டல மறுவாழ்வு மையங்கள் சென்னை, வேலூர், தஞ்சாவூர், கோவை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. சென்னையில் இருக்கின்ற அந்த மண்டல மறுவாழ்வு மையம் சென்னையையும், செங்கற்பட்டு மாவட்டத்தையும் கண்காணிக்கிறது. வேலூரில் இருக்கின்ற அந்த மண்டல மறுவாழ்வு மையம் வட ஆற்காடு, தர்மபுரி, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களை கண்காணிக்கிறது. தஞ்சாவூரில் உள்ள அந்த மண்டல மறுவாழ்வு மையம் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களை கண்காணிக்கும். கோவையில் இருக்கின்ற அந்த மண்டல

மறுவாழ்வு மையம் கோவை, பெரியார், நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களை கண்காணிக்கும். மதுரையில் உள்ள அந்த மண்டல மறுவாழ்வு மையம் மதுரை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், அண்ணா, நெல்லை கட்டபொம்மன் சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களை கண்காணிக்கும்.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்டல மறுவாழ்வு மையங்கள் எந்த எந்த வகையில் உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்கின்றன. உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்வதில் இந்தியாவிலேயே எந்த மாநிலம் முன்னேறி உள்ளது என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மண்டல மறுவாழ்வு மையத்திலும் இரண்டு இளநிலை மறுவாழ்வு அலுவலர்கள், ஒரு மண்டல மறுவாழ்வு அலுவலர் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் அனைவரும் அந்த அந்த மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்து அங்குள்ள உடல் ஊனமுற்றவர்களின் குறைகளை கேட்டறிந்து அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள், கல்வி வசதிகள், பயிற்சி, வேலைவாய்ப்பு, சுயவேலைவாய்ப்புக் கான கடன் ஆகியவைகளில் அவர்களுக்கு உதவி செய்கிறார்கள். சென்ற ஆண்டு நம்முடைய இந்திய பேரசின் உடல் ஊனமுற்றவர் களுக்கு பணியாற்றுவதில் 17 சிறப்பு பரிசுகள் பெற்று தமிழகம் தான் முதல் இடத்தைப் பெற்று இருக்கிறது.

### பனைத் தொழில் வளர்ச்சி ஆய்வுக் குழு.

528—(*வினா எண். 13183) **திரு. செ. செம்மலை:** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனைத்தொழில் வளர்ச்சி குறித்து ஆராய அமைக்கப் பட்ட ஆய்வுக்குழு தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித் துள்ளதா?



(ஆ) ஆம் எனில், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பனைத் தொழில் வளர்ச்சி குறித்து ஆராய அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுவின் பரிந்துரை அறிக்கை, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திடம் கொடுக்கப்பட்டுள்ளது. அப்பரிந்துரைகளை பரிசீலித்து வாரியம் அரசுக்கு சில பரிந்துரைகளை சிபாரிசு செய்துள்ளது. அவைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மதுவிலக்கு அமல்படுத்தப்பட்ட பிறகு கள் இறக்கி வந்த தொழிலாளர்கள் உட்பட அனைத்து பனைத் தொழிலாளர்களும் பனை வெல்லம் காய்ச்சும் அந்தத் தொழிலில் தான் அதிகமாக ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால் அவர்கள் உறுப்பினர்களாக இருக்கிற அந்த பனை வெல்ல ஆரம்பக் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட பனைவெல்ல சம்மேளனம் பெரும்பாலும் இன்றைக்கு நட்டத்தில் இயங்கி வருவதால், அப்படி உற்பத்தி செய்யப்படுகின்ற அந்த பனை வெல்லத்தை கொள்முதல் செய்வதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுடைய இடத்தில் அமர வேண்டும்.

**திரு. செ. செம்மலை:** அந்த ஆரம்ப கூட்டுறவு சங்கங்களாலும் மாவட்ட சம்மேளனமும் நிதி உதவி செய்வதற்கு முடியவில்லை. அந்த நிதி நிலைமை அவர்களுக்கு இடம் கொடுக்கவில்லை. அந்த ஆரம்ப கூட்டுறவு சங்கங்கள் நட்டத்தில் இயங்குகின்றன. எனவே அந்த பனை வெல்லத் தொழிலை ஊக்குவிப்பதற்கு அப்படி உற்பத்தி செய்கிற அந்த வெல்லத்தை கொள்முதல் செய்வதற்கு மாவட்ட சம்மேளனத்திற்கும் அந்த கூட்டுறவு சங்கங்களுக்கும் வட்டி இல்லாத வியாபார முன் பணம் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்வார்களா என்று நான் அறிய

விரும்புகிறேன். காரணம் இப்படி சம்மேளனம் கொள்முதல் செய்யாத காரணத்தால் இன்றைக்கு வியாபாரிகள் கொழுத்த லாபம் சம்பாதித்து அவர்கள் வைத்ததுதான் விலை என்ற அள வுக்கு நிலைமை இருக்கிறது. எனவே இதை அமைச்சர் அவர்கள் பரிவுடன் பரிசீலிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கை அமல்படுத்து வதனால் பனையேறும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று தெரிந்தவுடன், இதுவரை எந்த அரசும் எந்த ஆண்டும் செய்யாத அளவிற்கு தமிழக முதல்வர் அவர்கள் இந்தப் பனையேறுகிற ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000 என்ற அளவில், ரூ. 1,000 கடனாகவும், ரூ. 1,000 மானியமாகவும் வழங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். உற்பத்தி செய்யப்படுகிற பனை வெல்லங்களை முறையாக வாங்கவேண்டுமென்ற உணர்வோடுதான் அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற கதர் கிராமத் தொழில் வாரியத்தால் வாங்கப்பட்டு, தற்போதும் வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. வாங்குவதற்குப் பணம் போதவில்லை என்றால் மேற்கொண்டும் பணம் வழங்க கதர், கிராமத் தொழில் வாரியம் உரிய முயற்சிகளை மேற்கொள்ளும். பனை வெல்லம் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் பல இடங்களில் நஷ்டத்தில் இயங்குவதாகத் தெரிவித்தார்கள். அதைப் போக்க வேண்டுமென்றால், அவர் களுக்கு விதிக்கப்பட்ட தவறுதல் வட்டி, சாதாரண வட்டி, போன்றவைகளை எல்லாம் ரத்து செய்தால், அவர்களுடைய சிரமத்தைப் போக்கமுடியும். எனவே அதை ரத்து செய்யவேண்டு மென்றால் பம்பாயிலுள்ள கதர் வாரிய இயக்கத்தின் அனுமதியைப் பெறவேண்டும். அதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. உரிய நல்ல ஆணையும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே சீக்கிரத்தில் அவர்களுடைய குறைகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதருக்கு 'ரிபேட்' அளித்து கதர்த் தொழிலை மத்திய அரசு ஊக்குவிப்பது போல, இந்தப் பனைத் தொழிலை ஊக்குவிப்பதற்காக, பனை பொருள் ஏற்றுமதி ஊக்கத் தொகையாக அல்லது ஊக்க மானியமாக 20 சதவீதம் அளிக்க வேண்டுமென்று இந்த ஆய்வுக் குழு கூட அரசுக்கு பரிந்துரை செய்திருப்பதாக நான் அறிகிறேன். எனவே இந்தப் பனைத் தொழிலை ஊக்குவிப்பதற்கு 20 சதவீதம் ஊக்க மானியத்தை மத்திய அரசிடம் நம்முடைய அரசு கோரி பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, இதுபோன்ற பல தொழில்களை அரசு தங்களுடைய பரிவான கவனத்தோடு பார்க்கவேண்டியிருக்கிறது. ஆகவே பனைத் தொழிலை மட்டும் நாம் இந்தப் பரிவோடு கவனித்துவிட்டோம் என்றால், மற்ற தொழில்களும் அதேமாதிரி கேட்க நேரிடும். ஆகவே அரசு இதுகுறித்து பரிசீலித்து முடிவு எடுக்கும்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பனைத் தொழில் வளர்ச்சியிலே வெகு காலங்கள் பனை மரங்கள் வளர்வதற்குக் காத்திருக்க வேண்டியதன் காரணமாக, குறுகிய காலங்களிலே பலன் தரும் மாமரங்களைக் கண்டுபிடித்தது போன்று, குறுகிய காலத்திலே விளைகின்ற தென்னையைக் கண்டுபிடித்ததுபோன்று, குறுகிய காலத்தில் பலன் தரும் பனை மரங்களைக் கண்டுபிடிப்பதற்கு இந்த ஆய்வுக் குழுவிடம் ஏதாவது பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா? அதுபோன்று தென்னையையும், பனையையும் இணைத்து கலப்பு இனமாக சேர்த்து, கலப்பு இனம் கண்டுபிடிக்கவேண்டுமென்றும், அதற்கு தென்-பனை என்று பெயரிட வேண்டுமென்றும் இதே சட்ட மன்றத்தில் கோரிக்கை வைக்கப்பட்டது. அதுபற்றிக் குழு ஆராய்ந்ததா? அல்லது அரசு ஆராய இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, குறுகிய காலத்தில் விளையக்கூடிய பனையை, அதிலும் குட்டையான பனை மரத்தையும் வளர்க்கவேண்டுமென்ற ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, நம்முடைய வேளாண்மை

[1987 ஏப்ரல் 28

பல்கலைக்கழகத்தில் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்
கிறது. அப்படி கூறிய காலத்திலே, குட்டையாக வளர்கிற
அந்தப் பனைமரத்தின் மூலமாக வருகின்ற பொருள்கள்,
குறைந்த கால அளவிற்குத்தான் பலன் தரும் என்று வந்து
விடுமானால், குட்டையான மரங்களிலே இருந்து வருகின்ற
பொருள்களில் அந்த வாய்ப்பு வசதிகளை நாம் பெறமுடியாது.
எனவே இதுகுறித்து ஒரு ஆய்வு நடத்தி, முழு அறிக்கை
சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதுபோன்று
மைய பனைத் தொழில் ஆராய்ச்சிக் கழகமும் ஒரு ஆய்வு
நடத்திக்கொண்டிருக்கிறது. ஆனால் இன்னும் முடிவு எடுக்கப்
படவில்லை. முடிவு எடுக்கப்பட்டதற்குப் பிறகுதான்
மாண்புமிகு உறுப்பினர் கேட்ட நிலையைப் பற்றித் தெரியவரும்.
மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மற்றொரு கருத்து குறித்து
அரசினுடைய பரிசீலனையில் இருந்துவருகிறது.

**கூவம், பக்கிங்ஹாம் கால்வாய், அடையாறு மற்றும் ஓட்டேரி பகுதிகளில் குடியிருப்புகள் மழையினால் பாதிப்பு.**

**529—(* வினா எண். 7286) திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை பளிப்பாரா—

கூவம், பக்கிங்ஹாம் கால்வாய், அடையாறு, ஓட்டேரிநல்லா ஆகியவற்றில் மழைக் காலத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கால் மக்கள் குடியிருப்பு பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசின் செயல் திட்டமென்ன?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் ஆறு மற்றும் ஓட்டேரிநல்லாவில் தூர் எடுக்கும் கருத்துருக்கள் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசீலனையில் உள்ளது. பக்கிங்ஹாம் கால்வாய் கரைகளை வலுப்படுத்தவும், கால்வாயை ஆழப்படுத்தவும் மதிப்பீடுகள் மைய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளன. அடையாறு ஆற்றில் வெள்ளத்தடுப்புப் பணிகளுக்கு, ரூ. 84 இலட்சம் அரசு ஏற்கெனவே அங்கீகரித்துள்ளது. மேலும், ரூ. 2 கோடி அனுமதித்துள்ளது. இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.



1987 ஏப்ரல் 28]

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மழைக்காலத்திலும் மேற்கண்ட கால்வாய்க் கரைகளை ஒட்டியிருக்கின்ற பல்வேறு குடியிருப்புப்பகுதிகளிலும் பல நூற்றுக்கணக்கான பேர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்ற சம்பவம் தொடர்ந்து வருகின்றதே. இத்தகைய வெள்ளப் போக்கின் காரணமாக பாதிக்கப்படுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த எண்ணிக்கை என்னிடம் இல்லை. வெள்ளத்தாலே குடியிருப்புகள் பாதிக்கப்படுவதற்கு காரணம், பல இடங்களில் நேரடியாகச் சென்று பார்க்கின்ற நேரத்தில், வெள்ளம் வருகின்ற நேரத்தில் எந்த அளவிற்கு உயர் மட்டத்திலே வெள்ளம் வருமோ அதற்கு தாழ்வான பகுதியிலே குடிசைகள் போட்டிருக்கிறார்கள். அதிகாரிகள் அதை அப்புறப் படுத்தச் செல்லும் நேரத்தில் அதை அப்புறப்படுத்த முடியாமல் திரும்பி வருகின்ற ஒரு துர்பாக்கியமான சூழ்நிலை இன்றைக்கு சென்னையிலே இருக்கிறது. வெள்ளம் வருகின்ற நேரத்தில் பாதிக்கப்படுகிறார்கள் என்றால் அதற்கு அவர்கள்தான் காரணம்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரத் தீர்வு ஏற்படுத்துவதற்கு இடையிலே, மழை வருகின்ற நேரத்திலே அவர்களுடைய பாதிப்புகளை தடுப்பதற்குரிய தற்காலிக ஏற்பாடுகளாக அரசு ஏதாவது செய்ய இருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு, மத்திய அரசிடமிருந்து அந்த மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு எந்த கால வரம்பிற்குள் அது நிறைவேற்றப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிக ஏற்பாடாக பக்கிங்ஹாம் கால்வாயில் ஏறத்தாழ 6¼ கோடி ரூபாய்க்கு மத்திய அரசுக்கு மதிப்பீடு அனுப்பியிருக்கிறோம். கூவத்திலே 1¼ கோடி ரூபாய்க்கான மதிப்பீட்டினை தூய்மைக்கேடு கட்டுப்பாடு வாரிய பெருந்திட்டத்தில் சேர்க்க. தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களுக்குக் கருத்துக் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓட்டேரி

நல்லாவில் 1¼ கோடி ரூபாய்க்கான மதிப்பீட்டினை உலகவங்கி [1987 ஏப்ரல் 28
உதவியுடன் எடுத்துக்கொள்ளப்படவுள்ள திட்டங்களில் சேர்க்க
மாநகராட்சிக்குத் தலைமைப் பொறியாளர் (பாசனம்)
அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து ஞாபகப்
படுத்தி மிக வேகமாகப் பெறுவதற்குரிய முயற்சிகளை இந்த
அரசாங்கம் எடுக்கும்.

**திருமதி டி. யசோதா :** தலைவர் அவர்களே, அடையார்
ஆற்றிலே வெள்ளம் ஏற்படுகிறது என்று சொன்னால் மழைக்
காலங்களில் செம்பரம்பாக்கம் ஏரி நிரம்புகின்ற காரணத்தாலே
ஏரி உடைப்பெடுத்துவிடும். அதனால் மிகப்பெரிய நஷ்டம்
ஏற்பட்டுவிடும் என்று அதை தவிர்க்கின்ற வகையில் அரசே அதை
திறந்துவிடுகின்ற காரணத்தாலே வெள்ளம் அதிகரிக்கின்றது.
ஆகவே செம்பரம்பாக்கம் ஏரியிலே அதிகமாக நீர் தேங்குகின்ற
போது அதை சேமிப்பதற்கு வேண்டிய சேமிப்பு வங்கியும், அதே
நேரத்திலே தடுப்புச் சுவரும் அமைப்பதற்கு அரசு முன்வருமா
என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :**
தலைவர் அவர்களே, அந்தக் கண்மாயிலே அதிகப்படியான
தண்ணீர் நிற்கவேண்டுமென்றால் கரைகளை நாம் உயர்த்த
வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. கரைகளை உயர்த்துகின்ற
நேரத்தில், பின்னாலே நீர்ப்பிடிப்பு பகுதிகள் அதிகமாக பாதிக்கப்
படும் என்ற உணர்வை அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள்.
இருந்தாலும் வெள்ளம் வருகின்றபோது எந்த அளவிற்குப்
பாதகம் இல்லாத சூழ்நிலையை உருவாக்க முடியும் என்பதையும்
அதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு
விவரமாகச் சொல்லியிருக்கிறோம்.

**குடியாத்தம் தாலுக்காவில் மோர்தானா அணைக்கட்டு.**

**530—(*வினா எண். 9309) திரு. ஆர். கோவிந்தசாமி :**
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலுக்காவில் மோர்தானா அணைக்
கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



(ஆ) ஆம் எனில், வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்கு மதிப்பீடு சுமார் 1,200 இலட்சத்திற்கு
தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களால் தயாரிக்கப்பட்டு,
அவருடைய பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு நீரியல்
மற்றும் பொருளாதார சாத்தியக் கூறுகள் விரிவாக ஆராயப்பட்டு
வருகின்றது. இத்திட்டத்தை பரிசீலனை செய்து சாத்தியக்
கூறுகள் இருப்பின் திட்ட அறிக்கை தலைமை பொறியாளரால்
அனுப்பப்படும். இவ்வறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் அரசு
பரிசீலனை செய்யும்.

**கந்தர்வகோட்டை ஒன்றியம் அரயம்பட்டியிலிருந்து காட்டுநாவல்
வரை வெள்ளத் தடுப்புச்சுவர்.**

**531—(*வினா எண். 10135) திரு. ஜே. முகம்மது கனி :**
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை ஒன்றியம் அரயம்பட்டியிலிருந்து
காட்டுநாவல் வரை வெள்ள தடுப்புச் சுவர் கட்டித் தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ)
வறட்சி நிவாரணப் பணி திட்டத்தின்கீழ் கந்தர்வகோட்டை
ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அரயம்பட்டி கிராமத்திற்கருகே
தாலைவாரி குறுக்கே அணை கட்டும் திட்டத்தில் சுமார் 700
மீட்டர் நீளத்திற்கு வெள்ளத் தடுப்புக் கரை அமைக்கும் பணி
உள்ளது. இந்தப்பணி தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கொன்று
தொடரப்பட்டு உள்ளது. வழக்கின் தீர்ப்பு அரசுக்கு சாதகமாக
வழங்கிய பின் பணிகள் ஆரம்பித்து முடிக்கப்படும்.

**திரு. ஜே. முகம்மது கனி:** பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த திட்டம் எப்போது
செயலாக்கப்படும் என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்றும்

[1987 ஏப்ரல் 28

பின்னாலே இதே ஒன்றியத்தில் நடுப்பட்டி, நாயக்கர்பட்டி என்ற ஊரிலும் இந்த வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டப்படுமா என்ப தையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்.** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு கோர்ட்டிலே தடையாணையை வாங்கி கோர்ட்டிலே கேஸ் இருப்பதால், அந்தக் கேஸை வெகு வேகமாக முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறோம். அப்படி அரசாங் கத்திற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கினால் மிக வேகமாக வேலைகள் முடிக்கப்படும்.

## குற்றாலம் புது அருவியில் அணைக்கட்டு.

532—(* வினா எண். 12071) **திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குற்றாலம் புதுஅருவியில் அணை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் ஆய்வில் உள்ளது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு திருநெல்வேலி மாவட்டத்திலே, குற்றாலத்தின் அருகிலே இந்த புது அருவித் திட்டம் என்று சொல்லப்படுகின்ற இந்த அணை கட்டப்படுவதால் அதன் மூலமாக இன்றைக்கு அங்கே காய்ந்து கிடக்கின்ற பல நிலங்கள் எல்லாம் நன்கு வளமாக பயிராகக்கூடிய வாய்ப்பு இருப்பதால், இந்தத் திட்டம் தலைமை என்ஜினியரிடமிருந்து எவ்வளவு நாட்களுக்குள் அரசுக்கு வரும்? இந்த திட்டத்தினுடைய மதிப்பீடு என்ன? பலன் பெறும் ஆயக்கட்டுகள் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 28]

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு மதிப்பீடு ஆய்வு செய்து முடிந்த பிறகுதான் சரியான மதிப்பீட்டைச் சொல்ல முடியும். இந்த அணை கட்டுவோம் என்று சொன்னால், வருடத்திற்கு 105 மில்லியன் கன அடி நீரைப் பயன்படுத்த முடியும் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள், அதே போன்று, இந்தத் திட்டத்தினால் 910 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதியும், 839 இடைவெளி நிலங்களுக்கு பாசன வசதியும் கிடைக்கும் என்ற குறிப்பு இங்கே இருக்கிறது. வேகமாக ஆய்வை முடிப்பதற்கு வேண்டிய அந்த முயற்சியை மேற்கொள்ள அதிகாரிகளுக்குச் சொல்லி இருக்கிறோம்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தென்காசி தொகுதியில் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையும் இருக்கிறது. இப்போது புதிய தேசிய நீர் வளத் திட்டத்தின் அடிப்படையில் எந்த ஒரு புதிய அணை கட்டினாலும் அதிலே 15 சதவிகிதம் தண்ணீரைக் குடிநீருக்காக உபயோகிக்கவேண்டும் என்று தேசிய அளவில் ஒரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால், இந்தத் திட்டத்தின் மூலமாக அந்தப் பகுதியிலே குடிநீருக்கு வாய்ப்பு ஏற்படுமா? அப்படி என்றால், அதன் மூலமாக எத்தனை இலட்சம் மக்கள் பயன்படுவதற்காக திட்டத்திலே வரையறுக்கப் பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே. இந்தத் திட்டத்திலே இப்போது குடிநீருக்காக எந்தக் குறிப்பும் இல்லை. அப்படி கோரிக்கை வருமென்று சொன்னால், அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம் பேராம்பூர் பெரியகுள பாசன வாய்க்கால்.

533—(* வினா எண். 12364) **திரு. த. மாரிமுத்து :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1987 ஏப்ரல் 28

**(ஆ) அரசு விழாக்களில் உறுப்பினர்கள் பங்கேற்கும் வாய்ப்பு.**

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விழாக்களில், அந்தந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்களைப் போடவேண்டும் என்ற அரசு உத்தரவு இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களும் இந்தச் சபையிலே அடிக்கடிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மே 1 ஆம் தேதி எங்கள் பேரூராட்சியிலிருந்து கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் திறப்பு, தீயணைப்பு நிலைய ஆரம்ப விழாவிற்கு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என் பெயர் போடப்படவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நியாயம் வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருடைய பெயரைப் போட்டு அவரை அழையுங்கள் என்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அவருடைய பெயர் இல்லாவிட்டால் அந்த நிகழ்ச்சியை ரத்துச் செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

**3. கவன ஈர்ப்பு.**

**(அ) மதுரை பசுமலை மகாலட்சுமி மில் மூடப்பட்டிருத்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் மு. மாரிமுத்து, கே. சுப்பராயன், கு. ரமணி, ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன், ஆர். ரெங்கசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் அதை கொண்டு வருவார்.

**திரு. மு. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை பசுமலை மகாலட்சுமி மில் கடந்த 60 நாட்களுக்கு மேலாக மூடப்பட்டுள்ளதால் சுமார் 1,200 தொழிலாளர் குடும்பங்கள் துன்பப்படுகின்ற நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு-கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:



1987 ஏப்ரல் 28] [திரு. ச. இராமச்சந்திரன்]

**அறிக்கை.**

மதுரை, பசுமலையிலுள்ள 'தி மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் லிமிடெட்' என்னும் நூற்பாலையில் பணிபுரியும் 1,200 தொழிலாளர்கள் 25—11—1986 முதல் தொழிலாளர்களுக்கு லே-ஆப் நட்டயீடு அளித்தல், நிரந்தரம் செய்தல், பிரதிமாதம் ஒழுங்காக ஊதியம் அளித்தல் போன்ற பல கோரிக்கைகளை வலியுறுத்தி வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். தொழிலாளர்கள் ஏ.ஐ.டி.யு.சி., டி.என்.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி. தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை, சி.ஐ.டி.யு., எச்.எம்.எஸ்., மற்றும் அகில இந்திய பார்வர்டு பிளாக் தொழிலாளர் சங்கம் ஆகிய தொழிற்சங்கங்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர்.

2. இப்பிரச்சினை குறித்து சென்னை, தொழிலாளர் துறை இணை ஆணையர் (சமரசம்) அவர்கள் முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது மேற்கண்ட நூற்பாலை அரசு ஆணை எண் 102, கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்த்துறை, நாள் 31—3—1986-ன்படி, 31—3—1986 முதல் 7—3—1987 வரை ஒரு நிவாரண நிறுவனமாக (Relief undertaking) அறிவிக்கப் பட்டுள்ளது. மேலும், தொடர்ந்து 7—3—1987 முதல் நிவாரண நிறுவனமாக அறிவிக்க நிர்வாகம் கோரியுள்ள செயற்குறிப்பு அரசின் கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்துறையின் பரிசீலனையில் உள்ளது. ஆலை ஒரு நிவாரண நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளதால் லே-ஆப் காலத்திற்குண்டான நட்ட ஈட்டுத்தொகை தொழிலாளர்களுக்கு கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. ஆனால், அவ்வாறு நிவாரண நிறுவனமாக அறிவிக்கப் பட்டிருந்தாலும், இதற்கு முன்பு, இந்த நட்ட ஈட்டுத் தொகையை நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அளித்து வந்துள்ளது. இதன் அடிப்படையில் இந்த நட்ட ஈட்டுத் தொகையை தொடர்ந்து அளிக்க வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் கோருகின்றன. நிர்வாகத்தரப்பில் தங்களுக்கு கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதால், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 1986 ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கான ஊதியம், போனஸ், லே-ஆப் நட்டயீடு மற்றும் பணிக்கொடை ஆகியவைகளை வழங்க இயலவில்லை எனவும், லே-ஆப் காலத்திற்கான நட்ட ஈட்டைப் பொறுத்தவரை, ஏற்கனவே வழங்கப் படாமலிருக்கும் லே-ஆப் கால நட்டயீட்டை கொடுக்க இயலும்

என்றும், ஆனால் இனிவருங்காலங்களில் இந்த நட்டயீட்டை
வழங்க இயலாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும்,
நிர்வாகம் மின்வெட்டிலிருந்து விதிவிலக்கு, விற்பனை வரியை
தவணை முறையில் செலுத்துதல் போன்ற சலுகைகள் வேண்டு
மென்றும், அரசுக்கு மனுச செய்துள்ளது. அம்மனுவும் அரசின்
கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறையின் பரிசீலனையில்
உள்ளது. இவைகள் தவிர ஈ.பி.எப்., ஈ.எஸ்.ஐ., மின்வாரியம்,
எல்.ஐ.சி., கூட்டுறவு ஸ்டோர்ஸ் ஆகியவற்றிலும் செலுத்த
வேண்டிய தொகைகள், பஞ்சு வியாபாரிகளுக்கு கொடுக்க
வேண்டிய தொகை ஆகியவைகளும் நிலுவையாக உள்ளன
எனவும், எனவே, தங்களுக்கு நிதியுதவி கிடைத்தாலொழிய
ஆலையை இயக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்றும்
மேலும் தெரிவித்துள்ளது. தொழிலாளர்களின் பிரச்சினையைப்
பொறுத்தவரை இனிவருங்காலங்களில் ஏற்படவிருக்கும் லே-ஆப்
காலத்திற்கு நட்டயீடு கொடுப்பதில்லை என்றும் ஏற்கனவே
ஓய்வு பெறும் வயதை அடைந்த 130 தொழிலாளர்கள் ஆலையில்
வேலை ஆரம்பித்தும் பணியிலிருந்து நிறுத்தப்பட்டு அவர்களுக்கு
சேரவேண்டிய பணிக்கொடை தொகை தவணை முறையில்
கொடுக்கப்படும் என்றும் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்த
நிலையை தொழிற்சங்கங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

3. நிதி உதவி பெற நிர்வாகம் முயற்சி எடுத்து வருகிறது.
அம்முயற்சிகளின் முடிவைப் பொறுத்துதான் ஆலை திறப்பது
பற்றிய பிரச்சினையிலும், தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட
பிரச்சினையிலும் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை தொடர
இயலும். தற்போது வேலைநிறுத்தம் தொடர்ந்து நடை
பெற்றுக்கொண்டிருந்தாலும் நிலைமை அமைதியாக உள்ளது.
மேற்கொண்டு முன்னேற்றங்கள் பற்றி கவனிக்கப்பட்டு
வருகிறது.

**திரு. மு. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மதுரை பசுமலை மகாலட்சுமி மில் நிர்வாகம்,
தொழிலாளர்கள் நல வைப்பு நிதி, தொழிலாளர் நல நிதி மற்றும்
கூட்டுறவுச் சங்கங்களுக்கான தொழிலாளர்களின் தொகைகள்
ஆகியவற்றை எல்லாம் தொழிலாளர்களிடமிருந்து பிடித்துக்





கொண்டு, அவற்றை அரசுக்குச் செலுத்தாமல் ஏறத்தாழ ஒரு
கோடி ரூபாய் அளவுக்கு தன்னிடமே வைத்துக் கொண்டிருக்
கிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. என்றாலும் இவற்றை
யெல்லாம் ஏற்றுக்கொண்டு தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை
பார்த்துக் கொண்டிருந்தார்கள். மேலும் ஓய்வுபெற்ற
தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய கிராச்சுட்டி தொகையைக்
கொடுப்பதிலும் நிர்வாகம் மிகுந்த காலதாமதம் செய்து
வந்திருக்கிறது என்ற குறை இருந்தது. இவ்வளவையும்
தாங்கிக் கொண்டே தொழிலாளர்கள் வேலைக்குச் சென்று
கொண்டிருந்தார்கள். எனினும் கடைசியாக அவர்கள் வேலை
பார்த்த 2 மாதங்களுக்கான சம்பளமும் கொடுக்கப்படவில்லை
என்கிற சூழ்நிலை வந்தபோது தொழிலாளர்கள் வேலை
நிறுத்தம் செய்வதைத் தவிர வேறு வழியே இல்லை என்கிற
அளவுக்கு நிலைமை போய்விட்டதால் கடந்த 5 மாத காலமாகத்
தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.
8 மாத காலமாக இந்த மில் இடர் உதவி நிறுவனமாகச் செயல்
பட்டு வந்தது. நிர்வாகம் இன்னமும் சரிப்பட்டு வரவில்லை.
இப்போதும் நிதிப் பற்றாக்குறை இருப்பதாகவே நிர்வாகம்
சொல்லி வருகிறது. எனவே இப்படியே இன்னும் எத்தனை
காலத்திற்குத்தான் இந்த மில்லை ஓட்டாமல் வைத்திருப்பது
என்ற கேள்வியை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு
வந்து, பிரச்சினையின் கடுமையையும் அரசின் கவனத்திற்குக்
கொண்டு வந்து, அரசே இந்த மில்லை ஏற்று நடத்த முன்வருமா
என்று அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்து கொள்ள விரும்பு
கிறேன். மேலும் (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 'மேலும்' என்று அவர் ஆரம்பித்த
காரணத்தால் நான் காத்துக் கொண்டிருந்தேன்.

அந்த மில்லை அரசே ஏற்று நடத்துவது என்பது கொள்கை
சம்பந்தமான பிரச்சினை. ஆனால் தொழிலாளர்களுக்குரிய
அவர்களுடைய தொகைகளையெல்லாம் நிர்வாகம் செலவழித்து
விட்டு, மில்லையும் மூடிவிட்டு இன்றைக்குத் தொழிலாளர்கள்
நிர்க்கதியாக நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற ஒரு கருத்தை
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்த மில்

மட்டும் அல்ல. பல மில்கள் அப்படி நடக்கின்றன. ஆகையால் தொழிலாளர்களுக்குரிய தொகையை அந்தந்த மில்களே வைத்துக் கொள்வதற்குப் பதிலாக அரசே அவற்றை வைத்துக் கொள்ளலாமா என்பதுபற்றிப் பரிசீலிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று கருதுகிறோம். இந்த மில்லைப் பொறுத்தவரையில் 11-4-1987 அன்று நிர்வாகத்தோடும், தொழிற்சங்கங்களோடும், தொழிலாளர் நல ஆணையர் பேச்சுவார்த்தை நடத்தினார். மீண்டும் 6-5-1987 அன்று பேச்சுவார்த்தை நடத்துவதாக இருக்கிறது. மில்லை நடத்துகிற முதலாளிகள் பணம் வேண்டும் என்று கேட்கிறார்கள். பணம் கொடுக்கிற துறை என்னிடத்தில் இல்லை. நியாயம் மட்டும்தான் நான் வழங்க முடியும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது இந்த ஒரு மில் மட்டுமல்ல. தமிழ்நாட்டில் பல்வேறு தொழிற்சாலைகளில் தொழிலாளர்களிடம் இருந்து பிடித்தம் செய்யப்படுகிற பி.எப். பணம் அதைப் போலவே ஈ.எஸ்.ஐ. மற்றும் கிராச்சுவிட்டி தொகைகளையெல்லாம் நிர்வாகத்தினரே வைத்துக் கொள்கிறார்கள் என்றால், அப்படி வைத்துக் கொள்வது என்பது சட்ட விரோதமான செயலாகும். சட்டப்பூர்வமாகத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளை வழங்க மறுத்து சட்ட விரோதமாக நடந்து கொள்ளுகிற இத்தகைய தொழிற்சாலைகளின் முதலாளிகளின் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்குரிய முறையில், தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளை வழங்கவில்லை என்றால் அவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கிற முறையில் பொருத்தமானதொரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா என்பதோடு அந்தத் தொழிற்சாலையை அரசே மேற்கொண்டு நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசே அந்தத் தொழிற்சாலையை மேற்கொள்ளுமா என்பதைப்பற்றி நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். நான் சொன்னது தற்போது பிராவிடண்ட் பண்டிலிருந்து எக்சார்ஷன் வாங்கி டிரஸ்ட் ஒன்றை ஏற்பாடு செய்து அவர்களே அந்தப் பணத்தை வைத்துக் கொள்கிறார்கள்.





அதைத்தான் நாம் கூர்ந்து பார்க்க வேண்டியிருக்கிறது. எப்படியாவது சட்டத்தைத் திருத்தி தொழிலாளர்களுடைய நிதியை நிர்வாகத்திடம் விட்டு வைக்கிற போக்கை மாற்றலாமா என்பதைக் குறித்து தொழிலாளர் நலத்துறை நிச்சயமாக ஆராயும்.

(முற்பகல் 11-10)

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது இனிமேற்கொண்டு இப்படிப்பட்ட தொழிலாளர்களுடைய பணத்தை—பிடித்தம் செய்த பணத்தை நிர்வாகத்தில் இருப்பவர்கள் வைத்துக் கொள்ளக்கூடாது என்பதற்கு ஏதாவது வழி செய்யலாமா என்று பார்க்க இருப்பதாகச் சொன்னார்கள். இதனுடைய அர்த்தம் என்னவென்றால் பி.எப். சட்டத்தை மீறுவதற்கு யாருக்கும் அதிகாரம் கிடையாது, அரசுக்கும் அதிகாரம் கிடையாது, பணத்தைப் பிடித்தாகிவிட்டது, தொழிலாளர்கள் வேலை செய்து சம்பாதித்த பணத்திலிருந்து பிடித்த அந்த ஈ.எஸ்.ஐ மற்றும் கோவாப்பரேட்டிவ் ஸ்டோர்ஸ்க்குப் பிடித்த பணத்தை அவர்கள் வைத்திருக்கிறார்கள். இப்படி பிடித்த பணத்தைக் கொடுக்காமல் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் இது ஏமாற்றுவது என்று அர்த்தம். இப்படி ஏமாற்றும் குற்றம் இருப்பதால், இப்படி திருப்பிக் கொடுக்க முடியாமல் இருக்கிற அந்த மேனேஜ்மெண்டின் பேரில் ஸ்டேட் கவர்ன்மெண்ட் கேஸ் போட்டு அதனை வாங்கிக் கொடுப்பதுதான் நியாயம். அப்படிச் செய்யவில்லை என்றால் அந்தத் தொழிலாளர்கள் சட்டம் இருக்காது. அதனால் அந்தச் சட்டங்கள் இன்று தகர்ந்து கொண்டிருக்கின்றன. எனவே தான் ரிலீப் அண்டர்டேக்கிங் ஆக்டின்கீழ் பிரகடனப்படுத்தி இந்த மில்லின் நிர்வாகத்தை எடுக்கச் சொல்லுகிறோம். இந்த மில்லை எடுக்க வேண்டாம், நிர்வாகத்தை எடுங்கள். அதற்கு அரசு ஜாமீனில் பணம் கிடைக்கும். தொழிலாளிகள் அதை லாபமாக ஓட்டுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இந்த முறையில் நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? இல்லையென்றால் சட்டப்படி கொடுக்க வேண்டியதைக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 28

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பிடித்த பணத்தை மீண்டும் கைப்பற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்கிறார்கள். அரசு அதைப்பற்றி நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். பிடித்த பணம் அவர்களிடம் பெரும்பாலும் இருப்பதில்லை. ரிலீப் அண்டர்டேக்கிங் ஆக்டின் கீழ் எடுப்பதைப் பற்றி தொழிலாளர் நலத் துறை ஒன்றும் முடிவு செய்ய முடியாது.

### (ஆ) சிதம்பரம் அருகில் தாசில்தார் சுடப்பட்டு பணம் பறிக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் மா. மணிமாறன், ஆ. நடராசன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் அருகில் உணவு வழங்கு துறையின் தாசில்தார் அவர்களைச் சுட்டு, அவர் கொள்முதல் நிலையங்களுக்கு எடுத்துச் சென்ற பணத்தைப் பறித்துக் கொண்ட நிலையினைக் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தென்னாற்காடு மண்டலம், புவனகிரியில் நெல் கொள்முதல் அலுவலராகப் பணியாற்றிய திரு. ஜீவானந்தம் என்பவர் (வயது 52) ஒரு நுகர் பொருள் வாணிபக் கழகக் காவலருடன் (Watchman) கடந்த 28-2-1987 அன்று ஆடிவாரங்கநல்லூர், பிவடையூர் மற்றும் வடதலைக்குளம் ஆகிய இடங்களிலுள்ள இக்கழகத்தின் கொள்முதல் அலகுகளுக்கு பிரித்தளிப்பதற்காக ஒரு இலட்ச ரூபாயுடன் சென்றார். அவர்கள் வடதலைக்குளம் நோக்கி சென்று



1987 ஏப்ரல் 28] [திரு. ச. இராமச்சந்திரன்]

கொண்டிருந்தபோது பிவடையூருக்கும் வடதலைக்குளத்துக்கும் இடையில் மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று பேர், அவரை மடக்கி கொள்முதல் அலுவலரை துப்பாக்கியால் (Pistol) சுட்டு, அவரிடமிருந்த 41,300 ரூபாயை பறித்துக் கொண்டு அவ்விடத்தி லிருந்து ஓடிவிட்டனர். அவரது வலது பக்க இடுப்புப் பகுதியில் குண்டு காயமபட்டது. அவர் உடனடியாக சிதம்பரம் பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு முதலுதவி சிகிச்சை வசதிகள் செய்து தரப்பட்ட பின்னர், கடலூர் பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். கடலூர் மருத்துவ மனையில் அவருக்கு உடனடி அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, அவருடைய உடலிலிருந்து ஒரு துப்பாக்கி குண்டு நீக்கப்பட்டது. இது தொடர்பாக, புவனகிரி காவல் நிலையத்தில், 72/87 என்ற எண்ணில், ஐ.பி.சி. 397-வது பிரிவின் கீழ் குற்றவழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. குண்டு காயத்துடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட திரு. வி. ஜீவானந்தம், கடலூர் மாவட்ட மருத்துவ அதிகாரியின் தலைமையில் ஒரு குழு அவருடைய உயிரைக் காப்பாற்ற தீவிரமாக முயற்சித்த போதிலும், கடந்த 2-3-87 அன்று பிற்பகல் 3.55 மணிக்கு காலமாகிவிட்டார். அவருடைய உடல் இறுதிச் சடங்குகளுக் கென சென்னைக்கு கொண்டு வரப்பட்டது. குற்றவாளிகளைப் பிடிக்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளுமாறு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இதனை அரசு கண்காணிக்கும்.

திரு. ஜீவானந்தம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைச் சேர்ந்த பணியாளர். மறைந்த திரு. ஜீவானந்தத் தின் குடும்பத்தினருக்கு ரூபாய் ஐம்பதினாயிரம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து கருணைக் கொடையாக வழங்கப்படவுள்ளது. மேலும், திரு. ஜீவானந்தத்தின் குடும்பத் தினருக்கு பணிமுடிவு ஊதியம் மற்றும் இதர சலுகைகள் அளிப்ப தற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அரசின் சார்பில் இக்குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இது போன்ற சம்பவங்கள் நிகழாமலிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

மூன்று அல்லது நான்கு கொள்முதல் அதிகாரிகளுக்கு ஒரு ஜீப்பு வழங்க வேண்டும் என தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் அறிவுறுத்தியதன் பேரில், இம்மாவட்டத்தின் முதுநிலை மண்டல மேலாளர் நான்கு ஜீப்புகளை கொள்முதல் அதிகாரிகளின் போக்குவரத்திற்கென ஏற்பாடு செய்துள்ளார். மேலும் இம்மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் இந்த நான்கு ஜீப்புகளிலும் ஒரு ஆயுதம் தாங்கிய காவலரை நியமிக்கவும் இசைந்துள்ளார். தென் ஆற்காடு, தஞ்சை மற்றும் திருச்சி மாவட்டங்களில் உள்ள அனைத்து முதுநிலை மண்டல மேலாளர்களும் கொள்முதல் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து அலுவலர்களுக்கும், அவர்கள் கொண்டு செல்லும் பணத்திற்கும் போதிய பாதுகாப்பு வழங்குவதற்கான ஆலோசனைகள் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு வழங்கு துறையில் இழப்பு ஏற்பட்டு வருவது என்பது வாடிக்கையாகிவிட்டது. கணக்கில் அடங்காத இழப்பு, பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. ஆகவே இந்தத் துறையில் கணிசமான தொகையை எடுத்துச் செல்லும் அரசு அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு வழங்காமல் இருந்தது தவறு என்பதை இந்த அரசு உணரவில்லையா? அப்படி உணர்ந்திருந்தால் கவனத்தோடு இருந்து அந்த பணத்தைக் காப்பாற்ற ஏன் தவறியிருக்கிறது? அது மட்டுமல்லாமல் அந்த அதிகாரியின் உயிர் போனதற்குப் பிறகு அரசு யோசனை செய்து இப்போது ஜீப் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறது. அதுவும் அந்த மண்டலத்திற்கு மட்டும்தான். எங்கெங்கே கொள்முதல் இருக்கிறதோ அங்கெல்லாம் இதே நிலைமைதான் நீடித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே ஒட்டுமொத்தமாக எல்லா இடங்களிலும் ஜீப் வழங்க அரசு ஏன் யோசிக்கக் கூடாது? மறைந்தவரின் குடும்பத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்பு தாசில்தாரைப் பற்றியது அவ்வளவுதான்.



**திரு. மா. மணிமாறன்:** தலைவர் அவர்களே, இந்தத் துறையின் கவனக் குறைவால் அந்த அம்மையார் விதவையாகியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட ஏன் இடம் கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் நூற்றுக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினருக்கு யாராவது தகவல் சொல்லியிருந்தால் அதை தயவு செய்து அவர் நம்ப வேண்டாம். அவ்வளவு பெருந்தொகை இழப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நேரிடைக் கொள்முதல், ஏகபோக கொள்முதல் உள்ள பகுதிகளில் விவசாயிகளிடம் பணத்தை நேரிடையாக விநியோகம் செய்வதற்காகச் சென்றார்கள். இதுவரையில் நடந்திராத முறையில் பஞ்சாபில் நடக்கிறதைப் போல மோட்டார் சைக்கிளில் வந்து துப்பாக்கியால் சுட்டு அவரிடமிருந்த பணத்தைப் பறித்துக் கொண்டு போயிருக்கிறார்கள். இதைப் போல ஒரு இலட்சம் ரூபாய் போல கணிசமான தொகையை எடுத்துச்செல்லுகிறவர்கள், ஜீப், கார், பந்தோபஸ்து காவலர்கள் ஆகியவர்களோடு செல்ல வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. இனிமேல் இப்படி நேராமல் அரசு நிச்சயமாகப் பார்த்துக்கொள்ளும்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி நடைபெற்று இரண்டு மாத காலம் ஆகிறது. இன்னும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. சாதாரண கிராமத்திலேதான் இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அதிலும் பகலிலே கூட நடைபெற்றிருக்கக் கூடும். இதைக் கண்டுபிடிப்பதிலே அரசாங்கத்திற்கு என்ன இடையூறு இருக்கிறது? இதைப் போக்க காசோலை மூலமாகத் தொகையை விநியோகிக்க அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, காசோலை மூலம் தரலாம். விவசாயிகளுக்கு அதிலே கஷ்டம். நேரிடையாகப் பணத்தைக் கொடுத்தால்தான் அவர்களுக்கு நன்மை. இந்த வழக்கைப் பொறுத்தவரையில் தமிழர் வீடு தலைப்

படையைச் சேர்ந்த தமிழரசன் மற்றும் இருவரும் இந்தக் கொலையில் ஈடுபட்டவர்கள் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. செந்தமிழன் என்பவர் இரண்டு நாட்களுக்கு முன்பு கைது செய்யப்பட்டுள்ளார்.

**(இ) இராசபாளையம் இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் இன்மை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. கி. இராமன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் சார்பில் அந்த பொருள் குறித்து திரு. கி. வெங்கடாசலம் அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. கி. வெங்கடாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பஞ்சாலைகளும், நூற்பாலைகளும் அதிகமுள்ள இராசபாளையத்தில் 5 மருத்துவர் இருக்க வேண்டிய இ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் ஒரு மருத்துவரே இருப்பதால், விபத்தினால் அவசர சிகிச்சைக்கு வரும் ஆலைத் தொழிலாளர்களை உடனடியாகக் கவனிக்காத நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

**அறிக்கை.**

இராசபாளையத்தில் அமைந்துள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 5 உதவி மருத்துவர் பணியிடங்களில், ஒரு பணியிடத்தில் ஏற்கெனவே 14-7-1986 முதல் ஒரு மருத்துவர் பணியாற்றி வருகிறார். மூன்று பணியிடங்களில் பணி மாறுதல் மூலம் மூன்று மருத்துவர்கள் மார்ச்சு மாதம் பணி நியமனம் செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு பணியிடமும் விரைவில் நிரப்பப்படும். அவசர சிகிச்சைக்கு இம்மருத்துவ மனைக்கு வரும் ஆலைத் தொழிலாளர்களுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை அளிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.



**(ஈ) விருதுநகர் வட்டத்தில் சில ஊர்களில் ஆற்றுநீரில் கழிவுநீர் கலத்தல்**

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் வட்டம், ஆவுடையார்புரம், மன்னார் கோட்டை ஆகிய ஊர்களில் ஆற்று நீரில் கழிவு நீர் கலப்பதால் பொது மக்கள் பாதிப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

**அறிக்கை.**

காமராசர் மாவட்டத்தில், விருதுநகர் தாலுக்காவில் ஆவுடையார்புரம் மற்றும் மன்னார்கோட்டை ஆகிய கிராமங்கள் உள்ளன. அவைகள் இரண்டும் விருதுநகரிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளன. இக்கிராமங்கள் விருதுநகர் ஊராட்சி மன்ற நிர்வாகத்தின்கீழ் உள்ளன. ஆவுடையார்புரத்திலும் மன்னார்கோட்டையிலும் மக்கட்தொகை முறையே 3,500 மற்றும் 1,500 ஆகும்.

ஆவுடையார்புரத்தில் உள்ள திறந்த வெளிக் கிணற்றின் தண்ணீர் விசை பம்பு மூலம் மேல்நிலைத் தொட்டிக்கு ஏற்றப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது. மக்கள் இத்தண்ணீரை பாத்திரங்கள் கழுவி சுத்தம் செய்வதற்காக பயன்படுத்தி வருவதாகத் தெரியவந்தது. இதைத் தவிர ஆற்றுக்குள் குழாய்க் கிணறுகளிலிருந்து பெறப்படும் தண்ணீரையும் மக்கள் குடிநீருக்காக உபயோகப்படுத்துகின்றனர். இக்கிராமத்திலிருந்து 500 மீட்டர் தொலைவில் ஓடும் கௌசிகா ஆற்றுப் படுகை நீரினை மக்கள் உபயோகப்படுத்துகின்றனர். இல்லங்களிலிருந்து, துவைப்பதாலும், குளிப்பதாலும் வெளியேறும் கழிவுநீர் கிராமத்தில் அமைந்திருக்கும் இரண்டு குட்டைகளில் வெளியேற்றப்படுகிறது. மன்னார்கோட்டையில் குடிநீர் உபயோகத்திற்காக ஒரு ஆழ் குழாய்க் கிணறு உள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1987 ஏப்ரல் 28

கௌசிகா ஆறு வற்றாத ஜீவநதியல்ல. மழைக்காலங்களில் மட்டும் தண்ணீர் இவ்வாற்றில் ஓடுகின்றது. விருதுநகர் நகராட்சியிலிருந்து சுத்திகரிக்கப்படாத அன்றாடக் கழிவுநீரின் ஒரு பகுதி இந்த ஆற்றில் செல்லுகின்றது. நாளொன்றுக்கு சுமார் 1,095 கிலோ லிட்டர் அன்றாடக் கழிவு நீரை சேகரித்து சல்லடைக் கழிப்புக்குப் பின்னர் கழிவுநீர் பண்ணைக்கு அனுப்பப்படுகின்றது. இந்நகராட்சிக்குச் சொந்தமான 125 ஏக்கர் நிலத்தில் 16 ஏக்கர் நிலம் கினிப் புல்பண்ணை வளர்ப்பதற்கு கழிவுநீர் பயன்படுத்தப்படுகின்றது. கழிவுநீர் ஐந்து வடிமுனைகள் மூலமாக கௌசிகா ஆற்றுக்குச் செல்கிறது. இவ்வாற்றின் குறுக்கே பொதுப்பணித் துறையினர் குள்ளூர் சந்தை அணையைக் கட்டியுள்ளனர். கௌசிகா ஆறு மழைக் காலங்களில் மட்டுமே தண்ணீரைப் பெறுகின்றது. தண்ணீர் அணைக்கட்டினுள்ளேயே தேக்கி வைக்கப்படுகின்றது. ஐந்து வடிமுனைகளிலிருந்து வெளியேற்றப்படும் அன்றாடக் கழிவு நீரானது அணைக்கட்டின் மேற்பகுதியிலேயே சென்று அடைகின்றது. அணைக்கட்டில் நிரம்பி வழியும் தண்ணீர் மட்டுமே ஆற்றின் கீழ்ப்பகுதியை சென்று அடைகின்றது.

ஆவுடையார்புரம், மக்கள் குடிநீருக்காக கௌசிகா ஆற்றுப் படுகையிலிருந்து தண்ணீர் எடுக்கும் இடம், அணைக்கட்டின் கீழ்ப்பகுதியில் 10 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. குடிநீருக்காக ஆற்றின் படுகையிலிருந்து எடுக்கப்படும் தண்ணீரின் மாதிரி மற்றும் ஆவுடையார்புரத்திலுள்ள திறந்த வெளிக் கிணறு மற்றும் ஆழ்துளைக் குழாய் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட தண்ணீரின் மாதிரிகள் சென்னை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய பரிசோதனைக் கூடத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டது. குடிநீருக்குப் பயன்படுத்த ஆற்றுப் படுகையிலிருந்து எடுக்கப்படும் நீரானது மற்ற நீர் ஆதாரங்களிலிருந்து பயன்படுத்தப்படும் நீரைவிட நன்றாக உள்ளது என்பது பகுப்பாய்வு அறிக்கையின்படி தெரிய வந்தது.

இரயில்வே பாலத்திற்கு அருகில் உள்ள [illegible] கழிவுநீர் வெளியேற்றும் விசைப்பம்பு நிலையத்தின் மேல்பகுதி, நகராட்சி கழிவுநீர் விசைப்பம்பு நிலையம் [illegible] அருகில் உள்ள வடிமுனைகளிலிருந்து கழிவுநீர் மாதிரி மற்றும் குள்ளூர் சந்தை அணையிலிருந்து எடுக்கப்பட்ட [illegible]



1987 ஏப்ரல் 28] [திரு. ப. உ. சண்முகம்]

[சே]கரிக்கப்பட்டு வாரிய ஆய்வுக்கூடத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. குள்ளூர் சந்தை அணையின் மேற்பகுதியில் உள்ள அன்றாடக் கழிவுநீரின் தன்மை, அது அணையின் விளிம்பிலிருந்து வழியத் தொடங்கும் பகுதியை அடைவதற்கு முன்னர் நல்ல மேம்பாடு அடைந்திருப்பது பகுப்பாய்வு அறிக்கையிலிருந்து தெரியவந்தது.

விருதுநகர் நகராட்சி தன்னுடைய 25—11—86 நாளைய தீர்மானம் எண் 710-ல் தனது பகுதியிலிருந்து அன்றாடக் கழிவு நீர் ஆற்றை சென்று அடையாவண்ணம் தடுப்பதற்காக ரூ. 19 இலட்சம் மதிப்பீட்டில் கருத்துரு ஒன்றிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் இதற்காக ஆகும் செலவை கடனாகவோ அல்லது மானியமாகவோ பெற அரசை அணுகவும் மற்றும் உதவி பெற புதுடெல்லியில் உள்ள தரிசு நில மேம்பாடு வாரியத்தை அணுகவும் முடிவு செய்துள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இதனைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.

**திரு. இரா. தாமரைக்கனி**: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்த அறிக்கையில் விருதுநகர் நகராட்சியின் கழிவு நீர் கௌசிகா நதியில் கலக்கிறது என்று கொடுத்திருக்கிறார்கள். இந்தக் குடி தண்ணீரை ஆவுடையார்புரம் மக்கள் அருந்துவதாகவும் கொடுத்திருக்கிறார்கள். விருதுநகர் நகராட்சியிலிருந்து, கழிவு நீர் ஆற்றில் கலக்காமல் இருக்க தடுப்புச் சுவர் கட்டும் நடவடிக்கைக்காக புதுடில்லியில் உள்ள தரிசு நில மேம்பாட்டு வாரியத்தை அணுகி இருப்பதாக அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். அந்தத் தடுப்புச் சுவரை கட்ட அரசு ஒரு கால வரம்பை நிர்ணயிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கழிவு நீரை மக்கள் குடிப்பதில்லை. கழிவு நீர் ஆற்றில் போக வாய்ப்பு இருக்கிறது என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஆற்றிலே கிணறு எடுத்து, அதிலிருந்து தண்ணீரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன யோசனையை அரசு பரிசீலிக்கும்.

[1987 ஏப்ரல் 28

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆவுடையார்புரம் பொது மக்கள் அந்த ஆற்றிலுள்ள நீரை அருந்துவதாக அமைச்சரவர்கள் கொடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. மேலும் 4 மாதங்களுக்கு முன்பாக அந்தத் தண்ணீரை அருந்திய குழந்தைகளுக்கு எல்லாம் இளம் பிள்ளை வாதம் ஏற்பட்டதாகவும், அவர்கள் விருதுநகர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தத் தண்ணீரை அருந்துவதற்குத் தடை விதித்ததாகவும அந்தப் பகுதி பத்திரிகைகளில் செய்தி வந்தது. ஆனால் மாசுக் கட்டுப்பாடு வாரியம் அந்தத் தண்ணீரை அருந்துவதற்கு எந்தத் தடையும் இல்லை, தண்ணீர் சுத்தமாக இருக்கிறது என்று அறிக்கை கொடுத்திருக்கிறது. ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுத்த அறிக்கை சரியா அல்லது இப்போது அமைச்சரவர்கள் கொடுத்த அறிக்கை சரியா என்பது தெரியவில்லை. ஆதலால் அமைச்சரவர்கள் மீண்டும் இதில் கவனம் செலுத்தி, இந்த ஆற்றுத் தண்ணீரை அருந்தத் தடை விதிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை கொடுத்ததாகத் தகவல் இல்லை. அது கிடைக்குமானால், அது குறித்து அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

**(உ) பெரம்பலூர் நேரு சர்க்கரை ஆலைக் கழிவுநீரால் பாதிப்பு**

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் நேரு சர்க்கரை ஆலையின் கழிவு நீராலும் புகையாலும் அப்பகுதி மக்கள் பாதிக்கப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவையின் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



1987 ஏப்ரல் 28] [திரு. ப. உ. சண்முகம்]

**அறிக்கை.**

திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தாலுக்கா, இறையூர் கிராமத்தில் பெரம்பலூர் சர்க்கரை ஆலை லிமிடெட் (நேரு சர்க்கரை ஆலை) இருக்கிறது. இத்தொழிற்சாலை மாதத்திற்கு 4,000 மெட்ரிக் டன் சர்க்கரையைத் தயாரிக்கிறது. கரும்புகள் சிறு சிறு துண்டுகளாக நறுக்கப்பட்டு ரோலர் மிஷின் மூலம் சாறு பிழிந்து எடுக்கப்படுகிறது. பிறகு இத்துடன் தண்ணீர் கலந்து அதிக அளவு சாறு எடுக்கப்படுகிறது. இந்த சாறு ஒரு எடையினர் மூலம் செலுத்தப்படுகிறது. பிறகு இந்தச் சாற்றுடன் சுண்ணாம்பு கலந்து சூடேற்றப்படுகிறது.

சூடேற்றப்பட்ட சாறு பிறகு தெளிய வைக்கப்படுகின்றது. பிறகு சல்பர்-டை-ஆக்ஸைட் சாற்றில் செலுத்தப்படுகிறது. இதன் மூலம் சாறு தெளிவாக்கப்பட்ட சாறு மீண்டும் சூடேற்றப்படுகின்றது. அழுத்தமான அல்லது கனமான திரவமாக்கப்பட்டு பின்பு சிறு கட்டிகளாக மாற்றப்படுகின்றது. மூலச் சாற்றிலிருந்து சர்க்கரைக் கட்டிகள் மீது தண்ணீர் தெளிக்கப்பட்டு பிரிக்கப்படுகிறது. மொலாஸஸ் வடிக்கட்டப்பட்டு வெளியேற்றப்படுகிறது. தெளிப்பது, கழுவுதல், ஒழுகுதல், குளிரூட்டப்படும் நீருடன் கலந்த எண்ணெய் மற்றும் சாறு, கழுவுவதால் உண்டாகும் கழிவு முதலியன சர்க்கரைத் தொழிற்சாலைக் கழிவுநீராக நாளொன்றுக்கு 1,000 கிலோ லிட்டராக வெளியேற்றப்படுகிறது. சர்க்கரை ஆலையின் கழிவுநீர் அமிலத்தன்மை உடையதாகவும் மிதக்கும் திடப்பொருட்கள், உயிர் இரசாயன உயிரகத் தேவை, இரசாயன உயிரகத் தேவை எண்ணெய்ப் பொருட்கள் முதலியவற்றையும் கொண்டுள்ளது.

1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26-வது பிரிவின்படி வடிகால் கழிவுநீர்/தொழிற்சாலைக் கழிவுநீரினை வெளியேற்ற தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அனுமதி கோரி இத்தொழிற்சாலை விண்ணப்பித்தது. வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளுக்கேற்ப தொழிற்சாலைக் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து வெளியேற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கப்பட்டது. அனுமதி வழங்கிய பிறகு, தொழிற்சாலையானது சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கும் பொருட்டு [illegible] தொழில்நுட்ப ஆலோசகரை அணுகியது.

[திரு. ப. உ. சண்முகம்] [1987 ஏப்ரல் 28

தொழிற்சாலையானது 2—4—1987-ல் ஆய்வு செய்யப்பட்ட போது ஆலையிலிருந்து வெளிவரும் கழிவுநீரானது மண்குட்டையில் தேக்கி வைக்கப்படுவது தெரிய வந்தது. அதனின்று வெளியேறும் உபரி நீர் ஒரு பாசன வாய்க்கால் மூலம் சென்று தொழிற்சாலையிலிருந்து சுமார் 500 மீட்டர் தூரத்திலுள்ள பொதுப் பணித்துறை சின்னார் நீர்த்தேக்க பாசன வாய்க்காலைச் சென்றடைகின்றது. பொதுப்பணித்துறை வாய்க்காலில் விடப்படும் தொழிற்சாலைக் கழிவுநீர் நல்லூர் என்னும் இடத்தில் தடுக்கப்பட்டு கழிவுநீரை, முறைவைத்து, விவசாயத்திற்கு விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். கழிவுநீரினை பொதுப்பணித்துறை வாய்க்காலில் திருப்பிவிட மக்கள் அமைத்திருக்கும் கரையானது உடையும்போது தொழிற்சாலைக் கழிவுநீரானது சின்னாறை சென்றடைவதாகச் சொல்லப்படுகிறது. சுத்திகரிக்கப்படாத தொழிற்சாலைக் கழிவுநீரானது ஆற்றை சென்றடையும்போது நிலநீர்/நிலத்தடிநீர் மாசுபட வாய்ப்புள்ளது.

காற்று மாசடைவதைப் பொறுத்தவரை, கொதிகலன் பிரிவு, சாறு சல்பைட்டேசன் பிரிவு மற்றும் திரவ சல்பைட் பிரிவுகளிலிருந்து முக்கியமாக வாயுக் கழிவுகள் வெளிவருகின்றன. வெப்ப வாயுக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக கொதிகலனிலிருந்து 33.33 மீட்டர் உயரத்தில் புகை போக்கி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை ஒவ்வொன்றும் 15.2 மீட்டர் உயரமுள்ள இரண்டு புகை போக்கிகளை முறையே சாறு/திரவ சல்பேட் பிரிவுகளில் நிறுவியுள்ளது.

1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளின்படி வாயுக்கழிவுகளைக் கட்டுப்படுத்தி வெளியேற்ற வேண்டும் என்ற நிபந்தனையின்படி தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கப்பட்டது. தொழிற்சாலை எடுத்துவரும் நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேரு சர்க்கரை ஆலையில் சல்பர்டை ஆக்சைடு போன்ற இரசாயனப் பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன.



1987 ஏப்ரல் 28] [டாக்டர் க. நல்லமுத்து]

அந்தக் கழிவு நீரால் நிலத்தடி நீரும், வாயு மண்டலமும் பாதிக்கப்படுவதால், அதனுடைய விஷம் கலக்கப் படுவதால், மனிதனுடைய இருதயம், இரத்தம், ஈரல், சிறுநீரகம், மூளை, டைஜஸ்ட்டிவ் சிஸ்டம் போன்றவைகள் எல்லாம் பாதிக்கப்பட்டு, அந்த மனிதனுடைய உடல் நலம் பாதிக்கப்பட்டு, உயிருக்கே ஆபத்து ஏற்படும் நிலை இருப்பதுடன், அங்கே இருக்கும் விலங்குகள், தாவர இனங்கள் பாதிக்கப்படுகின்றன. இதைத் தடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல அவ்வளவு பயங்கரமாக எதுவும் இல்லை. ஆனால் பாதிப்பு இருக்கிறது என்பதை நான் ஓரளவுக்கு ஒத்துக்கொள்கிறேன். மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இதைக் கவனித்துக்கொண்டு வருகிறது. மேற்கொண்டு நடவடிக்கையை மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மூலமாக அரசு எடுக்கும்.

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் 1974-ல் இந்த ஆலையில் கழிவு நீர் புகை வாயு மண்டலத்தோடு சேருவதைத் தடுக்க தடுப்பு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று அறிகிறேன். இது குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தகுந்த நடவடிக்கை விரைவாக எடுக்கப்படும்.

(முற்பகல் 11-20)

### (ஊ) அம்பாசமுத்திரம் வட்டம் அரசன்குளத்தில் பள்ளியில்லாதது.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், அரசன்குளம் கிராமத்தில் பள்ளிக்கூடம் ஒன்றும் இல்லாமையால் அங்குள்ள குழந்தைகள் சுமார் 2 கி.மீ. தூரம் உள்ள அரியநாயகிபுரத்திற்குச் சென்று படித்து வருவதால் அங்குள்ள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1987 ஏப்ரல் 28

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள அரசன்குளம் கிராமத்தில் புதிய ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி தொடங்குவது சார்பாகக் கருத்துரு எதுவும் இதுவரை ஆரம்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பெறப்படவில்லை. மேற்சொல்லப்பட்டுள்ள அரசன்குளம் கிராமத்தில் புதிய பள்ளி தொடங்குவதற்கான கருத்துரு பெறப்படின், விதிமுறைகளின்படி பரிசீலனை செய்யப்பட்டு 1987-88 ஆம் ஆண்டு பள்ளி தொடங்குவதற்கான ஆணை வழங்கப்படும். இது குறித்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடம் தக்க கருத்துரு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 1987—88-ஆம் ஆண்டு பள்ளி தொடங்குவோம் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. வரும் கல்வி ஆண்டு, ஜூன் மாதத்திலேயிருந்தே தொடங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்படுமா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய பரிந்துரையை ஏற்று ஏற்கெனவே மாவட்ட முதன்மைக் கல்லூரி அதிகாரியிடம் கருத்து கேட்கப்பட்டிருக்கின்றது. விரைவில் அதை வரவழைத்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

## (ஏ) சைதாப்பேட்டையிலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு தேவையான வசதிகள் இல்லாமை

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இயங்கும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குத் தனியாக அங்கீகாரம் வழங்கியும், புதிய கட்டிடங்கள், ஆய்வகங்கள், விளையாட்டு மைதானம் மற்றும் மாணவியர்களுக்கு இருக்கை வசதிகள் இல்லாததால் ஏற்பட்டுள்ள நிலை



1987 ஏப்ரல் 28] [திரு. சைதை சா. துரைசாமி]

குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

சைதாப்பேட்டையில் உள்ள அரசு கல்வியியல் கல்லூரியைச் சார்ந்த மாதிரி மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்புவரை பயின்று வந்த மாணவியர்களுக்கு என்று தனியே அரசு (பெண்கள்) உயர்நிலைப்பள்ளி தொடங்க ஆணையிடப்பட்டு அப்பள்ளி 1984—85 லிருந்து தனி அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளியாக இயங்கி வருகிறது.

2. அப்பள்ளி தற்சமயம் மாதிரி மேல்நிலைப்பள்ளி கட்டிடத்தில் ஒரு பகுதியிலேயே செயல்பட்டு வருகிறது. அரசு கல்வியியல் கல்லூரி வளாகத்தில் மேற்சொன்ன பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு என்று குறிப்பாக ஒரு பகுதியை ஒதுக்கீடு செய்ய கல்லூரிக் கல்வி இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

3. 1986—87-ல் மேற்கண்ட சைதாப்பேட்டை அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு ரூ. 1.30 இலட்சம் செலவில் ஆய்வுக்கூட கட்டிடம் கட்டவும் ரூ. 30,000 செலவில் ஆய்வுக்கூட தளவாடங்கள் அளிக்கவும் ஏற்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

4. அரசு நிதிநிலை இடம் தருவதற்கேற்ப இனிவரும் ஆண்டுகளில் அப்பள்ளிக்கு புதிய கட்டிடம் மற்றும் ஏனைய வசதிகள் செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையில் கட்டிடம் கட்டுவதற்கான இட ஒதுக்கீடு அரசு பரிசீலனையில் உள்ளது என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்தப் பரிசீலனையை விரைவில் முடித்து இடம் ஒதுக்கீடு செய்யவும், ஆய்வகங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவும், புதிதாகக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் நடப்பு ஆண்டிலேயே பணிகளைத் தொடங்குவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கல்வியியல் கல்லூரி வளாகத்தில தனியாக ஒரு பகுதியை ஒதுக்கீடு செய்ய கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களிடமிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளது. அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும். ரூ. 1½ லட்சம் மதிப்பில் அந்தப் பள்ளியினுடைய ஆய்வு கூடக் கட்டிடம் கட்டுவதற்கும், ஆய்வுக் கூடத் தளவாடங்களுக்கும் 1986—87 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. மேற்கண்ட வசதிகளை செய்து தர அரசு தக்க நடவடிக்கையை ஆய்ந்து எடுக்கும்.

**(ஏ). அய்யம்பேட்டையில் துணை மின்நிலையம் அமைக்கும் பணி.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு எஸ். இராசாராமன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் சார்பில் அந்தப் பொருள்குறித்து டாக்டர் கே. சௌரிராஜன் அவர்கள் மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**டாக்டர் கே. சௌரிராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், அய்யம்பேட்டை பேரூராட்சியில் ஒரு துணை மின்நிலையம் அமைக்க அரசு அனுமதி வழங்கி சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகியும் இன்னும் கட்டுமானப் பணிகள் துவங்கப்படாமல் இருப்பது குறித்தும் அதனால் சுற்றுப்புற கிராமங்களுக்கு விவசாயம் மற்றும் பல பணிகளுக்கு மின் இணைப்பு கிடைக்காமல் பொதுமக்கள் மிகவும் அவதிப் படுவது குறித்தும்" உள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை**

அய்யம்பேட்டை 66/11 கே.வி. துணைமின் நிலையத்திற்கான 4 கி.மீ. 66 கே.வி. மின் கம்பித் தொடர் அமைக்கும் பணி முடிவடைந்து விட்டது. துணை மின் நிலைய கட்டுமானப்





பணிகள் நடைபெற்று வருகின்றன. 6 மாத காலத்திற்குள் பணியினை முடித்து துணை நிலையத்தினை இயக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அய்யம்பேட்டை துணை மின் நிலையம் அமைக்கப்படாத தால் சுற்றுப்புற கிராமங்களில் விவசாயம் மற்றும் இதர பணி களுக்காக மின்சார இணைப்புகள் வழங்க முடியாத நிலை இல்லை. மேற்கண்ட பணிகளுக்கு மின் இணைப்புகள் மற்ற இடங்களில் வழங்குவது போல் வழங்கப்படுகின்றன.

**(ஐ) வட ஆற்காடு மாவட்டம் தெக்குப்பட்டியிலுள்ள சந்தன மரப் பொருட்கள் தொழிற்சாலை பராமரிப்புப் பணிகள்.**

**திரு. டி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வட ஆற்காடு மாவட்டம், தெக்குப்பட்டில் அமைந் துள்ள சந்தன எண்ணெய் தொழிற்சாலை 31—1—1987 முதல் மூடப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின்கீழ் இயங்கி வரும் வடாற்காடு மாவட்டம் தெக்குப்பட்டு கிராமத்தில் உள்ள சந்தன மரப்பொருட்கள் தொழிற்சாலை 31—3—1987 முதல் மூடப்பட வில்லை. ஆனால், இந்தொழிற்சாலையில் வருடாந்திர பரா மரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

2. 1—12—1984 முதல் இதுவரை உற்பத்தி செய்யப்பட்ட சந்தன எண்ணெயின் அளவு 9 டன்களாகும். அதில் 31—3—1987 அன்று கையிருப்பில் உள்ள சந்தன எண்ணெய் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள 5 டன்களாகும். சந்தன மரத்தின் மார்க் கெட் விலை உயர்ந்துவிட்டது. ஆனால், அதற்கேற்ப சந்தையில் சந்தன எண்ணெயின் விற்பனை விலைக்கு உயரவில்லை. எனவே, அப்போதிருந்த மார்க்கெட் விலைக்கு சந்தன

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 ஏப்ரல் 28

எண்ணெயை விற்றால், அடக்க விலைக்கும் குறைவாக விற்று, நட்டம் அடைய நேரிடும். எனவே, கீழ்க்கண்ட சூழ்நிலை ஏற்பட ஆரம்பித்த உடனே, சந்தன எண்ணெய் உற்பத்தி மீண்டும் தொடங்கப்படும்:—

(அ) பராமரிப்புப் பணிகள் முடிக்கப்படுதலும்;

(ஆ) கைவசமுள்ள சந்தன எண்ணெயில் 50 சதவீதம் விற்பனையானதும்;

(இ) சந்தன எண்ணெய் விற்பனை விலையில் முன்னேற்றம் ஏற்பட்ட உடன்.

**திரு. இ. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்டிருக்கின்ற விவர அறிக்கை யில் இத்தொழிற்சாலையில் வருடாந்திரப் பராமரிப்பு வேலைகள் நடைபெற்று வந்திருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மையில் வருடாந்திர பராமரிப்புப் பணி நடைபெற வில்லை. அந்த சந்தன எண்ணெய் தொழிற்சாலையில் 6 கன்டென்சர்கள் பாதிக்கப்பட்டு பழுதடைந்து விட்டிருக் கின்றன. உப்பு நீரைப் பயன்படுத்தியதன் காரணமாக அப்படிப் பட்ட நிலை ஏற்பட்டுவிட்டது. அதை முழுமையாக மாற்றி னால்தான் தொழிற்சாலை தொடர்ந்து நடைபெறும். அதுவும் நல்ல நீரைக் கொண்டு வருவதற்கு வழி செய்யவேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுவதற்கு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது முற்றிலும் உண்மை. அங்கே கட்டுமானப் பணி செய்த டான்சி நிறுவனம் சரியாகச் செய்யாததனாலே அதற்குத் தரமான தண்ணீரும், போதுமான தண்ணீரும், கிடைக்கவில்லை. அதைத் திருத்துவதற்கு, நவீன மயமாக்குவதற்கு டெண்டர் விடப்பட் டிருக்கிறது. அடுத்த மாதம் 12-ம் தேதி கடைசி தேதியாகும்.



987 ஏப்ரல் 28]

**திரு. இ. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு சந்தன எண்ணெய் உற்பத்தி மீண்டும் துவங்க, ஏற்கெனவே அங்கே பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளர் களுக்கு தொடர்ந்து வேலை தர அரசு நடவடிக்கை எடுக்குமா? அங்கு 37 என்.எம்.ஆர். தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்களே, அவர்களுக்கு வேலை தரப்படுமா? சந்தன எண்ணெய் உற்பத்தியில் நஷ்டம் ஏற்படாமல் இருப்பதற்காக அரசு தனியாக ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்தத் தொழிற் சாலையில் கைவசம் உள்ள சந்தன எண்ணெயின் மதிப்பு 1 கோடி ரூபாயாகும். ஆனால் உற்பத்தி விலையை விட இதற்கான மார்க்கெட் விலை குறைவு. ஆனால் சந்தன கட்டையின் விலையோ எண்ணெயின் விலையை விட அதிகம். இதற்குக் காரணம் இன்றைக்கு சுமார் 3, 4 கோடி ரூபாய் பெறுமானமுள்ள சந்தன எண்ணெய், சந்தன கட்டைகளைக் கடத்துவதின் மூலமாக வேறு மாநிலங்களில் தயாரிப்பதாகத் தெரிய வருகிறது. சந்தனக்கட்டைகளைக் குறிப்பிட்ட அளவுக்கு மேல் வைத்திருப்பது குற்றம் என்பதற்கான சட்டம் இல்லை. அதனால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிட மிருந்து மத்திய அரசின் காட்டு இலாகாவுக்கு குறிப்பிட்ட அளவுக்கு மேல் சந்தன எண்ணெய் வைத்திருந்தால் அது குற்றம் என்றும், ஏற்றுமதி செய்தவர்கள் எங்கிருந்து ஏற்றுமதி செய்தார்கள் என்பதை எல்லாம் கண்டறிந்து அதுபற்றி சட்ட மியற்ற வேண்டுமென்றும் கடிதம் எழுத இருக்கிறோம்.

**(ஒ) சேலம் மாவட்டம், மோளப்பாறையில் கொத்தடிமை குடும்பங்களின் நலனுக்கென அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கம்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. கே. அன்பழகன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத் துள்ளார். அவர் சார்பாக அந்தப் பொருள் குறித்து திரு. ஜெ. ராஜாபாபு அவர்கள் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருவார்.

[1987 ஏப்ரல் 28

திரு. ஜெ. ராஜாபாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆந்திராவில் கொத்தடிமைகளாயிருந்து மீட்கப் பட்டவர்களுக்காக சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கமலாபுரம் ஊராட்சி, மோளப்பறையில் அரசு ஆலம் நிறுவப்பட்ட கிரஷர் சொசைடி செயல் இழந்து ஜல்லி உடைக்கும் தொழில் நிறுத்தப்பட்டுள்ளதால அதில் பணிபுரியும் சுமார் 150 தொழிலாளர்கள் வேலை இழந்துள்ள நிலையில் அவர் தம் குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

வேறு மாநிலங்களிலிருந்து மீட்கப்பட்ட கொத்தடிமைக் குடும்பங்களின் நலனுக்கென, சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டமேட்டுப்பட்டி, கிராமம், மோளப்பாறை என்னும் இடத்தில் ஜல்லிந் தொழிலாளர்கள் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம் 15—12—1982-ல் பதிவு செய்யப்பட்டு, 31—12—1982 முதல் இயங்கி வருகிறது.

2. இச்சங்கத்திற்கு 1984-ல் ரூ. 50,000 நடைமுறை மூலதன மாக அரசு வழங்கியது. தவிர ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலமாக ரூ. 2,78,800 இச்சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை இச்சங்கத் திற்கான கருவிகள் வாங்கவும், மின்வாரியம, வங்கிகள் முதலிய வற்றில் வைப்புத் தொகைகளாக வைக்க வழங்கப்பட்டுள்ளது.

3. இந்தச் சங்கம், 1986 ஆகஸ்ட் திங்கள் வரை இயங்கி வந்தது. அதன் பின்னர் கடந்த 6 திங்களாக இயங்கவில்லை. மேற்படி தொழிற்சங்கம் இயங்காததற்கு முதன்மைக் காரணம் நிதிப் பற்றாக்குறை என அறியப்படுகிறது. அதாவது கல் அரைக்கும் இயந்திரத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்கவும், ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கவும், இயந்திரம் ஓட் மின்கட்டணம் செலுத்தவும், இயந்திரத்தை



1987 ஏப்ரல் 28] [திரு. எ. அருணாசலம்]

அவ்வப்போது பழுது பார்க்கவும் போதிய நிதி வசதி இல்லாததால், இச்சங்கம் இயங்க இல்லாமல் போய்விட்டது. தவிர, சங்கத்தின் எழுத்தரும், இயந்திர ஓட்டுநரும் அவர்களு டைய பதவிகளை ராஜிநாமா செய்துவிட்டு நின்றுவிட்டனர். அவர்களுக்குப் பதிலாகப் புதிய எழுத்தர் மற்றும் ஓட்டுநர் ஆகியோரை நியமித்து, அவர்களுக்கு ஊதியம் வழங்கும் நிலையில் இச்சங்கம் இல்லாததால், புதிய எழுத்தர் மற்றும ஓட்டுநர் நியமித்து சங்கத்தைச் செயல்படுத்த இயலவில்லை.

4. இச்சங்கம் ஆரம்பித்த காலத்தில் 39 கொத்தடிமைக் குடும் பங்கள் மட்டும் சங்கத்திற்கு அருகில் குடியமர்த்தப்பட்டனர். இவர்களில் 25 நபர்களுக்குத் தலா ரூ. 1,000 முன் பணமாக சங்கத்திலிருந்து கொடுக்கப்பட்டது. இவர்களுக்கு வேலை செய்த கூலி கொடுக்கும்பொழுது, ஓரளவு தொகையை கூலித் தொகையிலிருந்து பிடித்தம் செய்ய முற்பட்ட பொழுது, கூலித் தொகையில் பிடித்தம் செய்வது கடுமையாக ஆட்சேபிக்கப் பட்டது. வழங்கப்பட்ட முன்பணத்தை பிடித்தம் செய்யாமல் இருக்க இயலாது என நிர்வாகம் தெரிவிக்க, அவர்கள் முன் பணத்தைத் திருப்பிச் செலுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு, எவ்வித தகவலுமின்றி மேற்படி 25 குடும்பங்கள் திடீரென்று வெளியேறிவிட்டனர். தற்போது 14 குடும்பங்களில் 5 குடும்பங் களைச் சேர்ந்த 5 பேர்கள் தமிழ்நாடு மேக்னிசைட் நிறுவனத்தில் பணியில் சேர்ந்து தற்போது பணிபுரிந்து வருகின்றனர். இடையில், சங்கம் இயங்கியபோது 8 கொத்தடிமைகளே பணி புரிந்து வந்தனர். ஜல்லிச் சங்கத்தில் கொடுக்கும் கூலித் தொகை அவர்களுக்குப் போதுமானதாக இல்லையென்றும் தமிழ்நாடு மேக்னிசைட் நிறுவனத்தில் அதிகக் கூலி கிடைப்பதால் மேற்படி நிறுவனத்தில் வேலை செய்வதையே விரும்புவதாகவும் தெரிவித்தனர். தற்பொழுது, சங்கத்திற்கு அருகில் வசிக்கும் 14 குடும்பத்தினர் (சுமார் 30 நபர்கள்) இச்சங்கத்திற்குச் சொந்த மான குன்றில் ஜல்லி உடைத்து அதை விற்று வாழ்க்கை நடத்து கின்றனர். இச்சங்கத்தின் செயல்பாட்டினை நெறிமுறைப் படுத்துவதற்கென கூட்டுறவுத் துறை முதுநிலை ஆய்வாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

5. இச்சங்கத்தின் உறுப்பினர்கள் யாவரும் மீட்கப்பட்ட கொத்தடிமைகள் ஆகும். இவர்கள் சங்கத்தில் நிலையாக தங்கி வேலை செய்வதில்லை. அடிக்கடி வெளியூர் சென்று திரும்புகின்றனர். இவர்கள் தொடர்ந்து சங்கத்தில் வேலை

செய்யாததால் சங்கத்தின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. மேலும், கல் அரைக்கும் இயந்திரம் பழுதுபட்டு, அதைச் சரிபடுத்த கூடுதல் செலவினம் ஏற்பட்டது. ஆகவே, சங்கம் லாபத்தில் இயங்க இயலவில்லை. தற்பொழுது இயந்திரம் பழுதுபார்க்கப் பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றது. உடைக்கப்பட்ட பெருங்கற்கள் யாவும் தற்பொழுது இயந்திரத்திற்கு அருகில் கொண்டுவந்து குவிக்கப்பட்டுள்ளது. பணி செய்யும் உறுப் பினர்கள் யாவரும் இனி தொடர்ந்து சங்கத்தில் பணிபுரிய அறிவுறுத்தப்பட்டுள்ளனர். எனவே, இனி உற்பத்தி பெருகி, சங்கம் லாபத்தில் இயங்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

### (4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சித் தேர்தலை இன்னும் ஓராண்டு நீட்டிப் பதற்கு வழிவகை செய்யும் அளவிலே இச்சட்டமுன்வடிவு இங்கே அறிமுகம் ஆவதால், அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுக நிலையிலேயே என் எதிர்க்கிறேன் என்பதற்கான ஒரு விளக்கத்தை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரிவாகப் பேசுவதை விவாதத்தின்போது வைத்துக்கொள்ளலாம். You record your objection, if any.





**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் மாநக
ராட்சி தேர்தலை இன்னும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிப்பதற்
கான காரணங்களைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்லி
யிருக்கிறார்கள். சென்ற ஆண்டு இதனை நீட்டிப்பதற்கு
என்ன காரணம் சொல்லப்பட்டதோ அதே காரணத்தை இந்த
ஆண்டும் சொல்லி இதனை அறிமுகம் செய்திருக்கிறார்கள்.
மாநகராட்சிக்கு தேர்தல் நடத்தப்படாததால், மக்கள் பிரதி
நிதிகள் இல்லாத நிலையில் மக்கள் பலவிதமான பாதிப்புக்கு
உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். சுகாதார வசதி, குடிதண்ணீர்
போன்ற வசதிகளை எல்லாம் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத
தால் மக்கள் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதனால்,
மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே,
உடனடியாக தேர்தலை நடத்த அரசு நடவடிக்கைகளை மேற்
கொள்ள வேண்டும். இங்கே சொல்லப்பட்டுள்ள காரண காரிய
விளக்கங்களைப் பொறுத்தவரையிலும்கூட தேர்தலை நடத்தி
விட்டு கூட இச்சட்ட முன்வடிவைக் கொண்டு வரலாம். ஏற்
கெனவே உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலின்போது
அவ்வாறு செய்திருக்கிறோம். முன்பு சட்டத்தைத் திருத்த வழி
யில்லாத நிலையில், சட்டத்தை பின்னால் திருத்தலாம் என்று
சொல்லிவிட்டு இந்த அரசு எப்படி உள்ளாட்சி அமைப்புகளுக்
கான தேர்தலை நடத்தியதோ அதுபோல இந்த மாநகராட்சிக்
கான தேர்தலையும் முதலில் நடத்திவிட்டு, பிறகு சட்டத்
திருத்தத்தைக் கொண்டு வரலாம். ஆகவேதான் நான் இதனை
இன்ட்ரடக்ஷன் நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரும்
நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மாநகராட்சி
யில் அங்கம் பெறுகின்ற வாய்ப்பு இல்லாமல் இருப்பதால்,
மாநகராட்சியில் நடைபெற வேண்டிய பல்வேறு பணிகள்,
பொது சுகாதாரம் போன்ற பணிகள் எல்லாம் தடைப்பட்டிருப்
பதால் இச்சட்டமுன்வடிவை நான் அறிமுக நிலையிலேயே
எதிர்க்கிறேன்.

**திரு எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்
வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கின்றேன்.

[திரு. எ. அருணாசலம்] [1987 ஏப்ரல் 28

செய்யாததால் சங்கத்தின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. மேலும், கல் அரைக்கும் இயந்திரம் பழுதுபட்டு, அதைச் சரிபடுத்த கூடுதல் செலவினம் ஏற்பட்டது. ஆகவே, சங்கம் லாபத்தில் இயங்க இயலவில்லை. தற்பொழுது இயந்திரம் பழுதுபார்க்கப் பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றது. உடைக்கப்பட்ட பெருங்கற்கள் யாவும் தற்பொழுது இயந்திரத்திற்கு அருகில் கொண்டுவந்து குவிக்கப்பட்டுள்ளது. பணி செய்யும் உறுப் பினர்கள் யாவரும் இனி தொடர்ந்து சங்கத்தில் பணிபுரிய அறிவுறுத்தப்பட்டுள்ளனர். எனவே, இனி உற்பத்தி பெருகி, சங்கம் லாபத்தில் இயங்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

## (4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சித் தேர்தலை இன்னும் ஓராண்டு நீட்டிப் பதற்கு வழிவகை செய்யும் அளவிலே இச்சட்டமுன்வடிவு இங்கே அறிமுகம் ஆவதால், அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுக நிலையிலேயே ஏன் எதிர்க்கிறேன் என்பதற்கான ஒரு விளக்கத்தை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரிவாகப் பேரவைகை விவாதத்தின்போது வைத்துக்கொள்ளலாம். You record your objection, if any.



1987 ஏப்ரல் 28] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் மாநக
ராட்சி தேர்தலை இன்னும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிப்பதற்
கான காரணங்களைப் பொறுந்தவரையில் ஒன்றைச் சொல்லி
யிருக்கிறார்கள். சென்ற ஆண்டு இதனை நீட்டிப்பதற்கு
என்ன காரணம் சொல்லப்பட்டதோ அதே காரணத்தை இந்த
ஆண்டும் சொல்லி இதனை அறிமுகம் செய்திருக்கிறார்கள்.
மாநகராட்சிக்கு தேர்தல் நடத்தப்படாததால், மக்கள் பிரதி
நிதிகள் இல்லாத நிலையில் மக்கள் பலவிதமான பாதிப்புக்கு
உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். சுகாதார வசதி, குடிதண்ணீர்
போன்ற வசதிகளை எல்லாம் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத
தால் மக்கள் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதனால்,
மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே,
உடனடியாக தேர்தலை நடத்த அரசு நடவடிக்கைகளை மேற்
கொள்ள வேண்டும். இங்கே சொல்லப்பட்டுள்ள காரண காரிய
விளக்கங்களைப் பொறுத்தவரையிலும்கூட தேர்தலை நடத்தி
விட்டு கூட இச்சட்ட முன்வடிவைக் கொண்டு வரலாம். ஏற்
கெனவே உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலின்போது
அவ்வாறு செய்திருக்கிறோம். முன்பு சட்டத்தைத் திருத்த வழி
யில்லாத நிலையில், சட்டத்தை பின்னால் திருத்தலாம் என்று
சொல்லிவிட்டு இந்த அரசு எப்படி உள்ளாட்சி அமைப்புகளுக்
கான தேர்தலை நடத்தியதோ அதுபோல இந்த மாநகராட்சிக்
கான தேர்தலையும் முதலில் நடத்திவிட்டு, பிறகு சட்டத்
திருத்தத்தைக் கொண்டு வரலாம். ஆகவேதான் நான் இதனை
இன்ட்ரடக்ஷன் நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரும்
நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மாநகராட்சி
யில் அங்கம் பெறுகின்ற வாய்ப்பு இல்லாமல் இருப்பதால்,
மாநகராட்சியில் நடைபெற வேண்டிய பல்வேறு பணிகள்,
பொது சுகாதாரம் போன்ற பணிகள் எல்லாம் தடைப்பட்டிருப்
பதால் இச்சட்டமுன்வடிவை நான் அறிமுக நிலையிலேயே
எதிர்க்கிறேன்.

**திரு எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்
வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கின்றேன்.

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 28

உறுப்பினர்கள் சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள மனு மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,92,56,86,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சியினுடைய வருவாயை அதிகரிக்க ஊராட்சிக்குச் சொந்தமான இடங்களில் பலன் தரும் தென்னை, புளி, மா போன்ற மரவகைகள் பயிரிட உதவி செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,92,56,86,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையின் மீது முன்னுரையாக ஆற்ற வேண்டிய என்னுடைய உரையினை* நூல் வடிவில் மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்குத் தந்திருக்கிறேன். அவ்வுரையை இம்மன்றத்தில் ஆற்றியதாகக் கொண்டு, அவர்களது மேலான கருத்துக்களை வழங்க வேண்டுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் ஒரு மணிக்கு முடிவுற்று பேரவை மீண்டும் மாலை 4-00 மணிக்குக் கூடும்.

---

* 436—501 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.



1987 ஏப்ரல் 28]

**திரு. ஆர். ஈஸ்வரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1987-88 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கிராமப் பகுதிகளிலே உள்ள எழுத்தர்களுக்கு சுமார் 37 ரூபாயிலிருந்து 60 ரூபாய் வரைதான் வழங்கப்படுகிறது. தமிழகம் முழுவதும் உள்ள கிராமப் பஞ்சாயத்து பகுதி நேர எழுத்தர்களுக்கு சுமார் ரூபாய் 100-லிருந்து 150 ஆகக் கொடுக்க வேண்டும். அவர்களுடைய பகுதி நேர எழுத்தர்களுக்கு. அவர்களுடைய சம்பளம் தினக் கூலியாக ஒரு நாளைக்கு வேலைக்குப் போகிறவர்களுக்குச் சாதாரணமாக 10 ரூபாயிலிருந்து 15 ரூபாய் கிடைக்கும்பொழுது, அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 37 ரூபாயிலிருந்து 60 ரூபாய்தான் இதுவரைக்கும் தமிழகம் முழுவதும் உள்ள கிராம பஞ்சாயத்துப் பகுதி நேர எழுத்தர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதை 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே தூக்குச் சிப்பந்திகள் தமிழகம் முழுவதும் உள்ள கிராமம், பேரூராட்சிகளிலுள்ள தூக்குச் சிப்பந்திகளுக்கு சுமார் 60 ரூபாய் வரைதான் வழங்கப்படுகிறது. அதை ரூபாய் 150-இலிருந்து 200 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி, பேரூராட்சி மன்றங்களுக்கு நிதிப் பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தினால் பல்வேறு கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அடிப்படையான வேலைகள், எந்த வேலையும் முடியவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கு யூனியன் பொது நிதியிலிருந்து அந்தப் பஞ்சாயத்துக்கு நிதி கொடுப்பதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டும். ஊராட்சி ஒன்றியத்தினுடைய பொது நிதியிலிருந்து கொடுக்க வேண்டும் அல்லது அரசாங்கமே அந்த ஊராட்சி மன்றங்களுக்கு எந்த வகையிலேயாவது நிதி கொடுத்து அந்தக் கிராமத்தினுடைய முன்னேற்றத்திற்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். ஈஸ்வரன்] [1987 ஏப்ரல் 28

அதே நேரத்தில் கிராமப் பஞ்சாயத்துக்களிலும் பேரூராட்சி
களிலும் போர்வெல் அடிப்பம்புகள் போடப்படுகின்றன. அந்த
போர்வெல் அடிப்பம்புகள் சரிவர இயங்கவில்லை. அது மட்டு
மல்லாமல் ஒரு போர்வெல் அடிப்பம்பு போடுவதற்கு 20,000 ரூபாய்
முதல் 25,000 ரூபாய் வரை செலவிடப்படுகிறது. அதே நேரத்தில்
தனியார்கள் வீடுகளிலும், நிலங்களிலும் போர்வெல் பம்புசெட்
அமைக்க சுமார் 10,000 ரூபாய்தான் ஆகிறது. ஒரு போர்வெல்
போடுவதற்கு ஒரு அடிக்கு தனியார்கள் 10 ரூபாய் வீதம் வசூல்
செய்கிறார்கள். 200 அடி போர்வெல் போடுவதற்கு சுமார்
2,000 ரூபாய் ஆகிறது. மேற்கொண்டு தேவைப்படும் சாமான்
களுக்கு சுமார் 4,000 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரையில்
ஆகிறது. மொத்தத்தில் கணக்கிட்டுப் பார்க்கும்போது ஒரு
போர்வெல் போடுவதற்கு சுமார் 10,000 ரூபாய் ஆகிறது. ஆனால்
அரசு சார்புடைய குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஒரு
போர்வெல் போடுவதற்கு 20,000 ரூபாய் முதல் 25,000 ரூபாய்
வரையில் செலவாகிறது. அதற்கு என்ன காரணம்? தனியார்
போடுவதைவிட குடிநீர் வடிகால் வாரியம் போடுவதற்கு 10,000
ரூபாய், 15,000 ரூபாய் ஒரு போர்வெல்லுக்கு கூடுதலாகச்
செலவாவதற்கு என்ன காரணம்? இரும்புக்குப் பதிலாக
வெள்ளியிலே போடுகிறார்களா அல்லது தங்கத்தில் போடு
கிறார்களா? என்ன காரணத்தினால் இப்படி அதிகமான தொகை
செலவாகிறது? எங்களுடைய கிராமத்தில் போர்வெல் போட
10,000 ரூபாய்தான் ஆகியிருக்கிறது.

அது மட்டுமல்ல. ஊராட்சி ஒன்றியங்களில் இதற்கு முன்னால்
கல்வி, சுகாதாரம், விவசாயம், கால்நடை பராமரிப்பு ஆகிய
இலாகாக்கள் இருந்தன. இப்போது இந்த இலாகாக்கள் ஊராட்சி
ஒன்றியங்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளன. நாம்தான்
சொல்கிறோம். ஜனநாயக அடிப்படைத் தன்மைக்கு தொடர்
புடைய காரியங்கள் எல்லாம் கிராமப் பஞ்சாயத்துக்களிடம்
இருக்கவேண்டுமென்று சொல்கிறோம். மத்தியிலே அதிகமான
அதிகாரங்கள் இருக்கின்றன; அவற்றை மாநிலங்களுக்குப்
பகிர்ந்தளிக்க வேண்டுமென்று நீங்களே சொல்கிறீர்கள். நீங்கள்
அப்படிச் சொல்லும்போது ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து
கல்வி, சுகாதாரம், விவசாயம், கால்நடை பராமரிப்பு ஆகிய
இலாக்காக்களைப் பறித்துவிட்டீர்களே! என்? அதன்



1987 ஏப்ரல் 28] [திரு. ஆர். ஈஸ்வரன்]

காரணமாக கிராம மக்களுக்கு அடிப்படையான சிறு வேலை
களைக்கூட இன்றைக்குச் செய்ய முடியவில்லை. ஊராட்சி
ஒன்றியங்களில் இந்த இலாகாக்கள் இருந்தபோது ஊராட்சி
மன்றக் கூட்டங்கள் நடக்கும்போது இந்த நான்கு இலாகாக்
களைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்துகொள்வார்கள். இப்போது
இந்த இலாகா அதிகாரிகள் வந்து கலந்துகொள்வதில்லை.
அதனால் ஊராட்சி மன்றத் தலைவர்களும், பேரூராட்சி மன்றத்
தலைவர்களும் அந்தக் கிராமங்களின் குறைகளை எடுத்துச்
சொல்ல முடியாத நிலைமை இருக்கிறது. பல்வேறு சங்கடங்கள்
ஏற்படுகின்றன. விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால்
கிராமங்களில் இருக்கிற விவசாயிகளுக்கு எந்த நேரத்தில் என்ன
மருந்து அடிக்க வேண்டும் என்று சொல்வதற்கும் ஆள் இல்லை;
மருந்தும் கிடைப்பதில்லை தேவையான நேரத்தில்; ஆனால்
எல்லாம் கிடைக்கிறது என்று இங்கே சொல்கிறார்கள்.

அதைப்போன்று கல்வித் துறை இருக்கிறது. தமிழ்நாடு
முழுவதும் இருக்கக்கூடிய யூனியன் ஆசிரியர்களை எல்லாம் அரசு
ஊழியர்கள் ஆக்கினீர்கள். ஆனால் அந்தக் கல்விக் கூடங்கள்
எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களிடம் இருக்கின்றன. ஊராட்சி
ஒன்றியங்களுக்கு போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால்
பழுதடைந்த நிலையில் உள்ள கல்விக்கூடங்களை அவர்களால்
பழுது பார்க்க முடியவில்லை. தமிழ்நாடு முழுவதும் இருக்கிற
கல்விக் கூடங்களை பராமரிக்க ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை
சுமார் ஒரு கோடி ரூபாய்தான். என்னுடைய தொகுதியை
எடுத்துக்கொண்டால் இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள், ஒரு நக
ராட்சி இருக்கின்றன. அங்கே 5, 6 கிராமங்களில் இருக்கிற
கல்விக் கூடங்கள் எல்லாம் பழுதுபட்டிருக்கின்றன. 1984-85,
1985-86 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் மாவட்ட ஆட்சித் தலைவ
ரோடு தொடர்பு கொண்டு, கல்விக்கூடங்கள் பழுதுபட்டு,
பிள்ளைகள் மேல் விழுந்துவிடும் அபாயகரமான நிலையில் இருக்
கின்றன; ஆகையால் உடனடியாக அவற்றைப் பழுது பார்க்க
வேண்டுமென்று சொன்னேன். நிதிப் பற்றாக்குறை இருப்பதால்
கல்விக்கூடங்களைப் பழுது பார்க்க முடியவில்லை என்று சொன்
னார்கள். இப்போதும் அப்படித்தான் சொல்கிறார்கள். ஆகவே,
தமிழ்நாடு முழுவதிலும் இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றிய கல்விக்

[திரு. ஆர். ஈஸ்வரன்] [1987 ஏப்ரல் 28

கூடங்களை முழுமையாக அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லை என்றால் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற ஊராட்சி ஒன்றிய கல்விக்கூடங்களை பராமரிக்க தேவையான நிதியை தனியாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஊராட்சிகளுக்கும் டி.வி. வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் டி.வி. பழுதுபட்டால் பழுது பார்க்க முடியவில்லை. ஊராட்சிமன்றத் தலைவரிடம் சொன்னால், அல்லது ஒன்றியத் தலைவரிடம் சொன் னால் டி.வி. பழுது பார்க்க பயிற்சி பெற்ற அதிகாரிகள், அது தொடர்பான அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை என்று சொல்கி றார்கள். ஆகவே, ஊராட்சி ஒன்றிய அளவில் அல்லது கோட்ட அளவில் டி.வியை பழுது பார்ப்பதற்கு பயிற்சி பெற்ற அலுவலர் களை நியமிக்க வேண்டும். இப்போது அந்த அலுவலர்கள் இல்லை என்று சாக்குபோக்குச் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே, ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்ட டி.வி.கள் பழுது பார்க்கப்படாத நிலையில், பழுதடைந்தபடியே இருக் கின்றன. உடனுக்குடன் டி.வி-யை பழுதுபார்த்து, பயன்படுத்து கின்ற முறையில் டி.வி.-யில் பயிற்சி பெற்ற, அனுபவம் உள்ள அலு வலர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கி றேன். அந்தப் பழுதடைந்த டி.வி. களை உடனடியாக பழுது பார்க்க மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய உரிய ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அடுத்து தமிழகம் முழுவதும் வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. என் ஆர் இ.பி., ஐஆர்.டீ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி., போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் தாட்கோவின் மூலமும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அந்த வீடுகளைப் பொறுத்தவரையில் 20 அடி நீளம், 10 அடி அகலம் என்ற அளவுக்குக் கட்டப்படுகிறது. ஒருசில கிராமங்களில் மண் சாந்து வைத்துக் கட்டுகிறார்கள்.



1987 ஏப்ரல் 28] [திரு. ஆர். ஈஸ்வரன்]

ஒருசில கிராமங்களில் சுண்ணாம்புச் சாந்தும், சிமென்ட்டும்கூட போடப்படுகிறது. வெளிப்புறங்களில் சிமென்ட் சாந்தைப் பயன் படுத்தியும், உட்புறங்களில் சுண்ணாம்புச் சாந்தைப் பயன் படுத்தியும் பூசப்படுகிறது. இந்நிலையில் இதற்காக வழங்கப்படு கின்ற தொகை போதுமானதாக இல்லை. எனவே இந்த 6,000 ரூபாய் என்பதை 10,000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால்தான் தரமான வீடாகக் கட்ட முடியும்.

அடுத்து ஊராட்சி ஒன்றியங்களில் சட்டமன்ற உறுப்பினர் களுக்கு ஜீப் வழங்க வேண்டுமென்று அரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரைப் பொறுத்தவரையிலும் சுமார் 2 ஒன்றியங்களாவது இருக்கும். சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த ஒன்றியப் பகுதிகளைச் சுற்றிப் பார்க்கச் செல்கிறபோது, எப்போது போய்க் கேட்டாலும் ஜீப் ரிப்பேராக இருக்கிறது என்றுதான் சொல்கிறார்கள். எனவே சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதியைப் பார்வையிடுவதற்கு கஷ்டமாக இருக்கிறது. இரண்டு ஒன்றியங்கள் இருந்தால் 4 நாட்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஜீப் வழங்க வேண்டு மென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவற்றைக் கேட்கிறபோது குறிப்பிட்ட நேரத்தில் ஜீப் கொடுக்கப்படுவ தில்லை. இதற்கு ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்து தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாதம் மூன்று முறையாவது தொகுதியைப் பார்வையிடுவதற்குரிய வகையில் வசதி செய்து அந்த வகையில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஜீப் கிடைக்காத நிலைமையில் வாடகை முறையில் வாகனங்களை எடுத்துக்கொண்டு செல்லக்கூடிய நிலைமை இருப்பதால் மிகுந்த செலவு ஏற்படுகிறது. இந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கி றேன்.

அடுத்து தமிழகத்தில் எப்போது ஊராட்சி ஒன்றியங்கள் ஆரம் பிக்கப்பட்டதோ அப்போது ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் டைப் அடிப்பதற்காக ஒருவரை நியமனம் செய்தார்கள். எனவே இப்படி ஆங்கிலமானாலும், தமிழானாலும் டைப் அடிப்பதற்கு

ஒரே நபர் இருக்கின்ற நிலைமையை மாற்றி இரண்டு நபர்கள் இருக்கின்ற நிலைமையைத் தமிழகம் முழுவதும் ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வாசுதேவநல்லூர் ஒன்றியத்தில் 15—3—1985 அன்று மாற்றுக்கன்று நடுவதற்காக ஒன்றியத்திலிருந்து ஐ.ஆர்.டி.பி. பணம் 10,000 ரூபாய் வன இலாக்காவிற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரையிலும் அவர்களுக்குக் கன்றுகள் கொடுக்கப்பட வில்லை. அதுபற்றி ஒன்றிய ஆணையரைக் கேட்டபோது சரியான முகாந்திரத்தை அவர்கள் சொல்லவில்லை. அந்தக் கன்றுகள் வேறு தனிப்பட்ட நபர்களுக்கு மோசடியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. முறையாக அந்தக் கன்றுகளை ஒன்றியத்திற்கு இது வரையில் வழங்கவில்லை. அந்தக் கன்றுகளைப் பாவுவதற்காக அங்கு ஓரிடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததைப் பொறுத்த வரையில், அந்த 10,000 ரூபாய் பணத்திலிருந்து நிதி கொடுக்கப் படவில்லை. அதாவது அந்தக் கன்றுகளைப் பராமரிக்கின்ற வகையில் நிலத்திற்கு வாடகையும், தண்ணீர் வாடகையும் கொடுப்பதற்காக நிலச் சொந்தக்காரரிடம் ஒப்பந்தம் பேசி அந்த அடிப்படையில் ஒரு வருடத்திற்கு மட்டும் அந்த பராமரிப்புக்கான நில வாடகையும், தண்ணீர் வாடகையும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் மறு வருடம் அவை கொடுக்கப்படவில்லை. இதுபற்றி அவர்கள் என்னிடத்திலும் அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவரிடத்திலும் புகார் செய்திருக்கிறார்கள். அந்தக் கன்றுகளை எடுத்து வன இலாக்காவினர் நடவு செய்யாத நிலைமையில் நிலச் சொந்தக்காரரே அந்தக் கன்றுகளை அப்புறப்படுத்தி இருக்கிறார்கள். ஆனால் அந்தக் கன்றுகளை விவசாயத்திற்கு விநியோகம் பண்ணியது மாதிரி தவறான வவுச்சர்ளைப் பயன் படுத்தி இருக்கிறார்கள். இதுபற்றி வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் புகார் கூறியும் இதுவரையில் சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதன் காரணமாக அந்த 10,000 ரூபாயைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று வாசுதேவநல்லூர் ஆணையாளர் அவர்கள் 29—7—1986 அன்று எ.எஸ். 699785 என்ற எண்ணில் வனத்துறையினரிடத்தில் எழுத்து மூலமாகக் கேட்டிருக்கிறார்.





பொறுத்தவரையில் கிணறுகளை
அடுத்து குடிதண்ணீரைப் பொறுத்தவரையில் ஊராட்சி ஒன்றியத் தலை
ஆழப்படுத்துவதற்குரிய வகையில் ஊராட்சி ஒன்றியத் தலை
வரும், பேரூராட்சி மன்றத் தலைவரும் உடனடியாக ஆணையாள
ருக்கும், பொறியாளருக்கும் அனுமதி வழங்கினால்தான் குடி
நீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். ஆனால் அப்படி
இல்லாமல் இப்போது குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து ஒரு
அதிகாரி வந்து பார்வையிட்டு, அதன்பின்னர் அவர் சென்று
தகவல் கொடுப்பதற்குள்ளாகக் கிட்டத்தட்ட 6 மாதம் முதல் ஒரு
வருட காலம் வரையில் ஆகிவிடுகிறது. அந்த நிலைமையை
மாற்றியமைக்க வேண்டும். அந்தந்த ஊராட்சி மன்றங்களுக்கும்,
பேரூராட்சி மன்றங்களுக்கும் அந்தப் பணியை நிறைவேற்றுகின்ற
வகையில் அங்குள்ள ஆணையாளரே இன்ஜினியரை அனுப்பி
உத்தரவு பிறப்பிக்கக்கூடிய அடிப்படையில் ஆணை பிறப்பித்தால்
தான் உடனடியாகக் குடிதண்ணீர் கொடுப்பதற்குரிய வசதிகளைச்
செய்ய முடியும். அந்தக் கிணற்றை ஆழப்படுத்துவதற்கோ
அல்லது தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்கு
வேண்டுமானாலோ அது வசதியாக இருக்கும். இப்போது என்ன
செய்கிறார்கள் என்றால் குடிதண்ணீர் வடிகால் வாரியத்திலிருந்து
வந்து ஆய்வு செய்து இன்ன இடத்தில்தான் தண்ணீர் இருக்கிறது
என்று தகவல் சொல்லி அதற்குப் பிறகு போர்வெல்கள்
போடுவதிலே சில தவறுகள் நடக்கின்றன. அவர்கள் இன்ன
இடத்தில்தான் தண்ணீர் இருக்கிறது என்று சொன்ன இடத்தில்
200 அடி 150 அடி தோண்டினாலும் தண்ணீர் கிடைப்பதில்லை.
அதே நேரத்தில் பொதுமக்கள் இன்ன இடத்தில் வேண்டும் என்று
வசதி கருதி கேட்டால் அதற்கு அனுமதிப்பதில்லை. என்னுடைய
தொகுதியில் அவ்வாறு இன்ன இடத்தில் போர்வெல் போட
வேண்டும் என்று பொதுமக்கள் சொன்ன இடத்தில் போட
முடியாது என்று சொல்லி பெண்கள் மலஜலம் கழிக்கக் கூடிய
இடத்தில் கொண்டு போய் போட்டிருக்கிறார்கள். அந்த
இடத்திற்கு ஆண்களும் மற்றவர்களும் போக முடியாத நிலை
இருக்கிறது. ஆகவே அந்த மாதிரியான நிலைமை வரும்போது
ஊராட்சி மன்றத் தலைவரோ அல்லது அந்தப் பகுதி மக்களோ
சொல்லக்கூடிய இடத்தில் போர்வெல் போட வேண்டும்.
அப்படிப் போட்டால் நன்றாக இருக்கும். அப்படி இல்லாமல்
வாரியம் தன்னிஷ்டப்படி போடும் இடத்திலும் 200 அடி.

[திரு. ஆர். ஈஸ்வரன்] [1987 ஏப்ரல் 28

தோண்டினாலும் தண்ணீர் கிடைப்பதில்லை. ஆகவே பொது மக்கள் விரும்புகிற இடத்தில் அந்த ஊர் மக்கள் சொல்லுகிற இடத்தில் போர்வெல்லை போட ஆவன செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் ஆணை இட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தமிழகத்தில் உள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம் அமுல் நடத்தும்போது ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள வேலைகளைச் செய்வதற்கு அந்தந்த சட்டமன்ற உறுப்பினர் களையே தலைவர்களாக போட வேண்டும். கிராமப்புற சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் அல்லது ஆர்.எல்.ஈ.ஜி.பி. திட்டத்தின்கீழ் வேலைகளைச் செய்யும்போதும் இந்த முறை களைக் கடை பிடிக்க வேண்டும். அப்போதுதான் ஊராட்சி பணிகள் செவ்வனே நடைபெற முடியும்.

கும்பகோணம் பாதாள சாக்கடைத் திட்டம் ஆறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு 1984 ஆம் ஆண்டு ஒரு பகுதி மட்டும் பூர்த்தி செய்து முடிக்கப்பட்டது. மற்றவை அப்படியே கிடக்கின்றன. மீதம் உள்ள பிரிவுகளையும் எடுத்துச் செய்வதற்கு அரசு ஆணை இட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு சாக்கடை போன்றவைகள் குடந்தையில் சரிவர பராமரிக்கப்படாமல் இருக்கிறது. பாதாள சாக்கடை வரும் வரை அதை பராமரிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குடந்தையில் குடிதண்ணீர் வழங்கும் ஏற்பாட்டில் காவிரி ஆற்றிலிருந்து ஒரு நாளைக்கு 3 மணி நேரம்தான் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. அத்தோடு தெற்கு பகுதியில் மிகவும் வறட்சியாக இருப்பதால் குடந்தையின் தெற்கு பகுதியில் 150 ஆழ் குழாய்களை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு பாதாள சாக்கடையு மூடப்படாமல் இருப்பதால் சுகாதார கேடு ஏற்படும் நிலையு இருந்து வருகிறது. அதையும் உடனடியாக கவனிக்க வேண்டு என்று கேட்டுக் கொள்கிறேன். குடந்தை நகரில் நகர சுத் தொழிலாளர்கள் குறைவாக இருப்பதால் நகரத்தை சரிவ பராமரிக்க முடியாத நிலை இருக்கிறது. அவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்



1987 ஏப்ரல் 28] [திரு ஆர். ஈஸ்வரன்]

கொள்கிறேன். 27—4—1986 அன்று நகரத்திற்கு சொந்தமான கடைகளை ஏலம் விட்டதில் கீழ்க்கண்டவாறு ஏலம் கேட்கப் பட்டிருக்கிறது. ராஜு என்பவர் 400 ரூபாய்க்கும், குமார 350 ரூபாய்க்கும், சேகர் 300 ரூபாய்க்கும் கேட்டிருக்கிறார்கள். 250 ரூபாய்க்கு கூட சிலரால் கேட்கப்பட்டிருக்கிறது. ஆனால் குறைந்த பட்ச தொகையான ரூ. 100-க்கு ஏலம் விடப்பட்டிருக் கிறது. ஆகவே இது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல இப்பகுதியில் உள்ள டவுன் பஞ்சாயத்து மற்றும் ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர் மற்றவர்கள் சேர்ந்து பஞ்சாயத்துக்குச் சொந்தமான நிலங்களையும் கட்டிடங் களையும் ஆக்கிரமிப்பு செய்துக் கொண்டு பல்வேறு முறைகேடு களையும் செய்து வருகிறார்கள். ஆகவே தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர் தட்டுப்பாடு உள்ள பெரம்பலூரில் லாரி மூலமாக குடிதண்ணீர் சப்ளை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல மேலகண்ட ஒன்றியத்தில் அப்ரூவல் இல்லாமல் கட்டப்பட்ட 500 வீடுகளுக்கு வீட்டு வரி வசூல் செய்வதில் பெரிதும் முறைகேடுகள் நடை பெற்றிருப்பதாகத் தெரிகிறது. அத்தோடு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் ஊராட்சி ஒன்றியத் தலைவர், முன்னாள் டவுன் பஞ்சாயத்து தலைவர், இப்போதுள்ள டவுன் பஞ்சாயத்து தலைவர் தற்போதுள்ள ஊராட்சி ஒன்றியத்தின் துணைத் தலைவர் ஆகியவர்கள் சேர்ந்து டவுன் பஞ்சாயத்துக்குச் சொந்தமான கட்டிடங்களையும் காலி இடங்களையும், பேருந்து நிலையங்களையும் ஆக்கிரமிப்பு செய்து வருவதுடன் டவுன் பஞ்சாயத்துக்களில் வேண்டும் என்றே பல முறைகேடுகளையும் செய்து வருகின்றனர். ஆகவே இதற்குத் துரித நடவடிக்கை யெடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

(முற்பகல் 11-50)

**திரு. என். விஜயபாலன்:** தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சி, நகராட்சி நிர்வாகமும் மாநகராட்சிகளும் என்ற மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய ஒருசில

கருத்துக்களைத் தெரிவிக்க முற்படுகிறேன். உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்தி அவைகளுக்கு சுயாட்சி தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களையும், இந்த அரசையும் மனதாரப் பாராட்ட விரும்புகிறேன்.

கிராமப்புறங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கு உள்ளாட்சி நிறுவனங்கள் மூலமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறங்களில் நிலவும் வறுமையை ஒழிக்க ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம் ஆகியவற்றின் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதில் ஊக்கம் காட்டி, அந்தவகையில் திட்டங்களைத் தீட்டி இந்த அரசு செயல்படுவதை நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் காடுகள் வளர்த்தல், பழங்குடியினர் ஆதி திராவிட மக்களுக்கு மொத்தமாக வீடுகள் கட்டுதல், சமுதாயக் கூடங்களைக் கட்டுதல், ஆரம்பப் பள்ளிக்கூட கட்டடங்களைக் கட்டுதல், ஊரக இணைப்புச் சாலைகளை மேம்படுத்தல், புதிய குடிநீர் கிணறுகளை அமைத்தல் அரிசி மற்றும் சிமெண்ட் கிடங்குகள் கட்டுதல், ஆகிய பணிகளை 1986-87-ம் ஆண்டுத் திட்டத்தில் இந்த அரசு சிறப்பாக செயலாக்கி வருவதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊரக மக்களுக்கு ஊரகத் தகவல் அளிப்புத் திட்டத்தின் மூலமாக அரசின் உதவித் தொகையுடன் ஊராட்சிகளுக்கு கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதையும், வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கவிருப்பதையும் நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு ஊராட்சி மன்றப் பகுதியிலும் ஒதுக்குப்புறத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிற ஆதிதிராவிட குடியிருப்பு மக்களுக்கு வானொலிப் பெட்டியை வழங்க வேண்டுமென்ற திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் செயலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





இப்படி அரசினுடைய சாதனைகளையும், அரசு கொண்டு வருகிற பல்வேறு திட்டங்களைப் பற்றியெல்லாம் சொல்ல வேண்டுமென்றால் அதற்கு நேரம் போதாது. இறுதியில் நேர மிருந்தால் அவற்றைக் குறித்து தெளிவாகப் பேச விரும்புகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இருக்கிற தேவைகளையும், சில ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறுகிற குறைபாடுகளையும் சுட்டிக் காட்டுவது எனது கடமையென கருதுகிறேன். இன்றையதினம் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் வரி விதிப்பதற்கும், வருவாயைப் பெருக்குவதற்கும் இந்த அரசு ஆணை பிறப்பித்திருப்பதை நான் பாராட்டுகிறேன். அவை தனித்து இயங்குவதற்கு ஒரு வாய்ப்பைத் தந்தமைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், இந்த அரசையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுகுறித்து அரசு சமீபத்தில் ஒரு ஆணை பிறப்பித்தது நினைவு இருக்கலாம். ஊராட்சிக் கட்டடங்களை மத்திய அரசின் மூலமாகவோ, மாநில அரசின் மூலமாகவோ உதவி பெற்று கட்டப்படுகின்ற இடங்களில் அந்தக் கட்டடங்களை யார் யார் திறக்க வேண்டுமென்று அந்த விவரத்தை வெளியிட்டிருப்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். அப்படி வெளியிட்டிருந்தும் கூட சில ஊராட்சி ஒன்றியங்களில் தவறுகள் நடைபெறுவதை நான் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமையெனக் கருதுகிறேன். ஏனென்றால் இன்றைக்கு அரசியல் தலைவர்கள் எல்லாம் கட்டடங்களைத் திறப்பதற்கு வாய்ப்புத் தரவேண்டும். இல்லையென்றால் போராட்டம் நடத்துவோம் என்று சொல்கிற காட்சிகளை நாம் வெளியே பார்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழக அரசையும், புரட்சித் தலைவர் அவர்களையும் மனதாரப் பாராட்டுகிறவர்கள், இன்னும் சொல்லப்போனால் நல்லதைப் பாராட்டி, தீயதை எடுத்துக் காட்டுகிறவர்கள் வேண்டுமானால் அப்படி சொல்லலாம். ஆனால் காலையில் எழுந்தது முதல் இரவு படுக்கும் வரையில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களையும், இந்த அரசையும் மிகக் கேவலமாக, கீழ்த்தரமாகப் பேசுகிறவர்கள் எல்லாம் கட்டடங்களைத் திறக்க வேண்டுமென்று ஆசைப்படுவது எந்தவகையில் நியாயம் என்று கேட்க விரும்புகிறேன். தமிழக முதல்வர் அவர்கள் இந்த

[திரு. என். விஜயபாலன்] [1987 ஏப்ரல் 28

அரசாணையைப் பிறப்பித்ததற்குப் பிறகு என்னுடைய பூம்
புகார் தொகுதியில் செம்பனார்கோவில் ஒன்றியத்தில் இந்த
ஆணையை மீறியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் ஆதி
திராவிடர் குடியிருப்புகளையும், சத்துணவுக் கூடங்களையும்
கடந்த 23—4—1987 அன்று ஊராட்சி ஒன்றியத் தலைவரும்,
ஊராட்சி மன்றத் தலைவரும், ஊராட்சி ஒன்றியத் துணைத்
தலைவரும் சேர்ந்து திறந்திருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்
காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த நாளில்,
என்னுடைய ஒப்புதலைப் பெறாமலும், என்னிடத்திலே
தகவலைச் சொல்லாமலும் அந்த அழைப்பிதழிலே என்னுடைய
பெயரையும், நாடாளுமன்ற உறுப்பினருடைய பெயரையும்
போட்டிருக்கிறார்கள். ஆனால் அதேநேரத்தில் எனக்கு அழைப்
பிதழ்கள் அனுப்பப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு விழா என்றால், அதிலே
அதிகாரிகளும், அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும்,
பொறுப்பிலே இருப்பவர்களும் கலந்து செயலாற்றுவதுதான்
அரசு விழாவாகக் கருதப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில்
தனிப்பட்ட ஒரு பொறுப்பிலே இருக்கிற ஒருவர் கலந்துகொள்கிற
விழா, அரசு விழாவாகக் கருத முடியாது என்பது அறிவார்ந்த
அனைவரும் அறிந்த ஒன்றாகும். அப்படிப்பட்ட நிலையில்
ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்து கொள்
ளாமல், சட்டமன்ற உறுப்பினராகிய நானும் கலந்து கொள்ளா
மல், நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிற அவரும் கலந்து
கொள்ளாமல், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தினுடைய
தலைவரும், ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவரும், ஊராட்சி
மன்றத் தலைவரும், ஆகிய மூவருமே இணைந்து தங்களுடைய
கட்சி விழாவைப் போல் அந்த விழாவை நடத்தி இருக்கிறார்கள்
என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
அதனுடைய போட்டோ நகல்கள், அதனுடைய விவரங்களை
எல்லாம், நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்
களிடத்திலே அளித்திருக்கிறேன் என்பதை இங்கே சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 28] [திரு. என். விஜயபாலன்]

தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள், தன்னுடைய
எண்ணங்களையும், கொள்கைகளையும் திரைப்படத்தின் மூலமாக
இந்த நாட்டுக்கு அறிவித்த ஒருவர் என்பதை நீங்கள் நன்றாக
அறிவீர்கள். "ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால்,
அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்" என்று சொன்னவர்,
நம்முடைய புரட்சித் தலைவர் அந்த அடிப்படையில் இன்று
ஆட்சியை புரட்சித் தலைவர் அவர்கள் நடத்திக் கொண்டிருக்
கிறார்கள். எந்த ஆட்சியிலும் நடைபெறாத அளவிற்கு தமிழக
முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே
தான், இன்றைக்கு சாதனைகளையும், சரித்திரங்களையும்
படைத்துக்கொண்டு இருக்கிறார்கள், என்பதை மனச்சாட்சி
படைத்த அனைவரும் எண்ணிப் பார்த்துக்கொண்டிருக்
கிறார்கள்.

இதே சட்டமன்றத்திலே, தான் எடுத்துக்கொண்ட பதவிப்
பிரமாணத்திற்கு மாறாக நடந்து கொண்டார்கள் என்ற அடிப்
படையில் நன்னடத்தையின் காரணமாக, நம்முடைய மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்கள் 10 சட்டமன்ற உறுப்பினர்களை
பதவி நீக்கம் செய்து, ஒரு சரித்திரத்தைப் படைத்திருக்
கிறார்கள். அதைப்போல இன்றைக்கு ஊராட்சி ஒன்றியத்திலே,
முறைகேடாக, அரசு வெளியிட்டுள்ள ஆணைக்கு மாறாக
ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவரும், அதிலே பொறுப்பிலே
இருக்கிற துணைத் தலைவரும் ஊராட்சி மன்றத் தலைவரும்
தங்களுடைய கட்சிக் கூடாரமாக அதை ஆக்கிக்கொண்டிருக்
கிறார்கள். எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
இந்த ஆட்சியிலே படைத்த சில சரித்திரங்களைப் போல,
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், நன்னடத்தையின்
காரணமாக 10 சட்டமன்ற உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்து
நாட்டுக்கு ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கிய அந்தச் சரித்
திரத்தைப் போல, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர்
அவர்களும், அரசு ஆணையை மீறியிருக்கிற ஊராட்சி ஒன்றியத்
தலைவர்களை பதவி நீக்கம் செய்து, இந்த நாட்டுக்கு ஒரு சரித்
திரத்தைப் படைக்க முன்வருவார்களா என்று நான் கேட்க
ஆசைப்படுகிறேன். அவர்கள் முன்வரவேண்டும் என்றும் நான்
கேட்டுக்கொள்கிறேன். இப்படி அரசியல் காழ்ப்புணர்ச்சிக் காரண
மாக தானும், தன் கட்சியைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டு

செயல்பட வேண்டும் என்று நினைக்கிறவர்கள் மீது மக்களுடைய தேவைகளுக்கு, அரசு செய்கின்ற தேவைகளுககுப் புறம்பாக செயல்படுகின்றவர்கள் மீது, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, ஊராட்சிமன்றங்களிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஊராட்சி மன்றத் தலைவர்களாக இருக்கிறார்கள் என்றால், அந்தப் பகுதிகளுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர்களாக இருப்பவர்கள், எந்தக் காரியத்தையும் செய்யாமல் புறக்கணிக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதைப்போல அரசு மானியங்களை முறைகேடாக பயன்படுத்துவது இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில், அதிலும் குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இருக்கிற இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஐ.ஆர்.டி.பி., கடன் வழங்குதல், ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல், போன்றவற்றில் எல்லாம் ஊழல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால், இந்த அரசு மக்களுக்காக பல்வேறுபட்ட காரியங்களைச் செய்து கொண்டு வருகிறது. . . (குறுக்கீடு).

**திரு. எஸ். ரெத்தினராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது, திராவிட முன்னேற்றக் கழக ஊராட்சித் தலைவர்கள் இருக்கிற ஒன்றியங்களில் அனைத்தும், முறைகேடாகவே, விரயமாகவே பணம் செலவு செய்யப்படுகிறது என்ற குற்றச்சாட்டைக் குறிப்பிட்டார்கள். குறிப்பாக ஏதாவது ஒரு ஒன்றியத்தைச் சொல்லவேண்டுமே தவிர, திராவிட முன்னேற்றக் கழக தலைவர்கள் இருக்கிற அனைத்து ஒன்றியங்களிலும் இப்படி நடைபெறுகிறது என்று குறிப்பிட்டு இருப்பது நல்லதல்ல





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறிப்பாக ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். ஒட்டுமொத்தமாக சொல்ல வேண்டாம். குறிப்பாக இருந்தால், குற்றச்சாட்டைச் சொல்லுங்கள்.

**திரு. என். விஜயபாலன்:** துணைத் தலைவர் அவர்களே, பரவலாக நடைபெற்றுக்கொண்டிருக்கிற தகவலைச் சொன்னேன். அதிலும் குறிப்பாக முதலிலே, செம்பனார்கோவில் ஒன்றியத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். அதற்கான போட்டோக்களைக் கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பார்களானால், இந்த மன்றத்திலே உங்கள் அனுமதியோடு காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் 1977 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இந்த நாட்டிலே நடைபெற்ற பல்வேறுபட்ட நன்மைகளை மக்களுடைய தேவைகளைக் கருதி செய்தாரே தவிர, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே செய்யவேண்டும், அந்தக் கட்சிக்காக செய்யவேண்டும் என்ற அடிப்படையிலே செயல்படவில்லை. கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்கள் இன்றைக்கு தெளிவாக எண்ணிப் பார்க்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே நடைபெறும் நன்மைகளெல்லாம், இவர், யார், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர், இவருக்குக் கொடுக்கலாமா அல்லது இவருக்குக் கொடுக்கக் கூடாதா; இந்தக் கிராமத்திலே நமக்கு வாக்குகளைப் போட்டார்களா; இந்தக் கிராமத்தில் நமக்குப் போடவில்லை; ஆகவே இந்தக் கிராமத்திற்கு சாலை வசதிகளைச் செய்து கொடுக்கக்கூடாது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் ஆட்சியிலே யாரும், அமைச்சர் பெருமக்களோ, என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களோ நடந்துகொள்வதில்லை. ஆனால் இன்றைக்கு, இதற்குமாறாக, தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கின்ற, ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர்கள் பொறுப்பு ஏற்றிருக்கின்ற என்னுடைய ஒன்றியத்திலே முறைகேடுகளும்,

[திரு. என். விஜயபாலன்] [1987 ஏப்ரல் 28

ஊழலும் மலிந்து இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். கிராமப் புறங்களிலே ஆதிதிராவிடர்களுக்காக,
மாநில—மத்திய அரசுகளுடைய உதவியோடு வீடுகள் கட்டிக்
கொடுக்கப்படுகின்றன. கிராமங்களுக்கு ஒதுக்குகின்றபோதுகூட,
தனக்கு அதிகமாக வாக்களித்த கிராமம் எது என்று பார்த்து,
ஒதுக்குகிறார்கள். அப்படி ஒதுக்குவதைக்கூட நான் தவறாகச்
சொல்லவில்லை. ஆனால் அது கொடுக்கப்படுகிறபோது
தன்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் யார், தன்னுடைய
கட்சி உறுப்பினருக்குத்தான் கொடுக்க வேண்டுமென்ற அடிப்
படையில் அந்த வீடுகளை ஒதுக்குகிறார்களே தவிர, ஏழை
மக்களுக்காக இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது;
ஏழை மக்களுக்காக இதைப் பயன்படுத்தவேண்டும்; ஆகவே
ஏழை மக்களுக்கு உதவியாக இருக்க வேண்டுமென்ற அடிப்படை
யிலே அவர்கள் செயல்படவில்லை என்று எண்ணுகிறபோது
அவர்கள் கட்சிக் கண்ணோட்டத்தோடுதான் செயல்படுகிறார்
களே தவிர மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டு
மென்ற நிலையிலே அவர்கள் செயல்படவில்லை என்பதை இந்த
நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று கடன்களை வழங்குகிறபோதும்கூட ஆட்
களைத் தேர்ந்தெடுக்கிறபோதும்கூட, அதிலும் கட்சிக் கண்
ணோட்டத்தோடுதான் செயல்படுகிறார்களே தவிர, மக்களுக்
குரிய தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டுமென்ற அடிப்படை
யிலே அவர்கள் செயல்படவில்லை என்பதை இந்த நேரத்திலே
நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு நம்முடைய அரசு
ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறது. மாதத்திற்கு இரண்டு
நாட்கள் ஊராட்சி ஒன்றியங்களுடைய கூடங்களில் மக்களைச்
சந்திக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது பல்வேறு
பட்ட நேரங்களில் சாத்தியப்படாத ஒன்றாக இருக்கிறது.
ஆகவே இதற்கு முன்னாலே இருந்ததைப்போலவே சட்டமன்ற
உறுப்பினர்களுக்கு நிரந்தரமாக ஊராட்சி ஒன்றிய அலுவலகங்
களில் ஒரு அறையை ஒதுக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்
திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 ஏப்ரல் 28] [திரு. என். விஜயபாலன்]

சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களைச் சந்திப்பதற்காக
ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற வாகனத்தைப் பயன்படுத்
தலாம் என்று அரசு கூறியிருக்கிறது. ஆனால் இன்றைக்கு
ஊராட்சி ஒன்றியங்களுடைய தலைவர்கள் பொறுப்பேற்றதற்குப்
பிறகு அந்த வாகனத்தைப் பயன்படுத்துகின்ற வாய்ப்பு மிகவும்
குறைந்து இருப்பதால் அதற்கு வேறு வகையிலே ஏதாவது உதவி
களைச் செய்ய முடியுமா என்பதையும் இந்த அரசு ஆய்ந்தறிந்து
ஒரு நல்ல முடிவினை வழங்குமாறு நான் கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக அரசு ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் விவசாயி
களுக்குப் பல்வேறுபட்ட நன்மைகளைச் செய்து வருகிறது.
விவசாயப் பெருங்குடிமக்கள் வளமாக வாழவேண்டுமென்ற ஒரு
நல்ல நோக்கத்தின் அடிப்படையிலே, இந்தக் காரியங்களை இந்த
அரசு செய்து கொண்டு வருகிறது. இன்றைக்கு மழைக் காலங்
களில் அறுவடை செய்கிறபோது, மழை கடுமையாக இருக்கின்ற
நேரங்களில் நெற்பயிரைப் பாதுகாக்கவும், நெல்லைப் பாது
காத்து அரசுக்கு விற்கவும், விவசாயப் பெருங்குடி மக்கள் வசதி
யற்ற சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஒவ்
வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் தார்பாயை வழங்கி அதை
விவசாயப் பெருமக்களுக்கு வழங்குவதற்கு அரசு முன்வருமா
னால், நெல்லைப் பாதுகாத்து அவர்கள் விற்பதற்கும், அரசுக்குக்
கொடுப்பதற்கும் வசதியாக இருக்கும் என்று இந்த நேரத்திலே
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உள்
ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உணவுத் துறைக்கும்
பொறுப்பேற்றிருக்கின்ற காரணத்தால் சிவில் சப்ளைஸ் கார்ப்ப
ரேஷன் மூலமும் இந்தத் தார்பாயை விவசாயப் பெருங்குடி
மக்களுக்கு வழங்கி உதவி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறுபட்ட இடங்களில், ஆதிதிராவிடர்கள் வாழ்ந்து
கொண்டிருக்கின்ற பகுதிகளில் மயான சாலை இன்னும்
சீர் செய்யப்படாத சூழ்நிலை இருந்து கொண்டு இருக்கின்றது
அதையெல்லாம் கவனத்திலேகொண்டு ஆதிதிராவிடர்கள் இருக்
கின்ற பகுதிகளில் மயானச் சாலைகளை அமைப்பதற்காகவும்,
ஆதி திராவிடர்கள் குடியிருக்கின்ற இடங்களில் சாலை வசதிகள்

மழைக் காலங்களில் மிகவும் மோசமான நிலையிலே இருக்கின்ற காரணத்தால், அவையெல்லாம் ஒரு திட்டத்தின் மூலம் நிறை வேற்றித்தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில், தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, கிராமப்புறங்கள் வளர்ச்சியடையவேண்டு மென்று, கிராமப்புறங்கள் வளர்ச்சியடைவதால்தான் நாட்டி னுடைய நிலை நன்றாக இருக்கும் என்பதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல, ஒரு நல்ல ஆட்சியை கிராமப்புறங்களுக்குத் தந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு கிராமப்புறத்திலே பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற, குறிப் பாகச் சொல்லவேண்டுமென்றால், திராவிட முன்னேற்றக் கழகத் தைச் சார்ந்த, அந்தக் கட்சியைச் சார்ந்த ஒன்றியத் தலைவர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற—நான் அனைத்தையும் சொல்லவில்லை என்றாலும்—என்னுடைய தொகுதியிலே இருக் கிற செம்பரம் ஒன்றியத்தைப் பார்க்கிறபோது இப்படிப்பட்ட முறைகேடுகள் பல இடங்களில் நடக்கும் என்று நான் கருது கிறேன். இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு ஒரு நல்ல முடிவினை உருவாக்கித் தரு மாறு நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித் தமைக்கு நன்றி சொல்லி, முடித்துக் கொள்கிறேன்; நன்றி, வணக்கம்.

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஏறத்தாழ 192 கோடி ரூபாய் அளவுக்கும் மேலாக உள்ள சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள், நகராட்சி நிர்வாகம் என்ற மானிய கோரிக்கை எண் 28-ன் கீழ் இந்த மன்றத்தில் நிதி கோரியிருக்கிறார்கள். அதன் மீது என்னுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங் களை ஆதரித்து இந்த மாமன்றத்தில் கருத்துக்களை நான் எடுத்து வைக்கலாம் என்று கருதுகிறேன்.

இன்றைக்கு சென்னை மாநகராட்சியை எடுத்துக் கொண்டால் கூட ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன்னாலே 7 ஆயிரம் பேர் துப்புரவுப் பணியாளர்கள் இருந்தார்கள். ஆனால் 10 ஆண்டு





களுக்கு முன்னால் 7 ஆயிரம் துப்புரவு பணியாளர்கள் இருந்த இருக்கிறார்களே தவிர, இந்த 10 ஆண்டு இடைவெளியில் பார்த் தால் சாலைகள் ஏறத்தாழ பல்லாயிரக்கணக்கான கிலோ மீட்டர் பெருகியிருக்கிறது.

அதே நேரத்திலே குடிசைகளைப் பார்த்தாலும் மிக அதிக மாகியிருக்கிறது. அதோடு மட்டும் அல்லாமல் துப்புரவுத் தொழிலாளர்கள் 10 ஆண்டுகளுக்கு முன்னால் எடுத்தவர்கள் இன்றைக்கு வரை ஓய்வு பெற்றவர்கள் போக புதியதாக நிய மிக்கக்கூட இன்றைக்கு மாநகராட்சி தயாராக இல்லை. அப்படி இல்லாததன் காரணமாக எங்கு பார்த்தாலும் சென்னை நகரத் தில் வீதிகள், தெருக்கள், சாலைகள் பெருகி இருக்கின்ற நேரத் தில் குப்பைகள் குவிந்து இருக்கின்றன. அவைகள் மேடாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன. போக்குவரத்து நெரி சல் பகுதியான ஹைகோர்ட் பகுதியில் சாலை ஓரங்களில் வியா பாரிகள் ஆக்கிரமித்துக் கொண்டு பொதுமக்கள் நடப்பதற்கு இடையூறாக இருக்கிறார்கள். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து நிலையத்துக்கு அருகில் சென்றால் பல்வேறு பேருந்துகள், அரசு பேருந்துகள் அல்ல, தனியார் பேருந்துகளை வரிசையாக நிறுத்தி வைத்துக்கொண்டு பொதுமக்கள் செல் வதற்கு இடையூறாக இருந்து கொண்டு இருக்கிறார்கள். அதை நாம் பார்க்கிறோம். பேருந்துக்கு செல்வதற்குக் கூட நேரம் அதிகமாகி விட்டவர்கள் கொஞ்சம் வேகமாக செல்ல முடியாத நிலையை இன்றைக்கு சென்னையில் நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

சென்னையில் இருக்கிற கழிப்பிடங்களிலிருந்து வருகின்ற கழிவு நீரை நீக்குவதற்கு உள்ள நிலையங்கள் இன்றைக்கு முறை யாக செயல்படாத நிலையில் இருக்கின்றன. பொதுக் கழிப்பிடங் களாக உள்ள ஏறத்தாழ 800 கழிப்பிடங்கள், அதுவும் முறையாக பராமரிக்காத காரணத்தால் இன்றைக்கு சாக்கடை நீர் தேங்கி, உடைப்புகள் ஏற்பட்டு, சென்னையில் சிறப்பாக இருக்கின்ற எக்மோர் புகைவண்டி நிலையத்தின் எதிரில் மாதத்திற்கு ஒரு முறை 2 மாதத்திற்கு ஒரு முறை கட்டாயமாக அங்குள்ள கழிவு நீர் செல்கின்ற இடம் பிரச்சினை ஆகி அந்தப் பகுதிகள் குறிப்பாக எக்மோர் புகைவண்டி நிலையம் எல்லாம் அருவெறுப்பான நிலை யில் வாடை வீசக்கூடிய நிலையில் இருக்கின்றன எனவே இந்த

[திரு. மா. மணிமாறன்] [1937 ஏப்ரல் 28

ஆண்டுதோறும் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதன் காரணமாக கொசுக்கள் அதிகமாகி இருக்கின்றன. கொசு அதிகமாகி இன்றைக்கு காய்ச்சல் போன்ற கொடிய நோய்கள் எல்லாம் சென்னை மாநகரில் பெருகியிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு சென்னையில் குடிநீர் எந்த அளவுக்கு பிரச்சினைக்கு உரியதாக இருக்கிறது. எங்கெங்கு எல்லாம் சென்று தண்ணீர் எடுக்கவேண்டிய நிலை மக்களுக்கு இருக்கிறது என்பதை செய்தித் தாட்கள் படம் போட்டுக் காட்டுகின்றன. மனைவி செல்கிறாள், கணவன் செல்கிறார். அந்த வீட்டுக் குழந்தைகள் செல்கிறார்கள், இப்படி ஆளுக்கு ஒரு பாத்திரத்தை எடுத்துக்கொண்டு தண்ணீருக்கு அலைகின்ற செய்தியை செய்தி தாள்கள் படம் போட்டு காட்டுகின்றன.

நாம் 6 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் குடிநீருக்காக ஒதுக்கிய பணம் இருக்கிறதே, அதனுடைய மொத்தம் 497 கோடி ரூபாயாக இருந்தது. இந்த 497 கோடி ரூபாய் மதிப்பீடு தயார் செய்து வேலைகள் செய்தது ஏறத்தாழ 802 கோடி ரூபாய்தான் நாம் செலவழித்து இருக்கிறோம். எனவே, 192 கோடி ரூபாய்க்கு மேலாக அங்கே விட்டு இருக்கிறோம். எனவே 497 கோடி ரூபாய் ஒதுக்கி அதில் 302 கோடி ரூபாய் செலவு செய்து மீதி ரூபாயை செலவழிக்காமல் விட்டிருக்கிறது. குடிநீர் பிரச்சினை கொடூரமாக காட்சி அளித்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் நம்முடைய அரசு 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கிய பணத்தை முறையாக செலவு செய்யவில்லை அதனால் இன்றைக்கு குடிநீர்ப் பிரச்சினை பூதாகரமாக இருக்கிறது என்பதையும் நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சியைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசு 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் ஒதுக்கி இருக்கிற பணத்தை யாவது முறையாக நகராட்சிகளுக்கு கொடுத்து இருக்கிறார்களா என்று சொன்னால் அதிலும் இந்த அரசு மிகவும் மோசமாக இருந்து கொண்டிருக்கிறது.



1987 ஏப்ரல் 28] [திரு. மா. மணிமாறன்]

தமிழ்நாடு நகராட்சி நிர்வாகத்திற்கு நிதி உதவிக்காக நடப்பு ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். 1985-86-லும் சார்ஜ் செய்திருக்கிறீர்கள். 1987-88-லும் சார்ஜ் செய்து இருக்கிறீர்கள். ஆயிரம் ரூபாயை மட்டும் சார்ஜ் செய்திருக்கிறீர்களே தவிர, அதற்குரிய நிதி ஆதாரத்தை பெருக்குவதற்கு, கொடுப்பதற்கு இந்த அரசு தயக்கம் காட்டுவதற்கு காரணம் என்ன? அதேபோல் நகரசுத்தி தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காக 2 கோடி ரூபாயை நடப்பு நிதி ஆண்டில் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதிலாவது அந்த சார்ஜை செய்திருக்கிறீர்களா என்றால் இல்லை. அதிலும் காலியாக விட்டு வைத்து இருக்கிறீர்கள். இதனுடைய காரணம் என்ன?

அதேபோல் நகர சுத்தி தொழிலாளர்களுக்கு 1½ கோடி ரூபாய் வீடு கட்டுவதற்காக நடப்பு நிதி ஆண்டிலே நீங்கள் திட்டம் போட்டிருக்கிறீர்கள். ஆனால் 1985-86-லும் காலியாக விட்டு இருக்கிறீர்கள். 1986-87-லும் காலியாக விட்டிருக்கிறீர்கள். ஏன் என்று தான் எனக்கு தெரியவில்லை. ஆனால் நீங்கள்
* * இந்த திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்
* * முன்னாலே என்று கேட்டுக்கொள்கிறேன்

கிராமப் புறங்களை எடுத்துக் கொண்டால், கிராமப் புறங்களில் இருக்கின்ற சாலைகள் மிக அதிகமாக இருக்கின்றன.

(பிற்பகல் 12-10)

நம்முடைய இந்தியத் துணைக் கண்டத்திலேயே, தரைப்பாலங்களை நாம்தான் மிக அதிகமாகப் பராமரித்து வருகிறோம். ஏறத்தாழ 85,000 கிலோ மீட்டருக்குமேலே நாம் சாலைகளைப் பராமரித்து வருகிறோம். 85,000 கிலோ மீட்டருக்கும் அதிகமாக பராமரித்து வருகின்ற இந்தத் துறையில் நாம் ஒதுக்கியிருக்கிற பணம் மிகக் குறைவாக இருக்கிறது. ஒதுக்கிய மானியத்திலே

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. மா. மணிமாறன்] [1987 ஏப்ரல் 28

யும் செலவு செய்யப்படாமல் விடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு நீங்கள் கொடுத்திருக்கிற கொள்கை விளக்கத்திலே கூட . . . . , (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * * பற்றிக் குறிப்பிடுகிற போது, நீங்கள் * * நல்லது என்று குறிப்பிட்டார்கள். அந்த வார்த்தைகளுக்கு இரண்டு பொருள் உண்டு. * * நாங்கள் இருக்கிறோம். ஆனால் * * அவர்கள் ஆகிவிடக் கூடாது. ஆகவே அந்த வார்த்தைகளை எடுத்துவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த இரண்டு வார்த்தைகளும் நீக்கப்படுகின்றன.

**திரு. மா. மணிமாறன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அடிக்கடி ஆங்கிலம் பேசுவதற்காக வெளியிடங்களுக்கெல்லாம் உதவியாக சென்றுகொண்டு வருகிறார். அவர்கள் ஆங்கிலத்தில் அதிகமாகப் பேசுவதன் காரணமாகத் தான் * * வித்தியாசம் தெரியாமல், சட்டமன்றக் குறிப்புகளில் ஏற்றுவதை அவர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பரவா யில்லை. அவருடைய தமிழ் ஆர்வம் பெருகட்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் பேசியதை யும், அமைச்சர் பேசியதையும் நீக்கியாகிவிட்டது. அதையே பழையபடி ரெக்கார்டு பண்ணுவது என்றால் எப்படி? நீக்கி விட்டபின், அதையே திரும்பத் திரும்ப பேசிக் கொண்டிருக் கிறீர்களே ?

**திரு. மா. மணிமாறன் :** தமிழ் எழுத்திலேகூட 2 உச்சரிப்பிலே யும் வித்தியாசம் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே * * என்று அர்த்தம். * * என்று ஒன்றிருக் கிறது. அதற்காகத்தான் அதை எடுத்துவிடச் சொன்னேன்

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



1987 ஏப்ரல் 28]

**திரு. மா. மணிமாறன்:** * * அதிகமாக அவர் அக்கறை வைத்திருப்பதன் காரணம் என்னவென்று தெரியவில்லை. பரவாயில்லை. அதை விட்டுவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தப் பகுதியை நீக்கிவிடுகிறேன். சபையில் பேசக் கூடாத தவறான வார்த்தை என்று நீக்குகிறேன். அப்புறம் அதை எப்படியாவது ரெக் கார்டு பண்ணவேண்டுமென்றால் எப்படி? டிமான்டைப் பற்றிப் பேசுங்கள். இல்லையென்றால் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் என்ற அக்கறையில் பேசுங்கள்.

**திரு. மா. மணிமாறன் :** உள்ளூர் சாலைகள் 1985—86-ல் மானியமாக ரூ. 4.20 கோடி ஒதுக்கியிருக்கிறீர்கள். 1986—87-ல் ரூ. 4.3 கோடி ஒதுக்கியிருக்கிறீர்கள். 1986—87-ல் ரூ. 4.3 கோடி என்று திருத்திய மதிப்பீட்டிலே இருக்கிறது. ஆனால் இன்றைக்கு 1987—88-ல் 4.3 கோடி தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஸ்தல ஸ்தாபன மானியமாக ஒதுக்கி இருக்கிற அந்தப் பணம் முறையாக ஊராட்சி ஒன்றியங்களுக்குப் போய்ச் சேர்படுவ தில்லை. நீங்கள் ரூரல் ரோட்ஸ் கிராண்ட்ஸ் தலைப்பில் ஒதுக்கியிருக்கிற கணக்கைப் பார்த்தால், மிகக் குறைவாக இருக் கிறது. தலைக்கு 18 காசு என்றும் அதைப்போல் ஒரு கிலோ மீட்டருக்கு தரைப் பகுதியாக இருந்தால் ரூ 600 என்றும், கடற் கரைப் பகுதியாக இருந்தால், ரூ. 800 என்றும், மலைப் பகுதியாக இருந்தால் ரூ. 1,500 என்றும் கொள்கை வைத்து ஒதுக்கி வருகிறோம். இது எந்த ஆண்டிலிருந்து இருக்கிறது? ஏறத்தாழ 20 ஆண்டு காலத்திற்கு முன்னாலே நிர்ணயிக்கப் பட்டது. அதே நிலையில்தான் இன்னைக்கும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. ஆனால் கிராமப்புறங்களில் சாலைகள் அதிகமாகியிருக்கின்றன. அரசாங்கம் ஒதுக்கியிருப்பது மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. ஒரு கிலோ மீட்டருக்கு கிராவல் செய்யவேண்டுமென்று சொன்னால், ரூ. 25,000 ஆகிறது.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. மா. மணிமாறன்] [1987 ஏப்ரல் 28

அதையே டபிள்யூ.பி.எம். செய்யவேண்டுமென்று சொன்னால், கருங்கல் ஜல்லி போட வேண்டுமென்று சொன்னால், ஒரு கிலோ மீட்டருக்கு ரூ 75,000 ஆகிறது. ஒரு கிலோ மீட்டருக்கு ரூ. 75,000 ஆகக் கூடிய சாலைக்கு உங்களிடமிருந்து கிடைக்கின்ற நிதி ரூ. 600 ஆக இருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல் தலைக்கு 18 காசு என்று நிர்ணயித்திருப்பது, அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. நீங்கள் அரசாங்கத்திலிருந்து உள்ளாட்சித்துறை, ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்க வேண்டிய நிதியை ஒதுக்குவதில் அக்கறை காட்டாமல் அவசர அவசரமாக நகராட்சிகளுக்கெல்லாம், வீட்டுவரியை உயர்த்துவதற்கு, தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அங்கே என்னென்ன முறைகேடுகள் எல்லாம் நடந்தது என்பதை எல்லாம் நாம் செய்தித் தாள்களிலே பார்க்கிறோம். வேண்டியவர்களுக்கு ஒரு வரி விதமும், வேண்டாதவர்களுக்கு ஒரு வரி விதமும், இப்படி முறைகேடாக அதிகாரிகள் செய்து, தாட்சண்யம் காட்டுவதை எல்லாம் நாம் செய்தித் தாள்களிலே பார்க்கிறோம். அதிலே அக்கறை காட்டும் நீங்கள் ஏறத்தாழ 20 ஆண்டுகாலத்திற்கு முன்னாலே ஸ்தல ஸ்தாபனத்திற்காகவென்று நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரம் அப்படியே இருக்கிறது, அதை அதிகப்படுத்திக் கொடுக்க வழிவகைகளை நீங்கள் ஆராய்ந்து பாராமல் இருப்பதற்குக் காரணம் என்ன? இன்றைக்கும் அவர்கள் தான் உங்களுக்கு வாக்களிக்கிறார்கள். நீங்கள் நம்பியிருப்பது எல்லாம் கிராமப்புறங்களைத் தானே. அந்தக் கிராமப்புறங்களுக்கு இப்படி ஒரு, மாற்றான் தாய் மனப்பான்மையோடு இருப்பதன் காரணம் என்ன? கிராமப்புறங்களிலே உள்ளவர்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள். குடிதண்ணீர் வசதியாக இருந்தாலும், சாலை வசதியாக இருந்தாலும், விவசாய அபிவிருத்தியாக இருந்தாலும், இன்றைக்குத் தொடர்ந்து கிராமப்புறங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பராரியாக இருக்கக்கூடிய அவர்கள், தொடர்ந்து உங்களுக்கு வாக்களித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.



1987 ஏப்ரல் 28] [திரு. மா. மணிமாறன்]

இந்த கிராம மக்களுக்காக நீங்கள் ஸ்தல ஸ்தாபன
மானியமாக இருந்தாலும், அல்லது லிங்க் ரோடாக இருந்தாலும்,
பணங்கள் ஒதுக்கவில்லை என்று இந்தச் சட்டமன்றத்தில்
நாங்கள் சொல்வது உங்களுக்கு வாக்களித்திருக்கின்ற அந்த
அப்பாவி மக்களுக்குத் தெரியாமல் இருந்து கொண்டிருக்கிறது.
அதன் காரணமாகத்தான், நீங்கள் கிராமப்புற மக்களின் வளர்ச்
சிக்காக எந்த வித அக்கறையும் காட்டவில்லை என்பதாக இந்தச்
சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்
கிறேன். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் துறைக்
கென்று பொறுப்பேற்றதற்குப் பிறகு மிகச் சிறப்பாக ஆய்வு
செய்து, ஸ்தல ஸ்தாபன மானியத்திற்காக அதிகமாக ஒதுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்புச் சாலைகள் அதிகமாக வேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்கிறேன். கிராமப்புறங்களிலே இருக்கின்ற
ஆர். ஆர். ரோடிற்காகத் தருகின்ற நிதியை நீங்கள் பெரும்பாலும்
நெடுஞ்சாலைத் துறைக்காவது எழுதி, அந்தப் பணத்தை முறை
யாகச் செலவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்று சொன்னால் இன்றைக்கு ஆர்.ஆர்.-லே போடுகின்ற
ரோடுக்கு ஐந்தாண்டுத் திட்டத்தில் 60 கோடி தான் ஒதுக்கியிருக்
கிறீர்கள் என்று சொன்னால் ஆண்டுக்கு 12 கோடி ஒதுக்குவதற்கு
மாறாக வெறும் 5 கோடி ஒதுக்கிக்கொண்டிருக்கிறீர்கள்.
தொடர்ந்து கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டு வரப்படுகிறது
என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னுமொன்றைச்
சொல்ல விரும்புகிறேன். மக்கள் என் பக்கம் இருக்கிறார்கள்
என்று அடிக்கடி பேசிக்கொண்டிருக்கின்ற உங்களுக்கு
மாநகராட்சி தேர்தலை நடத்துவதில் என்ன சங்கடம்? கோவை
மாநகராட்சியாக இருந்தாலும், சென்னை மாநகராட்சியாக
இருந்தாலும், மதுரை மாநகராட்சியாக இருந்தாலும் அதிலே
கவனம் காட்டுவதற்கு உங்களுக்கு என்ன சங்கடம்? 1983-லே
இதே மன்றத்தில், அந்தத் துறையை நிர்வகித்து வந்த
அன்றைய அமைச்சர், 4 மாதங்களுக்குள்ளாக அதற்குரிய
சட்டத்தை தயார் செய்து விடுவோம் என்று சொன்னார்கள்.
1983-லே 4 மாதங்களுக்குள்ளாக தயாரித்துவிடுவோம் என்று

[திரு. மா. மணிமாறன்] [1987 ஏப்ரல் 28

அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல ஆண்டுகள் ஓ நண்
டோடிவிட்டன. இன்னும் சட்டங்கள் சரியாக்கப்படவில்லையா?
நிறைப்பதற்கு ஆதாரங்கள் சரியாக வரவில்லையா? அல்லது
இங்குள்ள சட்டத்துறை செயலாளர் மாண்புமிகு வடிவேலு
அவர்கள் ஒழுங்காக உதவி செய்யவில்லையா? எதெதற்கோ உதவி
செய்து கொண்டிருக்கின்ற சட்டத்துறை இதற்கு ஏன் உங்களுக்கு
ஒத்துழைக்கவில்லை? நீங்கள் வற்புறுத்தவில்லையா? அல்லது
அவர்கள் செய்வதற்கு தயக்கம் காட்டுகிறார்களா? மக்கள்
உங்கள் பக்கம் என்று சொல்லி சவால் விடுகின்ற உங்களைப்
பார்த்து நான் சவாலாகக் கேட்கவில்லை. ஆனால் துணிவு
இருந்தால் மூன்று மாநகராட்சிகள் தேர்தலையும் நடத்தி
மக்கள் யார் பக்கம் என்பதை நிரூபிக்கத் தயாரா என்று கேட்கக்
கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

இன்றைக்கு நீங்கள் ஐ.ஆர்.டி.பி.-யிலே பல உதவிகளைச்
செய்துகொண்டிருப்பதாகச் சொன்னார்கள். உங்களைப்
பார்த்து நான் கேட்கின்றேன். நீங்கள் அமைச்சராக
அன்றைக்கு இருந்திருக்கிறீர்கள். 1975-லே வீடுகள் கட்டிக்
கொடுத்தார்கள் ஆதி திராவிட மக்களுக்காக. எப்படிப்பட்ட
வீட்டை நீங்கள் கட்டினீர்கள்? நீங்கள் அங்கேதான் இருந்தீர்கள்.
கான்கிரீட் வீடாக கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்கு
மத்திய அரசின் ஆர்.எல்.ஈ.ஜி.பி., என் ஆர் ஈ பி போன்றவற்றில்
நீங்கள் போடுகின்ற பங்கு மூலதனமாக இருந்தாலும் சேர்த்து,
கல்லை வைத்து மண் கட்டாக கட்டி மேலே ஓடு போட்டுக்
கொண்டிருக்கிறீர்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஆதி
திராவிடர்களுக்கு ஓட்டு வீடு கட்டிக் கொடுத்தார்கள். திராவிட
முன்னேற்றக் கழகம் ஆளுகின்ற நேரத்தில் அவர்களுக்கு கான்
கிரீட் வீட்டை கட்டிக் கொடுத்தார்கள். நீங்கள் இன்னொரு மாடி
கூட கொடுக்கா விட்டாலும் கூட, தொடர்ந்து கான்கிரீட் வீட்டை
கட்டிக் கொடுப்பதிலே நீங்கள் ஏன் தயக்கம் காட்டிக் கொண்
டிருக்கிறீர்கள்? பாவம் அவர்கள் உங்களுக்காகத்தான் நிற்கக்
கூடியவர்களாக இருக்கின்றார்கள். அவர்களைப் போய் இந்தச்
சங்கடத்திற்கு ஆளாக்கிக்கொண்டிருக்கிறீர்களே. திண்டிவனத்
திற்கு பக்கத்திலே ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டிக்கொடுத்
திருக்கிறார்கள், சாலை ஓரத்திலே. போய்ப் பாருங்கள். அதற்குப்
பக்கத்திலேதான் நீங்கள் ஒன்றாக இருக்கின்ற நேரத்திலே 1975-ல்



1987 ஏப்ரல் 28] [திரு. மா. மணிமாறன்]

பாக்கம் என்ற ஊருக்கு பக்கத்திலே, அதே ஊருக்கு பக்கத்திலே
வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வீட்டையும் நீங்கள்
பாருங்கள். இரண்டையும் பார்த்ததற்கு பின்னாலே பாவமான
அந்த ஆதி திராவிடர்களுக்கு யார் முறையாக குடியிருப்பதற்கு
வீட்டு வசதிகள் செய்திருக்கிறார்கள் என்ற முடிவிற்கு நீங்களே
வாருங்கள். இப்படிப்பட்ட நிலையை அவர்களுக்காக
தொடர்ந்து செய்ய வேண்டாம் என்று நான் உங்களைக் கேட்டுக்
கொள்கின்றேன். அவர்களுக்காக அடிக்கடி நீங்கள் பரிந்து
பேசினீர்கள். உள்ளாட்சித் தேர்தல் வருவதற்கு முன்னாலே
நீங்கள் அடிக்கடி என்ன சொன்னீர்கள்? தாழ்த்தப்பட்டவர்
களுக்காக நாங்கள் இடம் ஒதுக்கீடு செய்கிறோம். அதன்
காரணமாக நாங்கள் தேர்தலைத் தள்ளி வைக்கிறோம் என்று
சொன்னீர்கள். அதற்கு பின்னாடி, தள்ளி வைத்ததற்குப் பின்
னாடி, அதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டு, புது சட்டத்தை காலாவதி
செய்துவிட்டு, பழைய சட்டத்திலேயே நீங்கள் தேர்தலை நடத்தி
விட்டீர்கள். பரவாயில்லை. நடத்தி 1½ ஆண்டுகளாகியிருக்
கிறது. இன்னும் 1½ ஆண்டு காலத்திற்குள்ளாக தேர்தல் வந்தாக
வேண்டும். தேர்தல் வருமோ, வாராதோ, இதிலே ஒரு சர்வாதி
காரமோ எங்களுக்குத் தெரியாது. அப்படி 1½ ஆண்டு காலத்
திற்கு நீங்கள் தேர்தல் நடத்த வேண்டும் என்று சொன்னால்
ஆதி திராவிடர்களுக்காக அடிக்கடி பரிந்து பேசுகின்ற நீங்கள்
அவர்களுக்காக ஒதுக்கீடு செய்ய உரிய சட்டத்தை எப்போது
வைக்க இருக்கிறீர்கள். இன்னும் 1½ ஆண்டுக்காலம் இருக்
கிறது. இதற்குள்ளாக உரிய சட்டத்தை நீங்கள் கொண்டு வந்து
அந்த ஒதுக்கீட்டை உருவாக்க முடியவில்லை என்று
சொன்னால் தேர்தலை உண்மையில் நீங்கள் இன்னும் இதே
சிக்கலை சொல்லி—முன்னாலே எப்படி தேர்தலை தள்ளிப்போடு
வதற்காக அவர்களை பயன்படுத்தினீர்களோ. ஆதி திராவிடர்
களுக்கு ஒதுக்கீடு என்று, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் என்று
சொல்லி தேர்தலை தள்ளிப் போட்டீர்களோ அதே போல—இன்
னொரு தடவையும் ஒத்திப்போடுவதற்கும் இந்த ஆதி திராவிடர்
களைப் பயன்படுத்துவதற்கு இந்த அவகாசத்தை நீங்கள்
எடுத்துக் கொள்வீர்களோ என்று எங்களுக்கு சந்தேகமாக இருக்
கிறது. [illegible] பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்

கிறேன். ஆதி திராவிடர்கள், ஆதி திராவிடர்கள் என்று சொல்லி அவர்களுக்கு இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் ஏற்படுத்தி நீங்கள் அவர்கள் பெயராலே ஒரு சர்வாதிகாரத்தை தயவு செய்து உருவாக்கிவிடாதீர்கள். ஆங்கிலேயர் காலத்தில் ஆட்சி பரவலாக் கப்படக்கூடாது, ஒரே இடத்தில் அதிகாரம் இருக்க வேண்டும் என்று ஆங்கிலேயர்கள் நடைமுறைப்படுத்தினார்கள். அன்றைக்கு சுதந்திரப் போராட்டக் காலத்திலே என்ன சொன் னார்கள்? அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்று சொன் னார்கள். அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டால்தான் ஆட்சியில் இருக்கக்கூடியவர்கள் விவரம் தெரிந்தவர்களாக இருக்க முடியும். அவர்களுடைய தேவையை நிவர்த்தி செய்ய முடியும் என்றெல்லாம் முடிவு செய்து அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டுமென்று சொன்னார்கள். சுதந்திரம் பெற்றதற்கு பின் னாலே அன்றைக்கு இருந்த காங்கிரஸ் அரசாங்கம் 'ராம ராஜ்யம், கிராம ராஜ்யம்' என்று சொன்னது. அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதன் காரணமாக உள்ளாட்சித் துறைகள் எல்லாம் தோன்றி அதிகாரங்கள் பரவலாக்கப் பட்டன. இன்றைக்கு நாம் பார்க்கின்றோம் அதிகாரங்கள் எந்த அளவிலே இருக்கின்றன? உள்ளாட்சித் துறையில் இருக் கின்ற அதிகாரங்களை இன்றைக்கு நாம் எந்த அளவிற்குக் கையிலே எடுத்துக் கொண்டிருக்கிறோம்? அவைகள் நடமாடு வதற்கு நாம் விட்டு வைக்கிறோமா? அரசாங்கத்தினுடைய ஆணையின் காரணமாக அவைகளை அடக்குவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்து கொண்டிருக்கிறது. சமீபத்திலே ஒரு உத்தரவு போட்டிருக்கிறீர்கள். உங்களைப் பார்த்து நான் கேட்கின்றேன், யார் யார் புதிய கட்டிடங்களைத் திறக்க வேண்டும், யார் யார் அடிக்கல் நாட்ட வேண்டும் என்றெல்லாம் நீங்கள் உத்தரவு போட்டிருக்கிறீர்கள். இதற்கு முன்னாலே சட்டமன்ற உறுப்பினர்களும் அந்தத் தொகுதியிலுள்ள பாராளு மன்ற உறுப்பினர்களும் கட்டிடங்களைத் திறக்கலாம்; அடிக் கல்லை நாட்டலாம் என்று இருக்கிறதே அதை நீக்கி இருக்கிறீர் களே நியாயமா? இவைகளை மாநில, மத்திய அரசினுடைய அமைச்சர்களும், சபாநாயகர் அவர்களும், துணை சபாநாயகர்





அவர்களும் சேர்ந்து திறக்கலாம் என்று இருக்கின்ற நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களை யும் விட்டுவிட்டீர்களே, இது ஒரு ஜனநாயகமா?

(பிற்பகல் 12-20)

ஜனநாயகத்தின் குரல் வளையை இன்றைக்கு நெறித்துக் கொண்டிருக்கிறீர்கள். விருப்பத்திற்கு விடவே மறுக்கிறீர்கள். மக்களுடைய விருப்பம் என்ன, அந்தப் பகுதியில் இருப்பவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்காமல், முடிவு எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், கோட்டையிலே உட்கார்ந்து கொண்டு. உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு எப்படி எல்லாம் சொல்கிறீர்கள்? 'யார் யாரோ தெருவிலே போகிறவர்கள் எல்லாம் அரசாங்கம் ஒதுக்குகின்ற பணத்திலே கட்டிய கட்டிடங்களைத் திறக்கலாமா' என்று கேட்கிறீர்கள். உங்களை நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

நாவலர் அவர்கள் பட்டீஸ்வரத்திலே ஒரு மேல்நிலை நீர்த் தொட்டியைத் திறந்தார்களே, என்னவாகத் திறந்தார்? அன்று [illegible] ஆட்சிக் காலத்திலே திறந்தார். அதேபோல், மாதவன் அவர்கள் மங்கள ஊருக்குப் பக்கத்திலே ஒரு பள்ளிக்கூடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். அன்றைக்கும் காங்கிரஸ் ஆட்சி தான். ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர் காங்கிரஸ்காரர் தான். அன்றைக்கு எந்த நிலையிலே அதைத் திறந்தார்? தெருவிலே சென்றவராகவா திறந்தார்? அன்றைக்கு தெளிவான ஜனநாயக உணர்வு இருந்தது. அதன் [..] இருந்தது. எதிர்க்கட்சிகளாக இருந்தாலும் பரவாயில்லை, காரணமாக திறக்கவேண்டும் என்று அன்றைக்கு கருதினார்கள்.

இன்றைக்கு நீங்களும், அவர்களும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு, நீங்கள் செய்வதற்கு அவர்கள் வாய் மூடியாக இருக் கிறார்கள். நீங்கள் ஜனநாயகத்தின் குரல் வளையை நெறித்துக் கொண்டிருக்கிறீர்களே, நியாயமா என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு தெருவிலே செல்கிறவர்கள் எல்லாம் திறக்கலாமா என்று கேட்கிற உங்களைப் பார்த்து நான் கேட்கிறேன். அண்ணன் மாதவன் அவர்களும் நாவலர் அவர்களும், தெருவிலே

பிரமோஷன் கொடுக்கின்ற காரணத்தால், அந்த மாவட்டத்தில் பணியாற்றுகிற ஊர் நல அதிகாரிகளுக்கு பிரமோஷன் கிடைக்க வாய்ப்பில்லாமல் இருக்கிறது. எனவே, அவர்களுக்கு மாநில அளவில் சீனியாரிட்டி ஃபிக்ஸ் பண்ணி அவர்களுக்கு பிரமோஷன் கிடைக்க இந்த அரசாங்கம் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1974-இலே அரசு ஊழியர்களாக ஆன, உள்ளாட்சித் துறையிலே இருக்கக்கூடிய ஊழியர்கள்—இன்றுவரை அவர்களுடைய பணி வரன்முறை செய்யப்பட்டு, சர்வீஸ் புக் எல்லாம் சீர் பண்ண முடியாத நிலை இருக்கிறதென்று மிக வருத்தத்தோடு எடுத்துச் சொல்லி, உண்ணாவிரதம் இருப்பதாக செய்தி கிடைக்கின்றது. எனவே, அவர்களுடைய கோரிக்கைகளை அரசு பரிசீலித்து, நியாயம் வழங்க வேண்டும் என்று கேட்டு, உள்ளாட்சித் துறையிலே நீங்கள் போட்டிருக்கிற உத்தரவுகளை மறுபரிசீலனை செய்து நியாயம் வழங்க வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன், வணக்கம்.

**திரு. கு. அ. செங்கோட்டையன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் பற்றிய 28 ஆவது எண் மானியக் கோரிக்கையினை வரவேற்றுப் பேசுகின்ற ஒரு வாய்ப்பினை உருவாக்கித் தந்தமைக்காக முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு தமிழகத்தின் தங்கத் தலைவர் புரட்சித் தலைவருடைய ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் கிராமப்புறங்களை நோக்கி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் முதலிலேயே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் பேசுகிறபோது கிராமப்புறங்களில் என்ன திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டுக் கேட்டார்கள். கிராமப்புற மக்கள் முழுமையாக உங்களை ஆதரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த கிராமப்புறத்து மக்களுக்கு





நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்ற கேள்வியை அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்—அதாவது 7 ஆண்டுக் காலம் ஆட்சியில் இருந்தவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு 'தன்னிறைவுத் திட்டம்' என்ற திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 50 லட்சத்திற்கு மேல் செலவு செய்து கிராமப்புற மக்களுடைய நன்மைக்காகப் பல்வேறு அபிவிருத்திப் பணிகளைச் சீரான முறையில், சிறப்பான முறையில் நிறைவேற்றி வருகிறார்கள். பாதை இல்லாத பல்வேறு கிராமங்களுக்குப் பாதை வசதிகளைச் செய்து தந்திருக்கிறார்கள். குடிதண்ணீர் இல்லாத கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதியைச் செய்து தந்திருக்கிறார்கள். பள்ளிக் கட்டிடங்கள் இல்லாத கிராமங்களுக்குப் பல்வேறு, அழகான பள்ளிக்கட்டிடங்களை அமைத்துத் தந்திருக்கிறார்கள். இப்படி பல்வேறு திட்டங்கள் கிராமப்புறங்களை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன. பாதை வசதி இல்லை—எப்போது எங்கள் கிராமத்திற்குப் பாதை வசதி கிடைக்கும் என்று ஏங்கித் தவித்த மக்களுடைய தாபத்தைத் தீர்த்து வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அவர்கள் நகர்ப்புறங்களுக்கு வருகை தருகிற போது நல்ல பாதைகளில் வருகிற நிலைமையை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் 7 ஆண்டுக் காலம் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது தன்னிறைவுத் திட்டம் எந்தக் கிராமத்தையும் நோக்கி வரவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அண்ணல் காந்தியடிகள் அவர்கள் சுதந்திரம் பெற்ற உடனே ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதாவது முழுமையான சுதந்திரத்தை நாம் இந்த நாட்டில் பெற்றிருக்கிறோம் என்று சொன்னால் கிராமப்புறங்களில் இருக்கிற மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதன் வாயிலாகத்தான் செய்ய முடியும், அப்போதுதான் கிராம ராஜ்யம் மலரும் என்ற தத்துவத்தை அண்ணல் காந்தி அடிகள் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களின் தத்துவங்களைப் படிப்படியாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்குப் பல்வேறு திட்டங்களின் அடிப்படையில்

[திரு. மா. மணிமாறன்] [1987 ஏப்ரல் 28

பிரமோஷன் கொடுக்கின்ற காரணத்தால், அந்த மாவட்டத்தில்
பணியாற்றுகிற ஊர் நல அதிகாரிகளுக்கு பிரமோஷன் கிடைக்க
வாய்ப்பில்லாமல் இருக்கிறது. எனவே, அவர்களுக்கு மாநில
அளவில் சீனியாரிட்டி ஃபிக்ஸ் பண்ணி அவர்களுக்கு பிரமோஷன்
கிடைக்க இந்த அரசாங்கம் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

1974-இலே அரசு ஊழியர்களாக ஆன, உள்ளாட்சித் துறை
யிலே இருக்கக்கூடிய ஊழியர்கள்—இன்றுவரை அவர்களுடைய
பணி வரன்முறை செய்யப்பட்டு, சர்வீஸ் புக் எல்லாம் சீர்
பண்ண முடியாத நிலை இருக்கிறதென்று மிக வருத்தத்தோடு
எடுத்துச் சொல்லி, உண்ணாவிரதம் இருப்பதாக செய்தி கிடைக்
கின்றது. எனவே, அவர்களுடைய கோரிக்கைகளை அரசு
பரிசீலித்து, நியாயம் வழங்க வேண்டும் என்று கேட்டு, உள்ளாட்
சித் துறையிலே நீங்கள் போட்டிருக்கிற உத்தரவுகளை மறுபரி
சீலனை செய்து நியாயம் வழங்க வேண்டும் என்று கேட்டு விடை
பெறுகிறேன், வணக்கம்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு சட்டப்
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்
சித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள சமுதாய நல
வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் பற்றிய 28 ஆவது
எண் மானியக் கோரிக்கையினை வரவேற்றுப் பேசுகின்ற ஒரு
வாய்ப்பினை உருவாக்கித் தந்தமைக்காக முதலிலே என்னுடைய
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு தமிழகத்
தின் தங்கத் தலைவர் புரட்சித் தலைவருடைய ஆட்சியில் பல்
வேறு திட்டங்கள் கிராமப்புறங்களை நோக்கி நடைபெறுக்
கொண்டிருக்கின்றன என்பதை நான் முதலிலேயே சுட்டிக்
காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள்
பேசுகிறபோது கிராமப்புறங்களில் என்ன திட்டங்கள் நடை
பெற்றுக் கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டுக் கேட்டார்கள்.
கிராமப்புற மக்கள் முழுமையாக உங்களை ஆதரித்துக் கொண்டி
ருக்கிறார்கள். ஆனால் அந்த கிராமப்புறத்து மக்களுக்கு



1987 ஏப்ரல் 28] [திரு. கு. அ. செங்கோட்டையன்]

நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்ற கேள்வியை அவர்கள்
கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்—அதாவது 7 ஆண்டுக் காலம்
ஆட்சியில் இருந்தவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை
ஏற்றதற்குப் பிறகு 'தன்னிறைவுத் திட்டம்' என்ற திட்டத்தின்
அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 50
லட்சத்திற்கு மேல் செலவு செய்து கிராமப்புற மக்களுடைய
நன்மைக்காகப் பல்வேறு அபிவிருத்திப் பணிகளைச் சீரான
முறையில், சிறப்பான முறையில் நிறைவேற்றி வருகிறார்கள்.
பாதை இல்லாத பல்வேறு கிராமங்களுக்குப் பாதை வசதிகளைச்
செய்து தந்திருக்கிறார்கள். குடிதண்ணீர் இல்லாத கிராமங்
களுக்குக் குடிதண்ணீர் வசதியைச் செய்து தந்திருக்கிறார்கள்.
பள்ளிக் கட்டிடங்கள் இல்லாத கிராமங்களுக்குப் பல்வேறு,
அழகான பள்ளிக்கட்டிடங்களை அமைத்துத் தந்திருக்கிறார்கள்.
இப்படி பல்வேறு திட்டங்கள் கிராமப்புறங்களை நோக்கி சென்று
கொண்டிருக்கின்றன. பாதை வசதி இல்லை—எப்போது
எங்கள் கிராமத்திற்குப் பாதை வசதி கிடைக்கும் என்று ஏங்கித்
தவித்த மக்களுடைய தாபத்தைத் தீர்த்து வைத்திருக்கிறார்கள்.
அதுமட்டுமல்ல, அவர்கள் நகர்ப்புறங்களுக்கு வருகை தருகிற
போது நல்ல பாதைகளில் வருகிற நிலைமையை மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.
ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் 7 ஆண்டுக்
காலம் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது தன்னிறைவுத் திட்டம்
எந்தக் கிராமத்தையும் நோக்கி வரவில்லை என்பதைக் குறிப்பிட
விரும்புகிறேன்.

அண்ணல் காந்தியடிகள் அவர்கள் சுதந்திரம் பெற்ற உடனே
ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதாவது முழுமையான சுதந்
திரத்தை நாம் இந்த நாட்டில் பெற்றிருக்கிறோம் என்று
சொன்னால் கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்களுடைய தேவை
களைப் பூர்த்தி செய்வதன் வாயிலாகத்தான் செய்ய முடியும்,
அப்போதுதான் கிராம ராஜ்யம் மலரும் என்ற தத்துவத்தை
அண்ணல் காந்தி அடிகள் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களின்
தத்துவங்களைப் படிப்படியாக மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் இன்றைக்குப் பல்வேறு திட்டங்களின் அடிப்படையில்

[திரு. கு. அ. செங்கோட்டையன்] [1987 ஏப்ரல் 28

நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய தினம் அன்பிற்குரிய உறுப்பினர்கள் மாநகராட்சித் தேர்தல்களை நடத்தவில்லையே என்ற கருத்தைக் கூட குறிப்பிட்டுக் கேட்டார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பில் இருக்கிற நகராட்சி மன்றங்களில் எவ்வளவு ஊழல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதற்கு ஒன்றிரண்டு உதாரணங்களைச் சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இன்றைக்கு கருணாநிதி * * * வந்து கொண்டிருக்கிறார். அரசோ, நகராட்சிகளில் விதிக்கப்பட்ட வரி உயர்வை 1—4—1987 லிருந்து ரத்து செய்துவிட்டது. அந்த வரி உயர்வை நகராட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் நகராட்சியில் பல்வேறு பொறுப்புகளில் இருப்பவர்களை அழைத்து வைத்து, நகராட்சிகள் வரி உயர்வைச் செய்திருக்க வேண்டும். குறிப்பாக * * என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். . . (குறுக்கீடு)

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. செங்கோட்டையன் அவர்கள் பேசுகிற போது திமுக.வின் தலைவர் கலைஞர் அவர்கள் வருகிறபோது ஒவ்வொரு இடத்திலும் * * * ஆதாரம் இருந்தால் நிரூபிக்க வேண்டும். நிரூபிக்கவில்லை என்றால் நடவடிக்கைக் குறிப்பில் இருந்து அது நீக்கப்பட வேண்டும்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் ஒன்றைக் கோடிட்டுக் காட்டினார்கள். * * * அதற்கு வேண்டிய ஆதாரத்தை நான் தரவும் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு) இங்கே திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் என்னைப் பார்த்துக் கேட்கிறார்கள். அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். இங்கே * * * (குறுக்கீடு).

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



1987 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆதாரம் இருக்கிறது என்று அவர் சொல்கிறார். என்னவென்று கேட்டுவிட்டு நாம் முடிவு செய்யலாம். அவரைப் பேச விடாமல் செய்தால் எப்படி? நீங்கள் பேசுங்கள். . .

(பிற்பகல் 12·30)

திரு. கு. அ. செங்கோட்டையன்: * * *

கடுமையான வறட்சி நாட்டிலே தாண்டவமாடிக் கொண்டிருக்கும் போது, சட்டமன்றத்திலே வறட்சியைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும்போது, இங்கே இந்தக் கடுமையான வறட்சி நேரத்தில் இந்தப் பகுதியில் இருக்கிறவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * * * பற்றி பேசுவதற்கு ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள். [illegible] * * * என்றால் எப்படி? இதை போய் நீக்கக் காரணம் இந்தப் பக்கம் உள்ளவர்கள்தான். எதிர்க் கட்சிப் பக்கம் [illegible] கள் எவ்வளவோ பேசியிருக்கிறார்கள். அதைப் [illegible] பண்ணித்தான் அவரும் பேசுகிறார். நீங்கள் அப்படிப் [illegible] போது அதை எடுக்க விடமாட்டேன் என்கிறீர்கள். [illegible] ருடைய பேச்சை கேட்டுவிட்டு முடிவு செய்கிறேன். * * * என்ற அந்தப் பகுதியை நீக்கிவிடலாம். மாண்புமிகு உறுப்பினர் அதற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறார். அதைப் பற்றி பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறை சொல்வது என்பது ஒன்று (Lapse ஒன்று. குற்றச்சாட்டு சொல்வது என்பது ஒன்று. இங்கே மாண்புமிகு உறுப்பினர் is different from charge) திரு. மணிமாறன் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். சொத்து வரிகளை மாற்றியமைக்கவென்று வீட்டு வரிகளை, நியமிக்கப்பட்ட அதிகாரிகள் பல தவறுகளைச் செய்து இந்த வரியை உயர்த்தினார்கள், சில இடங்களில் குறைத்தார்கள். இதை ஒரு 'ரெய்டு' என்ற வகையிலே என்று சொன்னார்.

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[திரு. சு. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 28

எடுத்துக்கொள்வளவர். மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லுகிறார். ஆதாரம் இருந்தால்தான் குற்றச்சாட்டு சொல்ல வேண்டும். * * * என்று குற்றச்சாட்டு சொல்லுகிறார்கள். ஆதாரம் இருந்தால் தங்களிடம் தந்துவிட்டுச் சொல்லுவதுதான் சரியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஆதாரம் இருந்தால் சொல்லிவிடுங்கள்.

**திரு. கு. அ. செங்கோட்டையன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தை நீங்கள் எப்போது வேண்டும் என்று கேட்டாலும் நான் தங்களிடத்திலே அதைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஆதாரம் கொடுக்காமல் குற்றச்சாட்டைச் சொல்லக் கூடாது. குற்றச்சாட்டு என்று சொல்லும்போது ஆதாரத்தைக் கொடுக்காமல் பேச முடியாது (குறுக்கீடுகள்) நானே சொல்லிவிடுகிறேன். ஆதாரம் இல்லாமல் பேச முடியாது. ஆகவே அந்தப் பகுதியை நீக்குங்கள். * * * பற்றி சொன்ன குற்றச்சாட்டுக்களை நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. கு. அ. செங்கோட்டையன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * * * இந்த வறட்சி என்று சொல்லுகின்ற நேரத்தில், வறட்சியால் வாடிக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு இந்த அரசு செய்ய வேண்டும் என்று சொல்லும் நேரத்தில், வரி வசூலிக்கத் தடை...

**மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, * * * அது தான் சரியில்லை.

---

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1987 ஏப்ரல் 28]

**திரு. கு. அ. செங்கோட்டையன் :** ஆகவே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். கட்டாயப்படுத்தி வசூல்
செய்யப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் வறட்சி என்று சட்ட
மன்றத்திலே பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மக்களிடத்
திலே வரிப் பணம் என்ற நிலையை வைத்து அவர்களுடைய
முதுகெலும்பை முறித்துக்கொண்டு வசூல் செய்து கொண்டி
ருப்பது உண்மையிலேயே மக்களுக்கு நன்றாகத் தெரியும்.
ஆகவே மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வீட்டு வரி
உயர்வால் பல தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தத் தவறு
களைக் கண்டறியும் வகையில் ஒரு கமிஷனை அமைத்து, தவறு
ஏற்பட்டிருக்கும் நேரத்தில், என்னென்ன தவறுகள் நடைபெற்றி
ருக்கின்றன என்று நடைபெற்ற தவறுகளைச் சுட்டிக்காட்டும்
நேரத்தில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்
வர வேண்டும் என்ற வேண்டுகோளை மாண்புமிகு அமைச்சர்
அவர்களுக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக வரி உயர்வைப் பொறுத்த வரையில் 1-4-1987
அன்று வரியை ரத்து செய்து அரசாங்கம் உத்திரவிட்ட பிறகும்
பல்வேறு நகராட்சிகளில் வரி உயர்வு போடப்பட்டிருக்கிறது.
உயர்த்தப்பட்ட அந்த வரியை, பொது மக்கள்மீது சுமத்தப்பட்டி
ருக்கிற அந்த வரியை, அரசு நல்ல மனத்தோடு குறைத்து, அதை
எடுத்துவிட்டாலும், பல நகராட்சியில் உள்ளவர்கள் அந்த
உயர்த்திய வரியை ரத்து செய்யாமல், மக்களிடத்தில் பிரச்
சினைகளைக் கேட்காமல், பல்வேறு சங்கங்களை அணுகி அவர்
களிடம் எவ்வளவு வரி போடலாம் என்று கேட்காமல், வரியை
உயர்த்தியிருக்கிறார்கள். அதை உடனடியாகப் பரிசீலனை
செய்து, உடனடியாக அதை ரத்து செய்ய நடவடிக்கைகளை
எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டி
ருக்கிறேன்.

இந்த அரசினுடைய ஆட்சி
குறிப்பாக பல்வேறு திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நகராட்சி மேம்
பாட்டுத் திட்டமென்று 14 நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களை
யிலே
செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக 30 கோடி

[திரு. கு. அ. செங்கோட்டையன்] [1987 ஏப்ரல் 28

ரூபாய்க்கு மேலே செலவு செய்து 11 திட்டங்கள் நடைபெற்றுக்
கொண்டிருக்கின்றன. துப்புரவுப் பணியாளர்கள் அதிகமாக
இல்லாத நகராட்சிகளில் பல்வேறு வேலைகள் நடைபெற
வில்லை என்பதால், இன்றைக்கு பணிகள் முடக்கப்பட்டி
ருக்கின்றன. இதைக் கருத்திலே கொண்டு துப்புரவுப் பணி
யாளர்களை அதிகரிக்க அரசு உதவித் தொகை வழங்குகிறது
என்பதைப் பார்க்கும்போது, அது உண்மையிலேயே வரவேற்கத்
தக்கதாகும். இதைப் போலவே நகராட்சிகளிலே உள்ள
துப்புரவுப் பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டுகின்ற
திட்டத்தை அறிவித்திருப்பதும் உண்மையிலேயே பாராட்டக்
கூடிய ஒன்றாகும். இப்படி அரசைப் பொறுத்தவரையில் நல்ல
பல திட்டங்களை இன்றைக்குச் செய்துகொண்டிருக்கிறார்கள்
என்பதை நான் உண்மையிலேயே வரவேற்கவும், வாழ்த்தவும்
கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தினுடைய முதல்வராக
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப்
பிறகு, பல்வேறு திட்டங்கள் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்
சித் திட்டத்தின்கீழ் நகரங்களிலும், கிராமங்களிலும் நடை
பெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம்.

அடுத்து, மத்திய அரசு கொடுக்கும் ஒரு கோடி ரூபாய் நிதியை
வைத்து, நகராட்சியிலே பல்வேறு திட்டங்களை இன்றைக்கு
நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இதைப்போல
நம்முடைய தமிழக அரசின் சார்பில் ஒருங்கிணைந்த நகர்ப்புற
வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டங்கள் நடைபெறு
வதற்கு நிதி ஒதுக்கப்படுகிறது. மத்திய அரசின் உதவித்
தொகை கிடைக்காத நகராட்சிகளை எடுத்து, அவை ஒவ்வொன்
றுக்கும் 25 இலட்சம் ரூபாய் செலவிலே நம்முடைய அரசு
திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படை
யிலே சத்தியமங்கலம் நகராட்சி இன்றைக்கு விடுபட்டிருக்கிறது.
சத்தியமங்கலம் நகராட்சியை மத்திய நகர்ப்புற ஒருங்கிணைந்த
திட்டத்தின்கீழ் சேர்த்து, ஒரு கோடி ரூபாய் தொகை ஒதுக்க
வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டும், அந்த நகராட்சிக்கு
அந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே அந்த
நகராட்சிக்கு நம்முடைய ஐ.யு.டி.பி., திட்டத்தின்கீழ் 25 லட்சம்
ரூபாயை ஒதுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 ஏப்ரல் 28] [திரு. கு. அ. செங்கோட்டையன்]

அடுத்து கோபியைப் பொறுத்தவரையில் பல்வேறு அபிவிருத்
தித் திட்டங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி
யிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக எந்த
ஆட்சியிலும் செய்யாத பல்வேறு திட்டங்கள் நடைபெற்றிருக்
கின்றன. பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றி,
காவல் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றி, கோபியின்
மையத்திலே உள்ள ஒரு பகுதியிலே பேருந்து நிலையத்தை
விரிவுபடுத்தியிருக்கிற நம்முடைய புரட்சித் தலைவர் அவர்
களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களுக்கும் என்னு
டைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு பாதை வசதிகளை விரிவுபடுத்தும்போது
சாதாரண குழல் விளக்குகள் இருந்து கொண்டிருக்கின்
றன. அந்த நகராட்சியில் கருப்பூர் என்று சொல்லக்கூடிய
நகராட்சி எல்லையிலிருந்து சாந்தி தியேட்டர் வரையிலும்
இன்றைக்கு குழல் விளக்குகள் அமைத்து, பாதையை விரிவு
படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பாதையிலே
செல்லும்போது போதிய ஒளி இல்லை என்ற காரணத்தாலே,
அரசால் இன்றைக்குத் தடை செய்யப்பட்டிருக்கிற சோடியம்
வேப்பர் விளக்குகளை அமைப்பதற்கு, அரசு தடையை நீக்கி,
கோபி நகராட்சிக்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்ற வேண்டு
கோளை இங்கே வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, பெருந்துறையைப் பொறுத்தவரையில் நம்முடைய
பெருந்துறை சட்டப் பேரவை உறுப்பினர் ஒரு கோரிக்கையை
போன ஆண்டே நம்முடைய அரசுக்கு வைத்திருக்கிறார்.
பெருந்துறைத் தொகுதியில் இருக்கிற கருமாண்டி செல்லி
பாளையம் பேரூராட்சிக்கு ஆண்டு வருமானம் 12 இலட்சம்
ரூபாயாகவும், பெருந்துறை பேரூராட்சிக்கு ஆண்டு வருமானம்
ஏறத்தாழ 8½ இலட்சம் ரூபாயாகவும் இருந்துகொண்டிருக்
கிறது. அந்த இரண்டு பேரூராட்சிகளையும் இணைத்து,
நகராட்சியாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்
களாக இருக்கிறது. அந்தக் கோரிக்கையை பெருந்துறை சட்டப்
பேரவை உறுப்பினர் டாக்டர் அ. பொன்னுசாமி அவர்கள்
வைத்திருக்கிறார்கள். அதை இந்த ஆண்டே நிறைவேற்றித் தர
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு கு. அ. செங்கோட்டையன்] [1987 ஏப்ரல் 28

அடுத்து, அரசைப் பொறுத்தமட்டில் கிராமப்புறங்களிலே
உள்ள மக்களுடைய நலனைக் கருதி பல்வேறு திட்டங்களை
இன்றைக்கு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக எந்த
ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு புரட்சித் தலைவர் அவர்கள்
ஆட்சியிலேதான் கிராமப்புறங்கள் முன்னிறைவு பெற்றிருக்
கின்றன. அதோடு மட்டுமல்லாமல், பாதை வசதி இல்லாத பல்
வேறு கிராமங்கள் இன்றைக்கு பாதை வசதிகளைப் பெற்றிருக்
கின்றன என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன். இன்றைக்கு கிராமப்புறங்களிலே உள்ள ஊராட்சி
மன்றங்களிலே உள்ள துப்புரவுப் பணியாளர்கள் 100 ரூபாய்
சம்பளத்திற்கு பகுதி நேர வேலையாட்களாக, துப்புரவுப் பணி
யாளர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை முழு
நேர வேலையாட்களாக மாற்ற வேண்டும். 100 ரூபாய்
சம்பளத்தை வைத்து அவர்கள் குடும்பத்தை நடத்த முடியாத
சூழ்நிலை இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு
தமிழகத்தின் தங்கத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் அவர்
களுக்கு கூடுதலாக சம்பளத்தை உயர்த்தித் தர வேண்டுமென்று

(பிற்பகல் 12-40)

கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு பல்வேறு அபிவிருத்தித்
திட்டங்களை, அவர்களுடைய குடும்ப நலத் திட்டங்களை செய்
வதற்கு முன் வரவேண்டும் என்ற வேண்டுகோளையும் நான்
இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர்
அவர்களைப் பொறுத்த வரையிலும், இன்றைக்கு பல்வேறு
திட்டங்கள் கிராமப்புறங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்
கின்றன. கோபி நகராட்சியிலே இன்று கீரிப்பள்ளம் என்ற
இடம் இருக்கிறது. அதிலே பல்வேறு சாக்கடைப் பகுதிகள் இருக்
கின்றன. நகரத்தின் மையத்திலே இருக்கின்ற பகுதி. அதை
அழகுபடுத்தி நல்ல முறையிலே அந்த சாக்கடைகளை சீர் செய்து
கோடியிலே இருக்கின்ற நஞ்சகொண்டான் பாளையம் என்ற
இடத்திற்கு அடுத்து சாக்கடை நீரை வெளியேற்றுவதற்கு உரிய
நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 28] [திரு. கு. அ. செங்கோட்டையன்]

நகராட்சியிலே நஞ்சகொண்டான் பாளையத்திற்கு 1½
கிலோ மீட்டர் சுற்றி வருகின்ற அளவில் இருக்கின்றது.
மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவில் குறுகிய
பாதையை அமைத்து அந்த மக்களுடைய நலனைக் கருதி,
பொது மக்களுடைய தேவையை பூர்த்தி செய்கின்ற அளவுக்கு
ரூ. 47,000 நகராட்சியிலே பணம் செலுத்தப்பட்டிருக்கின்றது.
ஆதி திராவிட மக்கள் தங்கி வசிக்கின்ற அந்த இடத்தில் உள்ள
அந்தப் பாதையை செப்பனிட வேண்டும் என்ற வேண்டுகோளை
வைத்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின்
இந்த மானியத்தை வரவேற்றுப் பேசுகின்ற வாய்ப்பினை உரு
வாக்கித் தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி
கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

• திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே கொண்டு வந்திருக்
கின்ற சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரால்,
நகராட்சி நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது
இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாக சில கருத்துக்
களை எடுத்து வைக்கலாம் என்று நான் விரும்புகிறேன்.
எங்களுடைய கட்சியின் சார்பாக சட்டமன்ற உறுப்பினர்கள்
கொண்டு வந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை முதன்
முதலாக ஆதரித்துப் பேச ஆரம்பிக்கிறேன். கிராமத்தின்
வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி என்று சொன்னார் தேசப் பிதா
மகாத்மா காந்தி அடிகள், அவரது அந்தத் தலையாய சிந்தனை
யைத் தீர்க்கதரிசனமான சிந்தனையை மனதிலே ஏற்று 17
ஆண்டுக்காலம் அறிவார்ந்த சிந்தனையால் இந்த நாட்டினுடைய
பிரதமர் பொறுப்பை வகித்தார்கள் பண்டித ஜவஹர்லால் நேரு
அவர்கள். அவருடைய திறமையால், தலைமையால் இந்த
நாட்டிற்குள் நம்முடைய ஊராட்சி மன்றங்களும் நகராட்சி
மன்றங்களும் அமைக்கப்பட்டன என்பதை நான் இங்கே
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் 384 ஊராட்சி ஒன்றி
யங்கள், 98 நகராட்சி மன்றங்கள், 3 மாநகராட்சி மன்றங்கள்
இன்றைக்கும் இயங்கி வருகின்றன. 15 ஆண்டுகளாக தேர்தல்
இல்லாமலிருந்த நகராட்சிகளுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு
கடந்த ஆண்டு தேர்தல் நடந்து முடிந்து புதிய தலைவர்கள்

[திரு. கே. எம். தங்கமணி] [1987 ஏப்ரல் 28

பொறுப்பேற்று இருக்கிறார்கள். மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்கள் ஆட்சிதான் ஜனநாயகம் என்பதை ஒத்துக் கொண்டிருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக தேர்தல் நடத்தவேண்டும் என்று ஆணையிட்டார்கள். அது போன்று மாநகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இன்றைய தலைவர்கள் எல்லாம் இன்றைய தினம் அதிகாரம் இல்லாத தலைவர்களாக இருந்துகொண்டு வருகின்றார்கள். அவர்கள் வெறும் அலங்காரப் பொம்மைகளாகத்தான் காட்சியளிக்கின்றார்களே தவிர, ஊராட்சி மன்றங்களிலே பொறுப்பாக செயல்படக்கூடிய தலைவர்களாக இன்றையதினம் இல்லை. ஊராட்சி மன்றங்களின் ஜீவனாக இருந்த வேளாண்மை, சுகாதாரம், கல்வி, கால்நடை, மகளிர் நலம் எல்லாம் இன்றைய தினம் பிரித்துவிட்டிருக்கின்றார்கள். அதனால் வெறும் எலும்பு கூடுபோல, அதிகாரம் இல்லாத வெறும் நவாப்பாக இன்றைய தினம் ஊராட்சிகளும், மாநகராட்சிகளும் இயங்கிக்கொண்டு இருக்கின்றன என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே பிரித்துவிட்ட அதிகாரங்களை எல்லாம் மீண்டும் அவர்களுக்குத் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கிராமங்கள் தான் இப்படி என்றால் நகராட்சிகளுடைய நிலையைப் பற்றிச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. தமிழ்நாட்டிலே மிகவும் நலிவுற்ற நகராட்சிகள் அதிகமான அளவிலே இருக்கின்றன. தமிழகத்திலே உள்ள எல்லா நகரசபைகளும் சொத்து வரி விதிக்க வேண்டும் என்று நம்முடைய சர்க்கார் ரிவிஷன் அசஸ்மெண்ட் என்று போட்டு பின்னாலே வரியை ஏற்றியிருக்கிறார்கள். அது சரியல்ல என்று தகவல் வந்து வரியை நீக்கிவிட்டார்கள் என்பது நமக்கெல்லாம் தெரிந்த விஷயம். அவர்கள் மேலே பழி வாக் கூடாது என்பதற்காக நல்ல நோக்கத்திற்காக அப்படி செய்திருக்கின்றார்கள் என்று நான் கருதுகிறேன்.

ஆனால் இன்றையதினம் நகராட்சி மன்றங்களின் நிர்வாகங் களில் நடைபெற வேண்டிய பல்வேறு பணிகளுக்கு அரசு பணம் தர வேண்டியிருக்கிறது என்பதை உணர்ந்து ஏற்கெனவே இருந்த வரியோடு 25 சதவிகிதம் வரி புதிதாக அவர்களே போட்டுக்



1987 ஏப்ரல் 28] [திரு. கே. எம். தங்கமணி]

கொள்ளலாம் என்பதற்கு வழிவகை செய்யுமாறு என்னுடைய அடிப்படையான யோசனை ஒன்றை இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் நகராட்சி மன்றங்களிலே பணியாற்று கின்ற துப்புரவுப் பணியாளர்களுடைய சம்பளம், ஆசிரியர் களுடைய சம்பளம், சிப்பந்திகளுடைய சம்பளம் போன்றவை களைத் தரவே இன்றையதினம் நகராட்சிகள் திண்டாடிக் கொண் டிருக்கின்றன. திண்டிவனம் நகராட்சியைப் பொறுத்தவரை, அது வருவாய் குறைந்த, அதிக வருவாயில்லாத ஒரு நகரசபை. அங்கே இருக்கின்ற நேரு வீதி, செஞ்சி பஸ் நிலையம், மீன் மார்க்கெட் போன்ற இடங்களில் ஓரமாக சாலை ஓரக்கடைகளைக் கட்டி வாடகைக்கு விட வேண்டும். அப்படி விட்டால் வருமானம் அதிகமாக வரும். அதேபோல திரௌபதி அம்மன் கோவிலில் காலியாக உள்ள இடத்தில் திருமண மண்டபம் கட்டி வாடகைக்கு விட்டால் வருவாய் கிடைக்கும். இதற்குத் தேவையான பணத் தைக் கடனாகவோ அல்லது மானியமாகவோ அளிக்கலாம். இதற் கெல்லாம் வழிவகை செய்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திண்டிவனம் என்று சொன்னாலே எல்லோருக்கும் ஒரு பயம் இருக்கிறது. ஏனென்றால் திண்டிவனத்தில் குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்காத நிலை அதிக அளவில் இருக் கிறது. தீராத குடி தண்ணீர் பஞ்சம் நிலவுகிறது. எங்கள் பகுதியில் திருமணத்திற்குப் பெண் கொடுப்பதற்குக்கூட பயப்படு கிறார்கள். அந்த அளவுக்கு தண்ணீர் பஞ்சம் பயங்கரமாக உள்ளது. மிகவும் மோசமாக எங்கள் பகுதி குடிநீர் இல்லாத தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. உலக வங்கி உதவியோடு திருவெண்ணைநல்லூர் ஆற்றுப் படுகையிலே இருந்து அனந்த புரம், செஞ்சி வழியாக திண்டிவனத்திற்கு தண்ணீர் கொண்டு வருவது என்ற திட்டத்தை இந்த அரசு துரிதமாக செயல்படுத்த வேண்டும். இரண்டாண்டுகளுக்கு முன்பு இதே சட்டமன்றத்தில் என் வினாவிற்கு பதிலளித்த அன்றைய அமைச்சர் திரு. காளி முத்து அவர்கள் இந்த ஆண்டிலே இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னார்கள். சொன்னவர்தான் மாறிப் போனாரே தவிர திட்டம் அப்படியே இருக்கிறது. என்னைப்

135527

[திரு. கே. எம். தங்கமணி] [1987 எப்ரல் 28

வளருகின்ற நகரத்தின் தேவையை உணர்ந்து உடனடியாக திட்ட
மிட்டு ரூபாய் 12 கோடி செலவில் அரசு குடிதண்ணீர் திட்டங்
களை நிறைவேற்ற வேண்டும். அதோடு தற்காலிகமாக மிக
மிகத் தேவையான ரூபாய் 40 லட்சத்தை திண்டிவனம் நகராட்
சிக்கு மானியமாகக் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து என்றையதினம் நகராட்சிகள் துவக்கப்பட்டனவோ,
அன்றையதினம் எவ்வளவு துப்புரவுப் பணியாளர்கள் பணியாற்றி
னார்களோ அவ்வளவு பேர்கள் தான் இன்றையதினம் பணியாற்று
கிறார்கள். எனவே வளர்ந்து வருகின்ற மக்கள் தொகையைக்
கணக்கில் கொண்டு அதிக அளவில் துப்புரவுப் பணியாளர்களை
நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு காலத்தில் எங்கள் நகருக்குக் குடிதண்ணீர்
வழங்கிய எங்களூர் ராஜாங்குளத்தைச் செப்பனிட ஊர்
ராட்சி நிர்வாகத்தின் கீழ் நிதி உதவி செய்ய வேண்டுமென்று வார
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒழுக்கசீலராய், உத்தமத் தலைவராயிருந்து
மறைந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் திருப்பெய
ரால் ஊரிலே ஒரு பூங்கா இருக்கிறது. பூங்கா என்று பெயரள
வில்தான் இருக்கிறதே தவிர பார்ப்பதற்கு ஃபுட்பால் மைதானம்
போல இருக்கிறது. இதை நான் இங்கே வருத்தத்துடன்
தெரிவித்துக் கொள்கிறேன். எனவே அந்தப் பூங்காவில் மணம்
கமழும் நல்ல பூச்செடிகளை வளர்த்து அழகுப் பூங்காவாக
அதனை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மரக்காணம் வட்டாரத்தில் வட ஆலப்பாக்கம்
கிராமத்தில் கட்டப்பட வேண்டிய முதலமைச்சர் சத்துணவுக்
கூடத்தை ஊருக்கும், காலனிக்கும் மத்தியில், இரு சாராருக்கும்
பொதுவாக இருக்கும் காலி இடத்தில் கட்ட வேண்டு
கிறேன். இதனைக் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில்
முடிவெடுத்தபோது நான்தான் இரு சாராருக்கும் பொதுவான
இடத்தில் கட்ட வேண்டுமென்று சொன்னேன். சர்க்கார்



1987 ஏப்ரல் 28] [திரு. கே. எம். தங்கமணி]

உத்தரவும் அதைத்தான் சொல்கிறது. அதை இதுவரை கட்ட
வில்லை. எனவே அதை உடனடியாகக் கட்டுவதற்கு அரசு
ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலுள்ள மரக்காணம்,
மயிலம் வட்டாரங்களில் தண்ணீர் கிடைப்பது குதிரைக் கொம்
பாக இருக்கிறது. குடிநீர் வாரியத்தின் சார்பில் முன்னூர் கூட்டுக்
குடிநீர்த் திட்டம், கிளியனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்கிற
பெயர்களில் பல ஊர்களில் ஆழ் குழாய் போடுவதற்கான ஏற்பாடு
களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இது இன்றைக்கு நேற்
றைக்கு அல்ல, ஏழாண்டுக் காலமாக, நான் சட்டமன்ற உறுப்பின
ராக ஆன காலத்திலேயிருந்து சொல்லிக்கொண்டிருக்கிற திட்டம்.
ஆனாலும் இத்திட்டங்கள் எல்லாம் இதுவரை எடுக்கப்பட
வில்லை, நிறைவேற்றப்படவில்லை என்பதை மிக்க வேதனை
யுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்தப் பகுதி
யில் குடிதண்ணீரின் அவசியத்தை உணர்ந்து இப்படிப்பட்ட
திட்டங்களை எல்லாம் அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

கிராமப்புறங்களிலே தமிழக அரசு புதிய கழிவறைகளையெல்
லாம் கட்டிக்கொண்டிருக்கிறது. மிக நல்ல திட்டம். கிராமப்
புறத்திலே இருக்கின்ற ஏழை எளியவர்கள், இல்லாத மக்களெல்
லாம் அந்தக் கழிவறையைப் பயன்படுத்திக்கொள்வார்கள்.
ஆனால் அந்த இடங்களுக்குப் போதிய தண்ணீர் வசதியில்லாமல்
அவைகளெல்லாம் துர்நாற்றம் அடிக்கின்ற இடங்களாக இன்றைய
தினம் இருக்கின்றன என்பதை மனத்திலே கொண்டு உடனடியாக
அவைகளுக்கெல்லாம் தண்ணீர் வசதியைச் செய்து தர வேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஒரே பஞ்சாயத்திலே பல ஊர்கள்
இருக்கின்றன. எனவே அந்தக் கிராமங்களையெல்லாம் பிரித்து
தனி ஊராட்சியாக ஆக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்
திலே நான் கேட்டுக்கொள்கிறேன். தனி ஊராட்சிகளாக

[திரு. கே. எம். தங்கமணி] [1987 ஏப்ரல் 28

அவைகள் வளர்ந்தால் அவைகளுக்கும் நல்லது என்பதை நான்
சொல்ல விருப்பப்படுகிறேன்.

நெடிமோழியனூர் என்ற ஊரிலேயிருந்து நெடி கிராமத்தை
யும், சின்ன நெற்குணம் என்ற ஊரிலேயிருந்து எடப்பாளையம்
என்ற கிராமத்தையும் ரெட்டணையிலேயிருந்து நாரேரிகுப்பம்
என்ற கிராமத்தையும், தென் ஆலப்பாக்கத்திலேயிருந்து கொா
ளூர் என்ற கிராமத்தையும், பெரமண்டூர் என்ற கிராமத்திலே
யிருந்து பெரப்பந்தாங்களை மையமாகக் கொண்டு காட்ராம்
பாக்கத்தையும், கோபாலபுரத்தையும் இணைத்து புதிய ஊராட்சி
யைத் துவங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பெலா
குப்பத்திலேயிருந்து வேமூன்டியையும் தனி ஊராட்சியாகப்
பிரிக்க வேண்டும். அதைப்போலவே மரக்காணம் ஊராட்சி
ஒன்றியத்தில் எண்டூர் என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரிலே
குருமாபேட்டை என்ற ஊர் இணைந்திருக்கிறது. எனவே,
அதையும் பிரித்துத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கி
றேன். மயிலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு மிக அருகிலே இருக்
கின்ற பல ஊர்கள் மரக்காணம் வட்டாரத்திலே இணைக்கப்பட்
டிருக்கின்றன என்பதை நான் பணிவன்போடு இன்றையதினம்
தெரிவித்துக்கொண்டு, எடையாளம், தென் கலவாய், தென் பசார்,
ஜக்காம்பேட்டை, சிங்கனூர் ஆகிய ஊராட்சிகளெல்லாம் கிழக்குக்
கடற்கரைச்சாலை என்று சொல்லப்படுகிறது. இரண்டு
பஸ்களைப் பிடித்துக்கொண்டுதான் அங்கே பயணம் செய்து மரக்
காணம் வட்டாரத்திற்குப் போக வேண்டும். இந்த நிலைமை
களையெல்லாம் உணர்ந்து உடனடியாக அந்த ஊர்களையெல்லாம்
பிரித்து மயிலம் ஊராட்சி ஒன்றியத்திலே அதையெல்லாம்
இணைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்
கொள்கிறேன்.

மயிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகப் பணியாளர்கள் குடியி
ருப்பதற்கு எந்தவிதமான வசதியும் அந்த ஊரிலே இல்லை
என்பதை வருத்தத்தோடு நான் சொல்லிக்கொள்கிறேன். அங்கு
குவார்ட்டர்ஸோ, வீட்டு வசதியோ இல்லை. எனவே, அந்த
யூனியன் வளாகத்திலே ஒரு குடியிருப்பு வீட்டு வசதியைச்
செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 28] [திரு. கே. எம். தங்கமணி]

கடலூர், பாண்டிச்சேரி, விழுப்புரம் ஆகிய ஊர்களிலேயிருந்து
அங்கே வேலை செய்பவர்கள் பஸ்சிலே வர வேண்டும். அதனாலே,
குறித்த நேரத்திலே அவர்களாலே வர முடியவில்லை என்பதை
நான் இங்கே சொல்லிக்கொள்ள விருப்பப்படுகிறேன்.

மயிலம், பாதிநாபுலியூர், வீடூர் ஆகிய மூன்று கிராமங்களுக்கும்
இன்றையதினம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற பெயரால்
தண்ணீர் வருகிறது. இதற்கு ஆத்திகுப்பம் என்ற கிராமத்திலே
யிருந்து தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. 1985 ஆம் ஆண்டு
பெருமழை, வெள்ளம் வந்தபொழுது அந்தக் கிராமத்திலே
யிருக்கின்ற பைப்புகளெல்லாம் அடித்துச் செல்லப்பட்டதாக
பொய்யான கணக்கு எழுதி, ரிக்கார்டுகளைத் தயார் செய்து
கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக்
கொள்ள ஆசைப்படுகிறேன். பல இலட்சக் கணக்கான ரூபாய்
ஒன்றிய நிதியிலிருந்து இன்றையதினம் எடுக்கப்பட்டிருக்கிறது.
மேலும், அந்த ஒன்றியத்தில் 60 மூட்டை சிமெண்ட் ஸ்டாக்
குறைந்திருக்கிறது. இதைத் தணிக்கையிலே கண்டுபிடித்திருக்
கிறார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி., ஆகிய திட்டங்களுக்கு
மயிலம் ஒன்றியத்திலே அரிசி வழங்கப்படுகிறது. இன்றைய
தினம் அந்த அரிசி குறைந்து காணப்படுகிறது. ஸ்டாக் குறைந்
திருக்கிறது என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள ஆசைப்
படுகிறேன். இரண்டு தடவைகள் தணிக்கைக் குழுவினர்
இதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் மீது
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன்.

மயிலம் ஒன்றியத்தில் எல்லா பண வரவுகளையும் பொது
நிதிக்கணக்கிலே வரவு வைத்து மனம் போன போக்கிலே செலவு
செய்து கொண்டிருக்கின்ற நிலைமை தெரிகிறது. எங்களுடைய
ஊராட்சி ஒன்றியங்களில், குறிப்பாக மயிலம், மரக்காணம்
ஊராட்சி ஒன்றியங்களிலே இப்படியிருக்கின்றது என்பதை நான்
சொல்லிக்கொள்ள விருப்பப்படுகிறேன். அங்கே வாங்கப்படுகின்ற
மின் விளக்குகள், மின்சார சாமான்கள், மோட்டார் பாகங்கள்,

குழாய்கள், கைப்பம்புகள் இவைகளை திருக்கோயிலூர் அக்ரோ இண்டஸ்ட்ரிஸ் சார்பாக வாங்குவதாகச் சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். ஆனால் அதேநேரத்திலே கடலூர் பூபதி ஸ்டோர்ஸ், கருணாமூர்த்தி ஸ்டோர்ஸ், விழுப்புரம் காசி டிரேடர்ஸ் ஆகியவை களின் மூலம் பில் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ள விருப்பப்படுகிறேன். ஒரு எலக்ட்ரிக் ஃபிட்டிங்ஸ்க்கு 150 ரூபாய் செலவு ஆகிறது என்று சொன்னால் இவைகளுக்கு 400 ரூபாய் என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். ஏறக்குறைய ஆறு இலட்சம் ரூபாய் இதிலே களவு செய்து எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மிகுந்த கொள்ளையாகவே இதிலே நடந்திருக்கிறது. இதைக்குறித்து மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. ஆர். சி. பாண்டா அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, மாவட்ட அளவிலே இருக்கின்ற ஒருசில அதிகாரிகளைப் போட்டு உடனடியாக ரிக்கார்டுகளை யெல்லாம் கைப்பற்றி வாருங்கள் என்று சொன்னார். ஆனால் சொன்னது சொன்னதுதான் என்ற நிலையில் உள்ளதே தவிர, தவறுகளுக்கு உறுதியான நடவடிக்கை இன்றையதினம் எடுக்க வில்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு காலத்திலே நம்முடைய ஊராட்சி மன்றங்கள் எல்லாம் உத்தமத் தலைவர்களால் உருவாக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. அந்த இடத்திலே இன்றைக்கு உலக மகா திருடர்கள் எல்லாம் உட்புகுந்துகொண்டு மிகப்பெரும் தொல்லை களை அளித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு படத்திலே பாடினார்கள். "தவறு செய்தால் அதைத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்" என்று பாடி இருக்கிறார்கள். அதை எல்லாம் நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தத் தவறுகளைத் தெரிந்தே செய்தவர்களை விடக்கூடாது. பி.டி.ஓ. ஆக இருந் தாலும் சரி, மானேஜராக இருந்தாலும் சரி, கிளார்க்காக இருந் தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே மாண்புமிகு காங்கிரஸ்கட்சி உறுப்பினர் திரு. ஆனந்த கிருஷ்ணா அவர்கள் பஞ்சாயத்தின் மூலம் ஒரு





தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஊராட்சி மன்றத்தின் மூலம் டி.வி. நாங்கள் வாங்கி வைத்துக்கொள் கிறோம் என்று சொல்லி ஒன்றரை ஆண்டுகள் ஆகியும் அனுமதி கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். உடனடியாக டி.வி. வழங்கிட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே நம்முடைய காட்டுமன்னார்கோவில் சட்ட மன்ற உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் 15 கிராமங் களுக்கு சுற்றுப்பயணம் போக திட்டமிட்டுள்ளேன்; நீங்கள் உடன் வாருங்கள் என்று ஒரு வேண்டுகோளை பி.டி.ஓ. விடம் சொல்லியிருக்கிறார். நீங்கள் கூப்பிட்டால் நான் வரவேண்டுமா என்று ஆணவத்தோடு சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு, உடனடி யாக நல்ல தீர்வுகளைக் காணவேண்டுமென்று கேட்டு, விடைபெறு கிறேன், வணக்கம்.

**திரு. மு. சின்னக்குழந்தை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கை எண் 28-ஐ வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இந்தியா போன்ற ஒரு ஜனநாயக நாட்டில் ஆணிவேர் போன்ற உள்ளாட்சித் துறையின் மூலம்தான் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களை எல்லாத் துறைகளிலும் முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். அந்த அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர் களின் நல்லாட்சியில் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு நல்ல முன்னேற்றங்களை தமிழ்நாடு அடைந்துள்ளது. குறிப்பாக 1981 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரையில் தமிழ்நாட்டில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் இருக்கிற 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் 98 நகராட்சிகளிலும் பல கோடி ரூபாய் செலவு செய்து பள்ளிக்கூடங்கள், சமுதாயக் கூடங்கள், ரோடு வசதிகள், ஊராட்சி மன்றக் கட்டடங்கள், கல்வெர்ட்டுகள், இணைப்புச் சாலைகள் போன்ற அத்தியாவசியப் பணிகள்

[திரு. மு. சின்னக்குழந்தை] [1987 ஏப்ரல் 28

செய்து முடிக்கப்பட்டுள்ளன. ஆகவே, தன்னிறைவுத் திட்டம்
தமிழ்நாட்டிற்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். 1986—87 ஆம்
ஆண்டு தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பள்ளிக்
கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள், சத்துணவுக் கூடங்கள்,
சாலை மேம்பாட்டுத் திட்டங்கள், கல்வெர்ட்டுகள், ஆதிதிரா
விடர் காலனி குடியிருப்பு வீடுகள், செடி வளர்ப்புத் திட்டங்கள்
போன்றவை நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

எனது தொகுதியான ஆரணி தொகுதிக்கு மட்டும் 1986—87
ஆம் ஆண்டில் சுமார் 13 இலட்சம் ரூபாயும், 11 மெட்ரிக் டன்
அரிசியும், 115 மெட்ரிக் டன் கோதுமையும் கொடுக்கப்பட்டு
அனைத்தும் செலவிடப்பட்டுள்ளன.

அதைப்போல் மத்திய அரசு முழுத் தொகையும் மானியமாகக்
கொடுக்கும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்
தின் கீழ் ஆரணி தொகுதிக்கு 90 இலட்சம் ரூபாயும், 120 மெட்ரிக்
டன் அரிசியும், 130 மெட்ரிக் டன் கோதுமையும் கொடுக்கப்பட்
டுள்ளது. ஆதிதிராவிடர் காலனி குடியிருப்பு வீடுகள், செடி
வளர்ப்புத் திட்டம், பருவ காலம் தவறிய திட்டத்தில் சிறு
பாசன ஏரிகள், தூர் எடுத்தல் மற்றும் ஏரிக்கரைகளைப் பலப்
படுத்துதல், ஆதிதிராவிடர் காலனி சாலைகளை மேம்படுத்துதல்
போன்ற பணிகள் நல்லமுறையில் தமிழ்நாடு முழுவதும் செயல்
படுத்தப்பட்டு வருகின்றன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்
சாண எரிவாயுத் திட்டத்திற்காக 30 கோடி ரூபாய் மானியம்
கொடுக்க அரசு குறியீடு நிர்ணயித்திருப்பதை மனமார பாராட்டு
கிறேன்.

(பிற்பகல் 1-00)

வடாற்காடு மாவட்டம் ஆரணி தொகுதியிலுள்ள சத்திய
விஜயநகரம் ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையம் நல்ல முறையில்
செயல்பட அரசு அனைத்து உதவிகளையும் செய்து வருவதை
நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

ஆரணி நகராட்சியை முதல் நிலை நகராட்சியாக மாற்று
வதற்கு அரசாங்கம் உதவி செய்திட வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 28] [திரு. மு. சின்னக்குழந்தை]

ஆரணி நகராட்சிக்கு ஐ.யூ.டி.பி., திட்டத்தின் மூலம் புதிதாக
பேருந்து நிலையம் மற்றும் புதிய காய்கறி மார்க்கெட் கடைகளை
யும் கட்டிக் கொடுத்த புரட்சித்தலைவர் அரசை நான் இந்த
நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். புதிதாக ஏற்பட்
டுள்ள இடங்களில் இணைப்புச்சாலை போடுவதற்கும், கல்
வெர்ட்டு கட்டுவதற்கும் குடிநீர் வசதியை ஏற்படுத்துவதற்கும்
நிதி ஒதுக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த பல ஆண்டுகளாக உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளி
களைப் பழுதுபார்ப்பதற்கு போதிய நிதிவசதி இல்லாத காரணத்
தால் என்.ஆர்.இ.பி., திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கி அந்தப்
பள்ளிகளைச் சீரமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன். கிராமங்களில் உள்ள பள்ளிகளுக்குப் போதுமான
மேஜை, நாற்காலி, பலகை போன்றவற்றை வாங்கிக் கொடுக்க
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணி நகராட்சி சார்பாக ஒரு உயர்நிலைப்பள்ளி அமைத்துந்
தர அரசு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
ஆரணி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் தற்காலிக
மாக நடைபெற்றுவரும் மாட்டுச்சந்தையை சுகாதார வசதி கருதி
வேறிடத்திற்கு மாற்றிக்கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

ஆரணியின் மத்தியில் இருக்கும் பல ஏக்கர் விஸ்தீரணமுள்ள
பூக்குட்டையை தூர்த்து அங்கு—வடாற்காடு மாவட்டம் இரண்
டாகப் பிரிகிறபோது ஆரணி கோட்டம் ஏற்படுகிற வாய்ப்பு
இருக்கிறது.—அந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசு முன்
வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணி நகராட்சி சார்பாக ஒரு பயணியர் விடுதி கட்டுவதற்கு
ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன்பாக அடிக்கல் நாட்டப்
பட்டு இன்னும் அது அப்படியே கிடப்பில் உள்ளது. அதை
உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசு முன்வரவேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்கிறேன். ஆரணி நகராட்சி சார்பாக ஒரு
திரையரங்கு கட்டுவதற்கு அரசு முன்வரவேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. சின்னக்குழந்தை] [1987 ஏப்ரல் 28

ஆரணி நகராட்சிக்கு உட்பட்ட சார்பனாப்பேட்டை ஆரம்பப் பள்ளி, சைதாப்பேட்டை அனந்தபுரம் ஆரம்பப்பள்ளி, சாமி ஐயர் தெரு நடுநிலைப்பள்ளி ஆகிய இவை அனைத்தும் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றுக்கு உரிய கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்க அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணிபாளையம் பகுதி, அருணகிரிசத்திரம் பகுதி, கண்ணன் காலனி, ராமகிருஷ்ணாபேட்டை ஆகிய இடங்களுக்குப் போதிய குடிநீர் வசதி இல்லை. அதனால் மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகிறார்கள். நகராட்சிக்கு பல ஆண்டுகளாகக் கோரிக்கை கொடுத்து அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. எனவே மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆரணி தொகுதியில் உள்ள ஊராட்சிகளைப் பிரித்து தனித் தனி ஊராட்சி மன்றங்களாக அறிவிக்க வேண்டுமென்று நான் கோருகிறேன். கொல்லுகுளம் தோப்பு, கிட்டன்குடிசை, குருகுலம், மூலத்தாங்கல் ஆகிய பகுதிகளை ஒன்றாக்கி கொல்லுகுளம் தோப்பு ஊராட்சி மன்றத்தையும், மொராப்பந்தாங்கல் ஊராட்சியிலிருந்து ஒண்டிகுடிசையைப் பிரித்து ஒண்டிக்குடிசை ஊராட்சி மன்றத்தையும், பனையூர் ஊராட்சியைப் பிரித்து வடக்குமேடு ஊராட்சி மன்றத்தையும், வின்னமங்கலத்திலிருந்து நடுப்பட்டைப் பிரித்து நடுப்பட்டு ஊராட்சி மன்றத்தையும் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஐ.யூ.டி.பி., திட்டத்தின் மூலம் ஆரணி நகராட்சிக்கு 201 புதிய கடைகளை அரசாங்கம் கட்டிக் கொடுத்தது. நடந்து முடிந்த நகராட்சிமன்றத் தேர்தலில் அந்த நகராட்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் தலைவராகப் பொறுப் பேற்று இருக்கிறார். ஒப்பந்தப்படி 150 கடைகள் போக மீதமுள்ள 51 கடைகளைப் பொறுத்தவரையில், நகராட்சியின் நிர்வாக இயக்குநர் அவர்கள் 23—1—1987 அன்று ஏலம் விட உத்தரவிட்டும் 3—4—1987 அன்று நகரமன்ற உறுப்பினர்களின்



1987 ஏப்ரல் 28] [திரு. மு. சின்னக்குழந்தை]

அவசரக் கூட்டத்தைக் கூட்டி, நகராட்சி ஆணையர் தீர்மானம் போடுகிறபோது நடைபாதை வியாபாரிகளுக்குக் கடைகள் கொடுக்கப்படவில்லை என்று காரணம் கூறி எனவே இந்த 51 கடைகளில் 24 கடைகளைக் கொடுக்கிறோம் என்று பொய்யான தீர்மானம் போட்டு பினாமி பெயரில் நகரமன்ற உறுப்பினர் களுக்குக் கொடுப்பதற்காகத் திட்டமிட்டுச் செயல்படுகிறார்கள். இதுகுறித்து நாங்கள் அரசாங்கத்திற்குப் புகார் கொடுத்தோம். அந்தக் கடைகளை உடனடியாக ஏலம் விட வேண்டுமென்று நிர்வாக இயக்குநர் தகவல் அனுப்பியும் இன்னும் ஏலம் விடப் படாமல் இருக்கிறது. அவற்றை உடனடியாக ஏலம் விட அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி., போன்ற திட்டங்களை நிறைவேற்ற ஒன்றியத்தின் தீர்மானம் வேண்டுமென்று சொல்லி ஒன்றியத் தலைவர்கள் தீர்மானம் கொடுக்கிறபோது அவர்களுக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பாகுபாடு காட்டி, வேண்டியவர்களுக்கு வீடுகள் கொடுக்கின்ற ஒரு திட்டத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட தீர்மானம் எல்லாம் இல்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவோ அல்லது நாட்கோ மூலமாகவோ அந்த வீடுகளைக் கட்டுவதற்கு ஒரு குழுவை அமைத்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-05 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

[1987 ஏப்ரல் 28

மாலை 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

**6. வரவு-செலவுத் திட்டம், 1987-88—வாக்கெடுப்பு—தொடர்ச்சி.**
**கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்—தொடர்ச்சி.**

திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய உணவு மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களின் மீதும் நகராட்சி நலன்களைப் பற்றிய 28-வது மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 231 கோடிக்குக் கொண்டு வரப்பட்ட கோரிக்கையின் மீதும் நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை முன்வைக்க விழைகின்றேன்.

இன்று நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர், கிராம மக்கள் மீது மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றத்தில், அவர்களுடைய வளர்ச்சியில் மிகவும் அக்கறை செலுத்தி, நல்ல முறையில் செயல்பட்டு கொண்டிருக்கிறார். கிராமம் முன்னேறினால்தான் இந்த நாடு செழிக்கும் என்ற சீரிய நோக்கோடு நல்ல பல திட்டங்கள் கிராமப்புற மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்ற நோக்கோடு இட் பொறாது நம்முடைய தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிறார்கள், சமுதாய வளர்ச்சியில் அக்கறையும் கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது கிராமத்தில் இருக்கிற மக்கள் எல்லாம் இந்தியாவில் நடக்கின்ற, உலகத்தில் நடக்கின்ற செய்திகளை எல்லாம் உடனுக்குடன் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கோடு ஒவ்வொரு ஊராட்சிக்கும் டி.வி. வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு ஊராட்சிக்கு ஒன்றுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சியை உள்ளடக்கிய கிராமங்களுக்கும் அவற்றை விரிவுபடுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கும் தனியாக டி.வி. வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 28] [திரு. கே. முத்துவேல்]

ஊராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற டி.வி.க்கள் அனைத்தும் ஊராட்சி மன்றத் தலைவர்களுடைய வீட்டிலே இருக்கிற காரணத்தால், பெரும்பாலான மக்கள் அங்கே சென்று டி.வி. பார்க்க முடியாத சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, கிராமங்களில் எல்லாம் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடம் கட்டித் தர வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஊராட்சிகளில் பணி புரிகின்ற பகுதிநேர எழுத்தர்கள் எல்லாம் மாதம் ரூ 50, ரூ. 60 என்று சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படியில்லாமல், 4, 5 பஞ்சாயத்துக்களுக்கு ஒரு எழுத்தர் என்று நியமனம் செய்து, அவர்களை எல்லாம் முழு நேர எழுத்தர்களாக ஆக்கித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கிராமப் புறங்களில் துப்புரவுத் தொழிலாளர் ரூ. 50, ரூ. 60 சம்பளத்தில் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் முழு நேர ஊழியர்களாக்கி, அதிகமான சம்பளம் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தற்சமயம் ஊராட்சி மன்றங்களில் பணிபுரிகின்ற ஆசிரியர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கிவிட்ட காரணத்தாலும் அவர்களுக்கென்று தனியாகக் கல்வி இலாகா நிர்வகிக்கிற காரணத்தாலும் தற்சமயம் பொது மக்களால் தேர்வு செய்யப்பட்டிருக்கிற ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஆசிரியர்கள் தம்மிடத்தில் இல்லையென்ற காரணத்தாலும், அங்கே இருக்கிற பள்ளிகளை மராமத்து செய்யாமல் இருப்பதால், அவை மிகவும் மோசமான நிலைமையில் இருக்கின்றன. ஒருசில பள்ளிகள் எல்லாம் இடியும் நிலையில் இருக்கின்றன. அரசுக்குக் கெட்ட பெயர் உண்டாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, அவையெல்லாம் இடியட்டும் என்று அந்தப் பள்ளிகள் மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் கூட அரியமங்கலம், உடையார்பாளையம் போன்ற இடங்களில் உள்ள பள்ளிக்கூடங்கள் மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பரிசீலிக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்

[திரு கே. முத்துவேல்] [1987 ஏப்ரல் 28

அதோடு மட்டுமல்லாமல், ஒன்றியத்தில் பணி புரிகின்ற எல்லா
எழுத்தர்களும் அரசு ஊழியர்களாக ஆக்கப்படுகிறார்கள். அதே
நேரத்திலே, அங்கே பணி புரிகிற கடைநிலை எழுத்தர்களும்
கடைநிலை ஊழியர்களும் இன்னும் ஊராட்சி மன்றப் பணியாளர்
களாகப் பணிபுரிகின்ற காரணத்தால் அவர்களையும் அரசு
ஊழியர்களாக்கித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தற்சமயம் ஐ.ஆர்.டி.பி. போன்றவைகள் மூலமாக கடன்களை
வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அதற்கு ஒரு கமிட்டியை
அமைத்து இருக்கிறார்கள், டாஸ்க் போர்ஸ் கமிட்டி என்று இந்த
டாஸ்க் போர்ஸ் கமிட்டியுடைய தலைவராக ஊராட்சி ஒன்றிய
பெருந் தலைவர் இருக்கின்ற காரணத்தால், சட்டமன்ற உறுப்
பினர்களாகிய நாங்கள் எல்லாம் சட்டமன்றக் கூட்டத்திலே
கலந்து கொள்வதற்காக இங்கே வருகின்ற நேரத்திலே, அந்த
டாஸ்ட போர்ஸ் கமிட்டியினுடைய கூட்டத்தைக் கூட்டி, கிராமங்
களையும், கடன் பெறுவோர்களையும் தேர்வு செய்துகொண்டு
இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினரர்களாக இருக்கிற கார
ணத்தால் உறுப்பினர்களிடத்திலே தேதி கூட குறிப்பிடப்படாமல்,
அவர்களாக நினைத்த நேரத்தில், நினைத்த நாட்களில் அந்தக்
கூட்டத்தைக் கூட்டி டாஸ்க் போர்ஸ் கமிட்டி மூலம் தேர்வு செய்து
கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய கமுதி ஊராட்சி ஒன்றியப் பகுதியிலே சாலை
வசதிகள் இல்லாத கிராமங்கள் அதிகமாக இருக்கின்றன. குறிப்
பாகச் சொல்ல வேண்டுமானால், கமுதி ஒன்றியத்தில், மூலைக்
கரைப்பட்டி, சாமிசெய்புரம் என்கிற டவுன்பட்டி, வேடங்குட்டம்,
கருத்துவெந்தான் போன்ற கிராமங்களுக்கு சாலை வசதியே கிடை
யாது. எனவே இவற்றை எல்லாம் கவனித்து, அங்கே புதிதாக
சாலை வசதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த
நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், சில ஆண்டுகளுக்கு முன்பு, நம்
முடைய தாய் உள்ளம் கொண்ட, புரட்சித் தலைவர் அவர்கள்
தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் பல வேலைகளை நடத்தி,
செம்மையாக முடித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் மூலம்
செய்து முடிக்கப்பட்ட வேலைகளுக்கு மராமத்து செய்யமுடியாமல்
இன்னும் நிலைமை சீரழிந்து கொண்டிருக்கிற சூழ்நிலை ஏற்பட்டு



1987 ஏப்ரல் 28] [திரு. கே. முத்துவேல்]

இருக்கிறது. எனவே, அதற்காக நிதி ஒதுக்கீடு செய்து, அந்தச்
சாலைகளை எல்லாம் சீர்திருத்தம் செய்து தரவேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

கமுதி ஊராட்சி ஒன்றியம் மிகப் பெரிய ஊராட்சி ஒன்றிய
மாக இருக்கிறது. அங்கே 57 ஊராட்சிகள் இருப்பதன் காரணத்
தால், சிறிய ஒன்றியங்களுக்கு கொடுக்கப்படுகிற நிதியைப் போல,
பெரிய ஒன்றியங்களுக்கும் நிதியை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்
கள். ஆகவே அதனுடைய அளவைக் கருதியாவது, கமுதி, முது
குளத்தூர், கடலாடி போன்ற பெரிய ஒன்றியங்களை இரண்டாகப்
பிரிக்க வேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்போடு இந்த
நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து, தமிழகத்திலே இப்போது 645 பேரூராட்சிகள் இருக்
கின்றன. அந்த பேரூராட்சிகளுக்கு எல்லாம் நிதி நிலைமை
மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. எப்படி கன்னியா
குமரி மாவட்டத்திலும் திருநெல்வேலியில் உள்ள செங்கோட்டை
தாலுக்காவிலே உள்ள பேரூராட்சி மன்றங்களுக்கு எல்லாம்
வீட்டு வரி வசூலுக்கு சமமாக அரசு மானியம் வழங்குகிறதோ,
அதைப்போல், எல்லா பேரூராட்சிகளுக்கும் இந்த நிதியை வழங்க
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி கொடுக்க
இயலாவிட்டால் கூட, நிதி நிலைமை மோசமாக இருக்கிற பேரூ
ராட்சிகளுக்கு மட்டுமாவது இந்த நிதியை கொடுக்க வேண்டும்
என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்
டிருக்கிறேன்.

கமுதி பேரூராட்சி மிகவும் பெரிய பேரூராட்சியாகும். அங்கே
துப்புரவுத் தொழிலாளர்களுக்கு 6, 7 மாதங்கள்கூட
சம்பளம் கொடுக்காத நிலைமை இருக்கிறது. ஆகவே அதற்கு
பேரூராட்சி நிதியைக் கொடுத்து, அவர்களுக்கு மாதாமாதம் சம்ப
ளத்தை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள், மின்சாரம்
இல்லாத ஊர்களே, கிராமங்களே இருக்கக்கூடாது என்று ஒரு
கொள்கையை செய்து, எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு
கொடுத்துக்கொண்டு இருக்கிற இந்த நேரத்தில், என்னுடைய

[திருமதி பி. லட்சுமி] [1987 எப்ரல் 28

பெரும்பான்மையான உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் முறைகேடாக நடந்து வருகிறார்கள். பொது மக்கள் குறைகளைச் சொல்லும்போது அரசின் மீதும், சட்டமன்ற உறுப்பினர்கள் மீதும் பழியைப் போடும் உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் அரசின் மூலம் பணம் ஒதுக்கும்போது கூட சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்யும் இடங்களில் வீடுகள் கட்டவோ, ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கவோ, பாதைகள் போடவோ, வங்கிக் கடன் உதவிகளை வழங்கவோ கூறினால் அப்படிப்பட்ட நியாயமான கோரிக்கைகளைக்கூட உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் புறக்கணித்து வருகின்றார்கள். மேலும் தங்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கும், அவர்களது கட்சியிலுள்ள உறுப்பினர்கள் இருக்கும் இடங்களில் மட்டும் அந்தப் பணிகளைச் செய்யக் கோருகிறார்கள். ஆகவே, காரியம் நடக்காதபோது எங்கள்மீது பழி போடுவதும், காரியங்கள் நடக்கும்போது அனைத்தும் தங்களால்தான் என்றும் செயல்படும் போக்கு எதிர்க் கட்சிக்காரர்களிடம் தொடர்ந்து இருந்து வருகிறது. ஆகவே இந்த நிலையைப் போக்கி அரசுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவ்வப்போது நேரும் அவப் பெயரைப் போக்க வேண்டுமானால் அரசு உடனடியாக ஒரு உத்தரவினைப் போட்டு, மக்களின் பிரதிநிதிகளாகவும், அரசின் பிரதிநிதிகளாகவும் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளை கட்டாயம் உள்ளாட்சி மன்றங்கள் நிறைவேற்ற வேண்டுமென்றோ அல்லது அரசின் மூலம் ஒதுக்கீடுகள் உள்ளாட்சி மன்றங்களுக்குச் செய்யும்போது இவற்றில் சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளின்படியே செய்யப்பட வேண்டுமென்றோ ஒரு ஆணையை உள்ளாட்சி மன்றங்களுக்குப் பிறப்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு ஒரு தீர்வைக் காண ஆவன செய்யுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி அவினாசி மழையின்மையால் கடுமையான வறட்சிக்கு ஆட்பட்டுள்ளது. அரசின் சார்பில் அவ்வப்போது பெரும் நிதியை ஒதுக்கினாலும், கிணறுகளை அடிவெட்டு வெட்டி, ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்தாலும் சுமார் 400 அடி வரை ஆழமாகப் போட்டாலும் நிலத்தடி நீர் இல்லாததால் தண்ணீர் பொய்த்துப் போய் விடுகின்றது. இதனால் தற்போது



1987 எப்ரல் 28] [திருமதி பி. லட்சுமி]

மேல் பவானி ஆற்றில் இருந்து மேட்டுப்பாளையம்—டு—திருப்பூர் வழித்தட கிராமங்களுக்குண்டான குடிதண்ணீர் திட்டத்திலே அல்லது மேட்டுப்பாளையம்—டு—திருப்பூர் இரண்டாம் குடிநீர்த் திட்டத்திலோ அவினாசி தொகுதியில் உள்ள 55 ஊராட்சிகளையும் இணைத்து ஆற்று நீரை வழங்கினால் என் தொகுதியின் தண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்க நிரந்தரத் தீர்வாக இருக்கும் என்பதால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றி உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியின் கடுமையை பரிசீலனை செய்து அவினாசி தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து விவசாயக் கடன்களையும், நிலத் தீர்வை வசூலிப்பதையும் சிறிது ஒத்திவைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் உள்ளாட்சிப் பொறுப்பில் உள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் குழந்தைகள் சத்துணவுத் திட்ட மையங்களில் பணி புரியும் சத்துணவு அமைப்பாளர்கள், அரசு அதிகாரிகள், பொது நலப் பணிகளில் ஈடுபட்டு வருபவர்களை இணைத்து ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கண்காணிப்புக் குழுவை அமைக்குமாறு வேண்டுகிறேன். குழந்தைகள் சத்துணவு மையங்களில் பணிபுரியும் அமைப்பாளர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்குமாறு வேண்டுகிறேன். மேலும் குழந்தைகள் நலச் சத்துணவு மையங்களில் 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் பயின்று வருகிறார்கள். 1-வது வகுப்பு முதல் 8-வது வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு சீருடை வழங்குவதைப் போல 2 வயது முதல 5 வயது வரை படிக்கும் குழந்தைகளுக்கும் அந்தச் சீருடை வழங்கும் திட்டத்தை நீட்டிக்க வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். நானும் சத்துணவு மையத்தில் பணியாற்றியவள் என்பதால் அந்த 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் 1-வது வகுப்பு பயிலும் குழந்தைகள் சீருடை அணிந்து போவதைப் பார்த்து தங்களுக்கும் அதைப்போல சீருடை கொடுக்க மாட்டார்களா என்று கேட்கிறார்கள். அந்தச் சிறு வயதிலேயே ஆர்வ குழந்தைகள் இந்தச் சீருடை பெறுவதிலே மிக்க இருந்து தாங்களும் சீருடை அணிந்து கொள்ள வேண்டும் என்று கேட்கிறார்கள். அதையும் வழங்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 28

இங்கே எனக்கு முன்னால் பேசிய ஆளுகின்ற தரப்பிலிருந்தும் சரி அல்லது எதிர்த்தரப்பிலே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்களும் சரி பல்வேறு நிறைவேற்றப்படாமல், தேங்கி நிற்கின்ற பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். குறைகள் என்பது—எதிர்க்கட்சித் தரப்பிலேயிருந்து மட்டுமல்ல, ஆளுகின்ற கட்சித் தரப்பிலிருந்தும், செய்யப்படாத பல்வேறு விஷயங்கள் சொல்லப்பட்டன. நான் இங்கே முக்கியமான ஒரு அச்சத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். கொள்கை விளக்கக் குறிப்பின் 21-வது பக்கத்திலே "சென்னை மாநகராட்சியின் 300-வது ஆண்டு நிறைவு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் மாநகர மக்களுக்கு இதர பணிகளை மேற்கொள்ளும் ஏனைய அரசுத் துறை நிறுவனங்களுடன் இணைந்து மாநகராட்சி பல நீண்ட கால அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்த உள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளதோடு, 'இதற்கான மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 300-வது ஆண்டு விழா கொண்டாடுவதில் ஒன்றும் தவறில்லை. ஆனால் 300-வது ஆண்டு விழா கொண்டாடுவதின் பெயரால் நீண்ட காலமாக மக்களுக்குச் செய்யப்படாமலே இருக்கக்கூடிய பணிகளைச் செய்வதற்கு ஒதுக்குகிற பணத்தை அந்தத் திருவிழா கொண்டாடுவதற்கு ஒதுக்கிக் கொள்வது என்பது இன்றைய தேவையைப் பூர்த்தியாக்க உதவாது என்பதை அரசுக்குச் சுட்டிக்காட்டுவதோடு, எளிய தோற்றத்திலே தன்னுடைய வாழ்நாள் முழுவதும் வாழ்ந்த அண்ணாவின் பெயரால் கட்சி நடக்கின்ற, அண்ணாவின் கட்சி ஆட்சியில் இருக்கிற இந்த நேரத்தில் எளிய முறையில் அந்தத் திருவிழா நடத்தப்படவேண்டுமே தவிர, ஆரவாரமாகவும், ஆர்ப்பாட்டமாகவும் இலட்சக்கணக்கில், இந்தத் திருவிழாவிற்கு செலவழிப்பது என்ற நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்ற அச்சத்தை நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 98 நகராட்சிகள், 8 நகரியங்கள் மற்றும் 12,616 ஊராட்சிகள் 654 பேரூராட்சிகளிலே எவ்வளவு பிரச்சினைகள் இன்றளவில் தீர்க்கப்படாமல் இருக்கின்றன என்பதற்கு விரிவாகப் பட்டியல் போட்டு, இங்கே சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற கொள்கைக் குறிப்பிலேயே அது மிகத் தெளி



1987 ஏப்ரல் 28] [திரு. கே. சுப்பராயன்]

வாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இங்கே அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கின்ற கொள்கைக் குறிப்பிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், மக்கட் தொகை கடந்த 20 ஆண்டுகள் காலத்தில் அதிகமாக வளர்ச்சியடைந்து, மக்கட் தொகைப் பெருக்கத்தின் மூலம் அவர்களுக்குத் தேவைகள் உருவாக்கப்பட்டு, அவற்றை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அவற்றை நிறைவேற்ற வேண்டுமென்கின்ற உணர்வு அரசுக்கு இருந்தாலுங்கூட, அவற்றை நிறைவேற்றுவதற்குரிய நிதி இல்லை என்கிற வெற்றிடத்தை நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறது. நான் இங்கே குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புவது, மாநிலத்தை ஆளுகின்ற பொறுப்பை மேற்கொண்டிருக்கிற ஒரு அரசு நிதிப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுகின்ற கடமையைத் தட்டிக் கழிப்பது ஒரு நல்ல முன் உதாரணம் அல்ல. நீங்கள் மக்களிடம் வாக்குகளைக் கேட்கின்றபோது நிதிப் பற்றாக்குறை தொடர்ந்து இருக்கும் என்பது தெரிந்த ஒன்றுதான். நிதிப் பற்றாக்குறை உள்ள ஒரு மாநிலத்தை ஆளுகின்ற பொறுப்பை மேற்கொண்டிருக்கின்ற ஒரு ஆட்சி நிதிப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதிலேயிருந்து நழுவி ஓடுவதன் மூலம் மக்களிடம் வரி வசூலிக்கின்ற தார்மீக உரிமையை நடைமுறையில் இழக்கின்ற நிலைதான் ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வரி வசூலிப்பது என்பதே மக்களுக்கு வசதி செய்யத்தான். வரியை வசூலித்துக்கொண்டு வசதியைச் செய்யாமல் இருப்பது சௌகரியமான ஜனநாயகம். அந்த சௌகரியமான ஜனநாயகம் இன்றைக்கு நடப்பில் நிலவுவதால் மக்களின் குறைகளைக் கண்டு கொள்ளாத போக்கை தயவு செய்து கடைப்பிடிக்கக்கூடாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? 1961-லே நகரங்களிலே 45 இலட்சம் பேர்கள் என்றால் இன்றைக்கு மேலும் ஒரு மடங்கு பெருகிப் போய்விட்டது மக்கள் தொகை. தொடர்ந்து பெருகியிருக்கின்ற இன்றைய நிலையில்—அமைச்சர் அவர்கள் இறுதியில் பதில் அளிக்கும்போது கூறுவார்கள் என்று நினைக்கின்றேன். நான் தொடர்ந்து இந்தப் பேரவையில் அங்கம் பெற்ற தினத்திலிருந்து வலியுறுத்தி வருகிறேன்—நாடு முழுவதும் நிலவிக்கொண்டிருக்கின்ற நகராட்சி சுகாதார பணியாளர்களை எடுத்துக்கொள்வதற்கு இன்றளவில் என் தடை போட்டுக் கொண்

டிருக்கிறீர்கள்? பொதுச் சுகாதாரமும், நகர அல்லது இன்ன பிற கிராமப்புறச் சுகாதாரமும் முற்றிலும் பாதிக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் துப்புறவுப் பணியாளர்கள் குறைவாக இருப்பதனால் தான். குறைவாக இருக்கின்ற துப்புறவுப் பணியாளர்களை அதிகப்படுத்திக் கொள்ள உள்ளாட்சி அமைப்புகள் தீர்மானம் போட்டாலும் இங்கே அனுமதிப்பதில்லை. அனுமதித்தால் அவர்களுக்கு சம்பளம் கொடுக்க பணம் இருக்காது என்று சொல்லி விட்டுப் போவது எப்படி பொறுப்பாகும்? எப்படி சரியான முன் உதாரணம் ஆகும்? பணம் இல்லையென்றால் வருவாய்க்கு உரிய வாயில்கள் எவை என்பதை உருவாக்குகின்ற தார்மீகப் பொறுப்பு உங்களுக்கு உண்டா, இல்லையா? வருவாய் இல்லை, ஆகவே சாக்கடை கட்ட மாட்டோம். வருவாய் இல்லை, ஆகவே லைட் போட மாட்டோம். வருவாய் இல்லை, ஆகவே ரோடு போட மாட்டோம் என்றால் அமைச்சர் அவர்களே. கடைசியில் பதில் அளியுங்கள். நீங்கள் சாக்கடை போடவில்லை, நீங்கள் விளக்கு போடவில்லை, நீங்கள் சாலை போடவில்லை, ஆகவே நாங்கள் வரி கட்டத் தயாராக இல்லை என்று பொதுமக்கள் அரசை நோக்கிச் சொல்வதற்கு நீங்களே தூண்டிவிடுகிறீர்களா? நீங்கள் வசதி செய்யவில்லை என்றால் நான் வரி கொடுக்க மாட்டேன் என்று சொல்லுகின்ற உரிமை எனக்கு உண்டா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்ன பிரச்சினை இருக்கிறது? ஆளுகின்ற கட்சி நண்பர்கள் அமைதியாக, மிக மெதுவான முறையில் குறைகளை எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் வெகு வேகமான முறையில் எடுத்துச் சொல்லுகின்ற வாய்ப்பு இருக்கின்றது என்பதால் சொல்லுகின்றோம். குடிநீர்ப் பிரச்சினை தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் இருக்கிறது. கழிவுநீர்ப் பிரச்சினை எல்லா இடங்களிலும் இருக்கிறது. சாக்கடை வசதி இல்லை. விளக்கு வசதி இல்லை என்ற நிலை. பொதுச் சுகாதாரம் இல்லை. ரோடு வசதி இல்லை. இந்தப் பிரச்சினைகள் தீருவதற்கும்—நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்—உள்ளாட்சி அமைப்புகள் தீர்மானம் போடுகின்றன. ஆனால், அவற்றைச் செயல்படுத்துவதில் தாமதம் ஆகிறது. தீர்மானம் போடுவது எதற்காக? செயல்படுத்துவதற்காக. செயல்படுத்த வேண்டுமானால் தீர்மானம் போட வேண்டும். ஆனால் நீங்கள் எழுதி வைத்துக்கொள்ளுங்கள், ஆய்வு செய்யுங்கள்.





லோக்கல் பாடீஸ் நூற்றுக்கணக்கான தீர்மானங்களைப் போட்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான தீர்மானங்களைப் போட்டு நடைமுறைப்படுத்த முடியாமல் தீர்மானமே ஒரு பெரிய கத்தையாகக் குவிந்து கிடக்கின்றது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். திருப்பூர் நகராட்சியில் மட்டும் கிட்டத்தட்ட ஆயிரம் தீர்மானங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஆயிரம் தீர்மானங்கள் போடப்பட்டு ஒன்று கூட நிறைவேற்றப்படவில்லை. தீர்மானம் போடுவது செயல்படுத்துவதற்காகவா? போட்டு வைத்துக்கொண்டு எவ்வளவு உயரம் அடுக்கலாம் என்று அழகு பார்த்துக் கொண்டிருப்பதற்காகவா? அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். அமைச்சர் அவர்கள் அந்தத் துறைக்கு பொறுப்பு ஏற்றிருக்கின்றார்கள். செயல்படுத்துவதற்காகப் போடுகின்ற தீர்மானம் செயல்படாமல் தேங்குகிறது. இவற்றைச் செயல்படுத்த, காரியம் ஆற்ற ஒரு நுட்ப வழியைச் சொல்லுகின்ற கடமை இந்த அமைச்சர் அவைக்கு உண்டா இல்லையா? நான் இங்கே நேருக்கு நேராக கேட்க விரும்புகிறேன். தீர்மானம் போட்டு நடக்காததற்குக் காரணம் என்னவென்றால் கீழிருந்து மேலே, மேலிருந்து மேலே, மேலேயிருந்து மேலே என்று போய் வருவதற்குள் காலம் முடிந்து விடுகிறது. எப்படி செயல்படுத்தப்படும்? மிக விரைவாக நிதி வழங்குவோம், மிக விரைவாக காரியம் ஆற்றுவோம், அதுதான் உங்கள் முன் உதாரணமான நடவடிக்கை என்று நீங்கள் அடிக்கடி தம்பட்டம் அடிக்கிறீர்கள். ஆனால் நடைமுறையில் என்ன நடக்கிறது? தீர்மானம் போட்டாலும் கூட அவற்றை நிறைவேற்ற வழி இல்லையென்றால், அவற்றை நிறைவேற்றுகின்ற வழியைச் சொல்ல வேண்டிய பொறுப்பு உங்கள் அமைச்சரவைக்கு உண்டு.

(மாலை 4-30)

ஆகவே, நூற்றுக்கணக்கான தீர்மானங்கள் நடைமுறையில் நிறைவேறவில்லை. மாநில சுயாட்சி—மத்திய அரசிடமிருந்து அதிக அதிகாரம் கோருவது நியாயம்தான். அதே நேரத்தில், கொஞ்சம் கீழிருந்து பார்க்க வேண்டும். கீழே நம்முடைய கால்களுக்கு இடையிலே சிக்கித் தவிக்கிற அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு கொஞ்சம் விடுதலை கொடுக்கலாம். விரைவாகப் பணியாற்றுவதற்கு அதிகமான சுதந்திரம் கொடுக்கலாம். அதிகாரம் கொடுக்கலாம். நிதியும் கொடுக்கலாம்.

நீங்கள் முன்னாலேயே ஒரு எச்சரிக்கை விட்டீர்கள். அபாயகர மான எச்சரிக்கை. கடந்த 15 தினங்களுக்கு முன் ஒரு எச்சரிக்கை விட்டீர்கள். மத்திய அரசிடமிருந்து மாநில அரசு கேட்டுக் கொள்வதைப் போல, உள்ளாட்சி அமைப்புகள் மாநில அரசிட மிருந்து கேட்டுப் பணம் பெற்றுக் காரியம் ஆற்றலாம் என்ற ஒரு அபாயச் சங்கை ஊதுகிறபோதே பல எதிர்க்கட்சி சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு நகராட்சித் தலைவர்களுக்கு நெஞ்சடைப்பு ஏற்பட்டுப் போய்விட்டது. ஏனென்றால், பல அபாயம் ஏற்படும் என்பதனாலேதான். இங்கே குறிப்பாக அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையிலும் அவர் மீது எனக்கு நம்பிக்கை உண்டு. மிகச் சிறப்பான நிர்வாகத் திறனும், ஆற்ற லும் படைத்த ஒரு அமைச்சர்தான். ஆனாலும்கூட * என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அடுத்து . . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பராயன் அவர்கள் மீதும் எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. அவர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி யில் இருக்கின்ற காரணத்தினாலேயே ஒரு சார்பாகப் பேசி விடு வாரா, பேசமாட்டார். அதுபோல்தான் நாங்களும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுப்பராயன் அந்தத் தாப்பிலிருந்து பேசும்போது ஸ்வீப்பிங்காகச் சொல்ல லாமா என்று சொன்னார்கள். இப்போது ஒரு இயக்கத்தையே மோசம் என்று சொல்கிறீர்கள். அது எப்படி சரியாக வரும்? நியாயம் சொல்லுங்கள். (குறுக்கீடு). தமிழ்நாடு பூராவும் தண்ணீர் இல்லை என்கின்றீர்கள். தமிழ்நாட்டிலே எந்த ஊரிலே யும் தண்ணீர் இல்லை என்று பேசினீர்கள். அது ஸ்வீப்பிங் இது அதை விட மோசமாக இருக்கிறதே, அதனால் அதைத் தவிர்த்துப் பேசுங்கள். (குறுக்கீடு).

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, சொல்வீர்கள் என்று எதிர்பார்த்தேன். . . . .

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொல்லாமல் இருக்க முடியாது. தவறு எங்கே நடந்தாலும் சுட்டிக்காட்ட வேண்டும், நீங்கள் சொன்னீர்கள். திரு. செங்கோட்டையன் சொன்னதை நீக்கினேன் அதேபோல்தான் நீங்கள் மட்டும் விதிவிலக்கு ஆக முடியாது. எனவே, அடுத்துப் பேசினால் நீக்க வேண்டியதாக வரும். இப்போதே நீக்க வேண்டும். ஆகவே ** என்ற அவர் சொன்ன அந்த ரிமார்க்ஸ்-ஐ நீக்குகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** நல்லது. நீக்கிக் கொள்வது நல்லதுதான். தவறில்லை. நீங்கள் நல்லதைத் தான் சொல்லி இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசும்போது ஒட்டுமொத்தமாக நீங்கள் எல்லாவற்றிலும் சகதி வாரி அடித்தால் சரியாக வராது. அதேபோல், இந்தத் தாப்பில் பேசினால் அனுமதிக்கவேண்டி வரும். அதைச் சொன்னால் வருத்தப்படு வீர்கள். (குறுக்கீடு)

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர் களே அங்கிருந்து பேசாமலேயே, 'பேசினால்' என்று சொன்னால் நீங்கள் பேசச் சொல்வது போல் ஆகிவிடாதா? . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சபையினுடைய நேரத்தைக் காப்பது எங்களுடைய கடமை. நீங்கள் இப்படிப் பேசினால் சபையினுடைய நேரம் 10 நிமிடம் போய்விடும். ஆகவே, அதை அட்வான்சாக முன்னாலேயே காப்பாற்றிக் கொள்வது எங்களுடைய கடமை உங்களை விட எங்களுக்கு நேரம் மிக முக்கியம்.

**திரு. கே. சுப்பராயன்:** மிக்க நன்றி, அடுத்து மிக முக்கியமான நண்பர்கள் விஷயம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் பேசுகிறபோது கூட எதிர்க்கட்சியிலே இருந்து வந்திருக் கழகம் அல்லது இன்ன பிற என்று குறிப்பிடுகிற கிறவர்கள் சரியாக நடந்து கொள்வதில்லை போது, என்னைப் பொறுத்தவரையிலும் எந்தத் தாப்பிலிருந்து வந்திருந்தாலும் சரி. அவர்கள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப் பதற்குப் பொறுப்பாக்கப்பட்டு இருக்கிறவர்கள். ஆகவே அவர்கள் அந்த அடிப்படையிலே செயல்படவேண்டும் என்பதிலே எனக்கு ஒன்றும் வித்தியாசம் இல்லை.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

நீங்கள் முன்னாலேயே ஒரு எச்சரிக்கை விட்டீர்கள். அபாயகரமான எச்சரிக்கை. கடந்த 15 தினங்களுக்கு முன் ஒரு எச்சரிக்கை விட்டீர்கள். மத்திய அரசிடமிருந்து மாநில அரசு கேட்டுக் கொள்வதைப் போல, உள்ளாட்சி அமைப்புகள் மாநில அரசிடமிருந்து கேட்டுப் பணம் பெற்றுக் காரியம் ஆற்றலாம் என்ற ஒரு அபாயச் சங்கை ஊதுகிறபோதே பல எதிர்க்கட்சி சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு நகராட்சித் தலைவர்களுக்கு நெஞ்சடைப்பு ஏற்பட்டுப் போய்விட்டது. ஏனென்றால், பல அபாயம் ஏற்படும் என்பதனாலேதான். இங்கே குறிப்பாக அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையிலும் அவர் மீது எனக்கு நம்பிக்கை உண்டு. மிகச் சிறப்பான நிர்வாகத் திறனும், ஆற்றலும் படைத்த ஒரு அமைச்சர்தான். ஆனாலும்கூட * என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அடுத்து . . . . (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பராயன் அவர்கள் மீதும் எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. அவர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்கின்ற காரணத்தினாலேயே ஒரு சார்பாகப் பேசி விடுவாரா, பேசமாட்டார். அதுபோல்தான் நாங்களும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சுப்பராயன் அந்தத் தரப்பிலிருந்து பேசும்போது ஸ்வீப்பிங்காகச் சொல்லலாமா என்று சொன்னார்கள். இப்போது ஒரு இயக்கத்தையே மோசம் என்று சொல்கிறீர்கள். அது எப்படி சரியாக வரும்? நியாயம் சொல்லுங்கள். (குறுக்கீடு). தமிழ்நாடு பூராவும் தண்ணீர் இல்லை என்கின்றீர்கள். தமிழ்நாட்டிலே எந்த ஊரிலேயும் தண்ணீர் இல்லை என்று பேசினீர்கள். அது இல்லையா? ஒரு கட்சியே மோசம் என்பது போல் பேசுகிறீர்கள். இது அதை விட மோசமாக இருக்கிறதே, அதனால் அதைத் தவிர்த்துப் பேசுங்கள். (குறுக்கீடு).

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொல்வீர்கள் என்று எதிர்பார்த்தேன். . . . .

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சொல்லாமல் இருக்க முடியாது. தவறு எங்கே நடந்தாலும் சுட்டிக்காட்ட வேண்டும், நீங்கள் சொன்னீர்கள். திரு. செங்கோட்டையன் சொன்னதை நீக்கினேன் அதேபோல்தான் நீங்கள் மட்டும் விதிவிலக்கு ஆக முடியாது. எனவே, அடுத்துப் பேசினால் நீக்க வேண்டியதாக வரும். இப்போதே நீக்க வேண்டும். ஆகவே ** என்று அவர் சொன்ன அந்த ரிமார்க்ஸ்-ஐ நீக்குகிறேன்.

திரு. கே. சுப்பராயன்: நல்லது. நீக்கிக் கொள்வது நல்லதுதான். தவறில்லை. நீங்கள் நல்லதைத் தான் சொல்லி இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேசும்போது ஒட்டுமொத்தமாக நீங்கள் எல்லாவற்றிலும் சகதி வாரி அடித்தால் சரியாக வராது. அதேபோல், இந்தத் தரப்பில் பேசினால் அனுமதிக்கவேண்டி வரும். அதைச் சொன்னால் வருத்தப்படுவீர்கள். (குறுக்கீடு)

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே அங்கிருந்து பேசாமலேயே, 'பேசினால்' என்று சொன்னால் நீங்கள் பேசச் சொல்வது போல் ஆகிவிடாதா? . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சபையினுடைய நேரத்தைக் காப்பது எங்களுடைய கடமை. நீங்கள் இப்படிப் பேசினால் சபையினுடைய நேரம் 10 நிமிடம் போய்விடும். ஆகவே, அதை அட்வான்சாக முன்னாலேயே காப்பாற்றிக் கொள்வது எங்களுடைய கடமை உங்களை விட எங்களுக்கு நேரம் மிக முக்கியம்.

திரு. கே. சுப்பராயன்: மிக்க நன்றி, அடுத்து மிக முக்கியமான விஷயம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் பேசுகிறபோது கூட குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது இன்ன பிற எதிர்க்கட்சியிலே இருந்து வந்திருக்கிறவர்கள் சரியாக நடந்து கொள்வதில்லை என்று குறிப்பிடுகிறபோது, எங்களைப் பொறுத்தவரையிலும் எந்தத் தரப்பிலிருந்து வந்திருந்தாலும் சரி. அவர்கள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பொறுப்பாக்கப்பட்டு இருக்கிறவர்கள். ஆகவே அவர்கள் அந்த அடிப்படையிலே செயல்படவேண்டும் என்பதிலே எனக்கு ஒன்றும் வித்தியாசம் இல்லை.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 28

ஆனால், திருப்பூர் நகராட்சியிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான் வெற்றி பெற்றிருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றதற்குப் பின்னர், அங்கே பல்வேறு இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்தார்கள். ஆழ்குழாய்க் கிணறு அமைத்ததற்குப் பின்னர் அங்கே அமைக்கப்பட்ட ஆழ்குழாய்க் கிணற்றருகில் ஒரு பெரிய கல் நாட்டி, அந்தக் கல்லிலே 'நகர அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தலைமையில், ஒரு குறிப்பிட்ட கட்சி சார்பாக அங்கே கல் பதிக்கப்பட்டிருக்கிறது. அது எப்படி சரியான முன்னுதாரணமாக ஆகும்?

அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமை அலுவலகத்திலிருந்து பணம் வந்து, ஆழ்குழாய்க் கிணறு அமைத்திருந்தால் அவர்கள் அப்படிப் போட்டுக் கொள்வதில் ஆட்சேபனை இல்லை. ஆனால், கோடிக்கணக்கான மக்கள் கொடுத்த வரிப்பணத்திலிருந்து உருவாக்கப்பட்டதிலே, ஊர்ப் பணத்திலே அவர்கள் விளம்பரம் போட்டுக் கொண்டால் நல்ல முன்னுதாரணமா? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருக்கிறது என்பதனாலேயே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடத்துகிற நடவடிக்கைகளில் எல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிரச்சாரம் செய்து கொள்வது என்பது, ஜனநாயக மரபுகளின் நெஞ்சிலே ஈட்டியை எறிவது அல்லவா? நெஞ்சிலே ஈட்டியை எறிவதைப் போல, ஜனநாயக மரபைக் கேவலப்படுத்துவதைப் போல, ஜனநாயக மரபுகளைக் காயப்படுத்துவதைப் போல, இவர்கள் பிரச்சாரம் செய்வது என்பது சரி அல்ல. அது கைவிடப்பட வேண்டும் என்ற முறையில், பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும், கோவை கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் தோழர் ரமணி அவர்களும், கலெக்டர் அலுவலகத்திலேயே புகார் செய்து, கலெக்டர் கேட்டுக்கொண்டும்கூட, இந்த நிமிடம் வரை அது அப்புறப்படுத்தப்படவில்லை. வாழ்க அண்ணா தி.மு.க. மாடல் ஜனநாயகம். அது பற்றி நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் சொல்ல வேண்டிய விஷயத்தைச் சொல்லவேண்டும் என்பதற்காகத் தான் சொல்கிறேன்.



1987 ஏப்ரல் 28] [திரு. கே. சுப்பராயன்]

இறுதியாக, ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புவது, சாலைகள் பராமரிப்பு விஷயத்தை அரசு மேற்கொள்ளவேண்டும். அதைப் போல, இன்னொரு விஷயம். அப்ரூவ்-லே-அவுட்ஸ் அங்கீகாரம் பற்றி தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது.

நம்முடைய மரியாதைக்குரிய சைதை துரைசாமி போன்ற பொறுப்புள்ள ஆளும் கட்சி உறுப்பினர்கள்கூட வலியுறுத்தினார்கள். அன்-அப்ரூவ்டு லே-அவுட்ஸ் இன்றைக்கு வரை அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால் ஈரோட்டில் மட்டும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் எங்கேயும் அங்கீகரிக்கப்படவில்லையே, ஈரோட்டில் மட்டும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்றால், ஈரோட்டில் மட்டும் என்ன அப்படி அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. கேட்கிறார்கள் எங்களிடம். ஈரோட்டில் இருப்பவர்கள் அங்கீகரித்து வாங்கி விட்டார்களே, திருப்பூரில் ஏன் வாங்கவில்லை என்று கேட்டால் நாங்கள் பதில் சொல்ல வேண்டுமா, இல்லையா? இது சரியல்ல. ஆகவே அரசு ஒரு உத்தரவைப் போட்டு தமிழ் நாட்டில் உள்ள அனைத்து அன்-அப்ரூவ்டு லே-அவுட்களையும் அங்கீகரிக்க வேண்டும். அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை இதய சுத்தியோடு கவனிக்க வேண்டும் — எங்களுக்காக அல்ல — தமிழ் நாட்டில் 20 வருஷங்களாக 30 வருஷங்களாக தேங்கிக் கிடக்கிற பிரச்சினை. அன்-அப்ரூவ்டு லே-அவுட் உருவானதற்குக் காரணம் அதிகாரிகளின் குற்றம். இதற்கு முன்னாலே இருந்த அரசுகள் அதைக் கண்டு கொள்ளாத குற்றம். நான் அண்ணா தி.மு.க.வை மட்டும் சொல்லவில்லை.

இதுவரையில் இருந்த எல்லா அரசுகளுமே இதைக் கண்டு கொள்ளவில்லை. அதன் விளைவாகத் தேங்கிக் கிடக்கிற பிரச்சினைக்கு உங்கள் காலத்திலாவது ஒரு விடிவு ஏற்படும். விடிவு வரும் என்று உங்கள் பதில் உரையில் தெரிவிக்க வேண்டும் அவற்றை அங்கீகரிக்கும் உத்தரவைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாநகராட்சித் தேர்தல்களைப் பொறுத்த வரையில் அநேகமாக உங்களுக்கு மக்களைச் சந்திப்பதில் ஒரு விதமான அலர்ஜியே வந்துவிட்டது என்று சொல்ல விரும்புகிறேன். இப்போது பல பல [illegible] வருகின்றன. அப்படி வரும்

நோய்க்குப் புதுப் புதுப் பெயர்களைச் சொல்லுகிறார்கள். உங்களுக்குத் தேர்தல்களைச் சந்திப்பதில் நடுக்கமே ஏற்படுகிறது. அதாவது சில பல வியாதிகளுக்கு சில பல நடுக்கங்கள் வந்து விடும். அதுபோல் இது ஒரு வித அண்ணா தி.மு.க. மாடல் வியாதி. தேர்தலைச் சந்திப்பது என்றாலே ஒரு விதமான அச்சம். இப்படிப்பட்ட அச்சத்திற்கு நீங்கள் ஆளாவது சரியல்ல.

ஜனநாயக மரபுப்படி தேர்தலைச் சந்தியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் சொல்லுகிற காரணங்கள் இருக்கிறதே அந்த ஜோக்குக்கு வேண்டுமானால் அனுப்பலாமே தவிர — ஆனந்தவிகடன் மாதிரி பத்திரிகைகளுக்கு ஜோக்காக எழுதி அனுப்பலாமே தவிர — இந்தக் காரணங்கள் ஒரு பொறுப்புள்ள ஒப்புக் கொள்ளக்கூடிய காரணங்கள் அல்ல.

ஆகவே, தயவுசெய்து தேர்தலை உடனடியாக நடத்துவதோடு எதிர்க்கட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதால் அவர்களைப் பழிவாங்கும் ஆயுதமாக — இன்னின்னார் கலந்து கொள்ளக் கூடாது, இன்னின்னார் கலந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் சொல்வதைக் கேட்டால் உண்மையிலேயே அந்த நடைமுறை சரியாக இருக்காது என்று சொல்லி, தேர்தலைச் சந்திப்பதோடு மட்டுமல்லாமல் எதிர்க்கட்சிகளை அரவணைத்துச் செல்கிற ஜனநாயகப் பண்புகளை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்து பாருங்கள் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை வரவேற்று சமுதாய வளர்ச்சி பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு முன்னால் இரண்டு முக்கியமான விஷயங்களில் நம்முடைய அரசாங்கத்தினுடைய முடிவுகளை அறிந்து கொள்ளவும், அந்த முடிவுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் உரையில் தெளிவுபடுத்த வேண்டுமென்பதற்காகவும் அவருடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.



முதலாவதாக, தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் எல்லோரும் அரசு அலுவலர்களாக ஆக்கப்பட்ட பிறகு, தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிக்கூடக் கட்டிடங்கள் எந்த துறையிடமும் ஒப்படைக்கப்படாத நிலையில்—அந்தப் பள்ளிக்கூடக் கட்டிடங்கள் யார் பராமரிப்பது என்கிற வகையில், பராமரிப்புக்கு நிதியும் ஒதுக்கப்படாத நிலையில், அரசாங்கம் அதைப் பரிசீலித்து வருவதாகச் சொல்லப்பட்டது. எனவே இந்த நிலையில் அந்தப் பள்ளிக்கூடக் கட்டிடங்களைப் பராமரிப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகளை, எந்தத் துறையின் மூலம் அரசாங்கம் எடுத்திருக்கிறது என்கிற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சார வாரியத்திடமிருந்த தெரு விளக்குப் பராமரிப்புப் பணிகள் 1-7-1986 ஆம் தேதியிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. அதற்குப் பிறகு மின் சாதனங்களை வாங்குவதற்கு, தற்காலிகமாக கூட்டுறவு அங்காடிகள் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் வாங்கிக் கொள்ளலாம் என்று உத்தரவிடப்பட்டது. 24—7—1986 ஆம் தேதியன்று உயர்மட்டக் குழு என்று ஒரு குழுவை மாநில அளவில் அமைத்தோம். மின் சாதனங்களை எந்த நிறுவனங்களிடமிருந்து வாங்கலாம், என்ன விலைக்கு வாங்கலாம் என்று வரையறையும் நிர்ணயமும் செய்யப்படுவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. அதுவும் விரைவாக அந்த மின் சாதனங்களை ஊராட்சி ஒன்றியங்கள் வாங்க ஏற்பாடு செய்வதற்காக அமைக்கப்பட்ட அந்தக் குழு தனது முடிவை அறிவித்துவிட்டதா என்கிற விவரங்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் பதில் உரையில் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4-40)

அடுத்தபடியாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு புதிதாக பொறுப்பேற்றுக் கொண்டிருந்தாலும் இதற்கு முன்பே இந்தத் துறையை அவர் நிர்வகித்தவர் என்ற முறையில், இன்றைக்கு நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவருடைய எண்ணங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்கக் கூடிய வகையில் இந்தத் துறையில் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும், செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

[திரு. செ. செம்மலை] [1987 ஏப்ரல் 28

பல சீர்திருத்தங்களை அவர் செய்து நம்முடைய புரட்சித் தலைவருடைய திட்டங்களின் பயன்கள் ஏழை மக்களுக்குப் போய்ச் சேருகிற வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறைக்குத் தனியாக பொறுப்பேற்றிருக்கிற மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் இப்போதுதான் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றிருந்தாலும், அவர், நான்காண்டுக் காலம் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர், இரண்டாண்டுக் காலம் டி.ஆர்.டி. யாக இருந்தவர், இந்தத் துறையைப் பொறுத்த வரையில் என்னென்ன சிக்கல்கள், என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நன்றாக அனுபவரீதியாக உணர்ந்தவர். அந்தப் பிரச்சினைகளை உணர்ந்த அவர் அந்தப் பிரச்சினைகளை தீர்க்கும் நிலைமையிலே இன்றைக்கு இருக்கின்ற காரணத்தால் இந்தத் துறையிலே பல நல்ல சீர்திருத்தங்களை அவர் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். இன்றைக்கு இந்தத் துறை மக்களோடு நேரிடையாக தொடர்பு உள்ள துறை. இந்தத் துறையின் மூலம் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை புரட்சித் தலைவருடைய அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டப் பணிகளுடைய பலன்கள் அனைத்தும் கிராம மக்களுக்குப் போய்ச்சேர வேண்டும். இன்றைக்கு ஒன்றிய அளவில் கிட்டத்தட்ட 12-க்கு மேற்பட்ட திட்டங்களை ஒன்றிய அமைப்பு நிர்வகித்து வருகிறது. ஆனால் இன்றைக்கு இவற்றைக் கவனிக்க ஒரே கமிஷனர் என்கிற நிலையிலே ஒரே ஒருவர்தான் இருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வது—இந்த வளர்ச்சிப் பணிகளை சீரான முறையில், செம்மையான முறையில் செயல்படுத்த மேலும் ஒரு அதிகாரியை, குறிப்பாக நம்முடைய அரசாங்கம் போடுகிற, மத்திய அரசாங்கம் போடுகிற வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதற்காக மட்டும் ஒரு அதிகாரியை—பிளாக் டெவலப்மென்ட் ஆபீசர்—ஒருவரை நியமிக்க வேண்டும். தற்போது இருக்கிற கமிஷனர் நிர்வாகத்தையும் இன்னும் பஞ்சாயத்துக்கு உட்பட்ட அதிகாரத்தையும் கவனிக்கும் வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும். இதை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 28] [திரு. செ. செம்மலை]

அதே போல ஒன்றிய அமைப்பில் 1960-ஆம் ஆண்டு என்னென்ன அலுவலர்களை நியமித்தார்களோ, அதே அலுவலர்கள்தான் இன்றைக்கும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பணிகள் அதிகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வேண்டுமானால் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற மேனேஜர் போன்ற ஒரு சில புதிய பதவிகளை உருவாக்கியிருந்தாலும் மேலும் இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள், தட்டச்சர்கள் ஆகியவர்களை அதிகப்படுத்தவில்லை. தேவையான அளவிற்கு இந்தப் பதவிகளைக் கூடுதலாகத் தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே காலையில் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர், அருமைச் சகோதரர் திரு. மணிமாறன் பேசுகின்றபோது, ஏதோ இந்த அரசாங்கம் வந்து ஒன்றியத் தலைவர்களுக்குள்ள அதிகாரங்களைப் பறித்துவிட்டதாகவும், ஜனநாயகத்தினுடைய குரல்வளையை நெறித்துவிட்டதாகவும் கருத்துக்களைச் சொன்னார்கள். அவர் உணர்ந்திருப்பார் என்று நான் கருதுகிறேன். அங்கே பொறுப்பிலே இருக்கின்ற தலைவர்கள் எப்படியெல்லாம் செயல்படுகிறார்கள் என்பதை உள்ளபூர்வமாக அவர் உணர்ந்திருப்பாரேயானால் இந்தக் கருத்தை அவர் சொல்லியிருக்கமாட்டார். ஒரு குழந்தையினுடைய கையில் ஒரு கத்தி இருக்கிறது என்றால் அந்தக் கத்தியால் அந்தக் குழந்தைக்கும் ஆபத்து வரக்கூடாது. மற்றவர்களுக்கும் ஆபத்து வரக்கூடாது. அதைப் பாதுகாத்துக் கொள்வது அந்தத் தாயின் கடமை. அந்த அடிப்படையில் தவறான முன் மாதிரிகளை உருவாக்குகின்ற ஒன்றியப் பொறுப்பாளர்களை, தவறான வகையில் செல்லுகிறவர்களை முறைப்படுத்தி, நெறிப்படுத்துவது இந்த அரசாங்கத்தின் கடமை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி அவர்கள் காயப்படுத்துகிற போது அந்தக் காயத்திற்கு மருந்து போடுகிற சில முறைகளை நாம் எடுக்க வேண்டியிருக்கிறது. காயங்களுக்கு மருந்து போடுகிறபோது சில நேரங்களில் எரிச்சல் வருகிறது என்றால், மருந்து காயத்தை குணப்படுத்துவதற்காகவே தவிர வேறு அல்ல என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. செ. செம்மலை] [1987 ஏப்ரல் 28

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு உதாரணத்தை நான் இந்த நேரத்திலே சொல்லுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இன்றைக்கு பஞ்சாயத்து சட்டத்தில் ஒரு ஸ்டாச்சுட்டரி புரொவிஷன் இருக்கிறது. அதாவது ஊராட்சிப் பணிகளைக் கண்காணிக்க General purpose Committee என்ற கமிட்டியை அமைத்தாக வேண்டும். தேர்தலை முறைப்படி வைத்து அந்தக் கமிட்டியை அமைப்பது ஒன்றியத்தினுடைய தலைவருடைய கடமை, ஒன்றியத்தினுடைய அமைப்பின் கடமை. ஆனால் அண்ணா மாவட்டம் வேடசந்தூர் ஒன்றியத்தில், ஒன்றியக் குழுவிலே உறுப்பினராக இருக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பலமுறை புகார்க் கடிதம் ஆணையருக்கு எழுதியும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தும், அந்தக் கமிட்டி இதுவரை அமைக்கப்படவில்லை. நான் இப்போது கேட்கிறேன். அப்படிப்பட்ட பணிகளைக் கண்காணிக்கும் கமிட்டியையே அமைக்காதிருந்தால், அந்த ஒன்றியத்தின் பணிகள் எப்படிச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் என்பதைத் தயவு செய்து நாமெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நான் மாண்புமிகு அமைச்சரவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வது, இன்றையக்கு ஒன்றிய அளவிலே இருக்கிற பணிகளைக் கண்காணிக்க எந்தவித அமைப்புகளும் இல்லை. இன்றைக்குச் சில திட்டங்களுக்கு மத்திய அரசாங்கம் நிதி உதவி செய்கிறது. அப்படிப்பட்ட திட்டங்களைக் கண்காணிக்க ப்ரோக்ராம் எவால்யுலேஷன் கமிட்டி என்று அமைத்து, நம்மைக் கண்காணித்து வருகிறார்கள். ரூரல் டெவலப்மென்ட் ஆக்டிவிடிசுக்கு அவர்கள் பணம் கொடுக்கும் போது, நம்முடைய செயல்பாடுகளைக் கண்காணிக்க மானிட்டரிங் செல் என்று வைத்து நம்மைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியத்தின் செயல்பாடுகளுக்காக அரசாங்கம் கொடுக்கும் உதவிகளைச் சரியாகப் பயன்படுத்துகிறார்களா, சரியான முறையில் விதிமுறைகளுக்கு உட்பட்டு பயன்படுத்துகிறார்களா என்று கண்காணிக்க



1987 ஏப்ரல் 28] [திரு. செ. செம்மலை]

நம்முடைய மாநில அரசின் மானிட்டரிங் செல் அல்லது எவால்யுவேஷன் கமிட்டி போன்ற ஒரு அமைப்பை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் உறுப்பினர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசுகிறபோது மத்திய அரசு கொடுக்கிற உதவிகளை, அதாவது என்.ஆர்.இ.பி., ஐ.ஆர்.டி.பி., ஆர்.எல்.இ.ஜி.பி., போன்ற திட்டங்களின்கீழ் கொடுக்கிற உதவிகளைச் சரியாகச் செயல்படுத்துவதில்லை, அவற்றைச் சரியான முறையில் செலவு செய்யவில்லை என்ற குற்றச்சாட்டைப் பல முறை கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு மரியாதையோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே அவற்றைச் செயல்படுத்தும் முறையில் எந்தவிதக் குறையுமில்லை. இந்தச் சந்தர்ப்பத்திலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் சில கட்டுப்பாடுகளை வைத்திருக்கிறார்கள்; அவர்கள் சில நார்ம்ஸ்—அளவுகோல்களைச் சொல்லியிருக்கிறார்கள்; சில நெறிமுறைகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லியுள்ள அளவுகோல்களில் உள்ள குறைபாடுகள்தான் மன்ற உறுப்பினர்கள் இங்கே சொன்ன குறைபாடுகள். அதைத் தவிர்க்க நம்முடைய மாநில அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசின் கவனத்திற்கு இதைக் கொண்டு செல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உதவிகளைக் கொடுக்கும் மத்திய அரசாங்கம் சில திட்டங்களுக்கு சில அளவுகோல்களை, நெறிமுறைகளை வகுத்திருக்கிறது. பல திட்டங்களுக்கு சீலிங் வைத்திருக்கிறார்கள். இன்னும் சில திட்டங்களுக்கு மினிமம் என்ற அளவுகோலை வைத்திருக்கிறார்கள். இன்னும் சில திட்டங்களுக்கு சில ரெஸ்டிரிக்ஷன்ஸ்களை நிலை நிறுத்தியிருக்கிறார்கள். அப்படித் திட்டங்களை நிறைவேற்றுகிறபோது சில சங்கடங்கள் அனுபவரீதியாகப் பார்க்கிறோம்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். இன்றைக்கு சமுதாய நலக் காடுகளை அமைக்கும் திட்டம் இருக்கிறது. 25 சதவிகிதம் அதற்குச் செலவு செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். அந்தத் தொகையை மாநில அரசு மாவட்ட அளவில் கொடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஒன்றியத்திற்குக் கொடுக்கிறார்கள். அவர்கள் 25 சதவிகிதத்தைச் செலவு செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படிச்

செய்கிறபோது சில ஒன்றியங்களிலே செடிகளை நட நிலப்பரப்பு இருக்கிறது. சில ஒன்றியங்களிலே இல்லை. அதை அங்கே இருக்கும் கமிஷனர்கள் எடுத்துச் சொன்னால், அந்தக் கருத்துக் களை ஏற்றுக்கொள்வதில்லை. ஏனென்றால் விதிமுறை அதை ரெஸ்டிரிக்ட் செய்கிறது. எனவே அவர்கள் அதை எப்படிச் செல வழிப்பது என்று புரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நாம் இவற்றை ஃபோல்டன் பைண்டிங்கோடு பார்க்கிறோம். ஃபேக்ட்ஸ் பைண்டிங்-ஆகப் பார்க்க முடியவில்லை. எனவே இப்படிப்பட்ட ரெஸ்டிரிக்ஷன்சைக் குறைத்து, இந்தத் திட்டப் பணிகளைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பெற்றது)

அடுத்து ஐ.ஆர்.டி.பி. திட்டத்தில் ஒரு கட்டுப்பாடு வைத்திருக் கிறார்கள். அந்தப் பணத்தைக் கொடுக்கிறபோது நேரடியாகப் பயனீட்டாளர்களிடம் கொடுப்பதில்லை. அந்தப் பணம் நேரட் பார்ட்டிக்கு செக்காகப் போகிறது. இதில் சில குறைபாடுகள் வரு கின்றன. இதிலேதான் பினாமி தலை தூக்குகிறது. இதனால் அசெட்ஸ் கிரியேட் ஆகாமல் தடைப்படுகிறது. இதையெல்லாம் கருத்திலே கொண்டு அந்தச் செயல்முறைகளை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். மாநில அரசு இதைக் கவனத்தில் வைத்துக்கொண்டு, அந்த முறை களை மாற்றி அமைக்க மத்திய அரசை வற்புறுத்த வேண்டு மென்று கருதுகிறேன். இதை நான் சொல்லவில்லை. நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ரூரல் டெவலப்மெண்ட் என்ற அமைப்பு பல் வேறு மாநிலங்களில் சுற்றிப் பார்த்துவிட்டு. அவர்கள் சொன்ன கருத்தை இங்கே சொல்வது பொருத்தமாக இருக்குமென்று கருது கிறேன். "Schemes are not preferred by beneficiaries but are thrust on them." என்ற கருத்தைச் சொல்லியிருக்

(மாலை 4-50)

கிறார்கள். அதனாலேயே தவறுகள் நிகழ்கின்றன என்று அவர் களே சொல்லி இருக்கின்றார்கள் எனவே பர்செண்டேஜ் ஆஃப் எர்ரர்ஸ் வேண்டுமானால் இடத்திற்கு இடம் மாறுபடலாம். அந்தக் குறைபாடுகளைப் போக்க வேண்டுமென்றால், மத்திய அரசு விதித்திருக்கின்ற அந்த நிபந்தனைகளை அவர்கள் மாற்ற வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஐ.ஆர்.டி.பி. திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த சிஸ்டம்



ஆஃப் செலக்ஷன் ஆஃப் கிளஸ்டர் விரேலஜ் என்கிற முறையை மாற்றி அமைக்க வேண்டும். இன்றைக்கு இந்த அரசாங்கம் பல்வேறு நல்ல பணிகளை, பல்வேறு உதவிகளை, பல்வேறு மானியங்களை நலிந்தவர்களுக்கு என்று கொடுத்து இருக் கின்றார்கள். நலிந்தவர்கள் பட்டியல் நம் அரசாங்கத்திடம் இல்லை. நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது, அந்த உதவியைக் கொடுக்கும்போது ஒரு மாதத்திற்குள்ளாகக் கொடுக்கவேண்டும் என்று நாம் கட்டாயப்படுத்தும்போது, அதிகாரிகள் யாருக்காவது கொடுத்தால் போதும் என்று கொடுத்துவிடுகின்றார்கள். ஆக, கொடுக்கக்கூடிய உதவி, வசதி படைத்தவர்களுக்கு போய் விடுகிறது. நலிந்தவர்கள் பின்னாலே தள்ளப்பட்டு விடுகின்றார்கள். நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது, ஒரு ஏஜென்சியை வைத்து நாம் இந்த நலிந்தவர் களுக்குடைய பட்டியலைத் தயாரித்து—எப்படி குடும்ப கார்டு கொடுக்கிறாமோ, அதுபோல—அடையாள அட்டைகளைக் கொடுத்துவிட்டு, எந்த உதவியாக இருந்தாலும் அது மத்திய அரசு உதவியாக இருந்தாலும் சரி மாநில அரசு உதவியாக இருந்தாலும் சரி, அந்த கார்டு உள்ளவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற நிலைமையை உருவாக்கவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்.ஆர்.ஈ.பி. திட்டம். அந்த திட்டத்திலே இன்றைக்கு கவுன்சில் தான் அந்த என்.ஆர்.ஈ.பி. பிளானை அப்ரூவல் செய்ய வேண்டும் என்று செலக்ட் செய்யவேண்டும் என்ற நிபந்தனையை வைத்திருக்கின்றார்கள். ஒன்றியத்தினுடைய தலைவர், எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, தங்களுக்கு வேண்டிய ஊராட்சிகளுக்கு அதிகமாக நிதி ஒதுக்கி, அதிகமான பணிகளைச் செய்து கொள்கின்றார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறேன். என்.ஆர்.ஈ.பி. பிளான்களைத் தேர்வு செய்கின்றபோது அந்த ஊராட்சிக் குழுவுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்கக்கூடாது. அதற்காக என்று ஒரு தனி அமைப்பை அமைக்கவேண்டும். என்.ஆர்.ஈ.பி. யைப் பொறுத்த வரையில் அந்த வேலையை அந்த ஊராட்சி மன்றத் தலைவர் அவர்கள் செய்யக்கூடாது. அந்த உத்தரவை மாற்றி வேறு ஏஜென்சிக்கு, யாராவது ஆயக்கட்டுதார் அல்லது படித்த வேலையில்லா பட்ட தாரிகளுக்கு ஒப்படைக்க வேண்டும்.

[திரு. செ. செம்மலை] [1987 ஏப்ரல் 28

காரணம் சொல்லவேண்டுமென்றால், ஊராட்சித் தலைவர்
வேலைகள் செய்யவேண்டும் என்பதற்காகவே சில வேலைகளை
அவர்கள் பட்டியலிலே சேர்த்து அந்த ஊராட்சி பெருந்தலை
வர்களை இன்புளுயன்ஸ் செய்து கொண்டு அதை நிறைவு
படுத்திக்கொண்டு விடுகின்றார்கள். அதையும் மாற்றிக்கொள்ள
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட அளவிலே
என்.ஆர்.ஈ.பி. பிளானை டிராப்ட் செய்து கவர்ன்மெண்ட்டுக்கு
அனுப்புகிறார்கள். அது அரசுக்கு வருகிறது. அதனாலே
காலதாமதம் ஆகிறது. இதிலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்
கொள்வது, மாவட்ட அளவிலே டி.ஆர்.டி. அளவில் அந்த பிளானை
அப்ரூவ் செய்கிற வகையில் செய்ய வேண்டும் என்று இந்த
நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஆர். எல். ஈ. ஜி. பி. திட்டம். அந்தத் திட்டத்தைப் பொறுத்த
வரையில் இப்போது சோசியல் பாரஸ்ட்ரிக்கும், குரூப் அவுசிங்-க்
கும்தான் பணம் ஒதுக்கப்படுகிறது. எனவே உறுப்பினர்கள்
எடுத்துச்சொன்னதுபோல, பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கும்,
ரோடுகளைப் பராமரிப்பதற்கும், ரோடுகளை அமைப்பதற்கும்
பஞ்சாயத்துக் கட்டடங்களைக் கட்டுவதற்கும் அந்தப் பணத்திலே
ஒதுக்க வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, உங்களுடைய அனுமதியோடு, பேரூராட்சியைப் பொறுத்து
கிராம பேரூராட்சிக்கு வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ்
திட்டத்தின் செயல்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளதை நான்
வரவேற்கிறேன். அதைப்போல நகரப் பேரூராட்சிகளுக்கும்
நீடித்துத் தரவேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு
வற்புறுத்தவேண்டும். முழு மானியத்தோடு குடிநீர் வழங்கு
கின்ற திட்டப் பணிகளுக்கு ஒதுக்கும்போது கிராம
பேரூராட்சிகளுக்கும் பயன்படுத்தப்பட்ட அரசாணை
பிறப்பிக்கப்பட்டுள்ளதை நான் வரவேற்கிறேன். அதைப்
போலவே நகரப் பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில்
நிதி நிலைமை, அவர்களுக்குச் சரியான முறையிலே இல்லை
என்பதையும் கருத்தில் கொண்டு குடிநீர் வாரியம் மூலம் கூட்டுக்
குடிநீர்த் திட்டத்தை அனைத்துப் பேரூராட்சிக்கும் அமைத்து
அந்த குடிநீர் பிரச்சினையை தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே பணிவன்போடு
கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 28] [திரு. செ. செம்மலை]

அதோடு இன்னொன்றைச் சொல்லிக்கொள்கிறேன்.
இன்றைக்கு வறட்சியை முன்னிட்டு மாவட்டத்திற்கு போர்
வெல் என்று சொல்லி நிதி ஒதுக்கீடுகள் செய்கிறோம். நான்
அறிந்த வரையிலே இந்த போர் வெல்கள் முக்கால் பங்கு
போட முடியாமல் இருக்கின்றன. அதிலே என்ன உத்தரவை
அரசாங்கம் இட்டிருக்கிறது என்று சொன்னால், அட்வர்ஸ்
சீசனல் கண்டிசன்-க்கு போர் வெல்கள் என்று சொல்லி, எந்த
அடிப்படையில் போடவேண்டும் என்பதற்கு நிபந்தனையை
விதித்திருக்கிறார்கள். நார்மல் புரோகிராம் என்று ஒரு
கண்டிஷனைப் போட்டு அந்த நார்மல் புரோகிராமின் கீழ் அந்த
போர் வெல் போடவேண்டும் என்று சொல்கின்றார்கள்.
அப்படிப் பார்க்கிறபோது, அந்த நார்ம்ஸ்-ஐ பண்ண
வேண்டியதாக இருக்கின்றது. அந்த அளவுகோல் அளவுப்படி
தான் போடவேண்டியதாக இருக்கின்றது. எனவே 6-வது
கேட்டகிரியில் இருக்கின்ற ஊர்களுக்குப் போடமுடியாது,
புதியவர்களுக்குத்தான் போடமுடியும். எனவே வறட்சிக்
காலத்திலே ஏற்கெனவே நிறைவேற்றிய திட்டங்கள் பலன் அளிக்
காமல் போகின்றன. அந்த இடத்திலே போர் வெல் போடுவதற்கு
வழிமுறைகள் இல்லை. எனவே அந்த நிபந்தனையை
மாற்றி போர் வெல் போடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்
கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
இன்னும் ஒரே ஒரு விஷயத்தைக் கூறி முடித்துவிடுகிறேன்.
இங்கே நான் ஐ.ஆர்.டி.பி. திட்டத்தைப் பற்றி ஆலோசனை
களைச் சொல்கிறேனேயல்லாமல் கான்ட்ரோவர்சியலாக எதுவும்
சொல்ல வில்லை. இன்றைக்கு நான் ஏற்கெனவே இங்கே
சொல்லியுள்ளதைப் போல அசெட்ஸ்-ஐயும் வங்கிகளில் இருப
பவர்களே கிரியேட் பண்ணுவதனால் சில முறைகேடுகள்,
குறைபாடுகள் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட குறைபாடுகளைக்
களைய அரசு மூலமாக உள்ள கோவாப்பரேட்டிவ் இன்ஸ்டிட்
யூசன்ஸ். ரெப்யூட்டட்ஃபார்மஸ் அல்லது அரசுத் துறைகள்
மூலமாக அந்த சொத்துக்களை வாங்கி பயனீட்டாளர்களுக்கு
அவர்கள் அனுபவிக்கும் வகையிலே பார்த்துக்கொண்டால்
அசெட்ஸை அதிகப்படுத்த அல்லது அதன் வளர்ச்சியை
அதிகப்படுத்த துணை நின்றவர்களாவோம். இதன் மூலம்
ஐ.ஆர்.டி.பி. திட்டத்திலுள்ள சில குறைகளை நாம்களைய

[திரு. செ. செம்மலை] [1987 ஏப்ரல் 28

வாய்ப்பிருக்கும் அல்லது ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் நோக்கம் நிறைவேற தடையாக உள்ள குறைகளைக் களைய வாய்ப்பாக இருக்கும்.

அடுத்து, மாவட்டங்களுக்குக் கடன் கொடுப்பதைப் பொறுத்த வகையில் இவ்வளவு என்று டார்கெட் நிர்ணயித்திருக்கிறோம். இதனால் வங்கிகளில் அவர்கள் முழுமையாகக் கடன் தொகை கொடுப்பதில்லை. அதுதான் இன்றைக்கு இருக்கிற யதார்த்த நிலைமை. சில விண்ணப்பங்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தகுதியில்லையென்று சொல்லி தள்ளிவிடுகிறார்கள். ஆகவே, நான் ஒன்றை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு அரசு ஒரு கட்டாய அறிவுரையை வழங்கி, மாவட்டங்களைப் பொறுத்தவரையில் எவ்வளவு விண்ணப்பங்களைப் பரிந்துரை செய்கின்றார்களோ அத்தனை விண்ணப்பங்களுக்கும் கட்டாயமாகக் கடன் கொடுக்க வேண்டுமென்று நிலையை ஏற்படுத்த வேண்டும். (மணி அடிக்கப்பெற்றது).

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி, மாநகராட்சி மற்றும் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நிர்வாகமும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகளைத் தொட்டு சில கருத்துக்களை வழங்க வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீண்ட நெடுங்காலமாக இந்தப் பேரவையிலே எல்லாத் தரப்பு உறுப்பினர்களும் மிக வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதற்கிணங்க நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஒன்றியங்களுக்கு எல்லாம் தேர்தல் நடந்து முடிந்தது. ஆனால் அதற்குப் பிறகு ஸ்தல ஸ்தாபனங்களுக்கு எல்லாம் இருந்து வந்த அதிகாரம் சன்னம் சன்னமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்ற எண்ணம் பரவலாக இருக்கிறது. காந்திஜி அவர்கள் கனவு கண்ட இந்தியாவில் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும். அப்படிப் பரவலாக்கப்படக்கூடிய அதிகாரங்கள் கிராமத்தில் இருக்கிற, கிராமத்தை நிர்வாகம் செய்பவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதாக இருந்தது. அந்த அடிப்படையில்தான் நாடு விடுதலை பெற்றதற்குப் பிறகு ஏறக்குறைய எல்லா மாநிலங்களிலும் ஊராட்சி மன்றங்கள் அமைக்கப்பட்டபோதும், நகராட்சிகளாக அவைகள் உயர்த்தப்பட்டபோதும், மாநகராட்சிகளாக அவை உருப்பெற்றபோதும், இந்த



1987 ஏப்ரல் 28] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

அடிப்படையைக் கவனத்தில் கொண்டே அதிகாரங்கள் வழங்கப்பட்டதையும் நாம் பார்க்கிறோம். ஆனால் இன்று அப்படிப்பட்ட அதிகாரங்கள் தமிழகத்தில் இருக்கிறதா என்றால் அப்படி இல்லை என்பதை நான் வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய அண்டை மாநிலமான கர்நாடகா மாநிலத்தில் அண்மையில் ஊராட்சி மன்றங்களுக்கான மற்றும் ஒன்றியங்களுக்கான தேர்தல் நடந்து முடிந்தது. நடந்த தேர்தலுக்கு முன்னாலேகூட ஒன்றை அவர்கள் திட்டவட்டமாக அறிவித்தார்கள். அதாவது மாநில அரசு ஒதுக்கக்கூடிய 900 கோடி ரூபாயை ஊராட்சி மன்றங்களும், பேரூராட்சி மன்றங்களும் தான் செலவழிக்க வேண்டுமென்ற திட்டத்தை அறிவித்து அதன் அடிப்படையில்தான் தேர்தலும் நடந்து முடிந்தது. அதன் அடிப்படையில் இன்றைய தினம் அந்தப் பெரும் தொகையை, கிராமங்களுடைய வளர்ச்சிக்கான திட்டங்களை நிறைவேற்றக்கூடிய கிராம நிர்வாகங்கள் தான் ஏற்று செயல்படுத்திக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் இங்கே தமிழகத்திலே அவர்களுடைய பொறுப்பிலே இருந்த கல்வி இன்றைய தினம் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

(மாலை 5-00)

அது நியாயமானது. நான்கூட அதை வற்புறுத்தியிருக்கிறேன். அதேபோல சுகாதாரத் துறையையும் அரசு தன்னுடைய நேரடிப் பொறுப்பிலே ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதுவும் தேவைப்பட்ட ஒன்று.

இன்று நகராட்சிகளுக்கு இருக்கக்கூடிய வருமானம்—அதேபோல பேரூராட்சி மன்றங்களும் உட்பட நான் சொல்கிறேன்—போதுமானதாக இருக்கிறதா என்றால், அந்தப் பொறுப்பை விட்டு எப்போது ஓடுவோம் என்று காத்திருக்கிறார்கள் பலபேர். ஏனென்றால் வரக்கூடிய வருமானத்திலே ஏறத்தாழ 90 சதவீதம் அலுவலர்களுடைய சம்பளத்திற்கே போதாத நிலை இன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் நடந்து 12, 13 ஆண்டுகள் ஆகி, பிறகு தேர்தல் நடந்து முடிந்து இப்பொழுது ஒன்றரை ஆண்டுகள் ஆகிவிட்ட பிறகு, ஏறத்தாழ 15 ஆண்டுக் காலம் வீட்டு வரியோ மற்ற வரிகளோ உயர்த்தப்படாத ஒரு நிலை இருந்தது. இந்த வரிகள் உயர்த்தப்படாத அளவில், அலுவலர்களுக்குரிய சம்பள விகிதம், அரசினுடைய சில முற்போக்கான கொள்கையினுடைய அடிப்படையில் நகராட்சி மன்ற,

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1987 ஏப்ரல் 28

பேரூராட்சி மன்ற அலுவலர்களுக்கும் அதிகரிக்கப்பட்டது அதில் வருமானம் அதிகரிக்கப்படுவதற்கு எல்லா வகையிலும் தடைபட்டு, மூடப்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில், அலுவலர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப்பட்ட காரணத்தினாலே வருவாயினுடைய பெரும்பகுதி அலுவலர்களுடைய சம்பளத்திற்கே சென்றுவிட்ட காரணத்தினாலே, எந்தவிதமான அபிவிருத்தித் திட்டமும், சுகாதார சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கக்கூடிய முயற்சியும அமல்படுத்த முடியாத ஒரு இக்கட்டான நிலைக்கு அந்தப் பொறுப்பை ஏற்றவர்களெல்லாம் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இடைக்காலத்திலே அரசாங்கம் இந்த வரிகளையெல்லாம் மாற்றியமைப்பதற்கு ரிவிஷன் ஆபீசரைப் போட்டார்கள். ஆறு மாத காலம் அவர்களும் காரியமாற்றினார்கள். ஆனால், அவர்கள் பொதுமக்களுடைய ஒரு மனப்பான்மையையோ, அவர்களுக்கு எவ்வளவு வரி விதிக்க முடியும் என்ற தகுதியையோ அல்லது அரசாங்கத்தினுடைய உள்ளார்ந்த நோக்கத்தையோ கூட சரிவரப் புரிந்து கொள்ளாமல், மனம் போன போக்கிலெல்லாம் மிகப்பெரிய அளவிற்கு அதிக வரி விதித்த காரணத்தினாலே ஏறத்தாழ தமிழகத்திலே ஒரு பெரிய கொந்தளிப்பு ஏற்படக்கூடிய நிலை வந்து, அரசு அறிவுபூர்வமாக இதை அறிந்து, அதை வருவிக்கக் கூடியதை நல்லதொரு நோக்கிலே தடுத்து நிறுத்தியதை நான் பாராட்டுகிறேன்.

ஆனால், அப்படி நிறுத்திவிட்டதும் ஒரு நல்ல செயல் ஆகுமா என்றால், எந்தவிதமான வருமானமும் இல்லாமல், இந்த வருவாயும் இல்லாமல், அடைத்துவிட்டு, ஏறத்தாழ ஒரு மாதமாகிவிட்ட பிறகு, வரக்கூடிய அந்த வருமானத்தினுடைய ஒரு வாயிலைக்கூட நீங்கள் அடைத்துவிட்டு அவர்களை நிர்வாகம் செய்யச் சொல்கிறீர்கள் என்றால் நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன், இந்த நகராட்சியின் தலைவர்களையெல்லாம் நீங்கள் சோதிக்க வேண்டுமென்றால், வேறுவிதமான சோதனைத் திட்டங்களை கடைப் பிடியுங்கள். ஏனென்றால், மெத்த அவல நிலைக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

நான் அறிந்தவரையில் பல்வேறு நகரங்களிலே இருக்கக்கூடிய வணிகப் பெருமக்களையும் அல்லது வீடு வாசலுக்குச் சொந்தக்காரர்களையும் சந்தித்துப் பேசுகின்றபொழுது, இப்பொழுது இருக்கக்கூடிய வரியைவிட இரண்டு பங்கு அதிகமாக வரி விதிக்



1987 ஏப்ரல் 28] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

கப்பட்டால், மனமுவந்து செலுத்துவதற்கு ஏறத்தாழ அவர்கள் தயாராக இருக்கிறார்கள். நகராட்சியினுடைய தலைவர், ஆங்காங்கு இருக்கக்கூடிய வணிகர்களுடைய பிரதிநிதித்துவ சங்கங்களோடு அல்லது வரி கட்டக்கூடிய பொதுமக்களுடைய சங்கங்களோடு, பிரதிநிதிகளோடு கூடிப் பேசினால் விதிக்கக்கூடிய வரியைப்பற்றி, அதனுடைய தொகையைப்பற்றி எந்தவிதமான கிளர்ச்சியும் இல்லாமலேயே ஒரு போதுமான வருமானத்தை நகராட்சி மன்றங்களும், பேரூராட்சி மன்றங்களும் பெற்றுக் கொள்வதற்கு வழியேற்படும். அத்தகைய நிலையை உடனடியாக அரசு தோற்றுவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, சமீபத்திலே பிறப்பிக்கப்பட்ட ஒரு உத்தரவு அது அவ்வளவு பெரிதாக இல்லாவிட்டாலும்கூட, அதில் உள்ள ஒரு மனப்பண்பு மற்றவர்களை எவ்வளவு பாதிக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நகராட்சி, உள்ளாட்சி கட்டக்கூடிய புதிய கட்டிடங்களோ, பள்ளிக் கட்டிடங்களோ அல்லது வேறுவிதமான கட்டிடங்களோ, அதிலே ஓரளவு அரசினுடைய மானியமோ, உதவியோ பெற்றிருந்தாலும்கூட, அதைத் திறப்பதற்கு ஜனாதிபதிதான் வர வேண்டும் அல்லது துணை ஜனாதிபதியை அழைக்க வேண்டும் அல்லது மத்திய மந்திரிகள் அல்லது அமைச்சர்கள், சபாநாயகர், லோக் சபாநாயகர் அல்லது மாண்புமிகு துணைச் சபாநாயகரைத்தான் அழைக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கின்ற தன்மை அவ்வளவு சரியா என்று தான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: இதிலே பாகுபாடு ஒன்றும் இல்லை; எல்லோருக்கும் இந்த ஒரே பட்டியல் தான்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்**: அந்தப் பட்டியலைப் பார்க்கும்போது ஏதோ ஜனாதிபதி வாரத்திற்கு ஒரு முறை தமிழ்நாட்டிற்கு வந்து, பட்டி தொட்டிகளுக்கு எல்லாம் போவது போலவும் கட்டப்பட்டிருக்கிற கட்டடம் 1½ இலட்சம் ரூபாய் மதிப்புடையதாக இருந்தாலும் மனம் உவந்து வருவதுபோலவும் அந்தப் பட்டியலை வெளியிட்டிருப்பது அவ்வளவு பொருத்தமானதாகத் தெரியவில்லை. ஆனால் ஒன்றை நான் வரவேற்கிறேன். அப்படி யாரும் கிடைக்கவில்லை என்றால் தலைமைக் கொத்தனாரை அழைக்க வேண்டுமென்று இருக்கிறது. அது பொருத்தமாக

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1987 ஏப்ரல் 28

(மாலை 5-10)

ஆனால் அப்படி அமைக்கப்பட்ட குழுவிலே யார், யார் இருக்
கிறார்கள், அந்தக் குழு செயல்படத் தொடங்கி விட்டதா என்
பதை எல்லாம் என்னால்கூடப் புரிந்துகொள்ள முடியவில்லை.
ஆகவே அப்படி ஓரளவுக்காவது, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி
நிதிகள் இடம் பெற்று இந்தப் பெருநகரத்தினுடைய வளர்ச்சி
யைப் பற்றி, சீர்திருத்தம் பற்றி ஆலோசனையை நல்கி அதிகாரி
களுடைய கூட்டுறவோடு அது செயல்படுகிறது என்ற நிலையை
நீங்கள் உண்டாக்க வேண்டுமென்று நான் கேட்டுகொள்கிறேன்.

இன்னொன்று, தஞ்சை மாவட்டத்தினுடைய வேளாங்கண்ணி
நகரியமாக ஆக்கப்பட்டபோது அது அவ்வாறு நகரியமாக ஆக்கப்
படுவதற்கு என்னென்ன தகுதிகள் உண்டோ அத்தனை தகுதி
களையும் கொண்ட, அடுத்துள்ள நாகூரையும் நகரியமாக ஆக்க
வேண்டுமென்ற கோரிக்கை பல முறை இங்கே வற்புறுத்தப்
பட்டது. அரசும் அதை ஏற்றுக் கொண்டது. அப்போது உள்துறை
அமைச்சராக இருந்த நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு.
ப. உ. சண்முகம் அவர்கள் அதைச் செய்ய இருக்கிறோம் என்று
வாக்குறுதி தந்தார்கள். பின்னர் அதை நினைவூட்டியபோது
ஒரு ஆர்டினன்ஸ் மூலமாக அதைச் செய்கிறோம்; மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களும்கூட இதற்கு ஒப்புதல் தந்து
விட்டார்கள் என்ற நல்ல செய்தியினையும் இங்கே சொன்னார்
கள். ஆனால் இதுநாள் வரையில் அது நடக்கவில்லை. இந்தத்
துறை உங்களுடைய பொறுப்பிலே இருக்கின்ற இந்தக் காலத்தி
லேயாவது அது நடக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்
கிறேன். குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பற்றி—நான்
காலையிலே இங்கே சட்டமன்றத்திற்கு வந்துவிட்டு இந்த
விவாதம் நடக்கிறது என்று தெரிந்து கொண்ட பிறகு என்
னுடைய தொகுதியில் இன்றைய நிலவரம் எப்படி இருக்கிறது
என்பதைத் தெரிந்து கொள்வதற்காகச் சுற்றிப் பார்த்தபோது
மிக வேதனை தரத்தக்க அளவுக்குக் குடிநீர்ப் பிரச்சினை பார
தூரமான பிரச்சினையாக அங்கே தலைதூக்கி இருப்பதைக்
கண்டுகொள்ள முடிந்தது. இரண்டொரு வட்டங்களைத் தவிர,
கிட்டத்தட்ட எல்லா வட்டங்களிலும் அந்தப் பிரச்சினை மிக
மோசமாக இருக்கிறது. மீனவர்கள் அதிகமாக வாழக்கூடிய நடுக்
குப்பம், அயோத்தியாகுப்பம் பகுதியிலும் ஏழைப்பாழைகள் மிக
நெருக்கமாக வாழக்கூடிய நிலப்பாச்சா தர்கா; கட்டுமஸ்தான்
தர்கா போன்ற பல பகுதிகளிலும் அம்பேத்கார் நகர் பகுதியிலும்,



1987 ஏப்ரல் 28] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

சைவ முத்தையா முதலி தெருவிலும் குடிநீர்க் கஷ்டம் மிக
மோசமான நிலையில் இருக்கிறது. அதேபோல் எலிபன்ட்
டேங்க், ராம்நகர் போன்ற பகுதிகளிலும்கூட இந்தப் பிரச்சினை
இருக்கிறது. இங்கெல்லாம் மாநகராட்சி அதிகாரிகள் தக்க
நடவடிக்கை எடுத்து இந்தப் பிரச்சினையைத் தீர்த்து
வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தண்ணீர் வரக்கூடிய பகுதிகளில் குழாயில் வரக்கூடிய
தண்ணீரில் இருக்கக்கூடிய நாற்றம் சகிக்க முடியாததாக இருக்
கிறது. ஒரு சமயம் சாக்கடை நீரோடு கலந்து வருகிறதோ என்ற
சந்தேகம்கூட இருக்கிறது. அதை உறுதிப்படுத்தக்கூடிய முறை
யில் சில பகுதிகளில் மஞ்சள் காமாலை நோய் பரவி இருக்கிறது.
இதையெல்லாம் தக்க நடவடிக்கை எடுத்து உடனடியாகக்
கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இவை
யெல்லாம் சட்டமன்றத்தில் பேசவேண்டிய பேச்சல்ல. மாநகராட்சி
இருந்தால் அந்த மாநகராட்சியிலே பேசித் தீர்க்க வேண்டிய
பிரச்சினையாகும் இது. ஆகவே எங்களுடைய இந்தப்
பிரச்சினையை வெகு சீக்கிரம் தீர்க்கக்கூடிய முறையிலேயாவது
நீங்கள் மாநகராட்சிக்குத் தேர்தலை நடத்த வேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்வேன். பிரச்சினை இவ்வளவு அக்யூட்டாக
இருக்கக்கூடிய இந்த நேரத்தில் ஒரு பரிசோதனைத் திட்டமாக
வாவது கடல் நீரை உவர் நீக்கி கடற்கரை ஓரப் பகுதிகளிலே ஓர
மாக வாழக்கூடிய குடிசைப் பகுதி மக்களுக்காவது வழங்கக்
கூடிய முறையில் ஒரு திட்டத்தை மேற்கொண்டு நடத்தினால்
என்ன என்பதைப் பற்றி தீவிரமாக ஆலோசிக்க வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன். நடுவண் அரசு செய்திருக்கக்கூடிய
ஆராய்ச்சியின் அடிப்படையில் ஒரு மொபைல் திட்டமாகக்கூட
ஒரு சில இலட்ச ரூபாய் செலவில் நடத்த முடியும் என்று அவர்கள்
நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். அதைப் பயன்படுத்தவேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வறட்சி நிவாரண வேலை
கள் போர்க்கால முனைப்போடு நாடெங்கும் நடக்க
வேண்டும். எல்லாக் கட்சிகளோடும் பேச்சுவார்த்தை நடத்தி 2
மாத காலம் பொதுக்கூட்டங்களோ, ஊர்வலங்களோ நடத்தாமல்
வறட்சியைப் போக்குவதற்கான நலத்திட்டங்களிலேயே எல்
லோரும் ஈடுபடுவது என்ற ஒத்த கருத்தினை உருவாக்கினால் அது
மெத்த பயன்தரும் என்று கருதுவதோடு எல்லாவற்றுக்கும்
மேலாக இறைவன் அருளில் நம்பிக்கை வைத்து அவனிடத்திலே
கையேந்தி பிரார்த்திக்கின்ற வகையில், எல்லா மத மக்களையும்
வேண்டி அரசின் சார்பாக ஒரு வேண்டுகோள் விடுவதும் மெத்த

பயன் அளிக்கும் என்று நான் கருதுகிறேன். 100 கோடி ரூபாய் செலவழித்தும்கூட நிறைவேற்ற முடியாத பல நன்மைகளை இறைவன் கருணை மழை பொழியச் செய்வதால் அதைச் செய்ய முடியும் என்பதைப் பொறுத்தவரையில் நேற்று மாலையில் பெய்த மழைகூட காட்டியிருக்கிறது. இன்று மாலைகூட அந்த மழை வரும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த மழையை வரவழைப் பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு அமை கிறேன்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மரியாதைக்குரிய பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்று சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை இந்த அவை முன்வைக்கலாம் என்று கருதுகிறேன். காலையிலிருந்து என்னுடைய கட்சியைச் சார்ந்த பல உறுப்பினர்களும், மாற்றுக் கட்சி உறுப்பினர்களும், ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் களும் தங்கள் தங்கள் தொனியிலே பல கருத்துக்களை இந்த மாமன்றத்திலே எடுத்து வைத்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தமட்டிலும் நமது மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் அப்துல் சமத் அவர்கள் கூறியதைபோல ஆண்டவன்தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் எனக்கு வந்திருக்கிறது.

காரணம் என்னவென்றால் மதுரை மாநகரத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூட இந்த மாமன்றத்திலே வைக்கப்படவில்லை. அதை நான் எண்ணிப் பார்க்கிறேன். மதுரை மாநகரம், மாநக ராட்சியிலே ஒரு அங்கம் ஆக இருப்பதோடு, தமிழ்நாட்டை ஆண்டுக் கொண்டிருக்கிற தமிழக முதல்வர் அவர்கள் இந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் என்ற பெருமை எங்களுக்கு உண்டு என்பதை நான் பெருமிதத்தோடு இந்த அவையில் கூறிக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

இன்று மதுரை மாநகரத்தில் குடிதண்ணீர் பிரச்சினை உச்ச கட்டமாக இருந்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் எல்லாம் அறிவோம். அந்த உச்ச கட்ட பிரச்னை கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து இன்றைக்கு ஒரு வடிவத்திற்கே வந்திருக்கிறது. அந்த





வடிவமும் எதிர் காலத்தில் எப்படி இருக்கும் என்பதை சிந்திக்க முடியாத கால கட்டத்தில் இருக்கிறது. நமது முன்னாள் அமைச்சர் கா. காளிமுத்து அவர்கள் இருந்தபோது இந்த குடி தண்ணீர் பிரச்னையில் ஒரு நாட்டம் கொண்டு செயலாற்றுவதில் முனைந்திருந்தார்கள். அவர் இப்போது சட்டமன்ற உறுப்பின ராக மட்டுமல்லாது அவரது கட்சியில் நல்ல பொறுப்பினையும் ஏற்றுள்ளார்கள். இப்படிப்பட்ட எல்லாப் பெருமையும் எங் களுக்கு இருந்தும் நாங்கள் உழன்று கொண்டுதான் இருக்கிறோம் என்றால் அந்த ஆண்டவன்தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்.

நமது பல மாவட்டங்களிலேயும் இந்த தண்ணீர் பிரச்னை மிகப் பெரிய முக்கியமான பிரச்சினையாகத்தான் இருக்கிறது. நமது தலைமைச் செயலர் அவர்கள் அன்னிய நாடு சென்று உலக வங்கியில் இருந்து கடன் வாங்குவதற்கு, அதுவும் சென்னை மாநகரத்திற்கு வேண்டிய தண்ணீரை பெறுவதற்காக என்று அறியும்போது உள்ளபடியே எனக்கே கொஞ்சம் சந்தோஷமாக இருந்தது. அதுபோல் மதுரை மாநகரத்திற்கும் நீங்கள் திட்டங் களை தீட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது சில திட்டங்களை மட்டும் அறிவித்திருக்கிறார்கள். பெரியார் டாமிலிருந்து பைப்புகள் மூலமாக மதுரை மாநகரத்திற்கு குடிதண்ணீர் கொடுக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். பெரியார் அணையில் இருக்கும் தண்ணீர், பாசனத்திற்கும் குடிதண்ணீருக்கும் போதுமானதாக இருக்குமா என்பதே சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட திட்டத்தை செயலாற்றுவதைக் காட்டிலும் ஒரு நிரந்தரமான திட்டத்தை செயலாற்ற வேண்டிய கால கட்டத்தில் நாம் இருக் கிறோம்.

மதுரையில் 10 லட்சம் ஜனத் தொகை என்று அறிவித்திருக் கிறார்கள் இந்த அறிக்கையில். அந்த புள்ளி விவரம் தப்பு. 12 லட்சம் ஜனத் தொகை கொண்ட ஒரு மாநகரம் அது. அத் தோடு ஃப்ளோட்டிங் பாப்புலேஷன் என்று சொல்லுவார்களே, அது போல் வந்து போகக்கூடிய ஜனத் தொகை வேறு கூடுதலாக இருக்கும். அத்தனை பேருக்கும் குடிதண்ணீர் வசதி செய் வதற்கு நல்ல ஒரு நிரந்தரமான திட்டத்தை வகுப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வெலிங்டன் டாமிற்கு வரும் தண்ணீரின் கொள் அளவைக் கூட்ட வேண்டும்.

[திரு. எ. தெய்வநாயகம்] [1987 ஏப்ரல் 28

அத்தோடு நமது கேரள மாநிலத்தில் மேற்கே செல்லும் நதிகளை திருப்பி பெரியார் டாமுக்கு கொண்டு வந்து குழாய்களின் மூலமாக தண்ணீர் விநியோகம் செய்வது மிகச் சிறந்த ஒரு திட்டமாக இருக்கும். அப்படி இல்லை என்றால் கல்லார் அணை திட்டத்தையாவது நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டும். எதிர்காலத்தில் இந்த தண்ணீர் பஞ்சம் தீர்ந்து விடும் என்று நினைத்து விடக் கூடாது. காலம் காலமாக மழை பெய்தாலும் அவைகள் எந்த அளவிற்கு பின் விளைவுகளை விளைவித்தன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக மதுரை மாநகரத்தில் சொத்து வரி பிரச்னை பெரிய பிரச்னையாக இருக்கிறது. வரி இல்லை என்று தமிழக அரசு பேரூராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் அறிவித்து விட்டது. ஆனால் உண்மை நிலைமை என்ன என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் கூறவேண்டும். கூறுவார்கள் என்று நினைக்கிறேன்.

(மாலை 5-20)

சொத்து வரிக்கு இப்போது ஒரு அசெஸ்மெண்ட் நடந்து கொண்டிருக்கிறது. சொத்து வரியைப் பொறுத்த வரையில் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை அதனுடைய அசெஸ்மெண்ட் நடந்து கொண்டிருக்கும் அந்த 3 ஆண்டு காலத்திற்குள், நாங்கள் பதவிக்கு வந்தவுடன், இப்போது இரண்டாவது முறையாக அவர்கள் பவனி வந்துவிட்டார்கள். அவர்கள் போடுகின்ற வரியைப் பார்க்கின்றபோது, ஒரு பிரச்சினையாக இருக்கிறது. இரண்டு மடங்குக்கு குறைந்து யாருக்கும் வரி விதிக்கவில்லை. இந்த சொத்து வரி என்பது, மாநகராட்சிக்கு மட்டும் இப்படி இருக்கிறதா? பக்கத்திலே இருக்கிற நகராட்சிகளுக்கு, பேரூராட்சிகளுக்கு இல்லை என்று சொன்னவுடன், மக்கள் இவைகளைப் பற்றிப் பேச ஆரம்பிக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, சென்னை மாநகராட்சிக்கும், மதுரை மாநகராட்சிக்கும், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கும் இந்த சொத்துவரிப் பிரச்சினையில் பல வேறுபாடுகள் இருப்பதாக நான் அறிகிறேன். எனக்குத் தெரிந்த வரையில் சென்னை மாநகராட்சிக்கு ஒரு விதமாக இருக்கிறது, மதுரை மாநகராட்சிக்கு ஒரு விதமாக இருக்கிறது, கோயம்புத்தூர்



1987 ஏப்ரல் 28] [திரு. எ. தெய்வநாயகம்]

மாநகராட்சிக்கு ஒரு விதமாக இருக்கிறது. இப்படி இருக்கக் கூடாது. இதை ஒருவகைப்படுத்த வேண்டும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

சென்ற முறை தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பது சம்பந்தமாக இங்கே பேசும்போது கூட நான் இதைச் சுட்டிக் காண்பித்தேன். அறிக்கையின் வாயிலாக இந்த சொத்து வரிகளை அசெஸ்மெண்ட் செய்கிறபோது, 40 சதவீதம் 50 சதவீதம் கூட்டுவோம் என்று அறிக்கை விட்டுவிட்டு, அப்போது சொத்து வரியை விதித்தால், அங்கேயிருக்கிற மக்களுக்கு எந்தச் சிரமமும் இருக்காது, அவர்களும் அதை ஏற்றுக்கொள்வார்கள். இல்லையென்றால் அதைப் போட்டுவிட்டு, பிறகு அதைக் குறைப்பதற்கு என்னென்ன முயற்சிகளை எடுத்தாலும், ஒரு சிலருக்கு மட்டும்தான் இதில் குறைப்பதற்கு வாய்ப்பு கிடைக்குமே தவிர, பலருக்கு கிடைக்காமல் போய்விடுகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலைமையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது இந்த சொத்து வரிப் பிரச்சனை. எனவே இந்த சொத்து வரிப் பிரச்சனையைப் பற்றி அறிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி டவுன்ஷிப்புக்கும் இது பொருந்துமா என்று மக்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பேரூராட்சிகள், நகராட்சிகள் பற்றிக் கூறும்போது, டவுன்ஷிப்பும் இதிலே அடங்குமா என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதையெல்லாம் மனதிலே வைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கொஞ்சம் கவனித்து, இந்த வரிப் பிரச்சனையில் எங்களுக்கு சலுகை காண்பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ரோடு வசதிகள். மதுரை மாநகராட்சியில் பல ரோடுகள் இன்னும் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. உலகத் தமிழ் மாநாடு 1982-லே நடந்ததற்கு பிறகு, கிட்டத்தட்ட 6, 7 ஆண்டுக்காலம் ஆகியும், ரோடுகள் அங்கே பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. இந்த ரோடுகளைப் பராமரிப்பதற்காக, அவர்கள் ஒரு கோப்பை அனுப்பியிருக்கிறார்கள், 3 கோடி ரூபாய்த் திட்டம் என்று சொல்லி, இந்த 3 கோடி ரூபாய்த் திட்டத்தை சாங்க்சன் செய்தால்தான் ரோடுகள் அங்கே வசதியாக போடுவதற்கு எங்களுக்கு செளகரியமாக இருக்கும் என்று கூறுகிறார்கள்.

[திரு எ. தெய்வநாயகம்] [1987 ஏப்ரல் 28

அந்தக் கோப்பு என்ன ஆயிற்று? எப்படி இருக்கிறது? நிறைவேறுமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. அதா ராடு வசதிகளைச் செய்வதற்கு எங்களிடத்திலே பணம் போதாத நிலைமை இருக்கிறது என்று கூறுகிறார்கள். இந்த

அடுத்து மதுரை மாநகராட்சியில், அங்கே மார்க்கெட், சந்தை ஏலம் என்பது ஒரு பிரச்சனையாக இருக்கிறது. பல சண்டை கள் அங்கே நடந்து கொண்டு இருக்கின்றன. அங்கே ஏழை எளியவர்களும், பூ விற்கும் வியாபாரிகளுக்கும் வியாபாரம் செய்கிறார்கள். தனி நபர்களுக்கு ஏலம் விடும்போது, அவர் களுக்கும், சில்லறை வியாபாரிகளுக்கும் தகராறு ஏற்படுகிறது. வியாபாரிகள் சங்கம் என்று வைத்துக்கொண்டு முறையிடு கிறார்கள். அந்த முறையீட்டை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இந்தத் திட்டத்தை ஒரு வழிப்படுத்தவேண்டும். அதாவது அந்த வியாபாரிகளுக்கு அங்கே ரெவின்யூ குறையாத அளவிற்கு சந்தைகளைக் காட்டி முடியுமா? அல்லது ரெவின்யூவை அதிகாரி கள் மூலமாக வசூல் செய்யலாமா என்பதை கொஞ்சம் ஆராய்ந்து பார்த்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன் சென்னை மாநகராட்சியிலே அப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட் டேன். இதே முறையை மதுரை மாநகராட்சிக்கும் கொண்டு வரவேண்டும். இது ஒரு பிரச்சினையாக இருந்து கொண்டிருக் கிறது. இந்த மார்க்கெட் பிரச்சினையில், தனி நபர்களுடைய ஏலம் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகிறது. என் னென்றால், போட்டி போட்டு ஏலம் எடுத்து விடுவதால், தனி நபர் கள் போய் ஏதாவது ஒரு காரணத்தைக் காண்பித்து, கோர்ட் டிலே தடை வாங்கிக் கொண்டு, ஏலத்தொகையை வசூல் செய்து கொண்டிருக்கிற ஒரு மோசடியை உருவாக்கிக் கொண்டு இருக் கிறார்கள். அதற்கு ஆட்படாமல், இதற்கு ஒரு நிரந்தரமான முடிவை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப் பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மின்சாரம் மதுரை மாநகராட்சியில் இந்த மின்சார இலாக்காவிலே பல இடையூறுகள் நடந்து கொண்டு இருக் கின்றன. சரியான மின் திட்டங்கள் அமைக்கப்படவில்லை. பல இடங்களில், சிப்பந்திகள் அமர்த்தப்படாமல் இருக்கிறார்கள்.



1987 ஏப்ரல் 28] [திரு. எ. தெய்வநாயகம்]

அமைக்கப்படாமல், டிரான்ஸ்பார்மர்கள் இல்லாத நிலைமையிலும் இருக்கிறது. வளர்ந்து வருகிற நகரத்திலே பல குளிர் சாதனம் பொருந்திய தியேட்டர்கள் அமைக்கப்படுகின்றன. குளிர்சாதனம் பொருந்திய பல கடைகள் அமைக்கப்படுகின்றன, இப்படியெல் லாம் கடைகளை அமைத்து அவர்கள் மின்சாரம் தேவை என்று சொல்கிற போது, அதனுடைய அவசியம் அதிகமாகிக் கொண்டே போகிறது. இதற்குத் தகுந்தாற்போல் மின்சார வசதியைப் பெருக்குவதற்கு அங்கே முடியவில்லை. அதற்கு வேண்டிய உப கரணங்கள் இல்லை என்று சொல்கிற நிலைமை இருக்கிறது. மேலும் அவர்களுக்கு வாகன வசதிகளும் கிடையாது. இப்படிப் பட்ட நிலைமையில் உழன்று கொண்டிருக்கிறது இந்த மின்சார இலாக்கா. எனவே இந்த இலாக்காவிற்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுரை மாநகராட்சியில் உள்ள வாகனங்களை செப்பனிடுவதற்கு ஒரு ஓர்க் ஷாப் இருந்தது. அந்த இடம் இன்னும் மாநகராட்சிக்குச் சொந்தமாக இருக்கிறது. அதிலே பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சம்பளம் வாங்கு கிறார்கள். ஆனால் அந்த ஓர்க் ஷாப் இயங்கவில்லை. மாநக ராட்சிக்கு என்று ஒரு ஓர்க் ஷாப் இல்லை என்று சொன்னால், சுகாதாரக் காரியங்களைச் செய்கிற லாரிகளையும், தண்ணீர் வசதிக்காக உள்ள லாரிகளையும், மின்சார வசதிக்காக உள்ள லாரிகளையும் செப்பனிடுவதற்கு ஒரு இக்கட்டான நிலைமை மதுரை மாநகராட்சியில் இருந்து வருகிறது. இதை நான் பல முறை சட்டமன்றத்திலே எடுத்துக் கூறியிருக்கிறேன். மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் புதிதாகப் பொறுப்பேற்றிருந்தாலும் இதை புண்ணியமாக நீங்கள் நினைத்து அந்தச் செயல் திறனை செயல் வடிவத்துக்குக் கொண்டு வரவேண்டுமென்று இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுரை மாநகரத்தினுடைய வளர்ச்சிக்காக ஒரு 'மாஸ்டர் பிளான்' என்ற ஒரு பிளானை, மதுரை மாநகரத் தினுடைய வளர்ச்சியை எண்ணி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே இங்கே அனுப்பி இருக்கிறார்கள்; அதிகாரிகளை கொடுத்து இருக்கிறார்கள். அந்த அறிக்கையின் மூலம் உலக வங்கியினுடைய கடன் வந்தவுடன் அந்த 'மாஸ்டர் பிளான்' நிவர்த்திச் செய்யப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அந்த உலக வங்கிக் கடனைப் பெறுவதற்கு தாங்கள் என்ன முயற்சி

[திரு. எ. தெய்வநாயகம்] [1987 எப்ரல் 28

எடுத்து இருக்கிறீர்கள். அதை எந்த அளவிலே உருவாக்கியிருக்கிறீர்கள் என்பதைப் பற்றி இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில், ஆவடி, திருவேற்காடு போன்ற பெரிய நகரியங்கள் உள்ளன. இவற்றில் ஏறத்தாழ தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள் இல்லை. நியமன உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு அதிகாரம் இல்லை. மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. அதிகாரிகள் மனம்போன போக்கில் நடக்கிறார்கள். தமிழகத்திலேயுள்ள எல்லா நகரியங்களையும் மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாத நகரியங்களாக மாற்ற வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதையும் கவனத்திலே கொண்டு, உங்களுடைய நல்ல எண்ணத்தை நாங்கள் எதிர்நோக்கி இருக்கிறோம். மதுரை மக்கள் வாழ, அவர்களுடைய எண்ணத்தை நீங்கள் ஈடேற்றுவதற்கு நல்ல பதிலை எதிர்பார்க்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று சமுதாய நல வளர்ச்சி, நகராட்சி, மாநகராட்சி என்ற தலைப்பில் இங்கே மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே இந்த மாமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்கள் கருத்தையெல்லாம் சொல்லி, இறுதியாக எனக்கு கிடைத்திருக்கிற இந்த நல்ல நேரத்தில் ஒருசில கருத்துக்களை நான் முன் வைக்க ஆசைப்படுகிறேன். இங்கே பேசிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் உள்ளாட்சித் துறையிலே ஒன்றுமே இல்லை. மோசமான நிலையிலே போய்க்கொண்டிருக்கிறது என்று குற்றச்சாட்டுகளைச் சொல்லியும், குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள், இந்தத் துறையைச் சார்ந்திருக்கிற அமைச்சருக்கு [illegible] இருக்கிறதா, இல்லையா என்ற கேள்வியையும் இங்கே அவருடைய



1987 எப்ரல் 28] [திரு. எம். அண்ணாதாசன்]

பாணியிலே கேட்டார்கள். நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். 1977 ஆம் ஆண்டு புரட்சித் தலைவரிடம் ஆட்சியை, மக்கள் அவர்கள் கையிலே கொடுத்து அமர வைத்ததற்குப் பின்னால் 1986 ஆவது ஆண்டு பிப்ரவரி திங்களுக்கு முன்னால் வரை இந்த மாமன்றத்திலே, எதிர்வரிசையிலே உட்கார்ந்து இருந்த அனைத்து மெம்பர்களும், உள்ளாட்சித் தேர்தல் நடைபெறவில்லை; உள்ளாட்சித் தேர்தல் நடைபெறவில்லை; மக்களுடைய உரிமை பாதுகாக்கப்படவில்லை; ஜனநாயகம் சாகடிக்கப்பட்டு விட்டது என்றெல்லாம் சொல்லி எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நாட்டிலே வாழுகின்ற அனைத்து சமுதாயத்தினருக்கும் சம உரிமை வேண்டும் என்ற அடிப்படையில் உள்ளாட்சித் தேர்தலை நடத்தவேண்டுமென்ற குறிக்கோளோடு கொண்டு வந்து மிக முக்கியமான திட்டத்தை, நீதி மன்றத்திற்குச் சென்று சில நேரங்களில் தடை படுத்தப்பட்டாலும், எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் சொல்லிய கோரிக்கைகளை ஏற்று உள்ளாட்சித் தேர்தலை நடத்தினார்கள் என்பதை தயவு செய்து மறந்துவிடக் கூடாது.

(மாலை 5-30)

உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி இந்த மாநிலத்தை ஆண்டு கொண்டிருந்த நேரத்தில், உள்ளாட்சி மன்றங்களுக்கு பொறுப்பானவர்கள் இல்லாத நேரத்தில், ஒவ்வொரு சிற்றூரிலும்; நகரத்திலும் பேரூராட்சியிலும் என்னென்ன திட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன, எந்தெந்த ஆண்டில் நிதி ஆதாரங்கள் எந்தெந்த வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, சிற்றூர்களின் வளர்ச்சி எவ்வளவு மேம்பாடு அடையச் செய்திருக்கிறது, ரோடு வசதிகள், பள்ளிக் கட்டிடங்கள். இன்னும் சமுதாயக் கூடங்கள், ஏழைஎளியவர்களுக்கு கடனுதவி அளிக்கின்ற மத்திய அரசின் கூட்டுத் திட்டங்கள் போன்றவற்றை, இது போன்ற அனைத்து திட்டங்களையும் இந்த அரசுதான் அன்றைக்கு செய்து முடித்தது என்பதை தயவுசெய்து மறந்துவிடக் கூடாது.

[திரு. எம். அண்ணாதாசன்] [1987 ஏப்ரல் 28

இங்கே பேசிய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர்
அப்துல் சமத் அவர்கள்கூட இங்கே பேசுகின்றபோது சொன்
னார்கள்—உள்ளாட்சிதுறைக்கு இருக்கின்ற அத்தனை அதிகாரங்
களும் பறிக்கப்பட்டு விட்டது என்று சொல்லிவிட்டு, இதிலே
கல்வியை எடுத்துக்கொண்டது ஏற்றுக்கொள்ளக் கூடியது, மக்கள்
நல்வாழ்வுத் துறையை எடுத்துக்கொண்டது ஏற்றுக்கொள்ளக்
கூடியது என்று பின்னால் சொல்லிவிட்டு, அவர் தன் பேச்சை
முடித்துக் கொண்டார்கள். நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்—ஆசிரியப் பெருமக்களுடைய நீண்ட
நாளைய கோரிக்கையை, நிறைவேற்றித் தரவேண்டும் என்ற
எதிர் வரிசையிலே இருக்கின்ற நீங்கள் குரல் எழுப்பினீர்கள்.
18 ஆண்டு காலமாக எங்களை அரசு ஊழியர்களாக ஆக்குங்கள்
என்று அந்த ஆசிரியப் பெருமக்கள் கேட்டுக்கொண்டு வந்தார்கள்.
ஆனால் புரட்சித்தலைவர் அவர்களுடைய ஆட்சியிலேதான்
அவர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டார்கள்.
ஊழியர்களாக ஆக்கப்பட்டதால், அரசாங்கத்தோடு அரசு
அரசு ஊழியர்களாக இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு அவர்கள்
அல்லாமல், அதற்குப் பின்னால் ஊராட்சி ஒன்றியத்தின் நிர்வா
கத்திலே விட்டுவிடுவது என்ற கோரிக்கையையும் இந்த
நிறைவேற்றி இருக்கிறது. அதனால் அவர்கள் அரசு அரசு
வுடன் இணைக்கப்பட்டார்கள். அதேபோல, மக்கள் இலாகா
துறை ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற நல்வாழ்வுத்
மக்கள் நல்வாழ்வுத் துறையை நேரடியாக கவனித்து நேரத்தில், அது
அதன் அதிகாரம் ஊராட்சி ஒன்றியத்தில்தான் வந்தது.
அவர்கள் தங்களையும் நேரடியாக அரசுத் இருந்தது.
கொள்ள வேண்டும் என்று பல காலகட்டத்தில் துறையில் ஏற்றுக்
வைத்திருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கையை கோரிக்கை
கின்ற வகையில். இந்த அரசு அந்தத் துறையையும் நிறைவேற்று
கொண்டது என்பதை தயவுசெய்து மறந்துவிடக் கூடாது. இணைத்துக்
சொல்லுகிறேன் என்றால், பறிக்கப்பட்டு என்
முதலிலே சொல்லிவிட்டு, பின்னாலே எடுத்துக்கொள்ளப்பட்டதை விட்டது என்று
ஒருவகையிலே வரவேற்கிறேன் என்று சொல்வது, அவ்வளவு
சாலச் சிறந்ததாக இருக்க முடியாது என்பதை நான் மிகவும்
பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 28] [திரு. எம். அண்ணாதாசன்]

இவ்வொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
உள்ளாட்சித் துறையில் இப்போது எந்த உரிமையை இந்த அரசு
பறித்து விட்டது என்பதை நான் பணிவோடு கேட்க விரும்பு
கிறேன். உள்ளாட்சித் துறையில், ஊராட்சித் தலைவருக்கு
இருக்கின்ற உரிமையை, அதிகாரத்தை இந்த அரசு எங்கே பறித்
திருக்கிறது? பேரூராட்சித் தலைவருக்கு, கவுன்சிலருக்கு இருக்கக்
கூடிய அதிகாரத்தை, இந்த அரசு எங்கே பறித்திருக்கிறது?
ஊராட்சி ஒன்றிய கவுன்சிலில் எடுத்துக்கொண்ட 3 துறைகளைத்
தவிர, அங்கே இருக்கின்ற மற்ற அதிகாரங்களை இந்த அரசு
எங்கே எடுத்திருக்கிறது என்பதை தயவுசெய்து எதிர்க் கட்சி
யிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அடுத்தடுத்து
பேசுகின்றபோது சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

இப்போது இருக்கின்ற இந்த அதிகாரம், இன்றைய சூழ்
நிலையில், கடந்த காலத்தில் உள்ளாட்சித் துறையில் நடந்து
கொண்டிருந்த நிலையைப் போல் அல்ல. இப்போது இருக்கின்ற
ஊராட்சித் தலைவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், ஓட்டுப்
போட்டவர்களுக்கு ஒரு நீதியும், ஓட்டுப் போடாதவர்களுக்கு
ஒரு நீதியுமாக உள்ளாட்சித் துறையில் இன்றைக்கு செயல்பட்டு
வருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டை, எனக்கு முன்னால்
பேசிய எங்கள் இயக்கத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்
பினர்கள் தெளிவாக, ஆதாரத்துடன் சொல்லியிருக்கிறார்கள்.
உதாரணத்திற்கு, ஒன்றைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.
ஊராட்சி ஒன்றியங்களில், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள்
தேர்தலுக்குப் பின்னால், தாங்கள் பதவிக்கு வந்ததற்குப் பிறகு,
அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரை, அந்த ஊராட்சி
ஒன்றியத்தில் உட்காருவதற்கும், அந்த சட்டமன்ற உறுப்பினர்
அங்கே இருக்கிற அதிகாரிகளை அழைத்து என்ன திட்டங்கள்
நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று கேட்கிற நேரத்தில் கூட,
அந்த ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராக இருக்கக்
கூடியவர்கள் அதிகாரிகளைக் கூப்பிட்டு மிரட்டிக்கொண்டு இருக்
கிறார்கள் என்பதை தயவு செய்து என்னால் புள்ளி விவரங்
களோடு சொல்ல முடியும். இன்றைக்கு தமிழ்நாட்டில் எதிர்க்
கட்சியிலே இருக்கிறவர்கள் சில ஊராட்சி ஒன்றியங்களைப்

[திரு. எம். அண்ணதாசன்] [1987 ஏப்ரல் 28

பிடித்து விட்ட காரணத்தால் அதை எந்த அளவிற்கு பயன் படுத்திக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் பயன்படுத்தாமல், எதிர்க்கட்சி ஆளும் கட்சி என்ற எண்ணத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நல்ல திட்டங்களை மக்களுக்குச் செய்ய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு செயல்படுவதில்லை என்று ஆதாரங்களோடு என்னால் விளக்கமாகச் சொல்ல முடியும்.

இன்றையச் சூழ்நிலையில், உள்ளாட்சித் தேர்தல்களுக்குப் பிறகு தமிழ்நாட்டிலே எவரிடமும் இருக்கிற அதிகாரத்தை இந்த அரசு பறிக்கவில்லை. காரியங்களைச் செய்ய முடியாதவர்கள், கையாலாகாதவர்கள் தான் இன்றைக்கு ஒன்றையுமே செய்ய முடியவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு புதன் கிழமையும், வெள்ளிக் கிழமையும் ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் செக் போட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். அது காங்கிரஸ் கட்சியாக இருந் தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந் தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி, எல்லா ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் புதன் கிழமையும், வெள்ளிக் கிழமையும் செக் போட்டுப் பணம் பெறாமல் இல்லை. அந்தப் பணம் மக்களுக்குச் சேவை செய்யப் பயன்படுகிறதா இல்லையா என்று பார்க்கும் பொறுப்பு நம்மிடத்திலே இருக்கிறது. அதை விட்டு விட்டு ஒன்றும் செய்ய முடியவில்லை என்று சொல்வது நல்ல பொருத்தமாக இல்லையென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையச் சூழ்நிலையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பொறுப்புகள் அதிகமாக இருக்கின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் கீழும் 2, 4, 6 பேரூராட்சிகள் வரை இருக்கின்றன. ஆனால் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு பொறியாளர் தான் இருக்கின்றார். அந்த ஒரு பொறியாளர்தான் எஸ்டிமேட் போடுவதும், சாங்ஷன் அளிப்பதும், செக் பண்ணுவதும், வேலை செய்ய அனுமதி கொடுப்பதும் என்ற நிலைமைகள் இருக்கின் றன. ஆறு பேரூராட்சிகளைக் கொண்ட, அதாவது கிட்டத்தட்ட 20 முதல் 26 ஊராட்சிகளைக் கொண்ட ஒரு ஒன்றியத்திற்கு ஒரு பொறியாளர் இருந்தால்—என்னுடைய தொகுதியிலே மிக அதிக



1987 ஏப்ரல் 28] [திரு. எம். அண்ணாதாசன்]

மான ஊராட்சிகள் ஒன்றியத்தின் ஆளுகைக்குள் இருக்கின்றன— மக்களுடைய தேவைகளை கவனிப்பதில் மக்களுக்குத் தேவை யான சேவையை செய்வதில் தாமதமாகிறது. எனவே என்னுடைய கோரிக்கையாக மாண்புமிகு அமைச்சர் அவர்க ளிடம் நான் வைக்க விரும்புவது என்னவென்றால், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு பொறியாளர் என்று இருப்பதை மாற்றி, ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இயங்கும் பேரூராட்சி களையும், ஊராட்சிகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு இன்னும் அதிகப்படியாக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு பொறியாளரையாவது நியமிக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியிலே இருக்கிற 'பொன்மலை' நகராட்சி மிகவும் பின் தங்கிய நகராட்சி. அது மிகப் பெரிய பரப்பளவைக் கொண்டதாகும். ஆனால், அங்கே பின் தங்கிய மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் அதிகமாக வாழ்கிறார்கள். அது நகராட்சியாக ஆனதற்குப் பின்னாலேதான் தேர்தலே நடந்தது. தேர்தலுக்குப் பின்னால் அந்த நகராட்சியை நல்ல முறையிலே செயலுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த நகராட்சி நிர்வாகத்தைப் பார்வையிடுவதற்கு தலைவர்களுக்கும், மற்றும் உள்ள கவுன்சிலர்களுக்கும் எந்தவிதமான வசதியும் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது அந்தப் பொன்மலை நகராட்சிக்கு நிதி உதவி செய்து வாகன வசதியைப் பெருக்கித் தர வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து பேச அளித்த வாய்ப்புக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாலை 5-40)

**திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானிய கோரிக்கை மீது பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றியினைக் கூறிக் கொள்கிறேன்.

எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அன்னைவரும் போற்றுகின்ற சத்துணவுத் திட்டத்தை கொண்டு வந்து சத்துணவு உண்ணுகின்ற குழந்தைகளுக்கு இலவச பாட புத்தகங்களையும் இலவச சீருடைகளையும் வழங்கினார். அது மட்டும் அல்லாமல் குழந்தைகளுக்கும், ஏழை தாய்மார்களுக்கும் இலவச காலணிகள் வழங்கும் திட்டத்தையும் கொண்டு வந்தார்,

புள்ள கிராமங்களிலும் சேர்ந்து மொத்தம் 108 கிராமங்களில் சுமார் 35,000 மலை வாழ் மக்கள் (1980 ஆம் ஆண்டு நேர்முக கணக்குப்படி) வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் ஒரு சில கிராமங்கள் நீங்கலாக 99 சதவீதம் மக்கள் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள். 7 ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்தும் மலை வாழ் மக்கள் கவனிக்கப்படாமலும், மலைவாழ் மக்களுக்கென்று ஒதுக்கப்படும் தொகை, அம்மக்களுக் குப் போய்ச் சேராமலும் உள்ளது. எனவே அம்மக்களுக்கு உரிய தொகையினை வழங்கி நல்ல முறையில் அந்த மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற வகையில், தமிழக முதல்வர் அவர் களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி பச்சைமலைப் பகுதியில், துறையூர் ஒன்றியத் தில் இரண்டு பஞ்சாயத்துக்களையும், உப்பிலியாபுரம் ஒன்றியத் தில் ஒரு பஞ்சாயத்தையும், சேலம் மாவட்டத்தில் உள்ள பச்சை மலைப் பஞ்சாயத்தையும் ஒன்றாக சேர்த்து, பச்சைமலைப் பகுதியை மட்டும் ஒரு தனி ஊராட்சி ஒன்றியமாக அமைக்க வேண்டுகிறேன். அப்படி தனி ஒன்றியமாக பச்சை மலை அமைக்கப்படும்போது தான் அப்பகுதி மலை வாழ் மக்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையமுடியும். அப்பகுதியி லுள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள், போக்குவரத்து, மின்சார வசதிகள் எதுவும் கிடையாது. தற்போது துறையூர் ஒன்றியத்தில் பச்சைமலையில் போடப்பட்ட சோலார் லைட் (சூரிய ஒளி விளக்கு) அமைக்கப்பட்டது. அது பயன் தர வில்லை. எனவே பச்சைமலை முன்னேற்றம் அடைய அப்பகுதி யினை தனி ஊராட்சி ஒன்றியமாக ஆக்கவேண்டும். அப்படி ஆக்கப்படும்போது, மத்திய அரசு நிதியினை திருப்பி அனுப் பாமல் அவ்வூராட்சி ஒன்றியமே பயன்படுத்தும் வாய்ப்பு உள்ளது. எனவே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் பச்சைமலைப் பகுதியை தனி ஊராட்சி ஒன்றியமாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி. தொழிற்துறையில் எந்தவித முன்னேற்றமும் அடையவில்லை. எனவே அப்பகுதியை தொழிற்துறையில் பின்தங்கிய பகுதியாக, துறையூர் தாலுக்காவை அறிவித்து, தொழில் துவங்க முன்வருபவர்களை ஊக்குவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.





நான் மலைவாழ் மக்களின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டதின் காரணமாக, அவர்களின் நல்வாழ்விற்கு பாடுபடுவது எனது கடமையாகும். இரண்டு சாலைகள் அமைக்கும் பணி துவங்கப் பட்டது. ஆனால் இதுவரையில் அப்பணி முடிவடையாமல் உள்ளது. அதனால் அம்மக்கள் 25 கிலோமீட்டர் தூரம் மலைப் பகுதியில் நடந்து போய் வந்து, தமது ஜீவனத்தை நடத்தி வருகிறார்கள். பெரிய இலுப்பூர், மணலோடை ஆகிய இடங் களில் இரண்டு மருந்தகங்கள் கட்டப்பட்டு, அங்கே இதுவரையில் டாக்டர்கள் கூட நியமனம் செய்யப்படாமல் இருக்கிறது. அதனை அரசு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்களுக்கென்று பச்சைமலைப் பகுதியில் லேம்ப் சொசைட்டி ஒன்று அமைக்கப்பட்டது. அந்த 'லேம்ப் சொசைட்டி' மூன்று முறை மூடப்பட்டு தற்போது பெருவாரி யான நஷ்டத்தில் நடந்து வருகிறது. ஆகவே அச்சங்கம் மலை வாழ் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை விற்பனை செய்வதில்லை. மலை வாழ் மக்களால் சேகரிக்கப் படும் கடுக்காய், தேன், எள், கடுகு, மொச்சை போன்ற பொருள் களை வாங்கி விற்குமேயானால், அச்சங்கத்திற்கு நஷ்டம் ஏற் படாது. அத்துடன் அங்குள்ள உறைவிடப் பள்ளிக்குத் தேவையான பொருட்களையும் கீழேயிருந்து பள்ளிப் பொறுப் பாளர்கள் வாங்கிச் செல்வதால், அப்பொருள்கள் சரியாக அப் பள்ளிக்குப் போய்ச் சேருவதில்லை. எனவே இதனை தவிர்க்கும் பொருட்டு, உறைவிடப் பள்ளிக்குத் தேவையான அரிசி முதல் மற்ற அத்தியாவசியப் பொருள்களை 'லேம்ப்' சொசைட்டியிலே தான் வாங்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தினால், அச் சங்கமும் பிழைக்கும், உறைவிடப் பள்ளிக்கும் பொருள்கள் போய்ச் சேரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாலை 5-50)

மலையின் மேல் மின் வசதி ஏற்படுத்த பல ஆண்டுகளுக்கு முன் திட்டம் துவங்கப்பட்டது. ஆனால் மின் கம்பம் மட்டும் நடப்பட்டு பணி பூர்த்தி அடையாமல் உள்ளது. இவை அனைத் தையும் விரைவுபடுத்தி, மலைவாழ் மக்களின் வாழ்வு ஒளி பெறச் செய்ய வேண்டுமாய் மாண்புமிகு இதய தெய்வம் அவர் களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆர்.எல்.ஈ.ஜி.பி.. மற்றும்

[திரு. எம். செல்லமுத்து] [1987 ஏப்ரல் 28

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கொரு தடவை டெல்லிக்குச் செல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அதனாலே மத்திய அரசிடம் அதிக அளவு வலியுறுத்தி அந்த வறுமையை ஒழிக்கும் திட்டத்திற்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டும். குறைந்தபட்சம் ஒரு 10, 15 சதமாவது மத்திய பட்ஜெட்டிலே ஒதுக்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று நான் முதலிலே தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். இன்றையதினம் பஞ்சாயத்து ஊழியர்களும், அதே போல், பகுதி நேர எழுத்தர்களும் அரசுக்கு பல்வேறு கோரிக்கை களை வைத்து, தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று உண்ணாவிரதம் உள்பட பல போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை அரசு உரிய முறையில் பரிசிலித்து நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாநகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்த வேண்டியது மிக, மிக அவசியமானது. மதுரை மாநகராட்சிக்கும், கோவை மாநகராட்சிக்கும், சென்னை மாநகராட்சிக்கும் உடனே தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் மக்கள் குறைகளைக் களை வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை நான் முன் வைக்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு ஆர்.இல்.இ.ஜி.பி. மூலம் என் ஆர் இ.பி. மூலம் போடப்படக்கூடிய பல்வேறு வேலைகளுக்கு அரசின் சார்பிலே அரிசியாகவும், பணமாகவும் வழங்குகிறார்கள். அரிசியும், கோதுமையும் என்று சொன்னால், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மக்கள், குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே உள்ள மக்கள் கோதுமையைச் சாப்பிடுவதே இல்லை. ஆனாலும் கோதுமையும், அரிசியும் தான் தருகிறார்கள். அரிசியும் மடை நாற்றம் எடுத்து. அந்த அரிசியை யாரும் வாங்குவதே இல்லை. ஊராட்சி மன்றத் தலைவர்களும் எடுத்துக் கொள்வ தில்லை. டெப்பந்தக்காரர்களும் எடுத்துக் கொள்வதில்லை. அதனால் அந்த அரிசியை விற்று விட்டு பணமாகத் தான் தருகிறார்கள். எனவே தான் இந்த அரிசியைக் கொடுக்கும்



1987 ஏப்ரல் 28] [திரு. செல்லமுத்து]

போது, தரமான அரிசியை எடுத்துக் கொடுப்பதற்கும் அந்த அரிசி வறுமையால் வாடுகிற அந்த மக்களுக்கு பயன்படுகின்ற அளவுக்கு, அவர்கள் அந்த அரிசியைப் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு நல்ல தரமான அரிசியாக கொடுக்க வேண்டும்.

அதேபோல் வேலைக்குக் கொடுக்கக்கூடிய அரிசிக்குக் கூட அவர்கள் அள்வு அடிப்படையிலே—ஒரு 100 கிலோ கொண்ட மூட்டை என்று சொன்னால், அங்கே போய் அதைப் பார்க்கிற போது 5 கிலோ, 6 கிலோ குறைவாக இருக்கிறது. அதனால் பல்வேறு சங்கடங்கள் உருவாகின்றன. அந்த அரிசி கூட தரமான அரிசியாகவும், நல்ல அளவோடும் கூடிய முறையிலும் வழங்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்.ஆர்.இ.பி., திட்டத்திலே சமூகக் காடு வளர்ப் பதற்காக 25 சதவிகிதம் பணத்தைக் கட்டாயமாக ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கோருகிறார்கள். அப்படிக் கோருவதால், பணம் ஒதுக்கப்படுகிறது. அப்படி அந்த சமூக நலக் காடுகள் எல்லாம் இன்றைக்கு வளர்ப்பதற்கு ஒரு கன்றுக்கு 60 பைசா என்று நிச்சயிக்கிறார்கள். வேலி அடைக்க முடியாது. கன்று போட முடியாது. போட்ட கன்றுக்கும் தண்ணீர் ஊற்றுவதற்கு பணம் இல்லை. அதனால் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இன்றைக்கு எவ்வளவு கன்றுகள் இரண்டு, மூன்றாண்டுக் காலத்திலே நடப் பட்டன, எவ்வளவு கன்றுகள் உயிரோடு இருக்கின்றன, எவ்வளவு அதனால் பலன் ஏற்பட்டிருக்கிறது என்ற ஒரு விவரத்தை ஆராய்ந்து, அதில் இருக்கக்கூடிய முறைகேடுகளை நிவர்த்திக்க வேண்டும். ஆனால் அந்தக் காடு வளர்ப்புத் திட்டம் என்பது இன்றைக்கு யாருடைய நலனுக்காகவோ இருக்கக்கூடிய ஒரு திட்டமாகத் தான் இருக்கிறதே தவிர, அந்தக் காடு வளர்ப்பி னுடைய உண்மையான பலன், நலன் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. அதில் இருக்கக்கூடிய குறைபாடுகளை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். செல்லமுத்து] [1987 ஏப்ரல் 28

அடுத்து, வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டம் ஒரு நல்ல திட்டம் தான். ஏனென்றால் அவர்கள் சாலை ஓரத்திலே கிராமப்புறங்களிலே குடிசைகளிலே வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். அவர்களுக்குத் தரமான வீடுகளைக் கட்டித் தர வேண்டும். ஆனால் இப்போது கட்டிக் கொடுக்கக்கூடிய வீடு களுக்கு எல்லாம் 6,000 ரூபாய் ஒதுக்குகிறார்கள்.

அந்த 6,000 ரூபாய்க்கு, ஏறியிருக்கக்கூடிய விலைவாசிக்கேற்ப அந்த வீடுகள் எல்லாம் கட்டப்பட முடியவில்லை. அதிலே ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், அல்லது அதிகாரிகளும் சேர்ந்து சில ஒப்பந்தக்காரர்களைக் கூடப் பிடித்துக் கொள் கிறார்கள். அந்த வீடுகள் எல்லாம் தரமாக இல்லாமல் கட்டி முடிந்து ஓராண்டுக் காலத்தில் இடிந்து விழக்கூடிய சூழ் நிலை இருக்கிறது. எனவே, அவைகளைத் தரமான வீடுகளாகக் கட்டித் தர ஏற்பாடு செய்து, கான்கிரீட் வீடுகளாகக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்து, அதிக நிதியை ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பெண்களுக்கு கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம் என்று கொள்கைக் குறிப்பிலே கூறியிருக்கி றீர்கள். 11,239 கழிப்பறைகள் கட்டி இருப்பதாகச் சொல்லி இருக்கிறது, குறிப்பிலே. நாங்கள்கூட, அந்தக் கழிப்பறைகள் கட்டுவதை எதிர்க்கவில்லை. வரவேற்கிறோம். ஆனால், இன்றைக்கு 11,239 கழிப்பறைகளும் உபயோகத்தில் இருக்கின் றனவா என்றால் நிச்சயமாக இல்லை. எங்கேயும் தண்ணீர் வசதியில்லாமல் அவைகள் எல்லாம் பன்றிகள் தூங்கக்கூடிய ஒரு இடமாகத் தான் இருக்கிறதே தவிர, கழிப்பறைகள் வசதி யுள்ள கழிப்பறைகளாக இல்லை. அதை ஒரு ஆய்வு செய்து அதில் இருக்கக்கூடிய குறைகளைப் போக்கி, எல்லாக் கழிப்பறை களுக்கும் தண்ணீர் கொடுக்கக்கூடிய காரியத்தையும் செய்து, கிராமங்களில் இருப்பவைகளை பராமரிப்பதற்கு ஊழியர்களைப் போடுவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 28] [திரு. எம். செல்லமுத்து]

ஊராட்சிக்கு அதிகாரம் வேண்டும் என்று சொல்கிறபோது, 'எங்கே அதிகாரம் இல்லை' என்று சொன்னார்கள். இப்போது இருக்கக்கூடிய ஊராட்சிகளுக்கு 50 அடி அளவுக்குள்ளே பைப் அடிக்கலாம். வேறு அதிகாரமே இல்லை. பஞ்சாயத்து பணம் இருந்தால் செய்யலாம். பஞ்சாயத்தோ, 15 ஆண்டுக் காலமாக தேர்தல் நடத்தப்படாமல் இருந்த பணிகளை எல்லாம் ஸ்பெஷல் ஆபிசர்கள் ஸ்பெஷலாகவே வேலை செய்து முடித்து விட்டு, அந்தப் பணம் இல்லாமல் திண்டாடக்கூடிய நிலையில் இருக்கக் கூடியவைகளுக்கு அந்த 50 அடி அளவுக்குத் தான் பைப் போட அதிகாரம் இருக்கிறதே தவிர, வேறு எந்த அதிகாரமும் இல்லை, எனவே, அந்தப் பஞ்சாயத்துகளுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுப்பதற்கான முறைகளில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 6-00)

அதைப் போல, குடிநீர் பம்புகளுக்குக்கூட அவர்களால் சாமான்கள் வாங்க முடியாது. மின் விளக்குகளுக்குக்கூட அவர்கள் சாமான்களை வாங்க முடியாது. அப்படியே வாங்க வேண்டுமென்றால் அதிகாரம் பெற்ற அதிகாரிகளிடம் அதற்கான அனுமதியைப் பெற்று பின்னாலே மாவட்ட ஆட்சித் தலைவர் எங்கேயோ ஒரு இடத்தில் நிச்சயித்திருக்கிற கடைகளில் வாங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். அந்த சாமான்களும்கூட தரமானதாகத் தெரியவில்லை. லோகலில் இருக்கிற வேறு கடைகளில் சாமான்கள் தரமானவைகளாக இருக் கின்றன. அதோடு அந்தப் பொருள்களின் விலையும் குறைவாக இருக்கின்றது. இருந்தாலும் அங்கே போய் வாங்க முடியாத என்வே இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு ஊராட்சித் தலைவரும் எந்தக் கடையில் தரமான சாமான்கள் இருக்கிறதோ அதை அறிந்து அந்தச் சாமான்களை அந்தக் கடைகளிலே வாங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யக் கூடிய வகையில் உத்திரவிட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். செல்லமுத்து] [1987 ஏப்ரல் 28

அதைப் போலவே ஊராட்சி ஒன்றியத்திற்கு வரக்கூடிய வரிகள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பகிர்ந்தளிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. பஞ்சாயத்து செஸ், நிலவரி இன்னும் சில செஸ் போன்றவைகள் உரிய முறையில் இன்னும் வந்து சேரவில்லை. குறிப்பாக நாகப்பட்டிணம் ஊராட்சிக்குப் பல லட்சக்கணக்கான ரூபாய் மாவட்ட அரசு அதிகாரியிட மிருந்து வர வேண்டும் என்று கூறுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளுக்கு அரசு உடனடியாக தீர்வு காணவேண்டும்—அதை உடனடியாக ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

வரிவிதிப்பு சம்பந்தமாக அரசு அதிகாரிகளை நியமித்து அதன் காரணமாகப் பல சிக்கல்கள் உருவாகி இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) அதிலிருந்து விடுவிக்க உடனடியாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களையும் நகராட்சிகளையும் பொறுத்தவரையில் அவைகளே வரிகளைப் போட்டுக் கொள்ளக் கூடிய உரிமையை வழங்க வேண்டும். அப்படி அவர்கள் செய்கிறபோது அவர்களுக்குத் தேவைப்படும் அதிகாரிகளையும் ஊழியர்களையும் நியமித்து வரிகளை வசூலித்துக் கொண்டு மக்களுக்கு வசதியைச் செய்து கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மீன்பாசி குத்தகை ஏற்கெனவே பஞ்சாயத்தில்தான் இருந்தது. இன்றைக்கு அந்தக் குளங்கள் எல்லாம் கிராம மீனவர்கள் சங்கம் என்று வைத்திருப்பவர்களிடம் எங்கேயோ இருப்பவர்களிடம் மொத்தமாகப் பேசி விடுகிற நிலைமை இருக்கிறது. அவர்களிடம் பணம் வசூலிப்பதற்கு நீண்ட காலமா கிறது. காத்துக் கிடக்க வேண்டியதாயிற்று. அதுவும் அவர்கள் 25 சதவீதம் பணத்தை மட்டும் கொடுத்தாலே போதும் பாக்கியை அவர்கள் பிறகு கொடுக்கலாம் என்று சொல்லப்படுவதால் பஞ்சாயத்துக்களுக்கு வர வேண்டிய பணம் பாழ்பட்டுப் போய் விடுகிறது. எனவே இந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அந்தக் குளங்களை எல்லாம் கூட பராமரிக்கிற பொறுப்பு பஞ்சாயத்தின் தலையில்தான் விழுகிறது. ஆனால் அந்தக் குளத்தில் சங்கத்தைச் சார்ந்த வர்கள் இரசாயனப் பொருள்களைக் கலந்து அந்தத் தண்ணீரையே



1987 ஏப்ரல் 28] [திரு. எம். செல்லமுத்து]

மக்கள் உபயோகப்படுத்த முடியாத நிலையை உருவாக்கி கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த முறையைக் கைவிட்டு மீண்டும் பஞ்சாயத்தே அந்தக் குளங்களையெல்லாம் ஏலம் விடுகிற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஊராட்சிகளுக்குப் பயன்படும் மரங்களை வைப்ப தற்கு நிறைய உதவிகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது புளிய மரமாக இருந்தாலும் தென்னை மரமாக இருந்தாலும் பஞ்சாயத்து சார்பில் வைத்து உருவாக்க பஞ்சாயத்துக்களுக்கு நிதியாதாரங்களை அரசு உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் (மணி அடிக்கப்பெற்றது)

அடுத்து மாவட்டங்களைப் பிரிப்பதுபோல, வருவாய் வட்டங் களைப் பிரிப்பதைப் போல ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்க வேண்டும். அந்த அடிப்படையில் நாகை ஊராட்சி ஒன்றியம் 57 ஊராட்சிகளைக் கொண்டது எனவே அதைப் பிரிக்கவேண்டும் என்று ஏற்கெனவே கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக செய்ய வேண்டுமென்று தான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பேரூராட்சி நிர்வாகம் இன்றைக்குப் பணம் இல்லாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. அதிலும் பேரூராட்சி மன்றங் களின் அதிகாரிகளுக்கு அதாவது ஈ.ஓ. க்களுக்கு அரசே சம்பளம் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். உள்ளாட்சி அமைப்புகளில் வேலை செய்யக்கூடிய துப்புறவுத்தொழிலாளர் களுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள துப்புறவுத் தொழி லாளர்களுக்கு எப்படி அரசு சம்பளம் வழங்கப்படுகிறதோ அதைப் போல் தமிழ்நாடு முழுவதும் உள்ள பேரூராட்சி, ஊராட்சி மன்றங்கள் மற்றும் நகராட்சி மன்றங்களில் பணி புரியக்கூடிய துப்புறவுத் தொழிலாளர்களுக்கும் அரசே சம்பளம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே கேளிக்கை வரி, நிலவரி இவைகளை ஊராட்சிகளுக்கே கொடுத்துவிட வேண்டும். அதிலிருந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பிரித்துத் தருகிறார்கள். இதன் காரணமாக நிர்வாகம் நடப்பதில் கஷ்டமும் சிக்கலும் ஏற்படு

[திரு. எம். செல்லமுத்து] [1987 ஏப்ரல் 28

திறது. எனவே ஊராட்சிகளுக்கே கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

* திரு. மு. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் நகராட்சி மற்றும் சமுதாய வளர்ச்சி மானியக்கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு தந்த தங்களுக்கு முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டில் வசிக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டும் என்ற எண்ணத்தோடு தமிழக முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 1986 ஆம் ஆண்டில் உள்ளாட்சித் துறையில் தேர்தல்களை நடத்தியிருக்கிறார்கள். அந்தத் தேர்தலில் மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்கள் அதிகமாக வெற்றி பெற்றிருந்தாலும் மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் கோட்பாட்டிற்கு இணங்க இன்றைக்கு மக்களுடைய பிரதிநிதிகள் யாராக இருந்தாலும் அவர்களை மதிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 1986—87 ஆம் ஆண்டுக்காக உள்ளாட்சித் துறைக்கு ரூ. 177 கோடியை ஒதுக்கித்தந்தார்கள். ஆனால் இப்போது 1987—88 ஆம் ஆண்டிற்கு 193 கோடியை ஒதுக்கி ஜனநாயகத்தை மதித்து நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தன்னிறைவுத் திட்டத்தை 1981 ஆம் ஆண்டு கொண்டு வந்து தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும், பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் இணைப்புச் சாலைகள் தந்து, போக்குவரத்து வசதிகள் தந்து, பேருந்துகள் செல்லுகின்ற அளவிற்கு வசதி செய்து தந்து, ஏழையெளிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மக்களுக்காக பல்வேறு வசதிகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 ஏப்ரல் 28] [திரு. மு. தங்கமணி]

கிராமப்புற மக்களுக்கு நகர்ப்புறங்களில் உள்ள வசதிகள் கிடைத்தாக வேண்டும் என்ற புரட்சித் தலைவரின் புனிதக் கொள்கைக்கிணங்க கிராமப்புறத்தில் அடிப்படை வசதிகள் இன்றைக்கு ஓரளவிற்கு பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக கிராமப்புறங்களில் உள்ளவர்கள் பல்வேறு வசதிகளைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது, மறந்துவிட முடியாது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப்புறத்தில் இருக்கின்ற மக்களுக்கு 1934 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று புரட்சித் தலைவர் அவர்கள் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குகிற ஒரு திட்டத்தை அறிவித்து அதை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு முதல் கிராமப்புறத்தில் இருக்கின்ற மக்களுக்காக வீடியோ கேசட் ரிக்கார்ட் பிளேயர் வழங்கும் மாபெரும் திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் வாயிலாக கிராமப்புற ஏழையெளிய, படிக்காத பாமர மக்கள், ஆகியோர் கல்வி, சமுதாயம் சத்துணவு, முதியோர் கல்வி, மருத்துவம், விவசாயம் போன்றவற்றைப் பற்றி தெரிந்து கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்

அதைப் போன்று அந்தந்த நகராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றுக்கே வரி விதிக்கும் பொறுப்பை தந்திருக்கிறார்கள். அரசியல் நோக்கோடு அரசு மீது சுமத்திய பழி வாங்கும் செயல் இதனால் நீக்கப்பட்டு பொது மக்கள் அடையாளம் தெரிந்து கொள்ளும் அளவிற்கு இன்றைக்கு இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது. புரட்சித் தலைவர் அவர்கள் வரி விதிக்கும் பொறுப்பை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற அந்தந்த தலைவர்களுக்கே தந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது உண்மையிலேயே புரட்சித் தலைவருக்கு நான் பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. மு. தங்கமணி] [1987 ஏப்ரல் 28

ஏழையெளிய கிராமப்புற மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் ஆகியவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக மைய அரசும், மாநில அரசும் சமமாக நிதியை ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களை செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப் போலவே ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், தேசிய வேலை வாய்ப்புத் திட்டம் மூலமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மானியத்தோடு கடன் வழங்கப்பட்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கபட்டு வருகிறது என்பதைப் பார்க்கும்போது இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இலவச காலணிகள், இணைப்புச் சாலைகள், சிறு பாலங்கள், சமுதாயக் கூடங்கள், சத்துணவுக் கட்டிடங்கள், ஊராட்சிக் கட்டிடங்கள் போன்றவை உருவாக்கப்பட்டு கிராமப்புறத்தில் ஒரு எழுச்சியை உண்டு பண்ணும் அளவிற்கு நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் வாயிலாக படித்த இளைஞர்களை தேர்வு செய்து அவர்களுக்கு மானியத்தோடு கடன் தந்து அவர்கள் பெறுகின்ற பயிற்சிக்கேற்ப தொழில் தொடங்க கடன்களை வழங்கி அவர்கள் எல்லாம் சுயமாக தொழிலைத் தொடங்கும் அளவிற்கு ஒரு நிலையை உருவாக்கியுள்ளதற்காக இந்த அரசை நான் பாராட்டியாக வேண்டும்.

ஐ.ஆர்.டி.பி., திட்டத்தின் மூலமாக ஒன்றரை ஏக்கருக்குக் கீழேயுள்ள சிறு விவசாயிகளுக்கு மின்சார மோட்டார்கள், ஆயில் என்ஜின் தரப்பட்டு விவசாயிகளின் திறமையை பெருக்குவதற்கும், விவசாயிகளுடைய பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும் இந்த அரசு மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய மயிலாடுதுறை நகராட்சியைப் பொறுத்த வரையில் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு மிகவும் மோசமாக இருந்த சூழ்நிலையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவரிடம் எடுத்துச் சொன்னதற்குப் பிறகு,



1987 ஏப்ரல் 28] [திரு. மு. தங்கமணி]

(இரவு 6-10)

15 இலட்சம் ரூபாய் அதற்குத் தேவை என்று எடுத்துச் சொன்னதற்குப் பிறகு எங்களுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயை மயிலாடுதுறை நகராட்சிக்கு குடிதண்ணீர் பிரச்சினைக்காக தந்திருக்கிறார்கள். இதற்காக மயிலாடுதுறை நகர மக்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் கடந்த 25—3—1987-ல் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒருவரால், மக்கள் பிரதிநிதியாக இல்லாத ஒருவரால் மயிலாடுதுறையில் அரசுப் பணத்தில் கட்டப்பட்ட கட்டிடத்தைத் திறக்க ஆயத்தம் செய்யப்பட்டு, அங்கே நகராட்சிக் கட்டிடத்தில் வரவேற்பு என்று பத்திரிகை அச்சடிக்கப்பட்டு, நகர மன்ற உறுப்பினர்களுக்குக்கூடத் தெரியாமல், அந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, எந்த அளவுக்கு மாற்றுக் கட்சியில் உள்ளவர்கள் தங்களுக்குள்ள அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பொழுது விடிந்தால் அரசைக் குறை சொல்லுவதையே தொழிலாக வைத்துக்கொண்டுள்ள ஒரு அரசியல் கட்சியின் தலைவர், அரசின் நிதியில் கட்டப்பட்ட கட்டிடத்தை எந்த நோக்கத்தில் திறக்க வருகிறார், எந்த ஜனநாயகத்தின் அடிப்படையில் இது நடக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அடுத்து என் ஆர் இ பி., ஆர் எல் இ ஜி பி., ஆகிய திட்டங்களின் மூலமாகக் கட்டப்படுகின்ற வீடுகள் குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சிக்காரர்களுக்காகக் கட்டப்படுகிறது. என்னுடைய ஊராட்சி ஒன்றியத்தில் சித்தமல்லி என்ற கிராமத்தில் 28 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அதில் 19 ஆம் பட்டாதாரர் அய்யாறு என்ற ஒரு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர். அவருக்கு வீடு கொடுக்காமல், அங்கே கட்டி முடிக்கப்பட்டுள்ள 28 வீடுகளையும் மாற்றுக் கட்சியினருக்கு கொடுத்திருக்கிறார்கள். எந்த அதிகாரத்தில்

[திரு. மு. தங்கமணி] [1987 ஏப்ரல் 28

இது நடக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கக்
கிறேன். ஊராட்சி மன்றங்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு,
நகராட்சிகளுக்கு அதிகாரமில்லை என்று சொல்லுகிறார்கள்.
ஆனால் இப்படிப்பட்ட காரியங்கள் செய்ய எந்த இடத்திலே
அதிகாரம் வருகிறது என்பதை எண்ணிப் பார்க்கக் கோரு
கிறேன். இந்த மாதிரி குறைபாடுகளைப் போக்க வேண்டும்.
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அனைவருக்கும் வீடுகள்,
இலவசக் காலணிகள் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தைப்
பரவலாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு செயல்படும் நேரத்
தில், சில அரசியல் கட்சிகள் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடு
படும்போது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்
களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும் இதை
மாவட்ட ஆட்சித் தலைவரோடு பேசி, தாட்கோ அல்லது சட்டப்
பேரவை உறுப்பினர்கள் இணைந்த ஒரு கமிட்டியை அமைத்து
இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

மயிலாடுதுறை நகராட்சிக்கு பாதாள சாக்கடை, மின் விளக்கு
களை சோடியம் விளக்குகளாக மாற்றி அமைத்தல், பாதைகள்
அமைத்துத் தருதல் போன்றவற்றை செய்து தர வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பல்வேறு திட்டங்களைச்
செய்து தர வேண்டுமென்று கேட்டு, ஆற்காடு ராதாநல்லூர்
அய்யாவையாற்றின் குறுக்கே பாலத்தை சிறப்பான முறையில்
ஆர்.எல்.இ.ஜி.பி., திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்து தர வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக ஊராட்சி ஒன்றியங்களின்
மூலமாகப் பராமரிக்கப்படுகிற சாலைகள் மிகவும் மோசமாக
இருப்பதால் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கு ஏற்பவும்,
பஞ்சாயத்துக்களின் அடிப்படையிலேயும் ஒரு பொது நிதியை
ஏற்படுத்தி, அந்தச் சாலைகளைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரிய ஊராட்சி மன்றங்
களை இரண்டாகப் பிரித்து, நிர்வாகம் சிறப்பாகச் செயல்பட
வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
ஊராட்சி மன்றங்களில் உள்ள விவசாயிகளுக்கு மழைக் காலங்களில்



1987 ஏப்ரல் 28] [திரு. மு. தங்கமணி]

தார்பாய் கொடுத்து உதவும் வகையில் ஓர் ஊருக்கு ஒரு தார்பாய்
வாங்க ஆணையருக்கு ஆணை பிறப்பித்து, விவசாயிகளின் குறை
களைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு,
வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன்.

* **டாக்டர் க. நல்லமுத்து**: மாண்புமிகு தலைவரவர்களே,
1987—88 ஆம் ஆண்டுக்கான சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள்,
நகராட்சி நிர்வாகம் குறித்த மானியக் கோரிக்கை எண் 28-ல்
இந்திய தேசியக் காங்கிரஸ் சார்பில் கருத்துக்களைச் சொல்ல
வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழக அரசால் செயல்படுத்துவதற்கு இங்கே
பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. பாரதப் பிரதமர்
திரு. ராஜீவ் காந்தி அவர்களால் சமுதாய நல வளர்ச்சி குறித்த
பல்வேறு திட்டங்கள் இந்தியா முழுவதற்கும் உருவாக்கப்பட்டு,
தமிழக அரசின் கையிலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்தத்
திட்டங்களை எல்லாம் இங்கே செயல்படுத்தும்போது பல்
வேறு ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் தவறாக
நடைமுறைப்படுத்தும் நிலை எல்லாம் இருப்பதை நாம் எல்லோ
ரும் ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும். இந்த நிலையிலே
ஒருசில எடுத்துக்காட்டுகளைக் கூறி, விடை பெறலா
மென்று விழைகிறேன். இங்கே பாரதப் பிரதமருடைய வளர்ச்சி
திட்டங்கள் ஆர் எல் ஈ ஜி பி., என் ஆர் ஈபி., காடு வளர்ப்பு
திட்டங்கள், ஐ.ஆர்.டி.பி. திட்டம் இவைகள் எல்லாம் முக்கிய
மானவை. இவைகள் எல்லாம் ஏழை எளியவர்களுடைய,
தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்
காக வகுக்கப்பட்ட திட்டங்கள். இந்தத் திட்டங்களை எல்லாம்
இன்னும் சிறப்பான முறையில் செயல்படுத்துவதற்கு ஆங்காங்கே
உள்ளாட்சித் துறையிலே பொறுப்பிலே இருப்பவர்கள் செய்கின்ற
தவறுகளைத் தட்டிக் கேட்கிற ஆள் இல்லை. அதை செம்மையாகச்
செயல்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆர் எல் ஈ ஜி பி., என் ஆர் ஈ பி., திட்டங்களில் ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற அந்தத் தொகையை குறைந்தது 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் உயர்த்தி அங்கே தரமான நிலைத்து நிற்கக்கூடிய வீடுகளை கட்டுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

ஐ.ஆர்.டி.பி. திட்டத்தைப் பற்றி பேசுகின்றபோது, இது ஏழையிலும் ஏழையாக இருக்கின்றவர்களுக்கு வகுக்கப்பட்டிருக்கின்ற திட்டம். இந்தத் திட்டத்தில் கீழ் நிதி உதவி செய்வதிலே பல்வேறு முறைகேடுகள் இருக்கின்றன. அப்படி நடப்பவை எல்லாம் இங்கே சொல்லப்படுகிறது. வங்கியிலும். அதிகாரிகள் மத்தியிலும் மற்ற இடங்களிலும், செய்யப்படுகின்ற பல்வேறு முறைகேடுகளை எல்லாம் இந்த மன்றத்திலே நாம் அனைவரும் எடுத்துக் கூறிக் கொண்டிருந்தோம்.

இந்த ஐ.ஆர்.டி.பி. என்ற ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு என்று டாஸ்க் போர்ஸ் கமிட்டி ஒன்று இருக்கின்றது. இந்தக் கமிட்டி அரசாங்கத்தினுடைய அறிவுரைப்படி செயல்படவில்லை என்பதைச் சுட்டிக் படி செயல்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காட்ட விரும்புகிறேன்.

இந்த ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திலே ஏழையிலும் ஏழையாக இருப்பவர்களுக்கு நிதி வழங்குகின்ற வரைமுறைகளை அரசாங்கத்தினுடைய குறிக்கோளைப் புரிந்து கொள்ளாமலேயே செயல்படுகின்ற நிலை இருக்கின்றது. டாஸ்க் போர்ஸ் கமிட்டி தலைவராக ஊராட்சி ஒன்றியத் தலைவர் இருக்கின்றார். அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். இந்த நிலையிலே இந்த டாஸ்க் போர்ஸ் கமிட்டியினுடைய தலைவராக சட்டமன்ற உறுப்பினர் களை நியமித்தால் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பொறுப்பில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தால் இன்னும் சிறப்பாக செயல்படும் என்பதை என் கருத்தாகச் சொல் கிறேன். ஆகவே அந்த டாஸ்க் போர்ஸ் கமிட்டி தலைவராக சட்டமன்ற உறுப்பினர்களை நியமிக்கவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்





காடு வளர்ப்புத் திட்டம் என்பது மிக மிக அற்புதமான திட்டம். இந்தத் திட்டம் ஒரு பொருளாதார முன்னேற்றத் திட்டம் மட்டுமல்ல, மனிதனுடைய சுகாதாரத்தைப் பாதுகாக்கக் கூடிய ஒரு முக்கியமான திட்டம். இந்தத் திட்டத்தை என்ன இன்னல்கள் வந்தாலும், நெருக்கடி ஏற்பட்டாலும் கண்டிப்பாக செயல்படுத்தி வெற்றி பெற்றால்தான், நாட்டினுடைய பொருளாதாரத்தையும், சுகாதாரத்தையும் பாதுகாக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பல்வேறு திட்டங்களைப் பற்றிக் கூறும்போது, காடு வளர்ப்புத் திட்டத்தைப் பற்றி விரிவாகக் கூற விரும்புகிறேன். காடு வளர்ப்புத் திட்டம் பொருளாதார உயர்வையும், சுகாதாரத்தையும் பாதுகாக்கக்கூடிய மிக முக்கியமான திட்டம். இதை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன, காடுகளை வளர்க்காமலேயே, செடிகளை நடாமலேயே, மரக்கன்றுகளை வைக்காமலேயே, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்களை பெறுகின்ற நிலையில் ஊழல்கள் புரிகின்ற நிலைமைகள் இன்று நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதே நேரத்திலே வளர்க்கப்பட்ட காடுகளிலே எல்லாம் முறைகேடாக மரங்கள் வெட்டப்படுகின்றன. அங்கே இருக்கின்ற ஒரு சிலர், பொறுப்பிலே இருப்பவர் மரங்களை எல்லாம் வெட்டிக் கொண்டிருக்கின்றார்கள்; முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உதாரணத்திற்கு சொல்கிறேன். பெரம்பலூரில் நடக்கிறது.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது முன்பும் இப்போதும் ஒரேயடியாக ஒட்டுமொத்தமாக ஊழலும், குறைகளும் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை இந்தச் சட்டமன்றம் அறியும் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். ஏதாவது ஊழல், ஏதாவது குறைகள் இருந்தால், குறிப்பிட்டு இன்ன இன்ன இடத்திலே நடக்கிறது என்று சொன்னால் அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். நடக்கிற திட்டங்கள் எல்லாவற்றிலுமே குறைகளும் ஊழல்களும் நடக்-

[திரு. த. மாரிமுத்து] [1987 ஏப்ரல் 28

கின்றன என்று ஒட்டுமொத்தமாக சொல்லிக் கொண்டிருக்கின் றார்கள். இது எந்தவகையிலே பொருத்தமானது என்பதைப் பற்றி தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒட்டுமொத்தமாக கூறவில்லை. அங்கே குறிப் பிட்டு கூறுவதற்கு நான் முற்படுவதற்கு முன்பே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முந்திக் கொண்டிருக்கின்றார்கள். காடு வளர்ப்புத் திட்டம் பற்றி கூறுகிறபோது பொறுப்பிலே இருப் பவர்கள் முறைகேடாக சட்டத்திற்கு புறம்பாக அந்தக் காடுகளிலே எல்லாம் மரத்தை வெட்டிக்கொண்டிருக்கின்றார்கள். அதிலே முறைகேடுகள் இருக்கின்றன என்பதைத்தான் சொல்ல வருகிறேன். உதாரணத்துடன் கூறுவதற்கு முற்படுகிறேன். என்னுடைய தொகுதியில் அயலூர் என்ற கிராமத்திலும், ஆலம் பட்டி என்ற கிராமத்திலும்—பெரம்பலூரில் இருக்கிறது— அடுத்து தொண்டைமான்துறை என்ற கிராமத்திலும் அங்கே பொறுப்பிலே இருப்பவர்கள் காடுகளை வெட்டி முறைகேடுகளை செய்திருக்கின்றார்கள். ஊழல்களை செய்து கொண்டிருக்கின் றார்கள். அவை போலீஸ் ஸ்டேஷனிலேயே கிடப்பிலே இருக் கின்றன. அந்த வழக்குகளை எல்லாம் இந்த அரசாங்கத்தி னுடைய கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத் திலேதான் இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர், ஆளுங்கட்சி உறுப்பினர் அமைதியாக இருந்து என்னை பேசவிடும்படி நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 6-20)

இங்கே ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின்கீழ் கடன் வழங்குவதைப் பற்றி ஒன்றிரண்டை குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதி யான பெரம்பலூரையே எடுத்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சருடைய தொகுதியிலுள்ள ஆலத்தூர் மற்றும் வேப்பூர் ஆகிய யூனியன்களை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே நடைபெற்ற பல்வேறு முறை கேடுகள் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஏற்கெனவே புகார் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே ஏழை எளிய வர்களுக்கு செல்ல வேண்டிய மானியத் தொகை வசதியுள்ளவர் களுக்கு சென்று கொண்டிருந்த காரணத்தால் அந்த மானியத்



1987 ஏப்ரல் 28] [டாக்டர் க. நல்லமுத்து]

தொகை வழங்குவது இன்றையதினம் நிறுத்தப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் பலன் உண்மையிலேயே ஏழையெளியவர்களூக்குச் செல்லாமல் தவறாக மற்றவர்களுக்கு சென்றிருக்கிறது. ஆகவே, எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாது தடுப்பு நடவடிக்கை எடுப்பதற்காக நான் இதைக் கூறுகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலுள்ள குறைகளைக் கூறு கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள பெரம்பலூர், குரும்ப லூர், அரும்பாவூர், பூலாம்பாடி ஆகிய 4 டவுன் பஞ்சாயத்துக் களிலும் குடிதண்ணீர் பஞ்சம் இருக்கிறது. இவைகளை எல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று அரசிடம் பல்வேறு முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்போது பெரம்பலூரைப் பொறுத்த வரையில், டிராக்டர் மூலமாக தண்ணீர் சப்ளை செய்வதற்கு ஆணை பிறப்பித்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அங்கே பொறுப்பிலே இருப்பவர்கள் குடிதண்ணீர் சப்ளை செய்வதிலும் கூட ஊழல் செய்கிறார்கள். அதை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக் கிறது. மேலும் பொறுப்பிலே இருப்பவர்கள் அரசியல் விருப்பு வெறுப்போடு நடந்துகொள்கிறார்கள். குடிதண்ணீரை டிராக்டர் மூலமாக அண்ணா நகர், காமராஜர் நகர், காவேரி நகர், காந்தி நகர், திருநகர் போன்ற இடங்களில் சப்ளை செய்ய மறுக்கி றார்கள்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு உறுப்பினர் அவருடைய தொகுதியில் தண்ணீர் வழங்குவதற்கு நன்றி சொல்லி விட்டு பிறகு பொறுப்பிலே இருப்பவர்கள் நிறைய ஊழல் செய்வ தாக குறிப்பிட்டார்கள். அப்படி என்றால் குடிநீர் கொடுக்கிற இடத்தில் யார் ஊழல் செய்தது? தண்ணீரை சிந்த விடுகிறார் களா? மக்களுக்கு ஒழுங்காக தண்ணீர் கிடைக்கவில்லையா? யார் ஊழல் செய்கிறார்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அதைத்தான் சொல்லிக்கொண்டு வருகிறேன். அங்கே நிச்சயமாக பொறுப்பிலே இருப்பவர்கள் எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் அல்ல. உங்கள் கட்சியைச் சார்ந்தவர்களும் அல்ல, வேறு ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள். அங்கே, குடிதண்ணீர் வழங்குவதிலே பல்வேறு வகையிலே பாரபட்சம் காட்டுகிறார்கள்

குடிதண்ணீர் வழங்குவதைப் பொறுத்தவரையில் அங்கே இருப்ப
வர்கள் பல்வேறு ஊழல்களைப் புரிந்து வருகிறார்கள். இதற்கு
நான் உதாரணம் காட்ட முடியும். பெரம்பலூர் பகுதியில் இன்
றைக்கு கடுமையான குடிநீர் கஷ்டத்தைப் போக்க டிராக்டர்
மூலம் தண்ணீர் சப்ளை செய்கிறார்கள். அங்கு அதிகாரத்தில்
இருப்பவர்கள் தண்ணீருக்காக கஷ்டப்படுகின்ற மக்களுக்கு
டிராக்டர் மூலமாக தண்ணீர் சப்ளை செய்ததாக கணக்கு எழுதி
ஊழல் செய்கிறார்கள். டி.டி.ஒய். 5229 என்ற எண்ணுடைய
டிராக்டர் மூலமாக இரண்டு ஆண்டுகளாக தண்ணீர் சப்ளை செய்
வதாக கணக்கெழுதி ஊழல் செய்திருக்கிறார்கள். ஆனால் அதே
சமயத்தில் இந்த டிராக்டர் ஒரு பேரூராட்சி மன்ற உறுப்பின
ருடையது என்று நான் அறிகிறேன் அந்த பேரூராட்சியில்
பல்வேறு முறைகேடுகள் நடந்திருக்கின்றன. அங்கே 5,000-க்கு
மேற்பட்ட அங்கீகாரம் செய்யப்படாத வீடுகள் கட்டப்பட்டிருக்
கின்றன. அந்த வீடுகளுக்கு இதுவரை வீட்டு வரி விதிக்கப்பட
வில்லை. ஆனால் ரசீது கொடுக்காமலேயே வீட்டு வரியை
வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். அங்கேயிருக்கின்ற 5,000
வீட்டுக்காரர்களும் ஆண்டுதோறும் வீட்டுவரி கட்டுவதாக சொல்
கிறார்கள். அதுபோல புதிதாக வீடு கட்டுகிறவர்களிடமிருந்து
எல்லாம் 500 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாய் வரை இன்றையதினம்
வீட்டு வரி வசூலிக்கப்படுகிறது.

அடுத்து, பெரம்பலூர் பேரூராட்சியில் இருக்கின்ற, பேரூராட்
சிக்குச் சொந்தமான பல்வேறு கட்டடங்களை அங்கே வலுத்த
வர்கள் பிடித்துக்கொண்டு தனக்கு சொந்தத்துக்கு, உறவினர்
களுக்கு அல்லது வாடகைக்கு கொடுத்து அவற்றை இன்றைய
தினம் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இப்படி பல
ஆண்டுகாலமாக செய்துகொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து
அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அதுபோல பேரூராட்சிக்குச் சொந்தமான காலியிடங்களை
அதிகாரத்தில் இருப்பவர்கள் கைப்பற்றி நாற்றுக்கணக்கான
கடைகளைக் கட்டி, கடை ஒன்றுக்கு 200 ரூபாய் என்கிற வீதத்தில்
இன்றையதினம் வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும்
தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணங்களெல்லாம் பேரூராட்





சிக்குச் செல்ல வேண்டிய பணங்கள். அத்தனையும் வேறிடத்
திற்குச் சென்று கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த மன
றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பெரம்பலூர் பேரூராட்சியைப்பற்றிப் பேசும்பொழுது முக்கிய
மான ஒரு மனிதாபிமானமிக்க கருத்தைச் சொல்ல விழைகிறேன்.
பெரம்பலூர் பேரூராட்சிக் கூட்டங்கள் நடக்கின்றபொழுது உள்ள
படியே ஜனநாயகப் பண்புள்ளவர்கள் அதை உணர்ந்து கண்ணீர்
வடிக்க வேண்டும். அந்தக் கூட்டங்கள் நடக்கின்றபொழுது
எப்பொழுதுமே அடிதடி; சித்திரவதை நடந்து கொண்டிருப்ப
தாக அறிகிறேன். காரணம் என்னவென்றால் அந்த உறுப்பினர்
களெல்லாம் ஊராட்சிமன்றத்தில் நடக்கின்ற அநீதிகளையும்,
அக்கிரமங்களையும், ஊழல்களையும் எடுத்துக் கூறுகின்ற அந்த
நேரத்தில், அந்த உறுப்பினர்களை அடித்துத் தொந்தரவு செய்து
அவர்களிடம் உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யும்படி
யாக எழுதி வாங்கிக்கொண்டு நடத்துகின்ற நிலைமைகளை
யெல்லாம் எண்ணிப் பார்க்கின்ற பொழுது மிகவும் வேதனையாக
இருக்கிறது.

இங்கே இன்னொன்றையும் நான் கூற விரும்புகிறேன். பெரம்ப
லூர் ஊராட்சி ஒன்றியத்திலே எந்த அளவிற்கு நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டுகின்றபொழுது,
காடு வளர்ப்புத் திட்டம் என்பது நாம் எல்லோரும் இந்த
நாட்டின் நலம் கருதி இங்கே செயல்படுத்துகின்ற திட்டம்.
அங்கே இந்தக் காடு வளர்ப்புத் திட்டத்திற்காகக் கொடுக்கப்படு
கின்ற மாக்கன்றுகள், மற்றும் மரம், செடி, கொடிகளையெல்லாம்
அங்கேயுள்ள மக்களுக்கு விநியோகம் செய்து அவர்கள் அவற்றை
நட்டு மரமாக்குவதற்குப் பதிலாக, அறையில் பூட்டி வைத்து,
அவைகளைச் சருகாக்கி வெளியில் தூக்கியெறிகின்ற நிலைகளை
யெல்லாம் நான் கண்ணாலே நேரில் பார்த்திருக்கிறேன்.
அய்யலூர் பஞ்சாயத்து, ஊராட்சி மன்றத்திலே நான் சென்று
பார்க்கின்றபொழுது, இந்தக் கன்றுகளெல்லாம் சருகாகி
கட்டுக் கட்டாகக் கிடந்ததை நான் கண்ணாலே பார்த்தேன்.
அங்கே அந்த ஆணையரிடம் ஏன் இப்படி இருக்கிறது என்று
கேட்கின்றபொழுது அவர் சொல்கிறார். என்ன சார், கமிஷனர்
களையெல்லாம் போய் மரம், செடி, கொடிகளை வைக்கச் சொன்
னால் எங்களுக்கு என்ன தெரியும்? இதையெல்லாம் ஃபாரஸ்ட்

டிபார்ட்மெண்டிலே ஒப்படைக்க வேண்டுமென்று அவர் சொல்கிறார். ஒரு ஆணையர், தன்னுடைய பொறுப்பை உணர்ந்து செயல்படுவதற்குரிய மனமும் இல்லை, அவருக்குத் திறமையுமில்லை என்பதை அவருடைய வாயிலாக நான் அறிந்துகொண்டேன். ஆகவே, இதுபோன்ற அரசாங்கத்தினுடைய திட்டங்களில் அக்கறையில்லாத அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, இங்கே என் தொகுதியிலே இருக்கின்ற இதுபோன்ற குறைகளையெல்லாம் களையவேண்டுமென்று கூறி, விடைபெறுகிறேன், நன்றி.

**திரு. இரா. அரிக்குமார்:** மாண்புமிகு சட்டப் பேரவையின் தலைவரவர்களே, இன்று மாண்புமிகு உணவு மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்ட சமுதாய நலவளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் மீது கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவரவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியம் போன்ற துறைகளெல்லாம் நல்ல முன்னேற்றமடைந்து, இதன்மூலம் மக்கள் பயன் அடையக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கித் தந்தார்கள்.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில், சென்னை நகரம் முழுவதும் உள்ள சாலைகள் தார்ச்சாலையாக அமைக்கப்பட்டன. ஆனால் ஒரு சில நாட்களுக்குள்ளே மின்சாரக் கோளாறு அல்லது சாக்கடை அடைப்பு அல்லது குடிதண்ணீர்க் குழாய் மாற்றியமைத்தல், தொலைபேசி கேபிள் மாற்றுதல் போன்ற காரணங்களுக்காக அவ்வப்பொழுது தார்ச்சாலைகளை தோண்டி விடுகிறார்கள். இதனால் அந்தச் சாலைகள் மிகவும் மோசமடைந்து வருகின்றன. ஆகவே, புதிய சாலைகளைப் போடுவதற்கு முன்பே இவைகளையெல்லாம் சரி பார்த்துவிட்டு, பிறகு சாலை போட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, புதிய வீடு கட்டுகின்றவர்கள் அல்லது ரிப்பேர் செய்கின்றவர்கள் இடிக்கப்பட்ட செங்கற்கள், மண், ரப்பிஷ் போன்றவைகளை ரோட்டின் ஓரங்களில் போட்டுவிடுகிறார்கள். இதனால் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. இதேபோல் லாரிகளை



இரவு நேரங்களில் குறுகிய சாலையிலே நிறுத்திவிடுவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவைகளையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பொதுக் கழிப்பிடங்களை நல்ல முறையிலே பராமரிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், ஊராட்சி ஒன்றிய, ஊராட்சிமன்றத் தேர்தலுக்குப் பிறகுதான் நிர்வாகம் மிகவும் மோசமான நிலையிலே இருந்து வருகிறது. குறிப்பாக, ஊராட்சிமன்றத் தலைவர்கள், தங்களுடைய ஊராட்சிமன்றத்திற்கு உட்பட்ட சாலைகளுக்கு வெல் கிராவல் ஓட்டுவதாக எஸ்டிமேட் தயார் செய்துவிட்டு, போடப்படாத ஒரு சாலைக்கு எம்புக்கிலே ரிக்கார்ட் செய்துவிட்டு பணமும் பெற்றுவிடுகிறார்கள். ஆனால், உண்மையிலேயே பார்க்கப்போனால் அங்கே சாலையே போடப்படவில்லை; ஆனால் அதற்குண்டான பணத்தை மட்டும் பெற்றுக்கொள்கிறார்கள். ஊராட்சிமன்றத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகுதான் அந்த ஊராட்சிமன்றத்திலே இருக்கக்கூடிய பணம் முழுவதும் காலியாகிவிட்டது.

அதேபோல், சாலை விளக்குகளைப் பொறுத்தவரையில் தனி அதிகாரிகள் இருந்த நேரத்திலே ஒரு சில விளக்குகளாவது நல்ல முறையிலே எரிந்தன. ஆனால் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு எல்லாக் கம்பங்களுக்கும் குழல் விளக்கு வாங்கியதாகக் கணக்கு காட்டி விட்டுச் செல்கிறார்களே தவிர, மக்களுக்கு விளக்குகளே எரிவதில்லை. சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் மக்களின் குறைகளைக் கேட்கச் செல்லுகின்றபொழுது எங்களிடத்திலே குறையைச் சொல்கிறார்கள். இதன்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 6-30)

என்.ஆர்.இ.பி. வேலைகளைப் பொறுத்தவரையில் தனி அலுவலர்கள் காலத்திலே அவர்கள் நல்ல முறையிலே செய்துவந்தார்கள். காரணம் அவ்வப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் பி.டி.ஓ., யூனியன் எஞ்சினீயர்களை அழைத்துப் பேசி, அந்தப் பணிகளை எல்லாம் நல்ல முறையில் செய்வதற்கு ஆணை பிறப்பித்தார்கள்.

[திரு. இரா. அரிக்குமார்] [1987 ஏப்ரல் 28

ஆனால் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இப்போது அதுபற்றிக் கவலைப்படவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த தெள்ளார் ஒன்றியத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தணிக்கை செய்தபோது 1986-87 ஆம் ஆண்டில் என்.ஆர்.இ.பி. பணிகளின் கீழ் ஆதி திராவிடர்களுக்குக் கட்டப்படவிருந்த 'குரூப் ஹவுஸ்' ஒரு வருடமாகியும் பணிகள் தொடங்கப்படவில்லை என்று புகார் கூறி அவர்களை மிகவும் கண்டித்துள்ளார்.

அதைப்போன்று சாண எரிவாயு அடுப்பு அமைப்பதற்கு (கோபர் காஸ்) பணம் முழுவதும் வழங்கப்பட்டும், அடுப்பு அமைப்பதற்கான பணியை அவர் தொடங்கவில்லை. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த மானியம் முழுவதையும் ஊராட்சி ஒன்றிய ஆணையரிடம் செலுத்த வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார். இதைப்போன்று பல முறைகேடுகள் ஊராட்சிமன்றங்களில் நடைபெற்று வருகின்றன.

என்.ஆர்.இ.பி. திட்டத்தில் செய்யப்படுகின்ற வேலைகளுக்கு அரிசி, கோதுமை வழங்கப்படுகிறது. ஆனால் இது முறையாக வழங்கப்படாமல், பலர் கையாடல் செய்திருக்கிறார்கள். எனது தொகுதியில் உள்ள சேத்துப்பட்டு ஒன்றியத்திலுள்ள என்.ஆர்.இ.பி. மேனேஜர் கையாடல் செய்த காரணத்தால் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதில் யார், யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றி விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி போன்ற திட்டங்களில் 'குரூப் ஹவுஸ்' கட்டுவதற்கு கவுன்சில் தீர்மானம் தேவை என்று அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் ஒன்றியத் தலைவர்கள் எந்த கிராமங்களில் பணம் தருகிறார்களோ அவர்களுக்கு தீர்மானம் போட்டு அனுப்புகிறார்கள். அரசு ஏழை எளிய மக்களுக்கு எவ்வித செலவும் இல்லாமல் வீடுகள் கட்டித்தர வேண்டும் என்ற கொள்கைக்கு மாறுபாடாக இது இருக்கிறது. அகவே என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டங்களின் மூலமாக செயல்படுத்த எடுத்துக்கொள்ளும் கிராமங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது தாட்கோ மூலமாக தேர்வு செய்து ஊராட்சி ஒன்றியத்தில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 28] [திரு. இரா. அரிக்குமார்]

அதைப்போன்று, 'அஃபாரஸ்டேஷன்' மரம் நடுவதற்கு ஆண்டு ஒன்றுக்கு 2½ இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். ஆனால் ஒன்றியத்தில் எங்குமே மரம் நடுவதில்லை. அந்த 2½ இலட்சம் ரூபாய் என்னவாயிற்று, எதற்கு செலவு செய்கிறார்கள் என்று தெரியவில்லை. இதன்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று ஐ.ஆர்.டி.பி. கடன் இருக்கிறது. இதைப் பொறுத்தவரையில் இதற்கு என்று 'டாஸ்க்போர்ஸ் கமிட்டி' அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஊராட்சி மன்றத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் போன்றவர் களும், அதிகாரிகளும் இடம் பெற்றிருக்கிறார்கள். இந்தக் கமிட்டி கூடி, பேசி, பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று பரிசீலனை செய்து தகுதியுடையவர்களுக்கு கடன் வழங்க வேண்டும். ஆனால் இதற்கு மாறாக எங்களை அழைப்பதே இல்லை, அழைத்துப் பேசுவதும் கிடையாது. அவர்களே கடன் வழங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இதில் பல முறைகேடுகள் நடைபெறுகின்றன. குறிப்பாக ஊராட்சி ஒன்றியத் தலைவர் அவர் சார்ந்திருக்கின்ற கட்சிக்காரர்களுக்குத்தான் கடன் வழங்கு கிறார். இந்த நிலையைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்.ஆர்.இ.பி., ஐ.ஆர்.டி.பி. திட்டங்கள் மூலம் ஏழை எளிய மக்கள் பயனடைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இதற் காக தனியாக ஒரு அதிகாரியை நியமித்து இந்தப் பணிகள் நல்ல முறையிலே செயல்பட வேண்டும்; அதன் மூலமாக ஏழை எளிய மக்கள் பயனடைய வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பல்வேறு ஊராட்சி மன்றங்களில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் சாலை வசதிகள், மெட்டல் ரோட்ஸ் போடப்பட்டு மிகவும் சிறப்பான முறையில் இருந்து வந்தது. ஆனால் இப்போது ஜல்லி கற்கள் எல்லாம் மேலே வந்துவிட்டன. சாலை மிகவும் மோசமான நிலைமையில் இருக் கிறது. இதைப் பராமரிக்க அரசு மானியம் வழங்க வேண்டும். இல்லை என்றால் போடப்பட்ட ஜல்லி சாலைகள் எல்லாம் பழையபடி மண் சாலைகள் ஆகிவிடும். ஆகவே அரசு இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இரா. அரிக்குமார்] [1987 ஏப்ரல் 28

அதைப்போன்று தெரு விளக்குகள் குறித்து சொல்லவேண்டு மானால் தற்போது ஊராட்சிமன்றத் தலைவர்கள் அதற்குப் பொறுப்பேற்றுள்ளார்கள். இதை மாற்றி மீண்டும் மின்சாரத் துறைக்கே ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சில இடங்களில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஒன்றியத்திலும் சுமார் 60 அல்லது 70 கல்வெர்ட்டுகள் கட்டப்பட்டன. ஆனாலும் இன்னும் சில முக்கிய இடங்களில் கல்வெர்ட்டுகள் கட்டப்பட வேண்டும். அதற்கு ஒன்றியத்தில் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த கல்வெர்ட்டுகளை எல்லாம் அரசே ஏற்று, கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த தெள்ளார் ஒன்றியத்தில் தற்போது 63 ஊராட்சி மன்றங்கள் இருந்து வருகின்றன. மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியமாக இருக்கிறது. அதேபோல் பெரண மல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் 57 ஊராட்சி மன்றங்கள் இருக் கின்றன. இந்த இரு ஒன்றியங்களையும் மூன்றாகப் பிரித்து புதிய ஒன்றியத்தை, தேசூரை மையமாக வைத்து அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதுகுறித்து மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் போட்டு அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பி இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும்கூட இதுகுறித்து தெரியும். அவர்கள் தேசூருக்கு வருகை தந்தபோது பொதுமக்கள் சந்தித்து மனு தந்திருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, இது சம்பந்தமாக தேசூரை மையமாகக் கொண்டு ஊராட்சி ஒன்றியம் அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் அவை இன்னும் பழைய நிலையிலேயே இருந்து வருகின்றன. சேத்துப்பட்டு பேரூராட்சியான பிறகும், பத்தாண்டுகளுக்கு முன்பு குறைந்த மக்கள் தொகை இருந்தபோது பணியாற்றிய அதே அளவில்தான் துப்புரவுத் தொழிலாளர்கள் இன்னும் இருக்கிறார்கள். பத்து ஆண்டுகளுக்குப் பின்பு 3 மடங்கு மக்கட் தொகை உயர்ந்தும்



1987 ஏப்ரல் 28] [திரு. இரா. அரிக்குமார்]

இன்னமும் அதே எண்ணிக்கை கொண்ட நபர்கள்தான் பணி யாற்றுகிறார்கள். இதைக் கருத்தில் கொண்டு துப்புரவுப் பணி யாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சில பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் நிதிவசதி இல்லாமல் இருந்து வருகின்றன. ஆகவே இவற்றை ஊராட்சி மன்றங்களாக மாற்றித் தரவேண்டும்; அது குறித்து அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளைப்போல், பேரூராட்சிகளிலும் அவற்றுக்குச் சொந்தமான இடத்தில் கடைகள் கட்டுதல், சமுதாயக் கூடம் கட்டுதல் போன்றவற்றுக்காக பாதி மானியமாகவும், பாதி கடனாகவும் அரசு பேரூராட்சிகளுக்கு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லாமல் மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருப்பதால் என் னுடைய தொகுதிக்குட்பட்ட சேத்துப்பட்டு ஒன்றியத்தில் கரைப்பூண்டி கிராமத்தில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்குத் தேவையான இட வசதி சுமார் 200 ஏக்கரும், இரயில் நிலையமும், நேஷனல் ஹைவேஸ் சாலையும், அருகிலேயே நல்ல நீரோட்டம் உள்ள செய்யாறும் இருக்கிறது. எனவே இதுகுறித்து இந்தத் துறையைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் சேத்துப்பட்டை மையமாகக் கொண்டு 25 கிலோ மீட்டர் தூரத்தில் செஞ்சி, ஆரணி, போளூர், வந்தவாசி போன்ற பகுதிகள் இருக்கின்றன. ஆகவே சேத்துப்பட்டிலேயே ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு என்னுடைய தொகுதியில் உள்ள 3 பேரூராட்சி களுக்கு சுமார் 3 முதல் 4 இலட்சம் ரூபாய் ஒதுக்கி பேரூராட்சி களில் கால்வாய்கள், கழிப்பிடங்கள், ஜி.எல்.ஆர். சாலை வசதி

[திரு. இரா. அரிக்குமார்] [1987 ஏப்ரல் 28

போன்ற பணிகள் நடந்து வந்தன. மீதம் உள்ள பணிகள் இந்த ஆண்டு நடைபெற பணம் ஒதுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொரணமல்லூர் பேரூராட்சி பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் இல்லாமல் இருக்கிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட திட்டங்கள் இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. ஆகவே இந்த வருடமாவது 3 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சேத்துப்பட்டு ஒன்றியத்தினைப் பொறுத்தவரையில் அது தேர்வுநிலைப் பேரூராட்சியாக இருந்தும், அங்கே ஒரு சுற்றுலா விடுதியோ, பயணியர் விடுதியோ இல்லை. ஆகவே இவற்றில் ஒன்றைக் கட்டித்தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து, ஊழல், ஊழல் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் பல ஊழல்களைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். எனவே உடனடியாக அப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும், ஊராட்சி மன்றத் தலைவர்களையும் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்காக மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உடனடியாக ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகச் சிறப்பான நிர்வாகத் திறமை உடையவர் என்று கிராம மக்களால் பாராட்டப்படுகின்ற மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரால் இங்கே முன்மொழியப்பட்டு விவாதத்தில் இருக்கின்ற சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் மற்றும்



1987 ஏப்ரல் 28] [திரு. வை. பாலச்சந்திரன்]

நகராட்சி நிர்வாகம் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையை வரவேற்று; அவ்வாறு அந்த மானியக் கோரிக்கையை வரவேற்கிற அந்த நேரத்தில் நானும் சில கோரிக்கைகளை வைப்பது எந்த புடையதாக இருக்கும் என்பதால் ஒருசில கோரிக்கைகளை வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புக்களின் வருவாய் வாயில்கள் மிகவும் குறைவாக இருப்பதால் வருமானமின்றி மிகவும் நலிவுற்ற நிலைமையில் இருந்துகொண்டிருக்கின்றன. இந்தப் பொது விதிக்கேற்ப என்னுடைய பத்மநாபபுரம் தொகுதியில் 12 பேரூராட்சிகளும், 6 ஊராட்சிகளும், ஒரு நகராட்சியும் மிகவும் நலிவுற்று நிதியின்றி வாடுகின்ற நிலையில் இருக்கின்றன. என்னுடைய தொகுதியின் தலைநகராக இருக்கின்ற பத்மநாபபுரம் நகரில் அமைந்திருக்கின்ற பத்மநாபபுரம் நகராட்சியினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற தோழர் ஒருவர் அரசோடு ஒத்துப் போகாத காரணத்தாலோ அல்லது அங்கே இருக்கின்ற நகர மக்களுடைய உணர்வுகளை மதிக்காத காரணத்தாலோ இன்றைக்கு அதிகாரிகளோடும், அரசாங்கத்தோடும் ஒரு முரண்பட்ட கொள்கையை உருவாக்கிக்கொண்டு அதன் காரணமாக அந்த நகர்ப் பகுதியிலே வாழக்கூடிய மக்கள் எந்தவிதமான நன்மையையும் பெற முடியாத நிலைமையை உருவாக்கிக்கொண்டிருக்கிறார். பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தை நகர்மன்றக் கூடத்தில் திறந்து வைக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானம் அந்த நகர்மன்றக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட போது நகர்மன்றத் தலைவர் தனது விசேஷ காஸ்டிங் ஓட்டை அத்தீர்மானத்திற்கு எதிராக வழங்கி அண்ணா அவர்களின் திருவுருவப்படம் அங்கு திறந்து வைக்க முடியாமல் போனது. இதை மனதில் கொண்டு, அந்த நகர நிர்வாகம் இந்த அரசுக்கு எதிரானது என்று கருத வாய்ப்பு ஏற்பட்டு, அப்படி ஒரு எண்ணம் அரசுக்கு ஏற்பட்டு இருந்தாலுங்கூட அந்த எண்ணத்தை மாற்றி நகர மக்களுக்கு நல்லது செய்திட அரசு முன்வர வேண்டும். தலைவர் பொறுப்பிலே இருக்கின்ற அந்தத் தோழர் அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தால் அந்த நகரில் வாழ்கின்ற மக்கள் எல்லாம் இந்த அரசுக்கு எதிரானவர்கள் என்று எண்ணாமல், அவர்கள் இந்த அரசின்மீது நல்லெண்ணத்தை வைத்து ஆதரவையும் தந்துகொண்டிருக்

[திரு. வை. பாலச்சந்திரன்] [1987 ஏப்ரல் 28

கிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, அந்த நகராட்சியைப் புறக்கணிக்காமல் சிறப்பான நிதி உதவியை அந்த நகராட்சிக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று ஒரு வேண்டுகோளை வைக்க நான் விரும்புகிறேன்.

(இரவு 6-40)

இன்னொன்று இந்த ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்த வரையில்கூட இந்த அரசாங்கத்தோடும், அதிகாரிகளோடும் முரண்பட்ட, மாறுகின்ற கருத்துக்களை கொண்டிருப்பவர்கள் பல்வேறு பொறுப்புகளில் வந்திருக்கிற காரணத்தினால், அரசாங்கத்தோடும் அதிகாரிகளோடும் ஏற்படும் மோதல்களை தீர்ப்பதற்குத்தான் அங்கே இருக்கிற அதிகாரிகளுக்கு நேரம் போதுமானதாக இருக்கிறது என்ற நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகவே மக்கள் பிரதிநிதிகளாக வந்திருப்பவர்கள் இந்த அரசாங்கத்தோடு முரண்பட்ட கருத்துக்களை கொண்டிருந்து, அதன்மூலம் அந்தப் பகுதியில் வாழும் மக்கள் எல்லாம் இந்த அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் என்ற தோற்றத்தை அவர்கள் உருவாக்கியிருப்பதனால் அந்த முயற்சியை முறியடிக்கும் வகையில் பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட 12 பேரூராட்சிகளையும், 6 ஊராட்சிகளையும், நகராட்சிகளையும் இந்த அரசாங்கம் புறக்கணிக்காது என்று மக்கள் புரிந்து-தெரிந்து கொள்கிறவகையில் அந்தப் பகுதியில் உள்ளடங்கிய உள்ளாட்சிகள் பயன் பெறுகிற வகையில் ஒரு சிறப்பு திட்டத்தை உருவாக்கித் தர வேண்டும். அத்தோடு அந்த மன்றங்களுக்கு அதிக நிதி உதவி செய்வதன் மூலமாக பல்வேறு ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இந்த அரசு தாய் உள்ளத்தோடு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகராக இருக்கிற நாகர்கோவிலில் உள்ள நகராட்சியிலும் வந்திருக்கிற தலைவர் அரசாங்கத்தோடு முரண்பட்ட கருத்து உடையவர் என்பதனாலோ என்னவோ இன்றைக்கு அங்கே குடிப்பதற்கு நீரின்றி நகர மக்கள் மிகுந்த வாட்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். கடந்த ஐந்து தினங்களாக லாரிகளிலும்கூட குடிக்க நீர் கொடுப்பதற்கு வழியின்றி மிகுந்த சூழ்நிலை நகர்வாழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. மாவட்டத்தின் தலைநகராக இருந்தும்கூட குடிப்பதற்கு



1987 ஏப்ரல் 28] [திரு. வை. பாலச்சந்திரன்]

நீர் இல்லாத சூழ்நிலை நாகர்கோவிலில் இருந்து கொண்டிருக்கிறது. நகராட்சி மன்றத்தைப் பொறுத்தவரையில் 100 குதிரைத் திறன் சக்தி கொண்ட மோட்டார் ஒன்றைப் பொருத்தினால் தண்ணீர் கிடைக்கும் என்றும் அதற்கு அரசாங்கத்தின் அனுமதி கோரி எழுதியிருப்பதாகவும் சொல்கிறார்கள். அந்த அனுமதி கிடைக்காத காரணத்தினால்தான் உங்களுக்கு குடிப்பதற்கு நீர் இல்லை என்று மக்களிடையே சொல்லி வருகிறார்கள். அந்த வாதம் உண்மையில்லை என்பதைக் காட்டுகிற வகையில் நமது அரசாங்கம் அப்படி ஒரு வேண்டுகோள் வந்திருக்குமானால் அந்த வேண்டுகோளை உடனடியாக ஏற்று அந்த 100 குதிரைத் திறன் சக்தி கொண்ட என்ஜினைப் பொருத்துவதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டும் என்ற வேண்டுகோளை நான் வலியுறுத்துகிறேன்.

அது போல பத்மநாபபுரம் தொகுதியில் இருக்கிற பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் ஆழ் துளை குழாய்களைப் போடுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தாலும்கூட அதை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருக்கிறது. நிலத்தடி நீர் ஆய்வாளர்கள் நிலத்தடி நீர் எங்கு இருக்கிறது என்பதனை ஆய்ந்து அறிந்து தெரிவிக்க வரும்போது எந்த இடத்தைக் காட்டினாலும் அங்கே நீர் இல்லை என்று ஒரே வரியில் எழுதிவிடுகிறார்கள். ஆகவே பல்வேறு இடங்களில் அரசாங்கம் அனுமதி கொடுத்த பிறகும் கூட இந்த ஆழ் துளை குழாய்களை போட முடியாத நிலைமை இருக்கிறது. அதற்குக் காரணம் கடந்த ஆண்டு தனியார்கள் சொன்ன இடத்தில் கிணறு வெட்டியபோது அவற்றில் 100-க்கு 98 இடங்களில் நீர் இருந்தது. ஆய்வாளர்கள் வந்து சொன்ன இடங்களில் 40 சதவீதம் இடங்களில் நீர் இல்லாமல் போய்விட்டது. இதன் காரணமாக ஏன் அவமானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தாலோ என்னவோ எந்த இடத்தைக் காட்டினாலும் நீர் இல்லை என்று சொல்லிவிட்டு அவர்கள் போய்விடுகிறார்கள். ஆகவே இந்த நிலைமையை மாற்றுவதற்கு ஒரு மாற்று ஏற்பாட்டை இந்த அரசாங்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. வை. பாலசந்திரன்] [1987 ஏப்ரல் 28

அடுத்து இந்த பத்மநாபபுரம் நகராட்சியைப் பொறுத்த வரையில் எந்த அளவுக்கு வரியை உயர்த்தினாலும் கூட அந்த நகராட்சி நிர்வாகத்தைச் சிறப்பாக நடத்தும் அளவுக்கு வருமானம் வராத சூழ்நிலையே இருந்துகொண்டிருக்கிறது. எனவே வருமானம் நகர்மன்றத்திற்குக் கிடைக்கும் வகையில் சில திட்டங்களுக்கு இந்த அரசு நிதி உதவி செய்து தர வேண்டும். அங்கு வல்பகதூர் திடல் என்று சொல்லப்படுகிற இடத்தில் அந்த நகர மன்றம் ஒரு திரையரங்கம் கட்டுவதற்கு பாதி மானியமாகவும் பாதி கடன் என்ற வகையிலும் அரசு நிதி உதவி தந்து உதவினால் அங்கே ஒரு திரையரங்கம் கட்டுவதன் மூலம் ஒரு நிரந்தர வருமானம் நகர் மன்றத்திற்கு வரும் அளவுக்கு ஏற்பாடு செய்ய முடியும்.

(இரவு 6-50)

அது போல நகராட்சிக்கு சொந்தமான இடம் இன்றைக்கு டாக்சி ஸ்டாண்டாக இருந்து கொண்டிருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னால் அந்த இடம் யாருடையது என்ற உரிமையைப் பற்றி நீதிமன்றத்தில் வழக்கு போடப்பட்டு அந்த இடம் நகராட்சிக்கு சொந்தமான இடம்தான் எனச் சொல்லப் பட்டுவிட்ட பிறகும்கூட நகராட்சி நிர்வாகத்தைச் சார்ந்தவர்கள் அந்த இடத்தைக் கையகப்படுத்தி அந்த இடத்தை எடுத்து அங்கே டாக்சியை நிறுத்துவதற்கு ஒரு டாக்சி ஸ்டாண்டு கட்டிக் கொடுக்க முன்வரவில்லை. காரணம் நிதி வசதி இல்லாததுதான். எனவே ஒரு டாக்சி ஸ்டாண்டு அந்த இடத்தில் கட்ட நகராட்சிக்கு அரசு நிதியை மானியமாக வழங்க வேண்டும். அப்படி கட்டி கட்டணம் வசூலிக்கும் ஏற் பாட்டை செய்து கொடுக்க முன்வரவேண்டும். நிலைமை இப்படியே இருந்தால் அந்த இடம் கூட பறிபோய் விடக்கூடும். அதற்குக் காரணம் யாரோ ஒரு சூத்திரதாரி பின்னாலே நின்று கொண்டு, அவருடைய லாபத்திற்காக சில வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார். அது இந்த அரசாங்கத்திற்குக் கெட்ட பெயரை உண்டாக்கிக் கொண்டு இருக்கிறது. ஆகவே அந்த இடத்தை கையகப்படுத்தி நகரமன்றத்தின் சார்பாக அங்கே டாக்சி ஸ்டாண்ட் கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தால், 100 டாக்சிகளை அங்கே நிறுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதன் மூலம் நம்முடைய நகராட்சிக்கு நல்ல வருமானமாக வந்து கொண்டிருக்கும் வாய்ப்பு இருக்கிறது என்று



1987 ஏப்ரல் 28]

சொல்லி, இவைகளைச் செய்து தரவேண்டும் என்ற வேண்டு கோளை வைத்து, என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

* திரு. வைகை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி மானியக் கோரிக்கையின் மீது ஒருசில உணர்வுகளைச் சொல்லி, எனது உரையை நிறைவு செய்ய லாம் என்று கருதுகிறேன். இந்தியாவிலேயே சென்னை மாநக ராட்சி தான் இன்றைக்கு முதன் முதலாக அதனுடைய 300-வது ஆண்டினைக் கொண்டாடுகிற வகையில், பழம் பெரும் மாநகராட்சியாக விளங்கிக் கொண்டு இருக்கிறது. அப்படிப் பட்ட மாநகராட்சியினுடைய அந்தத் தொன்மையை நினைவு படுத்துகிற வகையில் மாநகராட்சியினுடைய பணிகளைச் செம்மையாகவும், சிறப்போடும் சென்னை மாநகர மக்களுக்காக நல்ல முறையில் செய்ய வேண்டும் என்ற அந்த அடிப் படையில், மாநகராட்சி, அரசுக்கு அனுப்பியிருக்கிற நல்ல பல திட்டங்களை முழுமையாக ஏற்று, இந்த 300-வது ஆண்டு விழா நிகழ்ச்சியின் வாயிலாக அவைகளைச் செய்யவேண்டும், நிறை வேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தினுடைய நாயகன், டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களது தலைமையில் சென்னை நகர மேம்பாட்டுக் குழு என்ற ஒரு குழுவை ஏற்கெனவே அமைத்து, பல வளர்ச்சித் திட்டங்களையும் வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொள்ள நட வடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆகவே அந்தக் கூட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்புதலோடு கூட்டி, இந்த 300-வது ஆண்டு விழா நினைவின் வாயிலாக, என்னென்ன அபி விருத்தித் திட்டங்களை சென்னை மாநகராட்சி நிறைவேற்றலாம் என்பதையும், எப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றினால், இந்த 300-வது ஆண்டு விழா ஒரு பயன் உள்ளதாக இருக்கும் என்பதையும் ஆராய்ந்து, அந்தக் காரியத்தை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். எங்களைப் பொறுத்தவட்டில் என்றைக்கும் ஆக்கபூர்வமான பணிகளை, மக்களுக்குத் தேவை யான பணிகளைச் செய்வதில் இந்த அரசு குறியாக இருந்து பணியாற்றிக்கொண்டு வருகிறது என்பதற்காகத்தான், 300-வது ஆண்டு விழாவினை வைக்கவேண்டும் என்ற அந்த அடிப் படைக் கருத்தை இங்கே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், சிறப்பாகவும், செம்மையாகவும், அதுவும் குறிப்பாக மாநகராட்சியினுடைய தனி அதிகாரி அவர்களும், ஆணையாளர் அவர்களும், அவர்களோடு இணைந்து பணியாற்றுகிற அனைத்து அதிகாரிகளும் செயல்படுகிறார்கள். காலையிலே 7 மணிக்குப் பார்ப்பீர்களேயானால், ஏதாவது ஒரு சாலையிலே நின்று கொண்டு அங்கே மக்களது குறைகளைப் பார்வையிட்டு, மக்கள் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்கு மாநகராட்சியினுடைய வருவாய் எந்த அளவிற்கு இருக்கிறது என்றால், அந்த வருவாயில் பாதிக்கு மேல் சம்பளமாகவே போய்விடுகிற நிலைமையிருக்கிறது. மீதிப் பணத்தை வைத்துக்கொண்டுதான் இங்கே இவ்வளவு நல்ல காரியங்களை—வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்று சொல்வார்களே, அதைப்போல, இன்றைக்கு மாநகராட்சி தனது காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது. பம்பாய் மாநகராட்சியை எடுத்துக் கொண்டால் அதற்கு 900 கோடி ரூபாய் வருமானம். ஆனால் நமது மாநகராட்சியினுடைய வருவாய் 40 கோடி ரூபாய்தான். இந்த நிலையில் சென்னை மாநகரின் மக்களது தேவைகள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன 90 வட்டங்களாக இருந்தது, 120 ஆக மாறி, இன்றைக்கு 150 வட்டங்களாக ஆகி, பல புதிய பகுதிகளையும் சேர்த்து, மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டு இருக்கும் போது, அதற்குப் போதுமான பணியாளர்கள், போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால், இன்றைக்கு பல வளர்ச்சிப் பணிகள் தடைபடுகின்றன. ஆகவே வருவாயைப் பெருக்கியாக வேண்டும். 15 ஆண்டுக் காலமாக சென்னை மாநகரத்து மக்களுக்கு புதிய வரிகளை நாம் போடவில்லை. எந்த வரியும் இல்லாமல், இன்றைக்கு மாநகராட்சி பணியாற்றிக் கொண்டிருக்கிறது. தினமும் சென்னைக்கு வருகின்ற மக்கள் தொகை, இருக்கின்ற மக்கள் தொகை, இத்தனை பேர்களுக்கும் ...

சேர்த்து அடிப்படை வசதிகளைக் குறைந்த வருவாயில் சென்னை மாநகராட்சி நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறது. எனவே அதிக அளவு பணிகளை நிறைவேற்ற தனியாக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எப்படி தமிழகத்தினுடைய நாயகர், புரட்சித் தலைவர் அவர்கள், தன்னிறைவுத் திட்டம் என்று கொண்டு வந்து, ஊராட்சி மன்றங்களுக்கு எல்லாம் நிதி ஒதுக்கீடு செய்து, சாலை வசதிகளையும், மருத்துவ வசதிகளையும் செய்தார்களோ, அதைப்போல், சென்னை மாநகராட்சிக்கு என்று தனியாக நிதி ஒதுக்கீடு செய்து, இந்த 300-வது ஆண்டு விழாவிலே தேவையான அனைத்துத் திட்டங்களையும் நிறைவேற்றுகிற வகையில், தனியாக நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல் தமிழகத்தினுடைய அனைத்து நகராட்சி, ஊராட்சி மன்றங்களிலும், பஞ்சாயத்து அலுவலகங்களிலும் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய படம் வைக்கப் படவேண்டுமென்பதையும் இந்த நோக்கிலே நான் கேட்டுக்கொள்கிறேன். தனியார் தெருக்களுக்கு தமிழகத்தினுடைய நாயகன் அவர்கள், தாயுள்ளத்தோடு 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் 5 கோடி ரூபாய் திட்டத்தில் சென்னை மாநகரத்தில் இருக்கின்ற அனைத்து தனியார் தெருக்களுக்கும் அடிப்படை வசதிகளைச் செய்யவேண்டுமென்ற உத்தரவினை வழங்கி இருக்கிறார்கள். உத்தரவு வழங்கப்பட்டு மாநகராட்சியாலும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கு குழுமத்தாலும் இன்றைக்கு அந்தப் பணிகளெல்லாம் ஆயத்தமான நிலையிலே இருக்கின்றன. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி கிடைக்காத காரணத்தால் அந்தப் பணி துவங்கப்படாமல் இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து அந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்து, அந்த அளப்பரிய பணியை இதுவரையில் யாரும் செய்யாத அந்தப் பணியை இதுவரையில் யாரும் நினைக்காத அந்தப் பணியை, தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் செய்திருக்கிறார்கள். எனவே அந்தப் பணியை விரைவாகத் துவக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இனிமேல், சென்னை மாநகரத்தில்

புதிதாக எந்தத் தனியார் லே-அவுட்டும் வராமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், தனியார் தெருக்கள் வராமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், மாநகராட்சியும், பத்திரப் பதிவுத் துறையும் இணைந்து பணியாற்றவேண்டும். காலியாக இருக்கின்ற மனைகள் பதிவு செய்யப்படும்போது, அந்தப் பெயர் மாற்றம் செய்யும்போது, அதை இன்னொருவருக்கு விற்கும் போது அதற்குத் தேவையான 'டெவலப்மெண்ட் சார்ஜ்', அவர்கள் செலுத்த வேண்டிய வரி முறைவதையும் அந்தப் பத்திரப் பதிவு அலுவலகத்தில் செலுத்திவிட்டால் அது மாநகராட்சிக்கு வந்து சேர்ந்துவிடும். மாநகராட்சி அடிப்படை வசதிகளைச் செய்து தந்துவிடுவார்கள். ஆகவே தனியார் தெருக்கள் என்ற பிரச்சினையே வராது. இன்றைக்கு 'ரியல் எஸ்டேட்' என்ற பெயரில் அவர்கள் பல நேரங்களில் சம்பாதிப்பதற்காக எந்த விதமான அடிப்படை வசதிகளும் இல்லாமல் ஆங்காங்கே நிலங்களை விற்றுவிடுகிறார்கள். வருவாய் உள்ளவர்கள், ஏதோ இடம் கிடைத்தால் போதும் என்று குறைந்த விலையிலே எந்த விதமான அடிப்படை வசதியும் இல்லாமல் இடத்தை வாங்கி விடுகிறார்கள். இவ்வாறு வாங்கப்படுவதால் அரசுக்கு அந்தத் தொல்லை வந்து சேருகிறது. ஆகவே, நாம் அதிகமாக அதிலே கவனம் செலுத்தி, கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சென்னை மாநகரத்தினுடைய அனைத்துச் சாலைகளையும் மாநகராட்சியே பராமரிக்கவேண்டும். உதாரணமாக, அண்ணா சாலையையும், பூந்தமல்லி நெடுஞ்சாலையையும் 'நேஷனல் ஹை-வேஸ்' பராமரித்துக் கொண்டிருக்கிறது. இதனால் பல சிரமங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இவ்வளவு மிகப் பெரிய சாலைகளில் மரங்கள் இல்லை. ஆகவே மற்ற பகுதிகளையெல்லாம் பராமரித்துக் கொண்டிருக்கின்ற மாநகராட்சியே, சென்னை மாநகரத்திற்குள்ளாக இருக்கின்ற அனைத்துச் சாலைகளையும் பராமரிக்க வேண்டுமென்கிற வகையில் திருத்தம் கொண்டு வந்து நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து அந்தப் பொறுப்பை மாநகராட்சி பெறவேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அதைப்போல் வாகன வரி. ஒட்டுமொத்தமாக மாநகராட்சிக்கு வருவாய் இல்லாமல் இருக்கின்ற நேரத்தில், அனைத்து வாகன வரிகளிலும் பெரும் பகுதியை மாநகராட்சிக்கே செலுத்த வேண்டுமென்ற முறையை கட்டாயமாக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல், சென்னை மாநகராட்சியினுடைய தேர்தலை நடத்தவேண்டுமென்று சொன்னார்கள். சென்னை மாநகராட்சியி னுடைய தேர்தலை நடத்தலாம். இன்றைக்கு ஆந்திராவிலே கூட நடத்தியிருக்கிறார்கள். அங்கே வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டிருக்கிறது. பலமுறை இது குறித்து இந்த மன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அடையாள அட்டை சென்னை மாநகரத்தில் உள்ள வாக்காளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கிய பிறகுதான் தேர்தலை நடத்தவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல், சென்னை மாநகரத்திலே இருக்கின்ற குடியிருப்புகள் நாள்தோறும் பெருகி வருகின்றன. எத்தனை வீடுகள் இருக்கின்றன; எவ்வளவு பேர் வாடகை வீடுகளில் குடியிருக்கிறார்கள் என்கிற விவரங்கள் தெரியவில்லை. சென்னை மாநகரத்திலே இருக்கின்ற ஒவ்வொரு வட்டத்திலும் அந்த வட்டங்களில் எத்தனை வீடுகள் இருக்கின்றன; அந்த வீடு களிலும் எத்தனை வாடகை வீடுகள் இருக்கின்றன; அந்த வாடகை வீடுகளில் யார் யார் குடியிருக்கிறார்கள்; அவர்கள் எத்தனை ஆண்டுக் காலமாகக் குடியிருக்கிறார்கள்; வேறு எங்கே வீடுமாற்றிச் சென்றிருக்கிறார்கள் என்கின்ற விவரங் களையெல்லாம் அந்த வட்ட அலுவலகத்திலே குறித்து வைத்தால் அது பயனுள்ளதாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு முடி திருத்துவோர் கடை திறக்க விண்ணப்பிக்கிறார்கள். அதிலும் சில சட்ட விதிகளைச் சொல் கிறார்கள். சவரத் தொழிலாளர்கள் புதிதாக பார்பர் ஷாப் அமைக்க வேண்டும் என்று சொன்னால் கட்டிட வரைபடம், காத்திருப்பறை, குளியல் அறை, கழிவு நீர் வடிகால் வசதி இவைகள் எல்லாம் இருந்தால் தான் அனுமதி வழங்கப்படுகிறது. ஆகவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத்

தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வது இந்த முறை இருந்தால் நிச்சயமாக சவரத் தொழிலாளர்கள் கடை வைக்க முடியாது. காரணம் வாடகைக்கு அவர்கள் கடை உரிமையாளரிடம் சென்று இடத்தைக் கேட்கிறார்கள். வாடகைக்கு இருக்க வேண்டிய இடத்தில் இத்துணை வசதிகளையும் செய்து தர முடியுமா? ஆகவே இந்த விதிகளைத் தளர்த்த வேண்டும். இந்த விதியைத் தளர்த்தி அவர்கள் தொழில் தொடங்க ஏதுவாக சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி சலவைத் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. அங்கே மேற்கு சைதாப்பேட்டைப் பகுதியில் மாநகராட்சி ஆணையாளர் அவர்களும், தனி அதிகாரி அவர்களும் வந்து பார்வையிட்டார்கள். சலவைத் தொழில் செய்வதற்கு இன்றைக்கு சரியான இடம் இல்லாமல் அந்தப் பகுதி மக்கள் சிரமப்படுகிறார்கள். சீனத்து பெரும் சுவரைப் போல இன்றைக்கு சென்னையில் அடையாறு ஆற்றில் கரை கட்டுகிற காரணத்தால் அங்கே சலவைத் தொழிலாளர்கள் ஆற்றில் இறங்கி துணிகளைத் துவைக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு உடனடியாக ஒரு சலவைத் துறையை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் சென்னை மாநகரத்தில் குப்பைகளை அகற்றுவதற்கு மாட்டு வண்டிகளை உபயோகித்துக் கொண்டு இருக்கிறோம். இந்த மாட்டு வண்டிகளை எல்லாம் இந்த 300-வது ஆண்டு விழாவில் மாற்றிவிட்டு வண்டிகளை மாநகராட்சியின் Tiller எல்லா வட்டத்திற்கும் வாங்கி இந்த மாட்டுவண்டிகளை 300-வது ஆண்டு விழாவின் நினைவாக ஒழிக்கவேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் நான்கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சேலம், திருச்சி போன்ற நகரசபைகளை மாநகராட்சியாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கல்கத்தாவிற்கு நான் மதிப்பீட்டுக் குழுவில் சென்றிருந்தேன். அங்கே பாதாள ரயில் திட்டம் மிக நல்ல முறையில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே வளர்ந்து வருகின்ற சென்னை மாநகரம் இன்னும் எதிர்பார்க்கும் அளவுக்கு மேல் மக்கள் தொகை வந்து குவிகின்ற சென்னை மாநகரம் எதிர்



காலத்தில் போக்குவரத்து நெருக்கடியிலிருந்து காப்பாற்றப் பட வேண்டும் என்று சொன்னால் அப்படிப்பட்ட ஒரு ரயில் திட்டத்தை மேற்கொள்ள அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தில் இயற்கை எழிலோடு கூடிய மெரினா கடற்கரை—இன்றைக்கும் எல்லோரையும் உலகத்தில் இருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகள் கவர்ந்து இழுக்கக்கூடிய இயற்கையான அந்த மெரினா கடற்கரையை அழகு படுத்தவும் எழில் ஊட்டவும் சுற்றுலாப் பயணிகள் அதைப் பார்த்து பரவசப் படுகின்ற வகையில் இன்னும் மிகப் பெரிய அளவில் அதற்கு ஒரு மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வந்து அந்தக் கடற்கரையை அழகுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சென்னை மாநகரத்தில் பல பூங்காக்கள் இன்றைக்கு தக்க பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன. சென்னை மாநகர மக்களின் ஓய்வுக்காக, கடற்கரைக்கு வர இயலாதவர்கள் ஆங்காங்கு அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற பூங்காக்களுக்குச் சென்று ஓய்வு எடுக்கவும், மாணவர்கள் படிக்கவும், மாலை நேரத்தில் ஓய்வாக இருக்க இந்த பூங்காக்களைப் பராமரிக்க வேண்டும். அதற்கு மாநகராட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்றால், சென்னையில் உள்ள ஒவ்வொரு தனியார் தொழிற்சாலையும் இந்தப் பூங்காக்களை பராமரிக்க வேண்டும் என்ற முறையில் நடவடிக்கை எடுத்தால் பயன் உள்ளதாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சென்னை மாநகரத்தினுடைய வருவாயைப் பெருக்க தியேட்டர்கள் கட்டப்படும் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டது. ஆகவே அந்தத் தியேட்டர்களைக் கட்டுகின்ற முடிவு என்ன ஆனது என்று தெரியவில்லை. அதையும் விரைந்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

அதேபோல் சென்னை மாநகரத்தினுடைய கொசுத் தொல்லையைப் போக்க ஏதாவது ஒரு புதிய மாற்று வழியைக் கண்டு பிடிக்க வேண்டும். இன்றைக்கு பல ஆறுகள் சென்னை மாநகரத்திலே கொசுக்களை உற்பத்தி செய்கின்றன. எனவே வேறு ஏதாவது மாற்றுத் திட்டம் கொண்டு வந்து அவைகளை நாம் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்னை எழும்பூர் விளையாட்டு மைதானம் இன்றைக்கு தனியார் ஒருவருடைய நிர்வாகத்தில் இருக்கிறது. அந்த முறையை மாற்ற வேண்டும். டென்னிஸ் என்ற பெயரில் தனியார் ஒருவர் அதில் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார். எனவே அந்த ஸ்டேடியத்தை மாநகராட்சியே நேரடியாக நிர்வாகம் செய்து விளையாட்டு வீரர்களுக்குப் பயன் தருகின்ற வகையில் அதை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

(இரவு 7-00)

* திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சமுதாய வளர்ச்சித் திட்டமும், மாநகராட்சியும் பற்றி, எனக்கு முன்னாலே பல பேர் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் 174 சதுர கிலோ மீட்டர் பரப்புடைய 42½ இலட்சம் மக்கள் வாழ்கின்ற சென்னை நகரம் எப்படி இருக்கிறது என்று எண்ணிப் பார்க்கிற நேரத்திலே எட்டாவது சட்டமன்றம் கூடியதற்குப் பிறகு, இந்த மாநகராட்சிப் பொறுப்புக்கு 3 அமைச்சர்கள் வந்திருக்கிறார்கள். அன்று ஆரம்பக் காலத்திலே மாண்புமிகு சௌந்திரராஜன் அவர்கள், பிறகு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள், பிறகு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், இன்றைக்கு மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்கள் வந்திருக்கிறார்கள். ஆனால் நான்கு பேர் வந்திருக்கிறார்களே தவிர, நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் கூடிப் பேசுகின்ற பேச்சுக்களில், நாங்கள் சொல்கின்ற கருத்துக் களிலே ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்று கேட்டால்— வருத்தத்துடன் சொல்கிறேன்—இதில் எந்த முன்னேற்றமும் இல்லை. காலையில் அமைச்சர் பேசும்போது, நான் அமைச்சராக புதிய பொறுப்பை ஏற்றிருக்கிறேன் என்று சொன்னார். புதிய பொறுப்பை ஏற்றுக்கொண்டவராகவும், வல்லவராகவும், நல்லவராகவும் இருக்கிறார் என்ற காரணத்தால் அவருக்குப் பொறுப்புள்ள காலத்திலே 300 ஆவது ஆண்டை எட்டிக் கொண்டிருக்கிற மாநகராட்சி, 1973 ஆம் ஆண்டு இந்த நகர மன்றம் கலைக்கப்பட்டது. ஆனால் 15 ஆண்டுக் காலத்திற்குப் பின்னால் கூட, இந்த நிர்வாகத்தை முறையான மக்கள் ஆட்சியாக இல்லாமல், நிர்வாக ஆட்சியாக இருக்கிற நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். ஏன் இவைகளைச்





சொல்கிறேன் என்றால், 300 ஆவது ஆண்டு விழா நடைபெறு வதைப் பெரும் பேறாகக் கொண்டிருக்கிறது இந்த மாநகராட்சி. இந்தியாவிலே டில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற மெட்ரோ பாலிடன் ஏரியாக்களிலே சென்னையும் சேர்ந்திருக்கிறது. ஆனால் அங்கெல்லாம் ஆண்டுக்காண்டு, முடிகிற முடிவு ஒரு தேர்தல் ஏற்பட்டு மிகச் செம்மையாக, சீராகக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே சென்னை நகரத்திலே 14 ஆண்டுக் காலமாகியும், எந்தத் தேர்தலும் வரவில்லை. ஒவ்வொரு ஆண்டும் நாங்கள் கேட்கிறோம், தேர்தல் வேண்டும், தேர்தல் வேண்டு மென்று. மக்களுடைய ஆட்சி சென்னையிலே மலரட்டும் என்றால் அந்த மலர் மலர மாட்டேன் என்கின்றது. அந்த மலர் எப்போது மலரும் என்று எனக்குத் தெரியவில்லை. அதைச் சிந்தித்துப் பார்க்கின்ற நேரத்திலே, மிகத் துன்பமாகவும் கஷ்டமாகவும் இருக்கிறது. இதைப் பற்றி தான் இந்த அரசிடம் சொல்கிறேன். 300 வது ஆண்டு விழாக் கொண்டாடுவதற்கு முன்னால், சென்னை நகரத்திலே தேர்தலை நடத்தி, தேர்தலுக் குப் பிறகு அந்த மேயரை வரவழைத்து, மக்களாலே நடத்தப்படு கிற அந்த 300-வது ஆண்டு விழாவை சிறப்பாக நடத்த வேண்டு கிறேன். சைதை துரைசாமி அவர்கள் முன்னால் சொன்னது போல், சென்னை நகரில் தேர்தல் நடைபெற்றால் என்னவாகும்? அத்தனை பேரையும் கேட்கிறேன். என்னவென்று சொன்னால், இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் மிகச் சிரமப்பட்டு சில காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆனாலும் அந்தப் பணிகள் பூர்த்தியடையவில்லை.

வாக்காளர்களுக்கு அடையாள கார்டுகளைக் கொடுக்க வேண்டுமென்று ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் சொல்கிறார்கள். நாமும் சொல்கிறோம். சொல்வது தான் மிச்சமே தவிர, அது நடைமுறைக்கு வரவில்லை. ஏனென்றும் எதற்கென்றும் புரிய வில்லை. இன்றைக்குக கூட பேசப் போகிறேன் என்று சொன்னவுடன், என்னுடைய நண்பர்கள் எல்லாம் கிண்டலாக, கேலியாகச் சிரித்தார்கள். ஒவ்வொரு ஆண்டும் சொல்வதைத்தான் சொல்லப்போகிறாய்; புதிதா என்ன சொல்லப் போகிறாய் என்று சொன்னார்கள். கிண்டலையும், கேலியையும் தாங்கிக் கொள்ளக் கூடிய இதயத்தைக் கொண்டிருப்பதால், மக்களுக்குச் செய்ய வேண்டியதை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக இங்கே வந்திருக்கிற காரணத்தால், இந்த அவையில் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

[திரு. எஸ். வேணுகோபால்] [1987 ஏப்ரல் 28

மேலும் பெருந்துறைத் தடங்களிலுள்ள சாலைகளைப் பொறுத்த வரையில், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு குறைத்து விட்டார்கள். ரூ. 255.19 இலட்சம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு ரூ. 200 இலட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போன்று உட்புறச் சாலைகளுக்கென சென்ற ஆண்டு ரூ. 279 இலட்சம். இந்த ஆண்டு ரூ. 240 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விலைவாசிகள் உயர்ந்துகொண்டே போகிறது. ஆனால் இங்கே திட்டங்களுக்கான பணத்தைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் குறைப்பதாலே எப்படிச் சாலைகளைப் போட முடியும், எப்படி வளர்ச்சி அடைய முடியும் என்று என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை. நாட்டில் செலவினங்கள் அதிகமாகுமே தவிர, திட்டங்களுக்கான பணம் அதிகமாக வேண்டுமே தவிர, இப்படிக் குறைத்துக் கொண்டு போவதனால், இந்த நகரம் சீராக இருக்குமா, சிறப்பாக இருக்குமா என்று உங்களைக் கேட்க விரும்புகிறேன். மாநகராட்சி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் நிர்வாகம் நடக்கிற சூழ்நிலையைச் சொல்ல மிகக் கஷ்டமாக இருக்கிறது. அதற்கு 300 வது ஆண்டு விழா நடக்கிறது என்று சொல்கிறோம். மாநகராட்சி நிர்வாகத்திலே இருக்கிறவர்கள் நன்றாக வேலை செய்கிறார்கள் என்று சொன்னால் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இன்றைக்கு இருக்கிற ஆணையாளர், சிறப்பு அதிகாரி, அவர்களுக்குக் கீழே இருக்கிற அசிஸ்டெண்ட் கமிஷனர் வேலை பார்க்கிறார்கள் என்று சொல்லலாம். தினந்தோறும் அவர்கள் சாலைகளைச் சுற்றி வரலாம். காலையிலே சென்று வேலைகளைப் பார்வையிடலாம். ஆனால், அவர்களுக்குக் கீழே இருக்கிறவர்கள், அடிமட்டத்திலே இருக்கிறவர்கள், திட்டங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்க வேண்டியவர்கள் வேலை செய்வதில்லை. சென்ற ஆண்டே நான் கூறியது போல் கார்ப்பரேஷனில் வேலை செய்கிறவர்கள் கையெழுத்துப் போட்டுவிட்டு வேறு இடத்திலே வேலைக்குச் செல்கிறார்கள், அது இன்னும் பல இடங்களிலே நடைபெறுகிறது. சென்னை மாநகராட்சியிலே அப்படிச் செய்கிறார்கள். 1,600 சதுர மீட்டர் சாலைகள் சென்னையிலே இருக்கின்றன. இதனைப் பராமரிக்க 7,000 பேர் வேலை செய்கிறார்கள். இது எனக்குத் தெரிந்த தோராயமான கணக்கு. 7,000 பேர் இந்த வேலைக்குத் தேவைதானா? அவர்களில் பலர் கையெழுத்துப் போட்டுவிட்டு வேறு வேலைகளுக்குச் சென்று விடுகிறார்கள். இத்தகையவர்கள்



1987 ஏப்ரல் 28] [திரு. எஸ். வேணுகோபால்]

மீது ஏன் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுவதில்லை? அதிகாரிகள் இத்தகையவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கான காரணத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை மக்களாட்சி இல்லாத காரணத்தால்தான் அதிகாரிகள் தங்களுடைய எண்ணங்களுக்கேற்ப காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எண்ண வேண்டியிருக்கிறது. நிலைமைகள் இப்படியே போனால் சரியாக இருக்காது. (குறுக்கீடு). தேர்தல் இல்லை, அதனால் மக்களாட்சி இல்லை.

அடுத்து, சென்னை மாநகராட்சியின் மொத்த வருமானம் ஆண்டுக்கு ரூ. 3020.10 இலட்சங்கள். முறையாக வசூலிக்கப்பட்டிருக்குமானால் இன்னும் அதிகமான வருமானம் வந்திருக்க வேண்டும். பல ஆண்டுகளாக பல இடங்களில் இந்த வருமானம் சரியாக விதிக்கப்படுவது இல்லை. முறையாக வசூலிக்கப்படுவதில்லை. வீடுகளுக்கு வரி விதிக்கிறார்கள். இந்த வரி விதிப்பைப் பற்றி ஒன்றைச் சொல்கிறார்கள். தியாகராயநகர் பகுதியிலே ஒரு வரி. அண்ணா நகர் பகுதிக்கு ஒரு வரி என்ற விதத்திலே வரி விதிக்கப்படுகிறது. கட்டப்படுகின்ற இடத்திற்கு அளவு எடுத்து அதற்கேற்ப விதிக்கப்பட வேண்டுமே தவிர இடங்களைப் பொறுத்து வரி விதிப்பது மாற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

தனியார் தெருக்களைப் பற்றி சென்ற ஆண்டே இந்த அரசு நல்ல தீர்ப்பைக் கொடுத்தது. ஜி.ஓ. போடுகிறோம், தனியார் தெருக்களிலுள்ள வீட்டுச் சொந்தக்காரர்கள் சாலை, தெரு விளக்கு, வடிகால்கள் ஆகியவைகள் அமைப்பதற்கான செலவில் 25 சதவிகிதம் தொகையை முன்னதாகச் செலுத்த வேண்டும் என்ற விதியை அரசு தளர்த்தியுள்ளதாகவும், உடனடியாக நடைமுறைக்கு அது கொண்டு வரப்படும் என்றும் சொன்னார்கள். ஆனால் நடைமுறையில் இன்னும் கொண்டு வரவில்லை. வீடுகள் இருக்கின்றன. வரி கேட்கிறார்கள். எல்லா வீட்டினரும் வரி கொடுக்கிறார்கள். அவர்களுக்கு சாலை வசதி கிடையாது; விளக்கு வசதி கிடையாது; கழிவு நீர் வசதி கிடையாது; எந்த வசதியும் கிடையாது. ஆனால் வரியை மட்டும் அரசாங்கம் வசூல் செய்து கொண்டிருக்கிறது. இது எப்படி சரியாகும்?

[திரு. எல். வேணுகோபால்] [1987 ஏப்ரல் 28

இன்னொன்றையும் சொல்கிறார்கள். 10 அடி அகலம் உள்ள
தெருவைத் தான் அரசு நிர்வாகம்—கார்ப்பரேஷன் எடுத்துக்
கொள்ளும் என்று சொல்லுகிறார்கள். அதற்குக் குறைவான
அகலமுள்ள தெருக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று
சொன்னால் அவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? 16 அடி
அகலமுள்ள தெருக்களில் வாழ்கின்றவர்களுக்கும் ஓட்டுரிமை
உண்டு. 13 அடி அகலமுள்ள தெருக்களில் வாழ்கின்றவர்களுக்கும்
ஓட்டுரிமை உண்டு. 13 அடி அகலமுள்ள தெருக்களில்
வாழ்கின்றவர்களிடமும் வரி வசூலிக்கின்றார்கள். 16 அடிக்கும், 13
அடிக்கும் இடையிலே இருக்கின்ற நிலைமையைச் சீர்தூக்கிப்
பார்த்து அவை தனியார் தெருக்களாக இருந்தாலும் அரசு
ஏற்றுக் கொள்ள உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

8-வது வட்டத்திலே, திருநாவுக்கரசு தோட்டம், ஜி. கே.
கார்டன்ஸ் ஆகிய இடங்களிலே கூட லாரி போய் குப்பை எடுக்க
முடியவில்லை. குப்பை நிறைந்து இருக்கிறது.

3-வது வட்டத்திலே, பர்மா காலனி, சிவசெட்டித் தோட்டம்,
அம்மணி அம்மன் தோட்டம், மங்கம்மா தோட்டம் போன்ற
இடங்களில் குப்பை எடுப்பதற்கு லாரிகள் போவதற்கு இடம்
இல்லாமல் இருக்கின்றது.

(இரவு 7-10)

அடுத்து, தெரு விளக்கு. இதுபற்றி ஒரு விந்தையான செய்தி
சென்னை நகரத்திலே இருக்கும் சாலை விளக்குகள் எரிவதே
இல்லை. அதிகாரிகளைப் பார்த்து பல தடவை—வாரத்திற்கு
இரண்டு, மூன்று தடவைகள் பார்த்துக் கேட்டால் கூட, 'கேபிள்
ஃபால்ட்' என்றுதான் பதில் சொல்கிறார்கள். இதைத் தவிர
வேறு எந்த வார்த்தையும் சொல்வது இல்லை. அவர்கள்
'பழுதடைந்த தெருவுக்குள் மின் கம்பிகள் உடனுக்குடன் பழுது
பார்க்கப்பட்டு, தேவையான இடத்தில் புதிய கம்பிகள் போடப்
படுகின்றன' என்று சொல்கிறார்கள், கொள்கை விளக்கக்
குறிப்பிலே எவ்வளவு உண்மைக்குப் புறம்பான செய்தி சொல்லப்
பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில்
உண்மையிலேயே வேதனை அடைகின்றேன். ஆக பல விளக்கு
கள் எரியாமல் இருக்கின்றன. காரணம் கேட்டால் கம்பிகள்
இல்லை. அதிகாரிகளைக் கேட்டால் திட்டங்கள் சரியாக
இல்லை. இன்னும் பணம் வந்து சேரவில்லையென்று



1987 ஏப்ரல் 28] [திரு. எல். வேணுகோபால்]

சொல்கிறார்கள். இன்றைக்கு இருக்கின்ற அமைச்சரை நான்
வேண்டிக் கொண்டேன். ஒருநாள் வாருங்கள் என்று சொன்னேன்.
இந்த அவையின் மூலமாக நான் சொல்லிக்கொள்கிறேன்.
அமைச்சர் அவர்கள் ஒருநாள் சென்னை நகரிலே மாறுவேடம்
போட்டுக்கொண்டு எங்களுடைய வட்டாரங்களுக்கு வந்து
சுற்றிப் பார்க்க வேண்டும். விளக்கு எரிகிறதா என்று பார்க்க
வேண்டும். ஒளி விளக்கு நாயகன் ஆட்சி என்று கோஷம்
போட்டார்கள். ஒரு தடவை சென்னை நகரத்தில் ஒரு மக்கள்
ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. ஒளிவிளக்கு நாயகன்
ஆட்சியிலே ஒரு விளக்கும் எரியவில்லை என்று சொன்னார்கள்.
அந்தக் கோஷத்தைக் கேட்கும்போது நான் அவருடைய அன்புக்
குப் பாத்திரப்பட்டவன் என்ற காரணத்தினால் என் உள்ளம்
மிகவும் வேதனைப்பட்டது. ஏன் இவைகளைச் சொல்கிறார்கள்?
இந்த அரசு பணத்தை ஒதுக்குகின்றது. அவர்களுக்குக் கொடுக்க
வேண்டுமென்று, செய்ய வேண்டுமென்று நினைக்கிறது. ஆனால்
கீழே இருப்பவர்களும், அதிகாரத்தில் இருப்பவர்களும் வேலை
செய்யவில்லை. ஒளிவிளக்கு தருவதற்கு மிகவும் சிரமப்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகளை பல தடவை நான்
அழைத்துக் கொண்டுபோய்க் காட்டியிருக்கிறேன். சென்னை
நகரத்திலே விளக்குகள் மிக மிக மோசமாக இருக்கின்றன.
விளக்குகள் எரிவதில்லை. ஆனால் கொள்கை விளக்கக்
குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள். அண்ணா நகரில் அதிகமான
விளக்குகள் போடுகிறார்கள். ஒளிவிளக்கு இல்லை என்று
சொல்லவில்லை. முக்கிய சாலைகளில் விளக்குகள் எரிகின்றன.
ஆனால் இந்த ஆட்சி ஏழை எளியவர்கள் ஆட்சி, வறுமைக்
கோட்டிற்குக் கீழ் இருப்பவர்களுடைய ஆட்சி. ஏழை எளியவர்
களின் இதயங்களில் இன்றைக்கு முதலமைச்சர் வீற்றிருக்கிறார்.
ஏழைகளின் வாழ்வுக்காக வாழ்ந்துகொண்டிருக்கிறார். ஏழை
களின் சிரிப்பிலே இறைவனை காண்பதுபோல இன்றைக்கு
முதலமைச்சரைக் காண்கிறோம் என்று சொல்கிறோம். ஏழைகள்
இருக்கின்ற குடிசைப் பகுதியிலே, வறுமைக் கோட்டிற்குக் கீழே
இருக்கின்றவர்கள் வசிக்கின்ற பல இடங்களில் விளக்குகள் எரிய
வில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னுடைய
தொகுதியிலே இருக்கின்ற நேதாஜி நகர் தவிர மீதி நகர்களான
பாரதி நகர், அப்பனார் நகர், சஞ்சய் காந்தி நகர், இந்திரா
காந்தி நகர், அண்ணா நகர், சீனிவாசபுரம் நகர், நாகூரான்

தோட்டம் என்ற எல்லா இடங்களிலும் விளக்குகள் எரிய
வில்லை. கேட்டால் விளக்குக் கம்பிகள் இல்லை என்று சொல்லிக்
கொண்டிருக்கிறார்கள். இதிலே அரசு தயவு கூர்ந்து தனிக்
கவனம் செலுத்த வேண்டும். சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்
எனக்கு இன்னொரு ஆசையும் கூட. இந்த 300-ஆவது
ஆண்டிலே, இந்த விளக்குகள் எல்லாம் ஒளிமயமாக இருந்தது.
சென்னை நகரத்திலே எரியாத விளக்குகளே இல்லை என்ற நிலை
குறித்து அதற்கு ஒரு தருணத்தை உருவாக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மழை நீர் வடிகால் என்று இருக்கிறது. மொத்தம்
1600 சாலைகள் இருக்கின்ற இடத்தில் 1040 கிலோ மீட்டர்களுக்கு
மழை நீர் வடிகால் போட வேண்டும். ஆனால் அரசு 507-லே
தான் போட்டு இருக்கிறது. அவற்றில் புதியதாகப் போட்
டிருப்பதுகூட தென் சென்னையிலேதான் போட்டிருக்கிறார்
கள். ஏழைகள் வாழ்கின்ற வட சென்னையில் போடவே இல்லை.
ஏன் இந்தப் பாகுபாடு என்று தெரியவில்லை. பாதிக்கப்
படுகிறவர்கள் இப்படியே தான் இருக்க வேண்டுமா? கடந்த
ஆண்டு கூட நான் சொன்னேன். அமைச்சர்களை அங்கு வந்து
பாருங்கள், அருள் கூர்ந்து வாருங்கள் என்று சொன்னேன்.
அவர்களும் வரப்போவதும் இல்லை. நான் சொன்னதும்
நடக்கப்போவதும் இல்லை என்று இருந்தாலும் கூட நான்
சொல்ல வேண்டிய கடமையினால் சொல்கிறேன். மழை நீர் வடி
காலில் ஒரு பெரிய சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன். என்னுடைய
19-வது வட்டத்திலே ஜமால்மல் செளக்நார் தெரு என்று இருக்
கிறது. அதிலே 2 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே ஒரு மனிதன்
விழுந்து இறந்து விட்டான். அவன் இறந்த மூன்று நாட்களுக்குப்
பின்னாலே அவனுடைய உடல் வெளியே எடுக்கப்பட்டது.
ஆணையாளருக்கும் நன்றாகத் தெரியும். இதுவரை அந்த இடம்
மூடப்பட்டதா, சரிபார்க்கப்பட்டதா என்றால் இல்லை. ஏனென்று
கேட்டால் கோப்புகள் இடம் மாறுகின்றன. இடம் மாறி மாறிப்
போகிறது என்று சொல்கிறார்களே தவிர வேறு ஒன்றும் சொல்ல
வில்லை. கடந்த பொது விவாதத்திலே கூட நான் சொன்னேன்.
அந்த அதிகாரியைக் குறிப்பிட்டுச் சொன்னேன். அது ஏன்
இப்படி நடக்கிறது? மிகச் சாதாரண விஷயம். என்ன
ஆயிற்று என்று தெரியவில்லை. அதற்காக அங்கிருக்கின்ற மக்கள்
நாங்கள் உண்ணாவிரதம் இருக்கப் போகிறோம், போராட்டம்





நடத்தப் போகிறோம், ஆர்ப்பாட்டம் நடத்த போகிறோம் என்று
சொல்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், இந்த அரசிடம்
உண்ணாவிரதம் இருந்து போராடுவதைவிட வாதாடிப்பெற்றுத்
தருகிறேன் என்று சொன்னேன். வாதாடுகிறேன். ஆனால் பெற
முடியவில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.
அடுத்து ஏழாவது வட்டத்திலே மேட்டுக்கடைத் தெருவிலே 10
ஆண்டுக்காலமாக தண்ணீர் மேலே வருவதால் ரோடுகள் பாழாகி
அங்கே காலரா பரவி வருகிறது. இதைத் தடுக்க மாநகராட்சி
உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து, துப்புரவு. 1,600 சதுர மீட்டர் உள்ள இந்தச்
சென்னை நகரத்திலே இரண்டாயிரம் டன் உள்ள குப்பை
தினந்தோறும் சேர்கிறது என்பது உங்கள் கணக்குப்
படி. ஆனால் 2,000 டன்னிலே எவ்வளவு டன் குப்பையை
எடுக்கிறார்கள் என்பதை அதிலே சொல்ல முடியவில்லை. 2,000
டன் குப்பை எடுப்பது, நாள்தோறும் எடுத்துக் கொண்டிருக்
கிறார்கள். ஆனால் எடுக்கின்ற குப்பைகளை எப்படி எங்கே
சேர்க்கின்றார்கள் என்பது அல்ல. எல்லா இடங்களிலும் குப்பை
சேர்ந்திருக்கிறது. நான் இன்ஸ்பெக்டருக்கு அழைத்துக்
கொண்டு போவேன், அம்மாவையும், அசிஸ்டென்ட்
கமிஷனரையும். 'இதோ எடுக்கிறேன், பக்கத்திலேயே இதோ
வந்துவிடும்' என்பார்கள். ஆனால் வண்டி வருவதே இல்லை.
குப்பைத் தொட்டி வழிந்து மலை மாதிரி கொட்டும். ஆனால்
குப்பைகளை எடுப்பதே இல்லை. அதற்கு என்ன காரணம்
என்று சொன்னால், அவரவர்கள் ஒரு காரணம் சொல்கிறார்கள்.

மாட்டு வண்டி வருகிறது. அந்த மாட்டு வண்டிகளை ஒரே
யடியாக ஒழித்து விடவேண்டும். சின்ன வண்டியாக விட்டு
குப்பை எடுக்கவேண்டும். இதற்கு முன்னால் மேம்பாட்டுக்
குழுவிலே மாண்புமிகு நமது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்
கள்—இந்தக் குப்பைகளை அகற்றுவதற்கு, அன்றைக்கு நம்
முடைய செயலாளராக இருந்த அந்தோணி அவர்கள்
சொன்னார்கள். சொல்லி, முதலமைச்சர் அவர்கள் ஒரு
அறிவிப்பைக் கொடுத்தார்கள்—ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு
பக்கெட் தருகிறோம். அந்தப் பக்கெட்டிலே குப்பையைக்
கொட்டுங்கள், வெளியே எடுத்துக் கொண்டு வாருங்கள். பெல்
அடித்துக் கொண்டே வண்டி வரும். பெல் அடித்ததும்

[திரு. எஸ். வேணுகோபால்] [1987 ஏப்ரல் 28

குப்பையை அதில் கொட்டுங்கள் என்று. ஆனால் இப்போது தென் சென்னைப் பகுதியிலே தான் அப்படி பெல் அடித்து குப்பை கொட்டுகிறார்கள். வடசென்னைப் பகுதியிலே இல்லை. அதிலே நேரம் அதிகமாகச் செலவாகிறது என்று அதிகாரிகளைக் கேட்டால் சொல்கிறார்கள். அதைக் குறைக்கவேண்டும் என்றும் சொல்கிறார்கள். அதிலே எனக்கு ஒரு கருத்து. இதிலே ஒரு மாதிரியான சத்தத்தைக் கொடுத்தால் அந்தச் சத்தம் தெருவிலே வரும்போது எல்லோரும் கொண்டு வந்து குப்பையை அந்தத் தொட்டியிலே கொட்டினால் ரொம்ப வசதியாக இருக்கும். சில சமயங்களில் 2, 3 நாட்கள் குப்பையை எடுக்கவில்லையெனில், துர்நாற்றம் அடிக்கிறது. அதிலும் குறிப்பாக வட சென்னையிலே அதிகமான துர்நாற்றம். காரணம் அங்கே இருக்கின்றவர்களில் பெரும் பகுதி மக்கள் மீன், இறால், கறி முதலியவை சாப்பிட்டு கழிவுப் பொருளைக் கொண்டு வந்து, வெளியே கொட்டுகிறார்கள். பக்கத்திலே குப்பைத் தொட்டியிலே கொட்டியவுடன் துர்நாற்றம் அதிகமாக வந்து, சாலையிலே சுகாதாரக் கேடு விளைகிறது. அதனால் கொசுத் தொல்லை உருவாகிறது.

கொசுத் தொல்லையை இங்கே இருக்கின்ற நம்முடைய கார்ப்பரேஷன் என்றைக்கும் அகற்றமுடியாது. சொன்னவுடனே மருந்து அடிக்கிறேன் என்று சொல்வார்கள். மருந்து போகும். மருந்து அடிக்கமாட்டார். பாட்டிலைக் கொண்டு போய் விற்று விட்டு வந்து விடுவார். விற்று விட்டு வந்து, அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் அங்கே இரண்டு அரசியல்வாதிகள் வந்து நிற்பார்கள். மாநகராட்சியிலே செய்கிற தவறுகளை அதிகாரிகள் கண்டிக்கக்கூட இடம் இல்லாமல் ஒரு நிர்வாகம் அங்கு இருக்கிறது. கண்டித்தால் உடனே அரசியல் கட்சித் தலைவர்கள் அங்கே வந்துவிடுவார்கள். விட்டு விடுங்கள், இவன் நமக்கு வேண்டிய ஆள், அவனால் 500 ஓட்டு வரும், விட்டுவிடுங்கள் என்பார்கள்.

நாடு பெரியது, மக்கள் சக்தி பெரியது, மக்கள் நலன் பெரியது என்பதை—எந்த அரசியல்வாதியும்—என் கட்சி உட்படத்தான் சொல்கிறேன்—எந்தக் கட்சியையும் குறிப்பிட்டுச் சொல்ல வில்லை. எந்தக் கட்சிக்காரன் செய்தாலும் சரி, நிர்வாகத்திலே ஒரு கண்டிப்பு, நேர்மை இத்தனையும் இருந்தால்தான் முடியுமே



1987 ஏப்ரல் 28] [திரு. எஸ். வேணுகோபால்]

தவிர, இதற்கு முன்னாலே எப்படிச் செய்ய முடியும் என்பதை எண்ணிப் பாருங்கள். ஆகவே, நிர்வாகத்தைச் சீராகவும் செம்மையாகவும் ஆக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கழிப்பறைகள். அழகாகக் கட்டுகிறார்கள், கமிஷனர் அவர்களும், மேயர் அவர்களும். ரொம்ப அழகாக, ரொம்ப பத்துக் கொள்ளளவும் சுத்தமாகவும் ரொம்ப அழகாக, பார்ப்பதற்கு மிக பெட்டைப் போட்டு. அவ்வளவு அழகாக, அப்படிக் கட்டியதிலே ரொம்ப விசேஷமாக இருக்கிறது. [illegible]

ஆனால், அந்தக் கழிப்பறை நிர்வாகத்தில் தண்ணீர் வசதி படுகிறதா? தண்ணீருக்கு சரியான முறை வகுக்கப்படுகிறதா என்றால், தண்ணீருக்கு சரியான முறை வகுக்கப்பட்டு விடப் படவில்லை. சாக்கடைக் கழிவு நீர் வெளியே போவதற்கு சரியான இடங்கள், பைப்புகள் கனெக்ஷன் கொடுக்கப்படுகிறதா என்றால் இல்லை. அழகாக இருக்கிறது.

எல்லா இடங்களிலும் 'பெய்ட் கக்கூஸாக' ஆக்க வேண்டும் என்று நான் சொல்லியிருக்கிறேன். பல இடங்களில் 'பெய்ட் கக்கூஸாக' இருக்கிறது. சாதாரண கழிப்பிடங்களில் மலம் போகாமல் அதனால் துர்நாற்றம் வெளியே வீசும். அப்படி வீசுகிற நேரத்தில் தெருவிலே இருப்பவர்களிடம் ஓரே சண்டை. அந்தக் கக்கூஸை இடித்து விடுங்கள் என்பார்கள் ஆனால் அங்கிருக்கின்ற ஏழை மக்கள் அதை இடிக்காதே என்பார்கள் சோதனையாக இருக்கிறது, எப்படியா அதிலே மலம் போவது என்று சொல்வார்கள். ஆகவே இந்தச் சிக்கல்களுக்கு என்ன காரணம் என்றால்—கட்டுகிற கழிப்பறைகளை முறையாக, சரியாக நிர்வகித்து பராமரித்தால்தான் அந்தக் கழிப்பிடங்கள் சரியாக இருக்கமுடியும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, குழந்தைகளுக்குக் கழிப்பிடங்கள் கட்ட வேண்டும் என்று கட்டினோமே தவிர, எந்தக் குழந்தையாவது அதிலே போகிறதா என்றால், இல்லை. ஏனென்றால் அது, அந்த கண்ட இடத்திலே போகிறது. அப்படிப்பட்ட நிலைக்கு நான் இன்னொரு யோசனை சொல்வேன். விளம்பரத்தினாலே—சினிமாக்களிலே காட்டப்படுகிற செய்திகள் மக்களின் மனத்தை எப்படி ஈர்க்கின்றனவோ, அது போல் சென்னை நகரத்தில் சுத்தமாக இருப்பதற்கும், குப்பை எப்படி கொட்டுவது,

குழந்தைகளை மலம் கழிக்க எங்கே கொண்டு விடுவது என்பன போன்று டி.வி., சினிமாக்களிலே எல்லாம் செய்திச் சுருளாக இந்த அரசு தயவுசெய்து காட்ட முன் வந்தால் சென்னையில் இருக்கிறவர்கள் அதிலே பலன் பெறுவார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

3-வது வட்டத்திலே பாரதி நகர் என்று இருக்கிறது. அங்கு ஒரு கக்கூஸ் கட்டியிருக்கிறார்கள். அதற்கு இதுவரைக்கும் எந்த கனெக்ஷனும் கொடுக்கவில்லை. அந்தத் தெருவிலே சாக்கடையே இல்லை. அதனால் இரண்டு பக்கமும் இருந்து, ரோட்டிலேயே போடுவார்கள். அவனும் தூக்கிக் கொட்டுவான், இவனும் தூக்கிக் கொட்டுவான். அதனால் ரோட்டிலே நடக்கிறவர்கள் பாடு கஷ்டமாக உள்ளது. சாக்கடை இல்லை, நான் என்ன செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். கழிப்பறை இல்லை. வெளியே தான் போக வேண்டும். பக்கத்திலே பரந்த இடம். பெண்கள் போனால் ஆண்கள் எட்டிப் பார்க்கிறார்கள் என்று. அதனால் சண்டை. போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகிறார்கள். கலாட்டா வருகிறது. இப்படிப்பட்ட நிர்வாகக் கேடுகள். அழகான சென்னை நகரம் என்று சொல்கிறபோது, அதை எல்லாம் தயவு செய்து கவனிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னையிலே மரம் நட்டிருக்கிறார்கள். ரொம்ப வரவேற்கவேண்டிய சமாச்சாரம். நல்ல மரம் நட்டுக் கொண்டு வருகிறார்கள். பழைய காலத்திலே பார்க்கிறபோது நான் எல்லாம் சின்னவனாக இருக்கிறபோது, தெருவிலே போனால் இரண்டு பக்கமும் மரம் இருக்கும். நாங்கள் மர நிழலிலே போவோம். இப்போதும் அதுபோல் செய்திருப்பதற்கு அவர்களைப் பாராட்டு கிறேன்.

சென்னை காமராஜ் நகரிலே மரத்தை நட்டு, அங்கே இருக்கின்றவர்கள், ஏழை எளியவர்களை—பாதுகாக்க அதற்கென நல்ல ஒரு கணிசமான தொகையைக் கொடுத்து அவர்களைப் பராமரிக்கச் செய்திருக்கின்றார்கள். அதை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது. நான் பாராட்டுகிறேன், பெருமைப்படுகிறேன்.

கொசுத் தொல்லை பற்றி நான் சொன்னேன். கூவம் நதியைத் தயவுசெய்து மணக்க வையுங்கள்.





கூவம் மணக்குது, மணக்குது என்று சொல்லி கடைசியில் மணக்காமலேயே போய் விட்டது. இன்றைக்குக் கொசு உற்பத்தியே கூவத்திலேதான் நடக்கிறது. சென்னை நகரம் முழுவதற்கும் கூவத்திலிருந்துதான் கொசு வருகிறது. இதற்காக என்று தனி அதிகாரியைப் போட்டாலும்கூட கொசுத் தொல்லை தீராமாட்டேன் என்கிறது. எனவே கொசுத் தொல்லை நகரில் அதிகமாக இருப்பதால் அதைப் போக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(இரவு 7-20)

அடுத்து மாநகராட்சிப் பள்ளிக்கூடங்கள் எல்லாம் அரசாங்கத்திற்கு வந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். கேட்டால் பாதி வந்துவிட்டது என்கிறார்கள். பாதி இல்லை என்கிறார்கள். என் தொகுதியில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அந்தப் பள்ளிக் கூடம் இப்போது ஒரு கக்கூஸாகவே இருக்கிறது. இந்தப் பள்ளிக்கூடத்தை ஒரு நாள் இன்ஸ்பெக்ஷன் செய்ய நானும் ஏ.சி.-யும் போயிருந்தோம். அங்கே இருப்பவர்களைக் கேட்டால் இங்கே ஸ்கூல் இல்லை கக்கூஸ்தான் அது என்கிறார்கள். அப்படி ஒரு நிலை உருவாகக்கூடாது என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, டி.எச். ரோட்டில் நகராட்சிப் பள்ளிக்கூடம் ஒன்று இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்தில் அதிகமான பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆனால் அங்கே அவர்களுக்குப் போதுமான அறைகள் இல்லை. அவர்கள் பரீட்சை எழுதுவதற்குக்கூட மேசைகள் இல்லை. அங்கே உள்ள ஆசிரியர்கள்—பெற்றோர்கள் சங்கத்தைச் சார்ந்தவர்கள். ரூ. 2,000 செலவு செய்து டேபிள் வாங்கி வந்து போட்டு மாணவர்கள் பரீட்சை எழுதியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றி அரசு பள்ளிகளுக்குத் தேவையானவற்றை வழங்குவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் 4-வது, 5-வது வட்டங்களில் நல்ல மார்க்கெட் இல்லை. பார்க்கில் வைக்க வேண்டும் என்கிறார்கள். பார்க் மிகவும் அழகாக இருக்கிறது. எனவே வேறு இடத்தில் வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு அங்கே ஈமக்கடன் செய்ய சரியான இடம் இல்லை. அத்துடன் சமுதாயக் கூடம் ஒன்றும் தேவைப்படுவதால் அதனைக் கட்டித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு மார்க்கெட் அருகில் அல்லிக் குளம் ஒன்று இருக்கிறது. அங்கே அடுக்குமாடிக் கடைகள் கட்ட இருப்பதாகச் சொன்னார்கள். அந்த ஸ்கீம் என்ன ஆனது? அங்கே இருந்தவைகளை இடித்தார்கள். காண்ட்ராக்டருக்கும் விட்டார்கள். மக்கள் சத்தம் போட்டார்கள். முதலமைச்சர் கட்டடங்களைக் கொடுத்தார் என்றார்கள். கடைகளில் அது என்ன ஆனது என்று தெரியவில்லை. அந்தக் கடைகள் எப்போது கட்டப்படும்; அப்படி எந்தக் காலத்திலே முடிக்கப்படும்? ஒன்றுமே தெரியவில்லை. 300-வது ஆண்டிலாவது அந்தக் கடைகளுக்குத் திறப்பு விழா என்கிற நிலை வருமா? இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எங்கள் தலைவர் திரு. காமராஜரின் சிலை மெரினா கடற்கரையில் இருக்கிறது. (மணி அடிக்கப்பெற்றது).

நான் கடைசியாகப் பேசுகிறேன். அரசை ஒரு இடத்தில் கூட தாக்கவில்லை. அமைதியாகத்தானே பேசுகிறேன். அதற்குள் மணி அடிக்கிறீர்களே! (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாக்குவதற்காக அடிக்கவில்லை. பூராவும் சாதகமாகவே பேசுகிறீர்கள் என்றா அடிக்கிறேன்? நேரம் ஆகிறது.

**திரு. எஸ். வேணுகோபால்:** மெரினா கடற்கரையில் இந்த நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த; 10 ஆண்டுக் காலம் சிறையில் இருந்த, எல்லோராலும் போற்றப்படுகிற, முதலமைச்சர் அவர்களால் போற்றப்படுகிற, எங்கள் தலைவர் திரு. காமராஜரின் சிலை இருக்கிறது. ஆனால் அந்தச் சிலைக்கு இதுவரை விளக்குப் போட முடியவில்லை. கார்ப்பரேஷனில் பல தடவை கேட்டாகிவிட்டது. இன்னும் ஏனோ செய்ய முடியவில்லை. காங்கிரஸ் கட்சியாவது பணம் கொடுக்கத் தயாராக இருக்கிறது. தயவு செய்து அந்தச் சிலைக்கு விளக்குப் போடுங்கள். ஏன் ** இருட்டிலே இருக்கிறார்? இந்த நாட்டுக்குக் கல்வியைக் கொடுத்தவர்—ஒரு [illegible] தொழிற்சாலைகளை உருவாக்கிக் கொடுத்த அந்த உத்தமரின் சிலைக்கு விளக்கு இல்லை என்றால் எத்தனை தடவைதான் சொல்லுவது? இன்றும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





எப்படித்தான் சொல்லுவது? இதற்காக ஒரு நிலைமை உருவாக்க வேண்டாம் என்று மட்டும் சொல்லிக் கொள்கிறேன். தயவு செய்து அந்தச் சிலைக்கு ஒரு விளக்குப் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் மெரினாவில் மிக நீண்ட கடற்கரை இருக்கிறது. உலகத்தில் உள்ள அத்தனைபேரும் மெரினா கடற்கரையைப் பாராட்டுகிறார்கள். நல்ல கடற்கரை என்கிறார்கள். அந்தக் கடற்கரையில் போதிய விளக்கு இல்லை. அதனால் அங்கே ராபெரி நடக்கிறது. (குறுக்கீடு).

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மரியாதைக்குரிய பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்களுடைய சிலையைக் குறிப்பிடும்போது ** என்ற வார்த்தையை உபயோகப்படுத்துகிறார். ** ஏன் அப்படி இருக்க வேண்டும்? என்று கேட்டிருக்கிறார். எனவே ** என்பதைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை எடுத்துவிடுகிறேன்.

**திரு. எஸ். வேணுகோபால்:** அவரை மட்டும்தான் பெருந்தலைவர் என்று சொல்ல வேண்டும் என்று அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சென்னைப் பேச்சு.

**திரு. எஸ். வேணுகோபால்:** தலைவர் அவர்களே, அடித்தளத்திலிருந்த ஆதங்கத்தில் இதைச் சொல்லி விட்டேனே தவிர வேறு அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவருக்கு விளக்குப் போடவில்லையே என்று சொல்லிவிட்டேன். அந்தப் பெரிய கடற்கரையில் விளக்குகள் இல்லை. அதனாலே அங்கே கொள்ளை நடக்கிறது. காவலர்கள் போனால் அடிக்கிறார்கள். புதிதாகக் கல்யாணம் ஆன தம்பதிகள் அங்கே போனால் அவர்களின் நகைகளையெல்லாம் கொள்ளை அடிக்கிறார்கள். வெளி மாநிலத்திலிருந்து வருகிறவர்கள்கூட மெரினா கடற்கரைக்குச் சென்றால் அதிகமான அளவில் திருட்டுக் கொடுக்கிறார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எனவே அரசு இதில் உடனடியாகக் கவனம் செலுத்தி விளக்குகளை அதிகமாகப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். 25 நிமிஷம் ஆகிவிட்டது. எல்லோரையும்விட 10 நிமிஷம் அதிகமாகக் கொடுத்திருக்கிறேன். முடித்து விடுங்கள்.

திரு. எஸ். வேணுகோபால்: தெருக்களில் மாடுகள் அதிகமாக இருக்கின்றன. மாடுகளின் சாணத்தால் சென்னை நகரத்தின் தெருக்களே அடைத்துக் கொள்கின்றன. அதனால் பெரும் சங்கடம் உருவாகிறது. கடந்த ஆண்டே சொன்னேன். கால் நடைகளை அகற்ற வேண்டுமென்றேன். செய்கிறேன் என்று சொன்னார்கள். இதுவரை ஒன்றும் செய்யவில்லை.

வெளியே அனுப்புகிறோம் என்று சொன்னார்கள். இதுவரை அனுப்பவில்லை. மாடுகள் அதிகம் அதனாலே சென்னை மாநகரம் சீரழிகிறது. மாடுகள், பன்றிகள் போன்ற பிரச்சினையில் இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது புதிய உத்திரவு போடப்பட்டிருக்கிறது. யார் யாரைத் திறப்பு விழாவிற்கு அழைக்க வேண்டும் என்று போட்டிருப்பதில் ஊராட்சியிலிருந்து எல்லோரையும் போட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்தான். அமைச்சர் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வேன்—அதனுடன் பாராளுமன்ற உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். (மணி அடிக்கப்பெற்றது).

இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். மதுரை மாநகராட்சிக்குக் கமிஷனரை நியமிக்கவில்லை. அங்கே கல்வி அதிகாரி இல்லை. டி.ஈ.ஓ. இல்லை என்று சொல்லுகிறார்கள்.

அடுத்து, குடிசை மாற்று வாரியத்தின் குடியிருப்பு உள்ள பகுதியில் குப்பைகள் எடுக்கவில்லை. இதைப் பற்றி குடிசை மாற்று வாரியத்தில் கேட்டால் கார்ப்பரேஷன் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே அதையும் கார்ப்பரேஷன் எடுத்துக் கொள்ள வேண்டும். (மணி அடிக்கப்பெற்றது).





மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். நீங்கள் பேசிய அத்தனை கருத்துக்களும் இருக்கின்றன. அவற்றிற்கும் பதில் சொல்லப்படும்.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 21 சட்டப் பேரவை உறுப்பினர்கள் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டே போனால் பொழுது விடிந்துவிடும் என்ற காரணத்தினால் ஒரு சிலவற்றுக்கு மட்டும் இங்கே விளக்கத்தைத் தந்து மற்றவற்றிற்குத் தனியாகப் பட்டியல் போட்டு அதிலே அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதையும் சேர்த்து அச்சடித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின்துறை அமைச்சராக இருந்தபோதும் இதே பதிலை அளித்தார்கள். எல்லா அமைச்சர்களும் இதைப் பின்பற்றினால் எல்லோருக்கும் நல்லது.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: ஆகவே சிலவற்றுக்குப் பதில் சொல்லப்படவில்லை என்றால் அவைகள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டுவிட்டன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கருதிக் கொள்ள வேண்டாம் என்று முதலிலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில் தேர்தல்களை நடத்த வேண்டும் என்ற விருப்பத்தை அனைவரும் தெரிவித்தார்கள். தேர்தல்கள் நடத்தாததைப் பற்றி ஒரு சிலர் கண்டித்துக் கூட பேசினார்கள். மக்கள் என் பக்கம் என்று சொல்லுகிறீர்களே, அப்படியானால் ஏன் தேர்தலை நடத்துவதற்கு அச்சம் என்று ஆண்டி விட்டுக்கூடக் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் பேசும்போது சொன்னார்கள்—மக்களைச் சந்திக்க உங்களுக்கு அச்சமா என்றுகூடச் சொன்னார்கள். ஆனால் எங்களுடைய அனுபவம்—மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் சுற்றுப்பயணம் மேற்கொள்ளுகிறபோதும், நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுகிறபோதும் கடலெனத் திரளுகிற

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 28

மக்களைப் பார்க்கும்போது அலர்ஜி எங்களுக்கு ஏற்படுவதில்லை, எதிர்க்கட்சிகளுக்குத்தான் ஏற்படுகிறது என்பதை அனுபவ பூர்வமாகப் பார்த்து வருகிறோம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஆனாலும் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும். குறிப்பாக மாநகராட்சிப் பகுதிகளிலிருந்து வந்திருக்கிற சட்டப் பேரவை உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்த கருத்துக்கள், குறைகள் ஆகியவற்றை நாம் எண்ணிப் பார்க்கிறபோது ஆங்காங்கே அந்தந்தப் பகுதிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி இருப்பாரேயானால் நிச்சயமாக இந்தக் குறைகள் எல்லாம் நீக்கப்படும். அதற்கான வழிவகைகள் கட்டாயம் உண்டாகும். இந்த மன்றத்தின் நேரத்தை அதற்காகப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இருக்காது. ஆகவே தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமேயில்லை. மாநகராட்சிகளுக்கெல்லாம் ஒரு வகையான சட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கம் நமது அரசின் கொள்கையாக இருக்கிறது. அண்மையிலே கல்கத்தாவில் கூடிய மேயர்கள் மாநாட்டிலேகூட மாநகராட்சிகளைப் பொறுத்த வரையில் ஒரே சட்டமாக இருப்பது நல்லது என்று தெரிவித்திருக்கிறார்கள். விரைவிலே சட்டத்தின் பகுதிகளை ஆய்ந்து அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கிடையில் உயர் மட்டக் குழுக்களை மாநகராட்சிகளில் அமைத்து அவர்கள் இந்தப் பணிகளை நிறைவிற்கு மக்களுக்கு திருப்தி ஏற்படுகிற வகையில் செயல்படுத்த இந்த அரசு முனைப்போடு நடவடிக்கை எடுக்கும்.

(இரவு 7-30)

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அமைச்சர்களை அழைத்தேன், வருவதேயில்லை; இந்த அமைச்சரை அழைத்தேன், இவராவது வருவாரா; தெரு விளக்கு எரிகிறதா என்று பார்ப்பாரா? மாறுவேடத்தில் வருவாரா என்று கேட்டார்கள். அவருக்கு ஒரு ரகசியம் சொல்கிறேன். நான் கூட்டத்திற்குள்ளே நுழைந்தால் பல பேருக்கு என்னை அடையாளம் தெரிவதில்லை. கொஞ்சம் ஆஜானுபாகுவாக இருந்தால் அடையாளம் தெரியும். ஆகவே சாதாரணமாக வந்தால்கூட



1987 ஏப்ரல் 28] [திரு. ச. இராமச்சந்திரன்]

சட்டென்று அடையாளம் தெரியாது. என்னுடைய ராசியோ என்னவோ தெரியவில்லை, இந்தத் தெரு விளக்குகளை உள்ளாட்சித் துறையிடம் கொடுத்துவிட்டு நிம்மதியாக இருக்கலாமென்று நினைத்தேன். இப்போது மின் துறையிலிருந்து உள்ளாட்சித் துறை அமைச்சராக வந்த பிறகும் தெரு விளக்குகள் என்னோடு ஒட்டிக்கொண்டு வந்துவிட்டன. எனவே அமைச்சர்கள் வரும் அந்த நேரத்தில், அந்தக் கால கட்டத்தில் வேண்டுமானால் பயனளிக்கும். நிரந்தரமாக அத்தகைய பயன் ஏற்பட நாம் ஆங்காங்கே ஆலோசனைக் குழுக்கள், மக்கள் குழுக்களை அமைத்து, அவர்கள் அதிலே ஈடுபாடு கொண்டால் தான் இந்தக் குறைகளை ஏழைகளுக்கு திவர்த்தி செய்ய முடியும். ஆகவே மாநகராட்சியைப் பொறுத்தவரையில் அத்தகைய ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சிகளைப் பொறுத்தவரையில் நான் இரண்டு கருத்துக்களை முக்கியமாகச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ஒன்று, அண்மையிலே செய்த சொத்து வரி விதிப்புகள் உயர்வு பற்றியதாகும். சொத்து வரி விதிப்பு பற்றி ஏற்கெனவே அரசு ஆணை பிறப்பித்தது. அதற்காகத் தனி அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டு, அவர்கள் எந்த அளவுக்கு உயர்த்த வேண்டுமென்றெல்லாம் பட்டியல் தயாரித்து வந்தார்கள். ஆனால் அரசுக்கு ஒரு தகவல் வந்தது. அப்படிப் பட்டியல் தயாரிக்கப்பட்டு உயர்த்தப்பட்டது, குறைக்கப்பட்டது என்ற நிலை வரும்போது—எல்லா நகராட்சிகளையும் சொல்லவில்லை —ஒருசில நகராட்சிகளில், வரி உயர்வைக் குறைக்கின்ற அதிகாரம் எங்களுக்கு இருக்கிறது, ஆகவே எங்களைக் கவனித்தால் நாங்கள் உங்களைக் கவனித்தோம்' என்ற போக்கு அதிகமாக வளர்ந்து வருகிறதென்ற குறைபாடு எங்கள் கவனத்திற்கு வந்தது. இந்த இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் கவனித்துக் கொள்ள வேண்டாமென்றும், இத்தகைய தவறான முறைக்கு இடம் தரக்கூடாது என்றும் அரசு கருதி, அந்த வரி விதிப்புகளை மாற்றம் செய்வதைத் தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி மன்றங்களே சட்டத்தில் என்ன உரிமைகள் இருக்கிறதோ, என்ன அதிகாரம் இருக்கிறதோ அதற்கேற்ப செய்துகொள்ளட்டும், இதுவரையில் தனி அதிகாரிகள் தயாரித்த ஆவணங்களை அவர்களிடம் ஒப்படைத்துவிடுங்கள் என்று அரசு உத்தரவிட்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 28

டிருக்கிறது. ஆகவே வரியை உயர்த்துவேன் என்று சொன்னாலும், உயர்த்திய வரியைக் குறைப்பேன் என்று சொன்னாலும், அதிலே ஒழுங்கீனங்கள், முறைகேடுகள் நடந்தாலும், பாதகம் ஏற்பட்டாலும் அதற்கு முழுப் பொறுப்பு ஏற்க வேண்டியது தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி மன்றங்கள், பேரூராட்சிகள்தான்; அரசல்ல என்பதைத் தெரிவித்து, இதில் பொது மக்கள் விழிப்புணர்வோடு நடந்துகொள்ள வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே இந்த மன்றத்திலே இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். நிதி நெருக்கடிகளைப் பொறுத்தவரையில் நகராட்சி மன்றங்கள், பேரூராட்சிகள் மட்டுமல்ல, உண்மையை ஆராயப் போனால், மாநில அரசுக்கும் நிதி நெருக்கடி உண்டு. மத்திய அரசுக்கும் நிதி நெருக்கடி உண்டு. நீங்கள் ஒன்றும் தெரியாதவர்கள் அல்ல. மத்திய அரசு 14,000 கோடி ரூபாய் துண்டு விழும் நிலையில் இருக்கிறது. மாநில அரசின் துண்டு விழுந்த நிதி நிலை அறிக்கை பற்றி இங்கே நாம் விவாதித்தோம். எனவே நிதி நெருக்கடி எல்லோருக்கும் இருக்கிறது. அதை எப்படி சமாளிக்கப் போகிறோம் என்பதுதான் முக்கியம். நகராட்சி மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள பிரதிநிதிகள் மாநில அரசு நிதி தர வேண்டுமென்று உட்கார்ந்து கொண்டிருக்கலாம். நியாயமாக, அந்த நகராட்சியின் வளர்ச்சி காரணமாக, நாகரீக மேம்பாட்டின் காரணமாக சொத்துக்களை யார் வைத்திருக்கிறார்களோ, அந்தச் சொத்துக்களின் மதிப்பு தானாக உயர்கிறது. கிராமங்களிலே ஒருவர் நிலம் வைத்திருக்கிறார் என்றால் 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் பாடுபட்டால்கூட அவர் வயிற்றைக் கழுவ அல்லது அவரைச் சார்ந்துள்ள குடும்பத்தினரின் வயிற்றைக் கழுவ அது உதவும். ஆனால் எதுவும் செய்யாமல், ஒரு கிரவுண்ட் அல்லது நான்கு கிரவுண்ட் வாங்கிப் போட்டுவிட்டு, திண்ணையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தால் கூட, நகரத்தில் கிரவுண்ட் இருந்தால் தானாக மதிப்பு உயர்கிறது. ஆகவே உழைப்பில்லாமல், ஒரு நகரத்தின் வளர்ச்சி பல்வேறு காரணங்களால் இயற்கையாக ஏற்படுகிறபோது, அபரிமிதமான மதிப்பைப் சொத்து உடையவர்கள் பெறுகிறார்கள்.



1987 ஏப்ரல் 28] [திரு. ச. இராமச்சந்திரன்]

ஆக தாங்களாக உழைக்காத ஒரு செல்வத்தை ஒரு பெரும் பகுதியை எந்த நகரத்தின் மூலம் அந்தச் சொத்துக்கு ஒரு மதிப்பு கூடியிருக்கிறதோ, மதிப்பு கூடியிருக்கிறதோ அதைப் பகிர்ந்து கொள்வதற்கு நாம் தயார் இல்லை என்று சொத்து உடையவர்கள் சொல்வார்களானால், அவர்களிடத்திலே வரி போட்டு அதற்குரிய பங்கைப் பெற வேண்டியது மாநகராட்சியானாலும் சரி, நகராட்சி மன்றங்களானாலும் சரி, அவர்களுக்கு கடமையில்லையா? ஆகவே சில நகர மன்றங்கள் வரிகளை உயர்த்தமாட்டோம் என்று சொல்வதன்மூலம் யாருக்கு அவர்கள் நன்மை செய்கிறார்கள்? ஏழைகளுக்கா, பணம் படைத்தவர்களுக்கா என்பதை தயவு செய்து இந்த மன்றம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஆகவேதான் அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, நாங்கள் மானியமாகக் கொடுத்தாலும் சரி, கடனாகக் கொடுத்தாலும் சரி, ஒவ்வொரு நகராட்சி மன்றமும் நம்மிடத்திலே உதவி கேட்டு வருகிறபோது, அந்த நகராட்சி மன்றம் எந்த அளவுக்கு வருமானங்களை அவர்கள் எந்த சொத்துடையவர்களை, சுகபோகிகளை அவர்கள் எந்த அளவுக்குக் கேட்டு அவர்களிடத்திலே வருமானத்தைப் பெற்றிருக்கின்றார்கள் என்பதைப் பார்த்தபிறகுதான் தரவேண்டும் என்கிற கொள்கையை இந்த அரசாங்கம் நிச்சயமாகக் கடைப்பிடித்து வரும். அங்கே அவர்களிடத்திலே தாழ்வு செய்துவிட்டு இங்கேயும் பழி போடுகின்ற முயற்சியிலே ஈடுபடுவார்களானால் —நான் நகராட்சி மன்றங்களை நடத்துபவர்களுக்கு இப்போதே சொல்லிக் கொள்கிறேன்—இந்த அரசு அந்தகைய போக்குக்கு இடம் கொடுக்காது என்பதைப் பணிவன்போடு நிச்சயமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில், மற்ற பல்வேறு அதிகாரங்கள், அவையெல்லாம் பற்றி எடுத்துச்சொன்னார்கள். அதைப் பற்றி அரசு நிச்சயமாக ஆய்ந்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நகராட்சிகள், பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே எடுத்துச்சொன்ன பல்வேறு குறைபாடுகளோடு நானும் என்னை இணைத்துக்கொண்டு சொல்கிறேன். அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கான முயற்சிகளை இந்த

அரசு மேற்கொள்ளும். குறிப்பாக, உள்ளூர்ச் சாலைகள், அவைகளுக்குத் தரப்படுகின்ற மானியம், லோகல் ரோட்ஸ் கிராண்ட்ஸ்—அதை மாற்றியமைக்க வேண்டும் என்று, உயர்த்த வேண்டும் என்று யோசனை சொன்னார்கள்.

ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் பழுது பார்க்கப்படாமல் அப்படியே இருக்கின்றன. அவற்றுக்கு ஏதேனும் தனித் திட்டம் போட்டாவது அந்தப் பள்ளிக் கட்டிடங்கள் நல்ல முறையிலே வைக்கப்படவேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். ஊராட்சி மன்றங்களுக்குத் தரப்படுகின்ற தொலைக்காட்சிப் பெட்டியோ, வானொலிப் பெட்டியோ அல்லது பொதுவாகத் தரப்பட்ட பொருள்களோ பஞ்சாயத்துத் தலைவர் வீட்டிற்குப் போய்விடுகிறது. ஊராட்சி மன்றத்திற்கு என அலுவலகக் கட்டிடம் இருக்குமேயானால் அவைகளையெல்லாம் பொதுவிலே பயன்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கும் என்றும் தெரிவித்தார்கள்.

தெரு விளக்குகளைப் பராமரிக்கும் பணியினை ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்வதற்கு ஊக்கப்படுத்தும் வகையில் அரசு உதவி செய்யவேண்டும் என்று சொன்னார்கள். இத்தகைய குறைபாடுகளைப் போக்குவதற்கும், இதோடு குடிதண்ணீருக்கு, ஊராட்சி மன்றமும் ஊராட்சி ஒன்றியமும் பொறும் பங்கு ஏற்கும் வகையிலே இந்த அரசு உறுதுணையாக இருக்கும். இவையெல்லாம் கிராமப்புற மக்களுக்கு இருக்கின்ற குறைகள். அவைகள் தீர்க்கப்படுவதற்கு, ஊராட்சி ஒன்றியத்திற்கோ ஊராட்சி மன்றத்திற்கோ தேவையான நிதி ஒதுக்கம் செய்து உற்சாகப்படுத்தும் என்பதனை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே குறிப்பாக ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரையிலேயும் ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையிலேயும் இரண்டு திட்டங்களை அவர்கள் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று புரட்சித் தலைவர் அரசு விரும்புகிறது. ஒன்று பகுதியினுடைய முன்னேற்றம். இன்னொன்று அங்கே இருக்கின்ற மக்களின் முன்னேற்றம். பகுதியினுடைய முன்னேற்றம் என்று சொல்கிறபோது, போக்குவரத்து சாலை வசதி, பள்ளிக்கூட வசதி, குடிநீர் வசதி, மருத்துவ வசதி இதுபோன்ற அந்த ஏரியா டெவலப்மெண்ட் என்று சொல்கிறோமே அவைகள்தான்.





அதாவது அந்தப் பகுதிக்கு ஒவ்வொரு குடியிருப்பிலேயும்—ஹேம்லெட்ஸ் என்றுகூட நாம் சொல்வோம்—அந்த ஒவ்வொரு குடியிருப்பிலேயும், அது தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதியாக இருந்தாலும் சரி, சிறுபான்மையோர் வாழ்கின்ற பகுதியாக இருந்தாலும் சரி அவர்களுடைய தேவைகள் என்ன, அந்தத் தேவைகளுக்கு என்ன முறை வைப்பது—சான்றாக ஒரு கிராமத்திலே உள்ளவர்கள் முதலிலே குடிதண்ணீர் வேண்டும், பிறகு வேண்டுமானால் ரோடு போடுங்கள் என்று சொல்வார்கள். இன்னொரு கிராமத்திலே ரோடு முதலில் வந்தால் குடிதண்ணீர் கூட நாங்கள் சமாளித்துக் கொள்வோம் என்று சொல்வார்கள். ஆகவே கிராமந்தோறும் அவர்களுடைய இன்றியமையாத் தேவைகளைத் தொகுத்து, அந்தத் தேவைகளை முறை வைத்து 'பிரையாரிட்டி'யையும் அவர்களிடமிருந்து பெற வேண்டும் என்பது அரசினுடைய திட்டம்.

(இரவு 7-40)

இரண்டாவதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒரு விஷயத்தை எடுத்துக் காட்டினார்கள். இன்றைக்கு எந்த ஏழைகள் முன்னேற வேண்டுமென்று விரும்புகிறோமோ அந்த ஏழைகளைத் தேடிக் கண்டு பிடிப்பது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. ஏழைகளுக்கு என்று ஒரு காரியத்தைச் செய்யப் போகும்போது வந்து நிற்பவர்கள் எல்லோரும் நாங்கள் ஏழைகள்தான் என்று சொல்லி வாங்கிச் செல்கிறார்கள். போன பிறகு தான் அவர்கள் நம்மை ஏமாற்றி விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்று தெரிகிறது. கிராமங்கள் தோறும் ஏழைகளாக இருந்தாலும் சரி, பணக்காரர்களாக இருந்தாலும் சரி ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள நபர்கள் எவ்வளவு வருமானம் பெறுகிறார்கள், எவ்வளவு நிலம் வைத்திருக்கிறார்கள் என்கிற விவரங்களைப் பற்றி எல்லாம் ஒட்டுமொத்தமான ஒரு கணக்கை, போட்டுச் சர்வே எடுத்து அதன் அடிப்படையில் காரியங்களைச் செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஒரு குடும்பத்தில் போய் ஏழைகள் யார் என்று கேட்கப் போனால் தகராறு தான் வரும். கிராமங்களில் இருப்பவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் மேல் மட்டத்திலுள்ளவர்களாக இருந்தாலும் சரி அல்லது கீழ் மட்டத்திலுள்ளவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் செய்யும் தொழில், ஆண்டு வருமானம், எவ்வளவு நிலம் வைத்திருக்கிறார்கள் போன்ற

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 28

விவரங்களை எல்லாம் ஒவ்வொரு கிராமத்திலும் தயாரித்து அதன் அடிப்படையில் இனிமேல் இந்த அரசு திட்டங்களைச் செயல்படுத்தும். அதன்மூலம் கிராமங்களிலுள்ள நிலைமைகளை உள்ளபடியே தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். என்பதையும் கிராமங்களில் உள்ளவர்களுக்கு அது பயன்படும் என்பதையும் அறிந்து செய்வோம்.

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் ஒரு கருத்தை எடுத்துச்சொன்னார்கள். வீடு கட்டும் திட்டத்தைப் போல அதைப் பற்றி அனைவரும் கருத்துக்களைச் சொன்னார்கள். என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி., ஐ.ஆர்.டி.பி. போன்ற 3 திட்டங்களை வீடு கட்டுவதற்குப் பயன்படுத்துவதற்கு வகுக்கப்பட்ட [illegible] உழைத்தால் தான் பிழைப்பு என்கிற நிலையில் இருக்கின்ற மக்களுக்கு அவர்களுடைய வருமானத்தைப் பெருக்க தொழில் தருவதும் அதன் நோக்கமாகும். அவர்களுக்குத் தெரிந்த தொழிலில் தேர்ச்சி பெற வழிவகை செய்வதன் மூலம் அவர்களுடைய வருமானத்தை உயர்த்த வழிவகை காணலாம். அவர்களுக்கு ஏதாவது தொழில் சொல்லிக் கொடுத்து அதன் அடிப்படையில் அவர்களுடைய வருமானத்தை உயர்த்தலாம். அல்லது அவர்களுக்கு ஏதாவது [illegible] வகையிலே, சொத்துக்களை சேர்க்கின்ற வகையிலே சொத்துக்களைக் கொடுத்து அவர்களுடைய குடும்பத்தை வறுமைக்கோட்டிலிருந்து உயர்த்தலாம்.

ஆகவே இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவதற்கு [illegible] உணர்ந்து; [illegible] தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மூலமாக [illegible] அதற்கு அத்தகைய [illegible] வழிவகை செய்ய வேண்டும். ஆனால் தெரிந்தோ தெரியாமலோ இன்றைக்கு ஒன்றியங்களிலும், ஊராட்சி மன்றங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் [illegible] அவர்கள் இங்கே பார [illegible] வேண்டியவர்கள் என்று [illegible] சொல்வதற்கு இல்லை. [illegible] கோரியது [illegible] இருந்தது. ஆகவே இப்போதுள்ள ஒன்றியங்கள் [illegible]



1987 ஏப்ரல் 28] [திரு. ச. இராமச்சந்திரன்]

மன்றங்கள் என்கிற நிலையிலிருந்து பார்த்து, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும், மூன்று சட்டம். தனியாகத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு டி.ஆர்.டி.ஏ. என்று கொண்டுவரப்பட்டு அதுபோல இருக்கட்டும், அந்த டி.ஆர்.டி.ஏ. ஓர் ஆலோசனைக் குழுவின் கீழ் இருக்குமா என்று பார்த்துக்கொள்வோம். அந்த ஆலோசனைக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்கள், தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதிகள், தாய்மார்கள் பிரதிநிதிகள், வேலையற்ற இளைஞர்களின் பிரதிநிதிகள், ஒன்றியத் தலைவர் போன்றோர் எல்லாம் இடம் பெறுவார்கள். அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒன்றியங்கள் அளவில் ஊராட்சி மன்றங்களிலுள்ள நிலைமைகளை எல்லாம் அறிந்து, உண்மையான ஏழைகளைக் கண்டறிந்து, அவர்கள் சம்பந்தப்பட்ட பட்டியல் ஒன்றைத் தயாரித்து அவர்களுக்குத் தேவையான இந்த உதவிகளைச் செய்ய வேண்டுமென்று மக்கள் பணியின் பால் அக்கறை கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே கொள்ளையடிப்பவர்கள், குபேரர்களாக ஆக வேண்டுமென்று ஆசைப்படுபவர்கள். கட்சியை வளர்க்க வேண்டுமென்று கவலைப்படுபவர்கள் போன்றவர்களுக்கு எல்லாம் இத்தகைய திட்டங்களை நிறைவேற்றும்போது இடம் இருக்காது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆக, ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு தனி வட்டார வளர்ச்சி அலுவலர் போடப்படுவார். அவர் ஆலோசனைக் குழுவின் ஆலோசனையின்படி தான் செயல்படுவாரே தவிர, அவர் விருப்பத்திற்கு செயல்பட முடியாது என்பதையும் இங்கே பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில் ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகர மன்றங்கள் போன்றவைகளுக்கு எல்லாம் போதிய அதிகாரம் வழங்கவில்லை. மாநிலத்திற்கு கூடுதல் அதிகாரம் வேண்டுமென்று கேட்கின்ற நீங்கள், அதிகாரம் இல்லாத வழியில் வந்த நீங்கள், இப்பொழுது உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரங்களை என் அதிகாரமாகத் தாருங்கள் என்று இங்கே சிலர் கேட்டார்கள். நிச்சயமாகத் தருவோம். தவறில்லை. அது சொன்னது ஒன்றுமில்லை. இன்னும் சொல்லப் போனால், இந்த அரசைப் பொறுத்தவரையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட

பிரதிநிதிகளுக்குக் கூடுதல் பொறுப்பு அல்லது அதிகாரம் தருவது தவறல்ல. ஏனென்றால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தவறு செய்தால் அவர்களை வெளியே அனுப்பு கின்ற உரிமை மக்களிடத்தில் இருக்கிறது. ஆனால் அதிகாரி யாராவது எங்கேயாவது தவறு செய்தால் அவரை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு மாற்ற முடியுமே தவிர அவரை வெளியே அனுப்ப முடியாது. ஆகையினாலே பொறுப்புக்களையோ, அதிகாரங்களையோ, தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளுக்குத் தருவது என்பது ஜனநாயகத்தி னுடைய அடிப்படைக் கோட்பாடு. ஆனால் அதேநேரத்தில் நாம் என்ன சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்றால் அதிகாரத்தைத் தருகிறபொழுது, அந்தப் பொறுப்பை உணர்ந்து இருக்கிறவர்களுக்குத் தருகிறோமா என்பதுதான் முக்கியம். கிராமங்களிலே ஒரு பழமொழி சொல்லுவார்கள். "தேளுக்கு மணியம் கொடுத்தால் வேலைக்கு இரண்டு தடவை கொட்டும்" என்பார்கள். அதிகாரம் கொடுப்பது பெரிதல்ல, எத்தகையவர் களுக்குக் கொடுக்கிறோம்?

இன்றைக்கிருக்கக்கூடிய தேர்தல் முறையில், ஏழைகள் வாக் களிக்க முடியுமே தவிர, நிற்க முடியாது. மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் அதைச் சொல்லுவார்கள். இன்றைக்கு இருக் கின்ற தேர்தல் முறை எப்படி இருக்கிறது என்றால் ஏழைகள் வாக்களிக்க முடியும், நிற்க முடியாது; நிற்பதற்குப் பணக்காரர் களால்தான் முடியும். ஆகவே, மீண்டும் மீண்டும் அவர்களை நீங்கள் வெற்றியடையக் கொண்டே போகின்றபொழுது, அதிகாரங் களைக் கொடுத்துக்கொண்டே போகிறபொழுது, கிராமமாயினும் அல்லது ஒன்றியமாயினும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக அந்த அதிகாரம் போய்விடக்கூடாது என்பதில் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இன்றுங்கூட பல ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்களிலே யிருந்து, தாழ்த்தப்பட்ட பகுதிகளுக்குச் சாலை போடப்படுவ தில்லை; குடிதண்ணீர் வசதி செய்து தரப்படுவதில்லை; தெரு விளக்குகளைப் போட்டு பராமரிப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் ஒருவேளை, தேர்தல் நேரத்திலே யார் வெற்றி பெற்றாரோ—ஒரு பெரிய ஜனங்கள் சேர்ந்தவர் வெற்றி பெற்றிருப்பார்—அவருக்கு ஓட்டுப் போட்டிருக்க மாட்டார்கள். இவைகளெல்லாம் நாம் கண்கூடாகக் காணுகின்ற உண்மைகள்.





ஆகவே, அதிகாரங்களைத் தருவது என்பது பெரிதல்ல; எந்த சமூக அமைப்பில் யாருக்குத் தருகிறோம் என்பதில்தான் நாம் கண்காணிப்போடு இருந்து செய்ய வேண்டிய சூழ்நிலையிலே இருக்கின்றோம். கண்மூடித்தனமாகக் கொடுத்து விடுவோமே யானால் சமுதாயத்தினுடைய மாற்றத்தையே பின்னோக்கி அனுப்புகின்ற காரியத்தைக்கூட நாம் செய்துவிட வேண்டி வரும். ஆகையினால்தான் அதிகாரங்கள் கூடாது என்பது அல்ல; தேவையான அதிகாரங்களைத் தரலாம். அதேநேரத்தில் தீமையான அதிகாரங்களை நிச்சயமாக நாம் தரக்கூடாது. அந்த வகையிலே இந்த அரசு தெளிவாக இருக்கும் என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இங்கே இன்னொன்றும் சொன்னார்கள். அண்மையிலே விழாக்களில் யார் யார் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்கு வழங்கியிருக்கின்ற அரசு உத்தரவு பற்றி. அதிலே சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட வேண்டுமென்று தான் சொல்கிறோம். அறிஞர் அண்ணா அவர்களே உள்ளாட்சி மன்றங்கள் என்று எண்ணுகிறபொழுது அதற்கென்று தனித் தன்மைகள் உண்டு என்று சொன்னார்கள். சட்டமன்றம் என்றால் சட்டம் செய்கிறோம். கொள்கை வழி ஒவ்வொரு கட்சியும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்கிறது. சட்டங்கள் செய்கிறோம். நாடாளுமன்றமும் அதைப்போல ஒரு லெஜிஸ்லேட்டிங் ஃபோரம். ஆனால் உள்ளாட்சி மன்றங் கள் என்பது நிர்வாக அமைப்பு. அது நிர்வாகத்தை நடத்து வது. சட்டமன்றமோ அல்லது நாடாளுமன்றமோ, சட்டங் களைச் செய்து ஒரு நிர்வாக அமைப்புக்குத் தந்து விடுகிறது. அதோடு வேலை முடிகிறது. ஆனால் உள்ளாட்சி மன்றங்கள் என்பது அட்மினிஸ்ட்ரேஷன்—நிர்வாகத்தை நடத்துகிறவர்கள் —பொதுவாக இருக்க வேண்டும். எல்லோருக்கும் பொதுவாக இருக்க வேண்டும். நிச்சயமாக அரசியல் அங்கே இருக்கக் கூடாது. சாலை போடுவதிலேயோ, குடிதண்ணீர் வசதி செய்து தருவதிலேயோ எப்படி அரசியலை நாம் அனுமதிக்க முடியும்? ஆகவே, நிர்வாகம் என்று சொல்லுகிறபொழுது, உள்ளாட்சி மன்றத்திலே இருக்கின்றவர்கள் அரசியலுக்கு இடம் கொடுக்கக் கூடாது. அறிஞர் அண்ணா அவர்கள் அரசியல் கட்சியின் அடிப்படையிலே உள்ளாட்சித் தேர்தல்களில் நிற்கக்கூடாது என்று சொன்னார்கள். பரவாயில்லை. தேர்தல் அரசியல்

கட்சி அடிப்படையிலே நடந்து விட்டாலும், அதனால் ஒன்றும் பாதகமில்லை. ஆனால் நகர்மன்றங்களிலேயோ அல்லது ஒன்றியங்களிலேயோ வருகின்றவர்கள் அரசியலை, எப்படிக் காலணியை வெளியிலே கழற்றி வைத்துவிட்டு வீட்டிற்குள் நுழைகிறோமோ அதைப்போல கட்சி அரசியலை அப்புறப்படுத்திவிட்டு உள்ளே வருவார்களேயானால் இந்தப் பிரச்சினைகள் வராது.

இங்கே ஜனாதிபதியிலேயிருந்து, பிரதம மந்திரி, மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்களெல்லாம் கலந்து கொள்ள வேண்டுமென்று நாம் போட்டிருக்கிறோம் என்றால் அதிலே குறை காணும் நோக்கம் வருகிறது என்றால் நாம் என்ன நினைக்கிறோம்? மாநில அரசைப் பார்க்கின்றபொழுது—எங்களையெல்லாம் பார்க்கின்றபொழுது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் என்ற உணர்வு வருகிறதே தவிர, தமிழக அரசின் அமைச்சர்கள் என்ற உணர்வு வருவதில்லை. மத்திய அரசிலே இருக்கின்ற அமைச்சர்களைப் பார்க்கின்றபொழுது காங்கிரஸ் அமைச்சர்கள் என்ற உணர்வு வருகிறதே தவிர இந்தியாவினுடைய—மத்திய அரசின் அமைச்சர்கள் என்கிற உணர்வு வரவில்லை. இது ஜனநாயகமா? இதுதான் ஜனநாயகத்தை வளர்க்கின்ற போக்கா? ஆகவே, நிர்வாகத்தை . . .

திரு. மா. மணிமாறன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், அரசியல் அங்கே இருப்பதாகவும், தமிழக அமைச்சர்களைப் பார்க்கின்ற நேரத்தில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்களைப் பார்ப்பதைப்போல பார்க்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கூட ஒரு நேரமே பேசியது, அமைச்சர்களைக் கட்டாயமாக அழைக்க வேண்டுமென்று கட்சியிலே முடிவெடுத்து அறிவிக்கப்பட்டது அமைச்சரவர்களுக்குத் தெரிவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கக் கூடும். என்றாலும், வித்தியாசம் பார்க்காமல், அமைச்சர் என்ற முறையில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை நடக்க வேண்டுமென்றுதான் கருதுகிறதே தவிர, ஏதோ தனியாக உங்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசம் பார்ப்பதாகத் தயவு செய்து கருத வேண்டாம்.





(இரவு 7-50)

இன்னொன்றையும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம், அடிக்கல் நாட்டலாம், திறப்பு விழா நடத்தலாம் என்று முன்னால் இருந்தது. இப்போது நீங்கள் போட்ட உத்தரவிலே இந்த இரண்டும் நீக்கப்பட்டிருக்கின்றன என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நிர்வாகம் என்று சொல்கிறபோது உள்ளாட்சி மன்ற நிர்வாகமானாலும் சரி, மாநில அரசு நிர்வாகமானாலும் சரி, மத்திய அரசு நிர்வாகமானாலும் சரி, அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்கிறபோதுதான் அரசியல் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் எம்.எல்.ஏ-யை அழைக்கலாம் என்று சொன்னார்கள். முனிசிபல் மானுவல் என்று ஒன்று இருக்கிறது. அதில் யார், யாரை அழைக்கலாம், எவ்வளவு செலவு செய்யலாம் என்று இருக்கிறது. அதிலே தெளிவாகச் சொல்லியிருப்பது இதுதான்.

"President of the Indian Republic, Governor of Tamil Nadu Ministers of the Government of India, Ministers of the Government of Tamil Nadu."

இது 1961-ல். அதோடு அது முடிந்து விடவில்லை. 1970-ல் யார், யார் இருந்தார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். 1970-ல் அவர்களை எல்லாம் அழைக்கலாம், ஆனால் செலவு எவ்வளவு என்றால் கொஞ்சம் கூட்டிச் செய்யுங்கள் என்றார்கள். ஏற்கெனவே செலவு செய்வதற்கான வரைமுறை இருக்கிறது. சில திட்டங்களை, அல்லது கட்டடங்களை அல்லது திறப்பு விழாக்களை யார் யாரை வைத்து செய்ய வேண்டும். எவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றன. நான் விளக்க வேண்டிய அவசியம் அதனால்தான் வந்தது. நான் பணிவோடு அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்ற நிர்வாகத்தை நடத்துகிறபோது தங்களைத் தவிர மற்றவர்கள்—

ஏதோ ஒரு கட்சிக்காரர்கள், தங்கள் விருப்பம்போல் தங்கள் கட்சிக்காரர்களை அழைக்கலாம் என்று ஆர்வத்திலே காரியங்களைச் செய்து உள்ளாட்சி மன்றங்களை கட்சிக் கூடாரங்களாக ஆக்கிவிடக் கூடாது.

கர்நாடகத்திலே ஜனதா கட்சி சார்பிலே மாண்புமிகு ஹெக்டே அவர்கள் முதலமைச்சராக இருக்கிறார்கள். அவர்கள் ஜனதாக் கட்சித் தலைவர் திரு. சந்திரசேகரன் அவர்களை வைத்தா விழாக்களை நடத்துகிறார்கள்? மேற்கு வங்காளத்திலே ஜோதிபாசு அவர்கள் முதலமைச்சராக இருக்கிறார்கள். அவர்கள் தோழர் இ.எம்.எஸ். அவர்களை வைத்தா திறப்பு விழாக்களை நடத்துகிறார்கள்? அவர்களுக்கெல்லாம் தெரியாத ஜனநாயகமா மற்றவர்களுக்குத் தெரிந்துவிடப் போகிறது? ஆகவே, நிர்வாகத்தை நாம் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நிர்வாகம் எது, அரசியல் எது என்ற வரையறையைத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த இரண்டையும் போட்டுக் குழப்புகிறபோது பிரச்சினை வருகிறது. இதைத் தெளிவாக்குவதற்காக இந்த உத்தரவைப் போட்டோம், கொஞ்சம் சேர்த்து. . மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல, பொதுப் பொறுப்பிலே இருப்பவர்கள் ஸ்பீக்கரோ அல்லது ஸ்பீக்கரோ அல்லது மத்திய அமைச்சர்களோ அல்லது மாநில அமைச்சர்களோ அல்லது ஜனாதிபதியோ தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல. பொதுப் பொறுப்பிலே இருப்பவர்களும்.

**those with public responsibility, public office-holders, elected Statesmen holding public offices**

அவர்கள்தான் கொடி போட்டுக் கொண்டு போக முடியும். ஆகையால் பொதுவான ஒரு வரைமுறையை கொடுத்திருக்கிறோம். இதை அரசியல் ஆக்குவது, தங்களுடைய அரசியல் கருத்துக்களை நிர்வாகத்திலே புகுத்துவது என்பதெல்லாம் ஏதோ புறக்கடையைப் பிடித்துவிட்டோம், முன்பக்கத்தைப் பிடித்துவிட்டோம் என்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுகின்ற கற்பனைக் கோட்டையிலே இருக்கிற காரணத்





தால் ஏற்படுகிற விபரீதங்களே தவிர வேறல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும். எதை எடுத்தாலும் அரசியல் ஆக்க வேண்டுமென்ற போக்கு நல்ல ஜனநாயகத்திற்கு ஆகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் சொல்கிறேன். விழாக்களை நடத்துகிறபோது, நகராட்சி மன்றத் தலைவர்களும் ஊராட்சி மன்றத் தலைவர்களும் தங்கள் கட்சிக்காரர்களை அழைக்கிறபோது, இத்தகைய பொறுப்பிலே இல்லாதவர்களாக இருந்தால் அவர்கள் நாகரிகமாக நடந்து கொள்ள வேண்டும். பண்போடு நடந்து கொள்ள வேண்டும். எங்களை அழைப்பது முறையல்ல. நாகரீகமல்ல; பொதுப் பொறுப்பிலே இருப்பவர்களை அழைக்க வேண்டுமென்று சொல்வதுதான் நல்ல ஜனநாயகம் அதை விட்டுவிட்டு நகராட்சி மன்றங்களையும் ஊராட்சி மன்றங்களையும் கட்சிக் கூடங்களாக ஆக்கக்கூடாது. இதில் அரசியலுக்கோ கட்சிக்கோ சிறிதும் இடம் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் செய்கின்ற தவறுகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள்; வருத்தப்பட்டார்கள். எந்தப் பிரச்சனையை எடுத்துக்கொண்டாலும் அரசியல் குறுக்கிடுகிறது; தவறு நடக்கிறது. அது மட்டுமல்ல. ஆர். எல். டி. ஜி. பி., என். ஆர். இ. பி. திட்டங்களின்கீழ் கட்டப்படுகின்ற வீடுகளைக் கொடுப்பதிலேகூட அரசியல் நடக்கிறது. எனக்குத்தான் அதிகாரம் இருக்கிறது; உனக்கு வீடு வேண்டுமா? எங்கள் கட்சியில் உறுப்பினர் ஆகிறாயா, வீடு உண்டு என்று சொல்லுகிறார்கள். இப்படி எல்லாம் தவறு நடக்காமல், முறைகேடு நடக்காமல் இருக்க வேண்டுமானால் இதற்கு என்ன பரிகாரம்?

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொதுவாக நிர்வாகத்தை நடத்த வேண்டும். நிர்வாகம் சீர் குலைகிறது, நிர்வாகம் மோசமாகிறது என்றால், அரசு தலையிட்டு அவர்களை நீக்கினால் அது அரசியலாகும். ஆகவே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களிடத்தில் இதுபற்றி நாங்கள் விவாதித்தோம். புரட்சித்தலைவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். எந்த மக்கள் அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார்களோ அந்த மக்களுக்கே, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்

தவறு செய்கிறார்கள் என்றால், ஊராட்சி மன்றமாக இருந் தாலும் சரி, ஊராட்சி ஒன்றியமாக இருந்தாலும் சரி, நகரமன்ற உறுப்பினர்களாலும் சரி அந்தப் பிரதிநிதிகளைத் திரும்ப அழைக்கிற உரிமையைத் தரவேண்டும் என்பதற்குரிய வகையில் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் அரசு முடிவெடுத்து இருக்கிறது. விரைவில் அதற்குரிய சட்டம் இங்கே கொண்டு வரப்படும். 'தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விட மாட்டேன்' என்று பாடினரே புரட்சித்தலைவர் என்று கேட்டார்களே, அதற்கு இதுதான் பதில். ஆகவே குற்றம் செய்துவிட்டு, ஊழல் செய்துவிட்டு, அரசை ஏமாற்றிவிட்டு, மக்களையும் ஏமாற்றி விட்டு சொத்து சேர்த்துக்கொண்டு தங்களைப் பார்த்துக் கொள்ளலாம் என்று கருதினால் இந்த அரசு அவர்களைச் சும்மா விடாது என்பதற்காக நான் பணிவோடு ஒன்றைத் தெரி வித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவருடைய அரசு மக்க ளுக்கே, அந்தத் திரும்ப அழைக்கிற உரிமையை, அதாவது 'ரைட் டு ரீகால்' என்பதை ஏற்படுத்த—தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால் தங்களை யாரும் ஆட்ட முடியாது, அசைக்க முடியாது என்று அவர்கள் எண்ணுவதற்கு இடம் கொடுக்காமல், தவறாக நடந் தால், முறைகேடாக நடந்தால், முறைகேடாக நடந்தால், அதை மக்கள் உணர்ந்தால் அந்தப் பிரதிநிதிகளைத் திரும்ப அழைக்கிற உரிமையை மக்களுக்கு வழங்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

எனக்கு இன்னொன்றும் நன்றாக நினைவு இருக்கிறது. ஒரு தலைவர் மாநில சுயாட்சி, மாநில சுயாட்சி என்று ஓயாமல் பேசிக்கொண்டிருந்தபோது மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் ஒரு அழகான கருத்தைத் தெரிவித்தார்கள். மாநில சுயாட்சி மட்டுமல்ல, மக்கள் சுயாட்சி அதாவது 'பவர் டு தி பீப்பிள்' என்பதைச் சொன்னார்கள். அருமை நண்பர் திரு. சுப்பராயன் அவர்களுக்குச் சொல்கிறேன். இன்றைக்கு நிகராகுவாவில் திரு. ஓர்ட்டேகா அவர்கள் அதிபராக இருந்து ஆட்சி நடத்துகிறாரே, அவர் சொன்ன கோஷம் என்ன வென்றால் 'பவர் டு தி பீப்பிள்' என்று உரிமையை மக்களுக்குத் தரவேண்டும். மக்களுக்கு அந்த அதிகாரத்தை வழங்க வேண்டு





மென்று சொன்னார்கள். அந்த வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த அதிகாரத்தை மக்களுக்கு வழங்கப் போகிறார்கள் என்பதைத் தெரிவித்து ஊழல் எங்கேயாவது நடந்தால், முறைகேடுகள் எங்கேயாவது நடந்தால் நிச்சய மாக இந்த அரசு பார்த்துக்கொண்டு இராது என்பதை நான் இந்த மன்றத்திற்குச் சொல்லி, அதன்மூலம் நிச்சயமாக நீங்கள் மனநிறைவு பெறுவீர்கள் என்று நம்பி, இந்த மானியத்தை நீங்கள் வரவேற்று உங்கள் ஆதரவை அளிக்கவேண்டுமென்றும், வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற வேண்டுமென்றும் கேட்டு முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் மா. சுந்தரதாஸ், சே. மா. இராமச்சந்திரன் ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் கே. சுப்பராயன், கோ. வீரய்யன் ஆகியவர் களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி: "மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்" என்ற தலைப் பின்கீழ் ரூ. 1,92,59,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (29—4—1987) காலை 10.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-58 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 6. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

எதுவுமில்லை.

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

192 கோரிக்கை எண் 28—சமூதாய நல வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88 (தமிழ், ஆங்கிலம்).

**193.** கோரிக்கை எண். 28—நகராட்சி நிருவாகமும், மாநகராட்சிகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88 (தமிழ், ஆங்கிலம்).

**194.** சமுதாய வளர்ச்சியைச் சார்ந்த செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 1987-88 (தமிழ், ஆங்கிலம்).

195. பேரூராட்சி நிர்வாகம் சார்ந்த செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 1987-88 (தமிழ், ஆங்கிலம்).

**196.** நகராட்சி நிர்வாகமும் மாநகராட்சிகளும் பற்றிய செயல்திறன் குறிப்பு, 1987-89 (தமிழ், ஆங்கிலம்).





## இணைப்பு.

[259 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### 1. சமுதாய வளர்ச்சியும் ஊராட்சி ஒன்றியங்களும்.

நம் மாநிலத்தில் 385 சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் உள்ளன. கல்ராயன் மலை வட்டாரத்தைத் தவிர, மற்ற எல்லா வட்டாரங்களிலும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அமைக்கப்பட்டு விட்டன. இம்மாநிலத்தில் மொத்தம் 12,616 ஊராட்சிகள் உள்ளன.

சமுதாய வளர்ச்சி என்பதனைச் செயல்முறைப் படுத்துதல் சிக்கலான ஒன்றாகும். கிராம மக்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தருவதுடன் அவர்களிடையே நிலவி வரும் வறுமையை ஒழிப்பதும் இதன் நோக்கமாகும். இந்நோக்கங்கள் நிறைவேற மக்களின் ஒத்துழைப்புத் தேவை. இதையொட்டி கடந்த 1986 பிப்ரவரியில் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல் நடத்தப்பட்டது.

சமுதாய வளர்ச்சி என்பது வறுமைக்கோட்டிற்குக் கீழே உழலும் மக்களுக்குச் சமுதாய நீதி அளித்தல், வறுமையினை ஒழித்தல் ஆகியவை என ஒருங்கிணைந்த கருத்தாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கிய குறிக்கோள்களாக வலியுறுத்தப்படுகின்றன. வறுமையினை தொடர்ந்து கொஞ்சங் கொஞ்சமாகக் குறைத்துக் கடைசியில் அதனை அறவே ஒழித்து விடுவதுதான் சமுதாய வளர்ச்சியின் முக்கிய குறிக்கோளாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மாநிலத்தின் பல பகுதிகளில் நிலவி வரும் வேறுபட்ட சமுதாய நிலைகளைக் கருத்தில் கொண்டு, பல் நோக்குத் திட்டங்களை பகுதி வாரியாக நிறைவேற்றும் அணுகுமுறையினை அரசு பின் பற்றி வருகிறது

கிராமத்தில் நிலவும் வறுமையினை ஒழிக்க இரண்டு விதமான வழிகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம். ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் சமுதாயத்தின் குறிப்பிட்ட ஒரு சில பகுதியினர் வாழ்வில் நிலவும் வறுமையை ஒழிப்பது முதல் வழியாகும். வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்[illegible]க்கம் காட்டி அதற்கேற்ற திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றுவது இரண்டாவது வழியாகும்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மூலம் அரசு நிறைவேற்றப்போகும் கொள்கைகளும் குறிக்கோள்களும் கீழ்க்கண்டவாறு அமையும்:—

(அ) வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்களைத் தேர்ந்தெடுத்து, மானியம் மற்றும் வங்கிக் கடன்களோடு இணைந்த உதவிகளை மொத்தமாக அளித்து வறுமையினை ஒழித்து அவர்களை மேம்படுத்துதல்.

(ஆ) நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும், வேலை இல்லாத மற்றும் போதிய அளவு வேலை இல்லாத ஆண், பெண் இருபாலாருக்கும் வேலை வாய்ப்பினை பொதுப் பணிகள் மூலம் ஏற்படுத்திக் கொடுத்தல்.

(இ) கிராம சமுதாய அமைப்பைப் பலப்படுத்தும் வகையில் நிரந்தர சமுதாயச் சொத்துக்களை உருவாக்குதல், விரைவாக பொருளாதாரத்தை உயர்த்தி அவர்களின் வருவாயினை தொடர்ந்து சீராக உயர்த்துதல்.

(ஈ) நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் முயற்சியான மாற்று எரிபொருளைக் கண்டுபிடித்து அவைகளைத் தனிப்பட்ட இல்லங்களிலும், சமுதாயம் முழுவதும் பயன்படுத்தும் வகையில் சாண எரிவாயுகலன்களை நிறுவுதல்—புகையில்லா அடுப்புகளும் இதில் அடங்கும்.

(உ) சிறு மற்றும் குறுநில விவசாயிகளுக்கு மானியத்தோடு கூடிய கடன் வசதி அளித்து நீர்ப்பாசனக் கிணறுகள் தோண்டுதல், தற்பொழுதுள்ள கிணறுகளைப் பழுதுபார்த்தல், நீர் இறைக்கும் எந்திரங்கள் நிறுவுதல், மண்வள மேம்பாடு மற்றும் நிலத்தினைச் சமப்படுத்துதல்.

(ஊ) நாடு முழுவதும் நிறைவேற்றப்படும் சமுதாயக் காடுகள் அமைக்கும் தீவிர திட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் இயன்ற அளவு நிலப்பரப்பில் சமுதாயக் காடுகளை அமைத்தல்—அதாவது இயற்கைச் சூழலைப் பாதுகாத்து, அதைக் கெட்டு விடாதபடி சமநிலையில் வைத்திருத்தல் ஆகிய இரு நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் சமூகக் காடுகள் அமைத்தல்.



## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், மத்திய அரசும் மாநில அரசும் 50 : 50 என்ற விழுக்காட்டின் அடிப்படையில் நிதி ஒதுக்கி, நிறைவேற்றப்பட்டு வரும் திட்டமாகும். இத்திட்டமானது 2-10-1980 முதல் சுய வேலை வாய்ப்புத் திட்டங்களை ஊக்குவித்து கிராமப்புறங்களில் வேலையில்லாமையையும், குறிப்பாகவுள்ள போதிய வேலை இல்லா குறைகளையும் நிவர்த்திப்பது மற்றும் கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து வரும் மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் குறிப்பிடும்படியான அளவிற்கு உயர்த்துவது போன்ற குறிக்கோள்களை அடைய எல்லா வட்டாரங்களிலும் செயல்பட்டு வருகிறது.

கிராமங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் தேர்வு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு மான்யமும் நிறுவனக் கடன்களும் இணைந்த திட்டங்கள் மூலம் வருமானம் அளிக்கக்கூடிய சொத்துக்களை வழங்கி மேற்குறித்த இரு குறிக்கோள்களையும் அடையலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மான்யப் பகுதியினை மத்திய மாநில அரசுகள் 50 : 50 என்ற விழுக்காட்டில் ஏற்றுக் கொள்கின்றன. நிறுவனக் கடன்கள் வணிக வங்கிகள் அளிக்கும் முறையான கடன் வசதி மூலம் அளிக்கப்படுகின்றன.

மான்யம் பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு அடியில் குறிப்பிட்டவாறு அளிக்கப்படுகிறது:—

| | | |
|---|---|---|
| **சிறு விவசாயிகள்** | 25 | அதிகபட்சமாக ஒரு குடும்பத்திற்கு ரூ. 3,000. |
| **குறு விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள்** | 33-1/3 | வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் ரூ. 4,000. |
| **மலைவாழ் குடும்பங்கள்** | 50 | அதிகபட்சமாக ரூ. 5,000 |

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வறுமைக்கோடு, ஆண்டு வருமானம் ரூ. 3,500 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஏழாவது ஐந்தாண்டு காலத்திலிருந்து ரூ. 6,400 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. எனினும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் மூலம் பயனடைய ஆண்டு வருமானம் ரூ. 4,800 என வரையறுக்கப்பட்டுள்ளது. ஆண்டு வருமானம் ரூ. 3,500-க்கு குறைவாக இருக்கும் குடும்பங்கள் அனைத்திற்கும் உதவியளித்த பின்னரே ரூ. 3,500 லிருந்து ரூ. 4,800 வரை வருமானம் உள்ள குடும்பங்களுக்கு உதவி அளிப்பது பரிசீலிக்கப்படும்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு வட்டாரத்திற்கு சராசரியாக 600 குடும்பங்கள் விதம் மொத்தம் 13.96 இலட்சம் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங் களுக்கு ரூ. 14,661 லட்சம் மான்யத்துடன் உதவியளிக்கப்பட்டது. ஆறாவது திட்ட கால முயற்சிகளை ஒருங்கிணைக்கும் முகமாக அந்த திட்ட காலத்தில் பயனளிக்கப்பட்டு பல்வேறு காரணங் களால் வறுமைக் கோட்டு எல்லையைத் தாண்ட முடியாத குடும் பங்களுக்கு மீண்டும் உதவியளிப்பது; அதிகபட்சமாக எவ்வளவு புதிய குடும்பங்களுக்கு வறுமைக் கோட்டைத் தாண்ட உதவி அளிக்க முடியுமோ அவ்வளவு உதவியளிப்பது மற்றும்; வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் சதவிகிதத்தை 43 சத விகிதத்திலிருந்து 23 சதவீதமாக குறைத்தல் போன்றவற்றை அடைய ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டமிடப் பட்டுள்ளது.

1985-86 ஆம் ஆண்டிற்கு குறியீடாக 1.18 லட்சம் பழைய குடும்பங்களும், 78,289 புதிய குடும்பங்களும் ரூ. 30,24.106 லட்சம் நிதி ஒதுக்கீடும் அளிக்கப்பட்டது. சாதனையாக 1,27,606 பழைய குடும்பங்கள், 82,030 புதுக் குடும்பங்களும் ரூ. 29,85.89 இலட்சம் செலவினத்துடன் அடையப்பட்டது.

1986-87 ஆம் ஆண்டிற்கான குறியீடும் பிப்ரவரி 1987 முடிய சாதனையும் கீழ்க்கண்டவாறு அடையப்பட்டுள்ளது:—

| | செயல் | | நிதி | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை 28—2—1987 முடிய | இலக்கு | சாதனை 28—2—1987 முடிய (ரூபா இலட்சங்களில்) |
| புதுக் குடும்பம் | 96,000 | 73,637 | 4.95.[illegible]2 | 3363.31 |
| பழைய குடும்பம் | 1,5[illegible],000 | 1,33,9[illegible]6 | | |
| மொத்தம் | 2,47,000 | 2,07,553 | | |

1987-88 ஆம் ஆண்டில் 2,00,000 பழைய குடும்பங்களுக்கும் 69,380 புது குடும்பங்களுக்கும் ரூ. 42.34.504 இலட்சம் நிதி உதவி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் 1987-88 ஆம் ஆண்டில், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தகுதியுள்ள பழைய



குடும்பங்களுக்கு வறுமைக் கோட்டினைத் தாண்ட உதவியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக மீண்டும் எல்லா மாவட்டங் களிலும் ஒரு சர்வே நடத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் 1986-87 ஆம் ஆண்டினையொத்த அளவிற்கு புதுக் குடும்பங்களுக்கும் 1987-88 ஆம் ஆண்டில் உதவியளிக்கப்படும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமானது அடிப்படை யில் பயனாளிகளுக்கு உதவும் திட்டமாக இருப்பினும், ஒவ்வொரு பயனாளிக்கும் சிறந்த முறையில் செயலாற்றும் திட்டமாக அமைய, ஏற்றத்தாழ்வு வசதி குறைவினை நீக்கி, பயனாளி களுக்கு உதவும் வகையில் உள்ளமைப்பு உதவிகளுக்கு முதலீடாக 10 சதவீதம் வரை ஒதுக்கி செயல்படுத்தப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மாநில, மாவட்ட அளவில் கண்காணிக்கப்படுகிறது. இத்திட்டம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளால் செயலாக்கப்படுகிறது.

தொண்டு நிறுவனங்கள், தேர்வு செய்யப்பட்ட பயனாளி களுக்கு இத்திட்டத்தில் பயிற்சி அளிக்கவும், அவர்களது உரிமை களையும் கடமைகளையும் உணர்த்தும் பயிற்சிகளையும் அளிக்க ஈடுபடுத்தப்பட்டுள்ளது. 8 மாவட்டங்களில் சேர்ந்த 14 வட்டாரங் களில் 13 தொண்டு நிறுவனங்கள் இப்பயிற்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. கபார்ட் (CAPART) என்ற நிறுவனம் மூலமாக ரூ. 4.73 லட்சம் நிதி உதவி அளித்துள்ளது.

**பணி ஆய்வு:**

சமுதாய வளர்ச்சிப் பணிகளில் திறன்பட செயலாற்றி நன் மதிப்புப் பெற்றுள்ள நிறுவனங்கள் மூலமாகவும் அல்லது அரசு இதற்கென வைத்துள்ள நிறுவனங்கள் மூலமாகவும், இத்திட்டப் பணி ஆய்வுகளை மேற்கொள்ளலாம். இப்பணி ஆய்வு அறிக்கை கள் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவின் ஒப்புதல் பெறப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகள் ஏழை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகளை, 1985-86 ஆம் ஆண்டிற்கு ஆய்வு செய்ததில், இத்திட்டத்தின் பயன் பெறு வோரின் வருவாய் உயர்ந்துள்ளதை அறிய முடிந்தது. இவ் வருவாய் உயர்வு, வறுமைக் கோட்டினை கடந்து முன்னேறும் அளவுக்கு இல்லை. என்றாலும் ஏறக்குறைய 3-ல் 2 பங்கு மக்க ளின் வருவாய், அவர்களுக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள ஆண்டு

வருமானமான ரூ. 3,500-ஐ தாண்டி உள்ளதை அறிய முடிந்தது. 1985-86 ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டினைத் தாண்டியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 44 விழுக்காடு ஆகும்.

**சுயவேலை வாய்ப்பிற்கு ஊரக இளைஞர்களுக்குப் பயிற்சி:**

சுயவேலை வாய்ப்பிற்கு ஊரக இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல் என்னும் திட்டமானது 1979-80-ல் ஒரு தனித் திட்டமாகத் துவக்கப்பட்டது. ஆனால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் ஒரு பகுதியாக அது செயல்படுத்தப்பட்டது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ்ப் பயனடையத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களில் 18 முதல் 35 வயதில் உள்ள இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் சுயவேலை துவங்குவதற்கு ஏற்ற வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது அத்திட்டத்தின் நோக்கமாகும். சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அப்பயிற்சி அளிக்கப்படுகிறது. அங்ஙனமே பயிற்சி முடிவடைந்தவுடன் பயிற்சி அளிக்கப்பட்டவர் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்படி பயன்பெறத் தகுதியுள்ளவர் ஆகிறார். அதாவது மானியம் அளித்தல், தொழிலுக்கான கச்சாப் பொருள்கள் அளித்தல், திட்டத் தயாரிப்பு, தயாரித்த பொருள்களை விற்றல், இவற்றிற்காக அவருக்கு உதவி அளிக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில் அவருக்கு உதவித் தொகையும் (stipend) அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிவடைந்தவுடன் ரூ. 500 பெறுமான கருவிகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன. இந்நிதி உதவியானது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சாதாரணமாக அளிக்கப் பெறும் மானியத்திற்கும் கூடுதலாக அளிக்கப்படுகிறது.

சுயவேலை வாய்ப்பிற்கான பயிற்சியில் அதிகமான பெண்களுக்குத் திறமை ஏற்படும் வகையில் 33-1/3 விழுக்காடு இலக்கு பெண்களுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்தகைய பயிற்சி அளிக்கும் நிறுவனங்களுக்கு அவற்றின் அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் உதவி அளிக்கப் படுகிறது. 1986-87 இல் 3,812 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டு 1987-88-ல் 3,765 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஜனவரி திங்கள் வரை பயிற்சி பெற்றவர்களில் 834 பேர் சுயவேலையைத் தொடங்கி விட்டனர். 103 பேர் சம்பளம் பெறும் பணியில் உள்ளனர்.



## கிராமப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத் திட்டம்.

கிராமப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் ஒரு கூறாகத் தயாரிக்கப்பட்டது. கிராமப்புறங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3,500-க்கும் குறைவான வருவாய் உடைய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றம் அடையச் செய்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

பெரியார் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் 1983-84 முதல் இத்திட்டம் செயல்படத் துவங்கியது. 1986-87-இல் திருச்சி ராப்பள்ளி மாவட்டத்திலும் ரூ. 23.88 இலட்சம் செலவில் இத் திட்டத்தைச் செயல்படுத்த மைய அரசு ஆணையிட்டுள்ளது. 1986-87-இல் பிப்ரவரி திங்கள் வரை அமைக்கப்பட்ட குழுக்கள், பயனடைந்தவர்கள் விவரம் கீழ் வருமாறு:—

| மாவட்டம். | அமைக்கப்பட்ட குழுக்கள். | பயன் பெற்றோர் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| தருமபுரி | 149 | 2,969 |
| பெரியார் | 165 | 2,629 |

இத்திட்டத்திற்காக 1987-88-இல் ரூ. 30.60 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

1985-86-இல் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் தருமபுரி, பெரியார் மாவட்டங்களில் மாவட்டம் ஒன்றுக்கு நான்கு நிலையங்கள் வீதம் பலநோக்கு சமுதாய நிலையங்கள் கட்டுவதற்கு மைய அரசு அனுமதி வழங்கியுள்ளது. அக்கட்டுமானப் பணி விரைவாக நடைபெற்று வருகிறது. 1986-87 நிதியாண்டில் தருமபுரி மாவட்டத்தில் 8 பல நோக்கு நிலையங்களும் பெரியார் மாவட்டத்தில் 7 நிலையங்களும் ரூ. 25.03 இலட்சம் செலவில் கட்டுவதற்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

[1987 ஏப்ரல் 28

**வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்குச் சிறு மற்றும் குறு உழவர்களுக்கு உதவும் பெருந்திட்டம்.**

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்குச் சிறு மற்றும் குறு உழவர்களுக்கு உதவும் பெருந்திட்டமானது 1983-84-ல் துவக்கப்பெற்றது. இத்திட்டத்திற்காகும் செலவை மைய அரசும் மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு மற்றும் குறு உழவர்களுக்கு நில மேம்பாட்டிற்காகவும் சிறு பாசனத்திற்காகவும் கடனோடு கூடிய மானியம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திலிருந்து மானியத் தொகை அளிக்கப்படுகிறது. கூட்டுறவு மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன்களும் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி அளிக்கப்படும் மானியத் தொகை கீழ் வருமாறு:—

சிறு உழவர்—25 விழுக்காடு.

குறு உழவர்—33 1/3 விழுக்காடு.

பழங்குடி உழவர்—50 விழுக்காடு.

இத்திட்டத்தில் சிறு பாசனத்தின்கீழ் கிணறுகள், ஆழமில்லா குழாய்க் கிணறுகள், வடிகட்டும் நிலைகள், கிணறுகளில் துளை யிடுதல், ஆழப்படுத்துதல், கிணறுகளைப் புதுப்பித்தல், நீர் செல்வதற்கான வழி அமைத்து பம்ப் பொருத்துதல், மின்சார மோட்டார், டீசல் இயந்திரம் பம்ப் நிலையங்கள் கட்டுதல் இவற்றிற்காகக் கடனோடு கூடிய உதவித் தொகை அளிக்கப் படுகிறது. அதேபோன்று நிலத்தை மேம்படுத்தவும் உதவி அளிக்கப்படுகிறது.

1986-87 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய அளிக்கப்பட்ட நிதி, அடைந்த பயன் கீழே குறிக்கப்பட்டுள்ளன:—

| கூறு. | ரூ. இலட்சங்களில் செலவு. | பயன் பெற்றோர். |
|---|---|---|
| சிறு பாசனம் | ரூ. 416.50 | 17,363 |
| நிலத்தை மேம்படுத்துதல் | ரூ. 157.72 | 7,102 |



1987 ஏப்ரல் 28]

1987-88-க்கான நிதி ஒதுக்கீடு பின்வருமாறு:—

**வேளாண்மைப் பெருந்திட்டம்:**

(அ) சிறு பாசனம்—ரூ. 1,323 இலட்சம்.

(ஆ) நில மேம்பாடு—ரூ. 578 இலட்சம்.

**தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்:**

தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டமானது 1980 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தமிழ் நாட்டில் நிறைவேற்றப் பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான செலவினை மத்திய அரசும் மாநில அரசும் சரிபாதியாகப் பகிர்வு செய்து கொள் கின்றன. இத்திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு:—

(1) கிராமப் புறங்களில், வேலை இல்லாமலும், போதிய வேலையில்லாமலும் உள்ள ஆண் பெண்களுக்கு தக்க வேலை வாய்ப்பு அளித்தல்.

(2) கிராமப் புறங்களில் அடிப்படை வசதிகளை வலுப் படுத்தும் நோக்கத்தோடு சமுதாயத்திற்குப் பயன்படும் சொத்துக் களை உருவாக்குதல், அதன் மூலம் கிராமப் பொருளாதாரத்தை விரைவாக மேம்படுத்த கிராமப்புற ஏழைகளின் வருவாயைச் சீராக உயர்த்துதல்.

(3) எல்லா வகையிலும், கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

இத்திட்டத்தின்கீழ் 1985-86 ஆம் ஆண்டு முடிவு வரை, ரூ. 205.00 கோடி செலவில் 2,097 இலட்சம் மனித உழைப்பு நாட் கள் உருவாக்கப்பட்டன. இத்திட்டத்திற்கென, 1986-87 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 36.22 கோடி யாகும். இதைத் தவிர, 47,400 மெட்ரிக் டன் அரிசியும், அதே அளவு கோதுமையும் (ரூ. 1,588.00 இலட்சம் மதிப்புள்ள) மத்திய அரசால் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறும் உழைப்பாளர்களுக்கு அளிப்பதற்காக இலவசமாக அளிக்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய ஏறக்குறைய ரூ 47.00 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. (உணவு தானிய மதிப்பீடும் இதில் அடங்கும்).

30-6-1986 வரையில் கொடுத்து வரப்பட்ட நாட்கூலி விகிதமான ரூ. 8-ஐ, 1-7-1986 முதல் ரூ. 10-ஆக இருபாலருக்கும் வேறுபாடின்றி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் பணிகள் 1986-87-ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் செயலாக்கப்பட எடுத்துக் கொள்ளப்பட்டன:—

(1) காடுகள் வளர்த்தல்.

(2) பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிட மக்களுக்கு மொத்தமாக வீடுகள் கட்டுதல்.

(3) சமுதாயக் கூடங்கள் கட்டுதல்.

(4) அரிசி மற்றும் சிமெண்ட் கிடங்குகள் கட்டுதல்.

(5) ஆரம்பப் பள்ளிக் கட்டிடம் கட்டுதல்,

(6) கிராமச் சாவடிகள் மற்றும் கால்நடைப் பட்டி கட்டுதல்.

(7) ஊரக இணைப்புச் சாலைகளை மேம்படுத்துதல்.

(8) புதிய குடிநீர் கிணறுகள் அமைத்தல் மற்றும் குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்துதல்.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கு மொத்தமாக வீடுகள் கட்டுதல் என்பது தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் ஒரு தலையாய கூறாகும். 1985-86 ஆம் வருடத்தில் 10,229 மொத்தக் குடியிருப்புகள் இத்திட்டத்தின்கீழ் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்காகக் கட்டப்பட்டன. இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி 1986-87-ஆம் ஆண்டில் 20 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக மாற்றியமைக்கப்பட்டது. 1986-87-ஆம் ஆண்டிற்கு ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கு ரூ. 2,380.40 இலட்சம் செலவில் நிர்ணயிக்கப்பட்ட 25,313 குடியிருப்பு வீடுகளில், 28-2-1987 வரையில் 22,023 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. ஏனைய வீடுகள் கட்டி முடிக்கப் பெறும் தருவாயில் உள்ளன. 1986-87-க்கான மத்திய அரசு ஒப்புவித்துள்ள 3,950 கழிவறைகளில், 1,947 கழிவறைகள் கட்டப்பட்டுவிட்டன. இதற்கான ஒதுக்கீடு ரூ. 47.40 இலட்சமாகும்.

1985 ஜனவரியில் பாரதப் பிரதமர் அறிவித்த கொள்கை அறிவிக்கையினைத் தொடர்ந்து ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் சமூகக் காடுகள் வளர்த்தல் சம்பந்தமாக, 1986-87-ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டில் 25 விழுக்காடு மத்திய அரசு உயர்த்தி உள்ளது. இவ்வொதுக்கீடு ரூ. 905.50 இலட்சமாகும்.



1987 பிப்ரவரி மாதம் முடிய ரூ. 795.00 இலட்சம் சமூகக் காடுகள் மற்றும் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் செலவிடப்பட்டது. இதே காலத்தில் 583 லட்சம் மரக் கன்றுகள் 31,678 ஹெக்டேர் நிலப் பரப்பில் நடப்பட்டுள்ளன.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கென 1987-88 ஆம் ஆண்டிற்கு ரூ. 3,730.00 இலட்சம் தற்காலிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினை மத்திய மாநில அரசுகள் சரிபாதியாக பகிர்ந்து கொள்ளும்.

**ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்:**

மைய அரசு 100 விழுக்காடு நிதி வழங்குகிற திட்டமான ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் தமிழ்நாட்டில் 1983-84 முதல் செயல்பட்டு வருகிறது. அதன் நோக்கங்கள் வருமாறு:—

"(அ) ஊரகப் பகுதிகளில் வாழும் நிலமற்ற தொழிலாளர்களது ஒவ்வொரு வீட்டிலும் ஒருவருக்காவது ஆண்டிற்கு 100 நாள் வரையில் வேலை வாய்ப்பிற்கு உறுதி அளிக்கும் வகையில் ஊரக நிலமற்றோருக்கான வேலை வாய்ப்பினை அதிகப்படுத்துதல்.

(ஆ) ஊரகப் பகுதிகளில் வறுமையில் உள்ளோருக்கு உற்பத்தியின் பயன் உள்ள நிலையான சொத்துக்களை ஏற்படுத்துதல்; ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்தி வேலை வாய்ப்பை அதிகரிக்கும் வகையில் ஊரகப் பொருளாதார சமுதாய அடித்தள அமைப்பை உறுதிப்படுத்துதல்;

(இ) ஊரகப் பகுதிகளில் பொதுவாக உள்ள வாழ்க்கையை மேம்படுத்துதல்;

1986-87-ஐப் பொறுத்தமட்டில் கீழ்க்காணும் திட்ட அறிக்கைகள் மைய அரசிற்கு ஒப்புதலுக்காக அனுப்பப் பட்டன:—

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | ஒப்புதலளித்த செலவு. (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | ஊரக இணைப்புச் சாலைகள் | 2227.730 |
| 2. | மேல்மட்ட நீர் மற்றும் சிறுபாசனம் | 2000.000 |
| 3. | தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர் இவர்களுக்கான கூட்டு வீட்டு வசதித் திட்டம் | 2365.938 |
| 4. | பயன்படுத்தாத நிலங்களில் காடு வளர்ப்பு | 697.118 |
| 5. | ஊரகப் பகுதிகளில் சுகாதார கழிவறைகளைக் கட்டுதல். | 71.000 |
| | மொத்தம் | 7361.886 |

பயன்படுத்தாத நிலங்களில் காடு வளர்ப்பு திட்டத்தைத் தவிர மற்ற திட்ட அறிக்கைகளை மைய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. பயன்படுத்தாத நிலங்களில் காடு வளர்ப்பு திட்டத்தையும் மைய அரசின் ஒப்புதலுக்கு முன்பாகவே செயற்படுத்த மைய அரசு அனுமதித்திருக்கிறது.



28-2-1987 வரை ஆன செலவு, அடையப் பெற்ற பயன் :—

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | அளித்த நிதி. (ரூ. இலட்சத்தில்) | ஆன செலவு. | இலக்கு. | முடித்த வேலை | மனித உழைப்பு நாட்கள். (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (5) | (7) |
| 1. | சாலைப் பணி (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணி) | 527.00 | 405.38 | 11760.35 கி.மீ. | 158 | 25.31 |
| 2. | சிறு பாசனம் (பொதுப்பணித் துறை) | 491.00 | 452.11 | 31613 ஹெக்டேர் | 760 | 30.81 |
| 3. | க[illegible] (வேளாண்மைப் பொறியியல்) | [illegible].65 | 208.73 | 383** குளங்கள் | 320 குளங்கள் | 14.71 |
| 4. | ஊரக வளர்ச்சி இயக்குநர் :— | | | | | |
| | (அ) கூட்டு வீட்டு வசதித் திட்டம் | 1840.74 | 1727.54* | 25504 வீடுகள் | 25090 | 133.33 |
| | (ஆ) சமூகக் காடு வளர்ப்பு | 584.60 | 448.51 | 38400 ஹெக்டேர் | 31,678 | 52.29 |
| | (இ) ஊரக துப்புரவுக் கழிவு அறைகள் | 47.40 | 77.50 | 6771 கழிவறைகள் | 8403* | 6.14 |
| | (ஈ) கிராமப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத் திட்டம் | 21.35 | 9.36* | 15 கட்டிடங்கள் | .. | 0.46 |
| | மொத்தம் .. | 3727.74 | 3329.13 | .. | .. | 263.[illegible] |

* பல்வேறுபட்ட வேலைகள் உட்பட

** பல்வேறுபட்ட வேலைகள்.

1986-87-க்கு 242.00 இலட்சம் மனித உழைப்பு நாட்களை இலக்காக மைய அரசு நிர்ணயித்திருக்கிறது. 1987 பிப்ரவரி வரை 263.05 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் இத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1986-87-க்கு இத்திட்டத்திற்காக ரூ. 5221.90 இலட்சம் (உணவு தானியம் உட்பட) மைய அரசு வழங்கியுள்ளது.

ஊரகப் பகுதிகளில் இத்திட்டம் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தி உள்ளது. தலைமைச் செயலர் தலைமையிலான ஒரு மாநில அளவிலான திட்ட ஒப்புதல் வாரியம் (ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்) செயல்பட்டு வருகிறது. அது இத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்துவதற்கான பெரும் முடிவுகளை மேற்கொள்கிறது.

1987-88 நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கு தற்காலிக நிர்ணய ஒதுக்கீடு ரூ. 3,866.71 இலட்சங்கள் ஆகும். இத்தொகை முழுவதையும் மைய அரசு வழங்கும்.

**பழக்கத்தில் இருந்திராத திறன் உற்பத்தித் திட்டங்கள்.**

**(அ) சாண எரி வாயுத் திட்டம்:**

புதியதும் மாற்றத்திற்கு உட்படுத்தக் கூடியதுமான திறன் உற்பத்திக்கான வழிகளைக் கண்டு அவற்றை வளர்ப்பதற்காக திட்ட மிட்ட தேசிய முயற்சியின் ஒரு பகுதியாக மைய அரசின் பழக்கத்தில் இருந்திராத திறன் உற்பத்தித் துறை, சாண எரி வாயுத் திட்ட வளர்ச்சிக்கான தேசிய திட்டத்தைத் துவங்கி யுள்ளது. இத்திட்டத்திற்கு ஊரக வளர்ச்சித் துறை ஒருங் கிணைப்புத் துறையாகும்.

இத்திட்டம் துவங்கப் பெற்றதிலிருந்து தமிழ்நாடு அரசு இதை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 21,500 சாண எரி வாயு கலன்கள் அமைக்க வேண்டும் என்று இலக்கு வைக்கப்பட்டது. ஆனால் 29,905 சாண எரி வாயு கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1984-85-ல் 10,000 சாண எரி வாயு கலன்கள் அமைக்க வேண்டும் என்ற இலக்கு வைக்கப்பட்டு, 17,549 கலன்கள் அமைக்கப் பட்டதால் தமிழ்நாடு அகில இந்திய அளவில் இரண்டாவது



இடத்தைப் பெற்றது. அதே போல 1985-86-ல் 13,000 கலன்கள் அமைக்க வேண்டும் என்று இலக்கு வைக்கப்பட்டு 18,030 கலன்கள் அமைக்கப்பட்டு அவ்வாண்டில் அகில இந்திய அளவில் தமிழ் நாடு மூன்றாவது இடத்தை பெற்றது. 1986-87-ல் 13,120 கலன்கள் அமைக்க வேண்டும் என்று மைய அரசு இலக்கினை குறித்தது. 31—1—1987 வரை 12,973 கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டின் பல மாவட்டங்களில் வறட்சி இருந்தும் 3,374 கலன்கள் அமைக்கும் பணி பல கட்டங்களில் நடைபெற்று வருகின்றது.

**முடித்த பணி ஆய்வு:**

1981-82-லிருந்து 31—1—1987 வரை 60,937 சாண எரி வாயு கலன்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 590 கலன்கள் பழுதாகியுள்ளன. அதாவது அமைக்கப்பட்ட கலன் களில் ஒரு விழுக்காடு மட்டுமே பழுதாகியது. இத்தகைய கலன் களை செயற்பாட்டிற்கு கொண்டு வருவதற்காக ஒரு மூன்று கட்ட ஆய்வு வகுக்கப்பட்டுள்ளது. அத்தகைய இரண்டு சீரமைப்பு அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை கோயம் புத்தூரில் வேளாண்மை பல்கலைக் கழகத்திலும், பட்டுக் கோட்டையில் ஊரக விரிவாக்க பயிற்சி நிலையத்திலும் செயல் படுகின்றன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சாண எரி வாயு திட்டத்தின் கீழ் ரூ. 30.00 கோடி மானியத்துடன் 1,25,000 சாண எரி வாயு கலன்கள் அமைக்கும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. 1987-88-ல் ரூ. 6.25 கோடி மானியத்துடன் 25,000 சாண எரி வாயு கலன்கள் அமைக்கும் இலக்கு குறிக்கப்பட்டு உள்ளது.

சாண எரி வாயு கலன்கள் அமைக்கும் பணிக்காக வல்லுநர் களை உருவாக்கும் நோக்கத்தில் ஊரக பகுதிகளில் கட்டுமான பணியாளர்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி அளிக்கப்பெற்ற கட்டுமான பணியாளர்களுக்கு ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களில் மறு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்களில் ஊரக பெண்களுக்கு சாண எரிவாயு திட்டத்தின் பல்வேறுபட்ட பயன்களை விளக்கும் நோக்கத்துடன் பயன் பெறுவோருக்கான ஒரு நாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப் படுகின்றது. சாண எரி வாயு திட்டம் பற்றி நன்றாக அறிந்து

கொள்ளும் பொருட்டு அது குறித்த ஐயப்பாடுகளை போக்கி கொள்வதற்காகவும், ஒவ்வொரு பயிற்சி முகாமுக்கும் 50 பெண்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டு கலந்து கொள்ளுகிறார்கள்.

1987-88 ஆம் ஆண்டுக்கு தற்காலிக நிதி ஒதுக்கீடு ரூ. 476.10 இலட்சங்களாகும்.

**(ஆ) புகையில்லாத மேம்படுத்தப்பட்ட அடுப்பு :**

புகையால் ஏற்படக்கூடிய தீங்கிலிருந்து பெண்களை காக்கும் பொருட்டும், சமையலறையை துப்புரவாக வைத்துக் கொள்வதற்காகவும், எரி பொருட்களை மிச்சப்படுத்தும் நோக்கத்துடனும், புகையில்லாத மேம்படுத்தப்பட்ட அடுப்புகளை ஊரக பகுதிகளில் அமைத்து அவற்றின் திறன் அறியும் தேசிய திட்டத்தை தமிழ்நாடு துவங்கியிருக்கிறது. அது 1983-84-ல் துவங்கியது.

இத்திட்டத்தின்படி ஊரக பகுதிகளில் ரூ. 50 மதிப்புள்ள புகையில்லாத மேம்படுத்தப்பட்ட மாதிரி அடுப்புகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

1984-85-ல் சிற்றூர்களில் 78,291 புகையில்லா அடுப்புகள் அமைக்கப்பட்டன. அதில் அகில இந்திய அளவிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தை பெற்றதால் மைய அரசின், புழக்கத்தில் இருந்திராத திறன் ஆதாரத் துறையின் தேசிய விருதைப் பெற்றது. 1985-86-ல் தமிழ்நாட்டில் 1,01,555 அடுப்புகள் அமைக்கப்பெற்று இந்திய நாட்டிலேயே முதலாவதாக வந்தது. 1986-87-ல் மைய அரசு தமிழ்நாட்டிற்கு 50,000 அடுப்புகள் இலக்கை நிறித்தது. அதை மிஞ்சி 65,654 அடுப்புகள் 31—1—1987 வரை அமைக்கப்பட்டு விட்டன.

மேலும் முதலமைச்சரது மதிய உணவு நிலையங்களில் சமுதாய அடுப்புகள் அமைக்கும் திட்டம் துவக்கப்பெற்று இருக்கிறது. முதலில் ஊராட்சி ஒன்றியக் கட்டடங்களில் அமைக்கப் பெற்றிருக்கும் 12,500 நிலையங்களிலும், 200 மாதிரி சமுதாய அடுப்புகள் அமைக்கப்படும். 31—1—1987 வரை 6,258



முதலமைச்சர் மதிய உணவு நிலையங்களில் சமுதாய அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. முதலமைச்சரது மதிய உணவு திட்ட மையம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 85.50 வீதம் உதவித் தொகை அளிப்பதற்கு மைய அரசு இசைந்திருக்கிறது.

**ஊரக தகவல் அளிப்பு திட்டம் :**

சென்னை மாநகரில் தொலைக்காட்சி நிலையம் அமைக்கப்பட்டதாலும், வேலூர், ஏற்காடு, கோயம்புத்தூர், கொடைக்கானல், குடப்பகோணம், பாண்டிச்சேரி, திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களில் குறைந்த திறனுள்ள ஒலி அனுப்பி கருவி அமைக்கப்பட்டதாலும், ஊரக மக்களுக்காக சமுதாயத் தொலைக்காட்சி திட்டம் புதியதாக ஏற்படுத்தப்பட்டது. தொலைக்காட்சி தெரியக்கூடிய இடங்களில் அரசின் உதவித் தொகையுடன் ஊராட்சிகளில் 8,322 தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது. ஊராட்சிகளில் 31—12—1986 முடிய 5,265 கருப்பு-வெள்ளை சமுதாய தொலைக்காட்சி பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. அரசின் உதவித் தொகையுடன் ஊராட்சிகளுக்காக 3,430 வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வாங்கி அளிக்கப்படும். இத்துறை அளித்த சமுதாய தொலைக்காட்சி பெட்டிகளை பேணி வருவதோடு கல்வித்துறை மற்ற அரசு அமைப்புக்கள் ஆகியவை அமைத்துள்ள தொலைக்காட்சி பெட்டிகளையும் ஊராட்சிகளில் இத்துறை பேணி வருகிறது. சிற்றூர்களில் அமைப்பதற்காக கூடுதலாக கருப்பு-வெள்ளை மற்றும் வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகளை ஊராட்சிகளுக்கு அளிக்கலாம் என்று கருதப்படுகிறது. மேற்சொன்ன மின்னணுவியல் வாயிலான காட்சியின் கல்வி மற்றும் தகவல் பயன்பாட்டினைக் கருதி தொலைக்காட்சி பெட்டிகள் அளிப்பதற்கான செலவினை முழுவதும் ஊராட்சி நிதியிலிருந்தோ முழுவதும் தனியார் நன்கொடையிலிருந்தோ, அல்லது பாதி ஊராட்சி நிதியிலிருந்தும் பாதி தனியார் நன்கொடையிலிருந்தும் ஏற்கப்படும்.

ஊரக தகவல் அளிப்பு திட்டத்தினை தீவிரப்படுத்த அரசு கருதுகிறது. புதிய ஊரக தகவல் அளிப்பு திட்டத்தின்படி ஒரு வண்ணத் தொலைக்காட்சி பெட்டியும், ஒரு ஒளிநாடா மூலமான காட்சிப்பெட்டியும் ஒவ்வொரு ஊராட்சிக்கும் மற்றும்

[1987 ஏப்ரல் 28

பேரூராட்சிக்கும் அளிக்கப்படும். 1987-88-க்கான உள்ளாட்சி அமைப்புகள் சமுதாய தொலைக்காட்சி பெட்டிகள் வாங்கு வதற்கான தற்காலிக நிதி ஒதுக்கீடு ரூ. 75.00 இலட்சங்கள் ஆகும்.

**ஊரக குடிநீர் திட்டங்களைப் பராமரித்தல் :**

கையிறைப்பான்கள் மற்றும் மின்விசை இறைப்பான்களைப் பேணிக்காக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மக்கள் ஒத்துழைப்போடு இவைகளை நன்முறையில் பேணிக்காக்கவும் குடிநீர்த் திட்டங் களை நிறுவுவதில் மட்டும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அதிக அக்கறை செலுத்தும் வகையில் பேணிக்காத்தலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கிராமப் பகுதிகளில் 80,659 கைஇறைப பான்களும் 16,892 மின்விசை இறைப்பான்களும் ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படுகின்றன.

இந்த கைஇறைப்பான்கள் மற்றும் மின் விசை இறைப்பான் களை பராமரிக்கும் பணி "மூன்று அடுக்கு நிர்வாக முறையில்" நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஊராட்சி ஒன்றிய அளவில் ஒரு கையிறைப் பொருத்துனர் உள்ளார். இளநிலைப் பொறியாளர்/ உதவிப்பொறியாளர் தலைமையில் அமைந்த 'நடமாடும் இறைப் பான் பராமரிப்பு குழு' கோட்ட அளவில் இயங்கி வருகிறது. இந்தப் பராமரிப்பு குழுவிற்கு வாகனங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இந்தப் பேணி காத்தல் பணிகளை நன்முறையில் மேற்பார்வையிட உதவி நிர்வாகப் பொறியாளர் தலைமையில் அமைந்த மேற்பார்வை பிரிவு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேரடிப் பார்வையில் இயங்கி வருகிறது. ஒவ்வொரு ஊராட்சி யிலும் கைஇறைப்பான் பாதுகாப்பாளர் பணியில் அமர்த்தப் பட்டுள்ளார். இறைப்பான்கள் பழுதுபட்டால் பாதுகாப்பாளர் தனக்கு அளிக்கப்பட்டுள்ள அஞ்சல் அட்டையில் அதைப்பற்றிய விவரங்களை எழுதி ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு அறிவிப்பார். இறைப்பான்கள் பெரிய அளவில் பழுதுபட்டால் நடமாடும் இறைப்பான் குழு சீர் செய்யும்.

தங்குதடையின்றி எப்போதும் நல்ல குடிநீர் கிடைக்க வேண்டும் என்றால் கிராமங்களில் மட்டுமின்றி பேரூராட்சி பகுதிகளிலும் உள்ள கைஇறைப்பான்கள் மற்றும் மின்விசை இறைப்பான்களை நன்முறையில் பேணி பாதுகாக்க வேண்டும்.



1987 ஏப்ரல் 28]

எந்த ஒரு இறைப்பானும் ஏழு நாட்களுக்கு மேல் பழுதுபட்டு இருக்கக்கூடாது என அரசு ஆணையிட்டுள்ளது. கைஇறைப் பான்களையும் மின்விசை இறைப்பான்களையும் நன்முறையில் பேணிக்காக்க கூடுதல் நிதி தேவை. எனவே "குறைந்தபட்ச தேவைகளை நிறைவு செய்யும் திட்டத்தின்" கீழ ஊரக குடிநீர்த் திட்டங்களை பேணிக்காக்க, 10 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சத் தேவைகளை நிறைவு செய்யும் திட்டத்தின் கீழ் 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 150 இலட்சம் கைஇறைப்பான்களை பராமரிப்பதற்கென ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நீர் வராமல், நீர் வற்றிப்போன இறைப்பான் இடங்களை புதுப் பிப்பதற்கும், துருப்பிடித்த இரும்பு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை துருப்பிடிக்காத கான்கிரீட் கலன்களில் அமைப்ப தற்கும் இத்தொகையைப் பயன்படுத்திக்கொள்ளலாம். கை இறைப்பான்களையும் மற்றும் மின்விசை இறைப்பான்களையும் பேரூராட்சிகளில் பராமரிக்க ரூ. 50 இலட்சம் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது

1987-88 ஆம் ஆண்டு ஊரக குடிநீர் திட்டத்திற்காக மின்விசை இறைப்பான்கள் மற்றும் கைஇறைப்பான்களை பேணிக்காக்க குறைந்தபட்சத் தேவை திட்டத்தின் கீழ் உள்ள மொத்த ஒதுக்கீட்டில் 10 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதைத்தவிர ரூ. 75 இலட்சம் 1987-88 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பழுதுபட்ட இறைப்பான்களை செப்பனிடுவதால் ஏற்படும் கால தாமதத்தை தவிர்ப்பதற்காக, தேவையான உதிரி பொருட்களை எப்போதும் தயாராக வைத்திருக்கும்படி மாவட்ட அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். நூறு கைஇறைப்பான்களுக்கு மேற்கொண்ட வட்டாரங்களை பொறுத்தவரையில் கூலி அடிப்படையில் பொருத்துநர்களை பணியில் அமர்த்திக்கொள்ள மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இறைப்பான்கள் எங்கெங்கு அமைந்துள்ளன என்பதை எளிதில் கண்டுகொள்ளும் வகையில் ஒவ்வொரு வட்டாரத்திலும் வரை படங்கள் தயாரிக்கப்பட்டு அவைகளுக்கென தனிப்பட்ட எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இறைப்பான்கள் [illegible] [illegible] சோதனைகள் [illegible] [illegible]

அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இறைப்பான்களை சீராக பேணிக்காக்க உதவும்வகையில் அறிவுரைகள் அடங்கிய புத்தகத்தை களப் பணியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

**ஊரகத் துப்புரவு:**

**வருவாய் கிராமங்களில் பொது கழிப்பறைகள் கட்டுவது:**

சமூக பொருளாதார வளர்ச்சிக்கும், மக்களின் அடிப்படைத் தேவைக்கும் மேம்பட்ட துப்புரவு தேவையாகும். பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்குவதில் சுகாதார நலன்கள் சரியான துப்புரவு வசதிகள் இன்றி முழுமையாக அமையாது என்பதை ஆய்வுகள் எடுத்துக் காட்டியிருக்கின்றன. ஊரக பகுதிகளில் துப்புரவு கழிவறை இல்லாதிருப்பது சுகாதார கேடு என்பது மட்டுமல்லாது பெண்களுக்கு தனி இடம் கிடைக்காததால் பிரச்னைகளை ஏற்படுத்துகிறது. 1981-1990 பன்னாட்டு குடிநீர் வழங்கு துப்புரவு பத்தாண்டுகள் என்பதையொட்டி ரூ. 16.94 கோடிகள் செலவில் 11,366 கழிவறைகள் கட்டுவதற்கு அரசு அனுமதியளித்திருக்கிறது. அத்திட்டம் 1982-83-லிருந்து படிப் படியாக செயல்படுத்தப்படுகிறது. 1987 ஜனவரி வரை 11,239 பெண்களுக்கான கழிவறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இக்கழி வறைகள் எல்லாவற்றிலும் தண்ணீர் அளிப்பதற்கும் அது சரிவர நடைபெறுவதற்கும் சிறப்பான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக் கிறது.

**யூனிசெஃப் உதவியுடன் குறைந்த செலவிலான தனிநபர் கழிப்பிடம் கட்டுதல்:**

தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் யூனிசெஃப், மைய அரசு, உலக வங்கி இவற்றின் உதவியுடன் குறைந்த செலவிலான தனி நபர் கழிவறைகள் கட்டும் திட்டம் 1984-85-ல் துவங்கப்பெற்றது. இத்திட்டத்தின்கீழ் 920 பொதுக் கழிவறைகள் கட்ட அனுமதிக்கப் பட்டது. அவை கட்டப்பட்டுவிட்டன. குறைந்த செலவிலான 1,335 தனிநபர் கழிவறைகளும் இத்துறை திட்டமிட்டவாறு கட்டி முடிக்கப்பட்டன.



**மைய ஊரக துப்புரவுத் திட்டம்:**

ஊரக பகுதி மக்களின் 25 விழுக்காடு மக்களுக்கு துப்புரவு வசதிகள் அளிப்பது ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின் ஒரு நோக்கமாகும். ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் துப்புரவு கழிவறைகளை ஊரக பகுதிகளில் கட்டும் ஒருங்கிணைப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் விரண்டு திட்டங்களின் தலையாய நோக்கம் தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர் ஆகியோருக்கு வசதிகள் செய்து கொடுப்பதாகும். இருப்பினும் பிரச்சனை பெரியது என்பதால், மேற்சொன்ன திட்டங்களினால் அடையப்பெற்ற பயன் போதும் என்று சொல்ல முடியாது. தாழ்த்தப்பட்ட மக்கள்/பழங் குடியினர் ஆகியோரது வீடுகள் தவிர மற்ற வீடுகளிலும் துப்புரவு கழிவறை வசதி அளிக்க வேண்டி இருக்கிறது. இதை கருதித்தான் மைய அரசு, மைய ஊரக துப்புரவுத் திட்டத்தை தனியார் வீடுகளில் சுகாதார கழிவறைகள் கட்டும் திட்டத்தை துவக்கியிருக்கிறது. இத்திட்டத்திற்காக ரூ. 44.32 இலட்சங்கள் மைய அரசு ஒதுக்கியிருக்கிறது. அதில் ரூ. 23.00 இலட்சங்களை மைய அரசு ஏற்கெனவே வழங்கிவிட்டது. எவ்வளவு உதவித் தொகை அளிக்க வேண்டும் என்பது மாநில அரசு இப்பொருள் குறித்து வகுக்க வரையறைகளின்படி நிர்ணயிக்கப்படும். விரைவில் இத்திட்டம் துவக்கப்படும்.

**பயிற்சித் திட்டம்:**

மேம்பாட்டுத் திட்டங்கள் பயன் விளைவிப்பது என்பது சரியான பயிற்சியையும், செயல்படுத்தும் அலுவலரது செயல் முறையைப் பொறுத்தது என்பதை கருத்தில் கொண்டு ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டது. வளர்ச்சித் துறை பணியாளர்களது பயிற்சி தேவை களுக்கேற்ப கீழ்க்காணும் ஆறு பயிற்சி நிலையங்கள் ஊரக வளர்ச்சி இயக்குநரது கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன.

1. மாநில ஊரக வளர்ச்சி நிலையம், சென்னை.
   (உயர்மட்ட பயிற்சி நிலையம்)
2. ஊரக விரிவாக்க பயிற்சி நிலையம்,
   (ஐந்து இடங்கள்)

(அ) சத்தியவிஜயநகரம், வடாற்காடு மாவட்டம்.

(ஆ) த. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்.

(இ) கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டம்.

(ஈ) பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

(உ) பவானிசாகர், பெரியார் மாவட்டம்.

மேற்சொன்ன ஐந்து ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களும் தொழிற்பட்டறை அலகுகள் உடையனவாய் உள்ளன. அவை கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் பயிற்சி அளிப்பதில் தீவிர பங்கு வகிக்கின்றன. த. கல்லுப்பட்டியிலும், சத்தியவிஜயநகரத்திலும் உள்ள ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்கள், வீட்டு பராமரிப்பு அறிவியல் அலகுகள் உடையனவாய் உள்ளன. எனவே அவ்விடங்களில் பாலசேவிகாக்களுக்கும், தொடர்பு கொண்ட சமூகநலத் துறை பெண் ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. சென்னையிலுள்ள மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் ஊராட்சி ஒன்றியத் தலைவர், துணைத்தலைவர் ஆகிய அலுவலர் அல்லாதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இங்கு குறிப்பிட்டவாறு பல்வகையான தொழில்களில் ஊரக இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, இளைஞர்க்கான சுயவேலை பயிற்சி திட்டத்தின் கீழ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு அயல் பணிமுறையில் இவ்விளைஞர்கள் அனுப்பப்படுகிறார்கள். அப்பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக்கான செலவு உதவித் தொகை ஆகிய செலவினை அந்தந்த மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஏற்றுக்கொள்கிறது. பயிற்சி வகுப்புகளின் காலம் பயிற்சி அளிக்கப்படும் தொழில்களுக்கு ஏற்ப மூன்று மாதங்கள் முதல் எட்டு மாதங்கள் வரை இருக்கும்.

1. எண்ணெய் இயந்திரம், மின்சார மோட்டார் பழுது நீக்கம் மற்றும் பேணி பாதுகாத்தல்.
2. பூச்சி மருந்து தெளிப்பு இயந்திர நுணுக்கம் மற்றும் தாவர பாதுகாப்பு தொழில் நுணுக்கம்.
3. பண்ணை வண்டி செய்தல் மற்றும் மரப்பொருட்கள் செய்தல்.



4. ஆர்க் மற்றும் கேஸ் வெல்டிங்.
5. குழாய் பொருத்துதல் மற்றும் பழுது நீக்கம்.
6. மின்சார கம்பி வேலைகள் மற்றும் மோட்டார் ரீ வைண்டிங்குகள்.
7. கயிறு மற்றும் கயிறுபாய் வேலைகள்.
8. தானியங்கி இயந்திரம் மற்றும் வாகனம் ஓட்டுதல்.
9. வானொலி மற்றும் தூக்கி செல்லும் வானொலிப்பெட்டி மற்றும் தொலைக்காட்சி பெட்டி பேணுதலும் பழுது நீக்கலும்.
10. தகர வேலைகள்.
11. சைக்கிள் பழுது பார்த்தல்.

திருநெல்வேலியில் ஒரு ஊரக விரிவாக்க பயிற்சி நிலையத்தை துவங்கி வைத்தல் தொடர்பாக மைய அரசுடன் தொடர்பு கொள்ளப்படுகிறது.

**தெரு விளக்குகளை பராமரித்தல்:**

ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் குடியிருப்பு பகுதிகளில் தெரு விளக்குகளை அமைப்பதற்காக தேவையான நிதி ஒதுக்குவதற்கு ஊராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி சட்டம் வகை செய்கிறது. குடியிருப்புகள் இல்லாத பகுதிகளிலும் தெருவிளக்குகளை அமைப்பது குறித்து உள்ளாட்சி அமைப்புகள் முடிவு செய்துகொள்ளலாம். தெருவிளக்குகளை பராமரிப்பது என்பது உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பாக இருந்தாலும், பழுதாகிபோன விளக்குகளை அகற்றி, புதியவற்றை பொருத்துதலை தமிழ்நாடு மின்சார வாரியம் செய்து வந்தது. இவ்விதமாக தெரு விளக்குகள் இரு அமைப்புகளின் கட்டுப்பாட்டில் வந்ததால் தெரு விளக்குகள் எறியாதது தொடர்பாக நிறைய குறைகள் தெரிவிக்கப்பட்டன. எனவே இது குறித்து அரசு தெளிவாக ஆய்வு செய்தபின் பேரூராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் தெரு விளக்குகளை பராமரிக்கும் பொறுப்புகளை தமிழ்நாடு மின்சார வாரியத்திடமே அரசு ஒப்படைத்தது. இருந்தாலும், தெரு விளக்குகளை பராமரிப்பதில் இன்னும் முன்னேற்றம் காணப்படவில்லை. உள்ளாட்சி

நிறுவனங்கள் மின்சாரத்திற்கான கட்டணத்தையும் உதிரி பொருட்களுக்கான செலவையும் தமிழ்நாடு மின்சார வாரியத் திற்கு செலுத்தினாலும் என்ன வேலைகள் நடந்து எக்கருவிகள் மாறறு அமைக்கப்பட்டன என்பது உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தெரியாமல் இருந்தது. எனவே இப்பொருள் குறித்து அரசு மீண்டும் ஆய்வு செய்தது. அதன்பின் தெருவிளக்குகளை பரா மரிக்கும் பொறுப்பினை மீண்டும் ஊராட்சி, பேரூராட்சிகளுக்கே ஒப்படைத்து 1986-ல் ஆணைகள் வெளியிடப்பட்டன.

கீழ்க்காணும் பொருள்கள் தொடர்பாக முடிவு மேற் கொள்ளவும், அம்முடிவுகளை உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தெரி விக்கவும் தெரு விளக்குகளுக்குத் தேவையான உதிரிப் பொருட் களை வாங்கவும் மாநில அளவிலான "ஒப்பந்தக் குழு" ஏற் படுத்தியும் ஆணையிடப்பட்டது.

1. மின்சார பொருட்களைத் தயாரிக்கும் நல்ல தயாரிப் பாளர்கள் பட்டியல்களை தயாரித்தல்.

2. பலதரப்பட்ட பொருட்களின் விலையை நிர்ணயித்தல்.

3. மின்சார பொருட்களை எப்போது மாற்ற வேண்டும் என்று நிர்ணயித்தல்.

மேற்சொன்ன பொருட்கள் குறித்து முடிவு செய்ய ஒப்பந்தக் குழு ஆண்டுக்கொருமுறை கூடும்.

**கிராமப் பணிகள் திட்டங்கள்:**

ஊராட்சி ஒன்றியத்தின் அமைப்பு காலத்திலிருந்து பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், இணைப்புச் சாலைகள் அமைத்தல், குடி நீர் வழங்குதல் போன்ற பணிகள் ஊராட்சி ஒன்றியங்களால் செயற்படுத்தப்பட்டன. இதற்காக ஏற்படும் செலவினத்தை ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் நிதிக்கு தக்கவாறு அரசுடன் பகிர்ந்து கொள்கின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் இத்திட்ட செலவினத்தில் விகிதாச்சார முறையில் பங்கு கொள்வது ஊராட்சி ஒன்றியங்கள் அரசின் செலவினத்தை ஓரளவு நிறைவு படுத்துகிறது. எனவே கிராமப் பணிகள் திட்டத்தில் செயற்படுத் தப்பட்ட திட்டங்களான பள்ளிக் கட்டிடம் கட்டுதல், இணைப்பு சாலைகள் அமைத்தல் போன்றவைகளை தற்போது தேசிய



ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் செயல் படுத்த தீர்மானிக்கப்பட்டது. எனவே 1986-87, 1987-88 ஆண்டு வரவு-செலவுத் திட்டங்களில் இத்திட்ட இனங்களுக்கு அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே ஏற்படுத்தப்பட்டன. குடிநீர் வழங்கல் பணிக்காக 1987-88 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 75.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சமூகக் கல்வி மானியம்:**

12,823 சமூகக் கல்வி மையங்களுக்கும் 378 தகவல் மையங் களுக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு 1987-88 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்:**

தமிழ்நாட்டில் மொத்தம் 369 ஒன்றிய மருந்தகங்களும், 560 ஊரக மருந்தகங்களும் இயங்கி வருகின்றன. நவீன மருத்துவம், ஆயுர்வேதம், சித்த வைத்தியம் மற்றும் யுனானி வைத்தியம் கிழான சிகிச்சைகள் இந்த மருந்தகங்கள் மூலம் கிராம மக்களுக்கு கிடைக்கின்றன.

மேற்கூறிய இரு மருந்தகங்களையும் ஊராட்சி ஒன்றியங் களே பராமரித்து வருகின்றன. ஒன்றிய மருந்தகங்களைப் பொறுத்தவரையில் ஓர் ஒன்றியத்தில் ஒரு மருந்தகத்திற்கு ஆண்டுக்கு ரூ. 5,400 என்ற விகிதத்தில் அரசு மானியம் அளித்து வருகிறது.

**கால்நடை வளர்ச்சி:**

1986-87 ஆம் ஆண்டில் 24 இரண்டாவது கால்நடை மருந்தக கட்டிடங்கள் கட்ட ரூ. 12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

1987-88 ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்பு இயக்குநரைக் கலந்தாலோசித்த பின்னர் 24 இரண்டாவது கால்நடை மருந்தக கட்டிடங்கள் கட்டுவது பற்றி பரிசீலிக்கப்பட்டுள்ளது.

**கிடேரி கன்று வளர்ப்புத் திட்டம்:**

1986-87 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் இத்திட்டம் ஐந்து விரிவாக்க பயிற்சி மையங்களில் செயலாக்கப்படுகிறது. 1987-88 ஆம் ஆண்டிற்கு ரூ. 6.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மீன்வளங்கள்:**

1986-87 ஆம் ஆண்டில் தீவிர மீன் வளர்ப்புத் திட்டத்திற்கு குறிப்பிட்ட சில இடங்கள் நான்கு மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்டன. குளங்களை அபிவிருத்தி செய்ய மீன் வளத் துறையில் உள்ள தொழில்நுட்ப அலுவலர் மூலம் இத்திட்டத்தை நிறைவேற்ற வழி வகுக்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டிற்கு ரூ. 6.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ. 6.00 இலட்சம் செலவிலே இத்திட்டத்தை 1987-88 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சிறுபாசன ஆதாரத்தை மேம்படுத்தல்:**

சிறுபாசன ஆதாரங்களைப் பாதுகாத்தல், பராமரித்தல் போன்ற அதிகாரங்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 3,28,076 ஹெக்டேர் ஆயக்கட்டுள்ள 23,761 சிறுபாசன ஏரிகள் ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படுகின்றன.

சிறுபாசன ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக ரூ. 20.00 இலட்சம் 1987-88 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



பேரூராட்சி நிர்வாகம்:

தமிழ்நாட்டில் 645 பேரூராட்சிகள் உள்ளன. இப்பேரூராட்சிப் பகுதிகளில் ஒரு கோடி மக்கள் வாழ்கின்றனர். இப்பேரூராட்சிகள் முதல் நிலை, இரண்டாம் நிலை, தேர்வு நிலை, நகரியங்கள் என பிரிக்கப்பட்டுள்ளன. அதன் விபரம் பின்வருமாறு :—

| | பேரூராட்சிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. முதல் நிலை | 268 |
| 2. இரண்டாம் நிலை | 86 |
| 3. தேர்வு நிலை | 274 |
| 4. நகரியங்கள் | 17 |
| | 645 |

1981 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி 212 பேரூராட்சிகள் நகர்ப்பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டன. எஞ்சியுள்ள 433 பேரூராட்சிகள் கிராமப் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டன. 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மைய அரசு கிராமப்பகுதி பேரூராட்சிகளை தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒப்புதலளிக்கப்படுகின்ற திட்டங்களில் சேர்த்துக்கொள்ள மறுப்பேதுமில்லை என்று தெளிவுபடுத்தியது. இதன் அடிப்படையில்தான் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் கிராமப்பகுதி பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. வறுமை ஒழிப்புத் திட்டத்தின் செயற்பாட்டில் நகர்ப் பகுதிப் பேரூராட்சிகள் சேர்க்கப்படவில்லை. இது செயற்கை வேற்றுமையே என்பதால் இதுகுறித்து மைய அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு எல்லா நகர்ப் பகுதி பேரூராட்சிகளும் கிராமப்பகுதி பேரூராட்சிகளும் ஒரே மாதிரியாக நடத்தப்பட வேண்டுமென இவ்வரசு கேட்டுள்ளது.

**பேரூராட்சிகளின் வருவாய் விபரங்கள் :**

வீட்டு வரி, தொழில் வரி, வாகன வரி போன்ற வரிகளை அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச மற்றும் அதிகப்பட்ச வரம்புக்கு ஏற்ப, வரி விதிக்கும் அதிகாரம் பேரூராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. வேளாண்மை நிலங்களின்மீதும் வரி விதிக்க பேரூராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அங்காடிக் கட்டணம், வண்டி நிறுத்தும் இடங்களுக்கான கட்டணம், வருவாய் தரும் இனங்களின் மீதான கட்டணம், ஆபத்துமிகுந்த தொழில் களுக்கான உரிமக்கட்டணம், சொத்துக்களை கைமாற்றும்போது விதிக்கப்படும் தீர்வை, கேளிக்கை வரியிலிருந்து கிடைக்கும் பங்குத்தொகை ஆகியவை பேரூராட்சிக்கு வருவாய் வழங்கும் வாயில்கள் ஆகும். ஊராட்சிகளின் சட்டத்தின் 115-வது பிரிவின் படி வசூலிக்கப்படும் உள்ளூர் மேல்வரியில் ஒரு பங்கு பேரூராட்சி களுக்கு உண்டு.

பொதுவாக பேரூராட்சிகளின் நிதி நிலைமை நிறைவு தருவதாக இல்லை. 513 பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் தனிநபர் வருமானம் ரூ. 25-க்குக்கீழ்தான். 132 பேரூராட்சி களைப் பொறுத்தவரையில் தனி நபர் வருமானம் ரூ. 50-க்கும் கீழ்தான். பணியாளர் ஊதிய உயர்வு மற்றும் அவ்வப்போது அக விலைப் படிகள் உயர்த்தப்படுவதால் பேரூராட்சிகளின் நிர்வாகச் செலவு மிக அதிகமாகி குறைந்தபட்ச அடிப்படை வசதிகளைக் கூட தம் பகுதிகளுக்குச் செய்து கொடுக்க இயலாத நிலையில் அவை உள்ளன.

**குடிநீர் வழங்கல் :**

1981-ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி 433 பேரூராட்சிகள் கிராமப்பகுதி பேரூராட்சிகளாக வகைப்படுத்தப் பட்டன. இத்தகைய 433 கிராமப்பகுதி பேரூராட்சிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் 277 பேரூராட்சி களுக்கு வழங்கப்பட்டு உள்ளது. முழு மானியத்தோடு குடிநீர் வழங்கல் திட்டம் கிராம ஊராட்சியைப் போன்று கிராமப்பகுதி பேரூராட்சிகட்கு விரிவுபடுத்த அரசு ஆணையிட்டுள்ளது.



சிறு குடிநீர் வழங்கும் திட்டத்தைப் பேரூராட்சிகளில் செயல் படுத்துவதற்காக 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 25 இலட்சம் அரசால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 18 பேரூராட்சிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயலாக்கப் படுகிறது.

உலக வங்கியின் உதவியுடன் ரூ. 42.84 கோடி மதிப்பீட்டில் எழுபத்திரண்டு குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 63 திட்டங்கள் 75 விழுக்காடு மானியமும் மற்றும் 9 திட்டங்கள் 100 விழுக்காடு மானியமும் பெறவிருக்கின்றன.

12,724 கை இறைப்பான்களையும் 2,475 மின் விசை இறைப் பான்களையும் பேரூராட்சிகள் பேணி வருகின்றன. இறைப் பான்கள் பேணி வருவதற்கும், துருப்பிடித்த இரும்பு மேல்நிலை தொட்டிகளுக்குப் பதிலாக துருப்பிடிக்காத காங்கிரீட் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கும் 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 50 இலட்சம் வழங்கப்பட்டது. 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**மகளிர்களுக்குக் கழிப்பிடங்கள் கட்டுதல் :**

ஊரகப் பகுதிகளில் நலிந்த பிரிவினரை மேம்படுத்துவதற்காக வசதிகள் அளிக்க செயற்படுத்தப்படும் எண்ணற்ற வளர்ச்சித் திட்டங்களில் பேரூராட்சிகளில் கிராமிய மகளிர்களுக்காக கழிப்பிடங்கள் அமைத்துக் கொடுப்பது தலையாயதாக உள்ளது. நீர் வசதியுள்ள எல்லா பேரூராட்சிகளிலும் இக் கழிப்பிடங்கள் பேரூராட்சிக்கு இரண்டாக ஒவ்வொரு பேரூராட்சியிலும் படிப்படியாக அமைத்துக் கொடுக்க கருதப்பட்டுள்ளது. 80 பேரூராட்சிகளில் கிராமிய மகளிர்களுக்காக 160 பொதுக் கழிப்பிடங்கள் கட்டிக் கொடுக்க ரூ. 27 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது. இப்பணி முடியும் தருவாயில் உள்ளது. இரண் டாவது கட்டமான இப்பணியை ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்து செயல்படுத்த கருதப்பட்டுள்ளது.

**குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம்:**

மைய அரசினால் தொடங்கப்பட்ட சிறு மற்றும் நடுத்தர நகர்களின் ஒருங்கிணைந்த மேம்பாடு திட்டத்தின்கீழ் ஓசூர் மற்றும் கள்ளக்குறிச்சி பேரூராட்சிகள் குறைந்த செலவிலான துப்புரவு திட்டத்தை செயலாக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ. 27.40 இலட்சம் செலவுக்கு ஒப்புதலளிக்கப் பட்டுள்ளது. இச்செலவில் ரூ. 14.60 இலட்சத்தை மைய அரசும் ரூ. 12.80 இலட்சத்தை மாநில அரசும் ஏற்றுக்கொள்ளும் இத்திட்டத்தில் 739 உலர் கழிவறைகள் சுகாதாரக் கழிப்பிடங் களாக மாற்றவும் 2,200 புதிய கழிப்பறைகள் கட்டப்படவும் உள்ளது. ஓசூர் பேரூராட்சியில் இப்பணி தர்மபுரி மாவட்ட வளர்ச்சி கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டு குறியீட்டளவில் 50 விழுக்காடு முடிக்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி பேரூராட்சியில் கழிப்பிடங்கள் கட்ட தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

**கழிப்பிடங்கள் கட்ட 'யூனிசெஃப்' நிறுவனம் அளிக்கும் உதவி:**

1,250 கழிப்பிடங்கள் 10 பேரூராட்சிகளில் பேரூராட்சி ஒன்றுக்கு 125 ஆக கட்ட அரசு ரூ. 5 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் (அரசின் மானியம் 40 விழுக்காடு, 'யூனிசெஃப்' நிறுவனத்தின் பங்கு 40 விழுக்காடு, பயனாளியின் பங்கு 20 விழுக்காடு) என்ற விகிதாச்சாரமுறையில் செயல்படுத்தப்படு கிறது.

**சுகாதாரமற்ற கழிவறைகளை சுகாதார கழிவறைகளாக மாற்றல்:**

துப்புரவு பணியாளர்களை விடுவிக்க மைய அரசு இத் திட்டத்தை மூன்று பேரூராட்சிகளில் செயல்படுத்த ஒப்புதலளித் துள்ளது. இத்திட்டத்திற்காக ஏற்படும் ரூ. 53 இலட்சம் செலவுத் தொகையை மைய, மாநில அரசுகள் சரிபாதியாகப் பகிர்ந்து கொள்ளுகின்றன. இத்திட்டத்தில் துப்புரவுப் பணியாளர்கள்





மலத்தை சுமந்து செல்லும் அருவருப்பூட்டும் பணியிலிருந்து விடுவித்து பயனுள்ள பொருளாதார தொழில்களில் ஈடுபடுத்தப் படுகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் பழைய எடுப்பு கழிவறைகளை சுகாதார கழிவறைகளாக மாற்ற தற்போது மூன்று பேரூராட்சி களில் செயல்படுத்தப்படும்.

வீரப்பன்சத்திரம்—பெரியார் மாவட்டம்.

திருச்செந்தூர்—சிதம்பரனார் மாவட்டம்.

திருக்கழுக்குன்றம்—செங்கல்பட்டு மாவட்டம்.

**ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்:**

இம் மாநில அரசின் தீவிர நடவடிக்கையினால் மைய அரசு தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் செயல்படுத்தப் படும் திட்டங்களை கிராமப்பகுதி பேரூராட்சிகளில் செயல்படுத்த இசைவு அளித்துள்ளது. 137 பேரூராட்சிகளில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தை செயல்படுத்த ரூ. 585.00 இலட்சம் 1985-86 ஆம் ஆண்டு அரசு வழங்கியுள்ளது. 1986-87-ம் ஆண்டுக்கு இத்திட்டத்தை 127 பேரூராட்சிகளில் செயலாக்க ரூ. 300 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. சாலைகள் மேம்பாடு, வடிகால் திட்டங்கள் சமூகக் காடு வளர்ப்பு கிடங்குகள், சமுதாயக்கூடங்கள், அலு வலகக் கட்டிடங்கள் கட்டுதல் போன்ற சமுதாய சொத்துக்களை உருவாக்கும் பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படு கின்றன.

**ஒருங்கிணைந்த பிற்பட்ட நகர்ப்புற மேம்பாடு:**

1986-87 ஆம் ஆண்டில் நகர்ப்புற பிற்பட்ட பேரூராட்சிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க அரசு ரூ. 20 இலட்சம் (பாதி மானியம் பாதி கடன் என்ற அடிப்படையில்) பேரூராட் சிக்கு தலா ரூ. 2 இலட்சம் வீதம் 10 பேரூராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் கூடுதலாக 10 பேரூராட்சி களில் இத்திட்டத்தை செயலாக்க ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வடிகால் :**

1980 முதல் 1990 வரை 10 ஆண்டுகள் குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு ஆண்டுகளாக கருதப்படும். பாதாள வடிகால் அமைப்பு ஒரு பேரூராட்சியில்தான் உள்ளது. ஏனைய பேரூராட்சிகளில் கழிவு நீர் தெருக்களில் தேங்கி சாலைகளின் அமைப்பைப் பாழாக்கி கொசுக்களை உற்பத்தி செய்யும் இடமாகவும் அமைந்து விடுகிறது. எனவே பேரூராட்சியில் வீடுகளில் கழிவுநீரை வடிய செய்ய வடிகால் அமைப்பு முறை தேவைப்படுகிறது. 1987-88-ம் ஆண்டுக்கு ரூ. 45,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

**ஒருங்கிணைந்த நகர்ப்புற முன்னேற்றத் திட்டம் :**

**(அ) மாநில அரசின் பங்கு:**

32 பேரூராட்சிகள் நகர் மற்றும் கிராமிய திட்ட வாரியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற முன்னேற்ற திட்டத்தின்கீழ் சந்தைகள், பேருந்து நிலையங்கள் அமைக்க ரூ. 20 இலட்சம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) மைய அரசின் பங்கு:**

மைய அரசினால் தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்த சிறு மற்றும் நடுத்தர நகர் மேம்பாடு திட்டத்தின்கீழ் நான்கு திட்டங்கள் நகர் மற்றும் கிராமிய திட்ட வாரியத்தால் ஆய்வு நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 120 இலட்சம் செலவில் செயல் படுத்த ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

**கோயில் நகர வளர்ச்சி :**

கோயில் நகர் வளர்ச்சிக்காக சாலை, வடிகால், குடிநீர் வழங்கல், தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் செய்ய அரசு இரண்டு பேரூராட்சிகளுக்கு ரூ. 5.00 இலட்சம் வழங்கி யுள்ளது. இத் திட்டப் பணிகள் தற்போது செங்கற்பட்டு மாவட் டத்தில் குன்றத்தூர் பேரூராட்சியிலும், தென் ஆற்காடு மாவட் டத்தில் ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியிலும் செயற்படுத்தப்படு கின்றன.



**நகராட்சி நிருவாகம் :**

தமிழ்நாட்டில், 98 நகராட்சிகளும், 6 நகரியங்களும் நகராட்சி நிருவாக இயக்குநரின் நிருவாகத்தின்கீழ் இயங்கி வருகின்றன. நகராட்சிகள் மற்றும் நகரியங்களின் ஆண்டு வருவாய்க்கிணங்க, அவை பல்வேறு நிலைகளாக வகை படுத்தப்பட்டுள்ளன. நக ராட்சிகள், நகரியக் குழுக்கள், ஆகியவற்றை வகைப்படுத்துவதற் கான கோட்பாடுகள், ஊரக வளர்ச்சி—உள்ளாட்சி நிருவாகத் துறையின் 25—3—1983 ஆம் நாளிட்ட 400 ஆம் எண் ஆணையில் அரசு வரையறுத்துள்ளது. இக் கோட்பாட்டிற்கிணங்க, மாநிலத் திலுள்ள நகராட்சிகள், நகரியங்களின் தற்போதைய நிலை பின் வருமாறு:—

| தொடர் எண்ணும் நகராட்சியின் நிலையும். (1) | நகராட்சி களின் எண்ணிக்கை. (2) | நகரியங் களின் எண்ணிக்கை. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| 1. சிறப்பு நிலை .. | 8 | .. | 8 |
| 2. தேர்வு நிலை .. | 11 | 5 | 6 |
| 3. முதல் நிலை .. | 35 | 1 | 36 |
| 4. இரண்டாம் நிலை .. | 31 | 2 | 33 |
| 5. மூன்றாம் நிலை .. | 13 | .. | 13 |
| மொத்தம் | 98 | 8 | 106 |

கடந்த இருபது ஆண்டுகளில், நகரங்கள் மற்றும் மக்கட் தொகை ஆகியவற்றின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவுக்குப் பெருகி வந்துள்ளது. 1961 ஆம் ஆண்டில், நகரங்கள்/நகரியங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை 64 ஆக இருந்தது. இது 1986 ஆம் ஆண்டில் 106 ஆக அதிகரித்தது. 1961 ஆம் ஆண்டில், நகர்ப் புறங்களின் மக்கட் தொகை 45,11,165 ஆக இருந்தது. ஆனால்,

1981 ஆம் ஆண்டில் 74,36,961 ஆக உயர்ந்தது. நகர்ப்புறங்களில், இயற்கையாக மக்கள் தொகை பெருகுவது மட்டுமின்றி கிராமங்களில் உள்ள மக்கள் நகரங்களுக்குக் குடி பெயர்ந்து வருவது ஆண்டுதோறும் பெருகி வருகிறது. இதனைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்:—

நகர்ப்புற மக்கட் தொகை 1961 கணக்கெடுப்பின்படி—45,11,165

நகர்ப்புற மக்கட் தொகை 1971 கணக்கெடுப்பின்படி—57,13,328.

நகர்ப்புற மக்கட் தொகை 1981 கணக்கெடுப்பின்படி—74,36,961

நகர்ப்புற மக்கட் தொகை 1985 (ஆண்டு மக்கட்தொகை 81,26,414)

நகர்ப்புற மக்கட் தொகை மிகவும் பெருகி வருவதால் மக்களுக்குத் தேவையான இன்றியமையா அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கும் பொறுப்பு நகராட்சிகளுக்குப் பல மடங்கு மிகுந்துள்ளது. இப்பெரும் பொறுப்புகளை இம்மாநிலத்திலுள்ள பெரும்பாலான நகராட்சிகள் நிதிப் பற்றாக்குறை காரணமாக திறம்பட நிறைவேற்றிட இயலாமையிலுள்ளன. நகராட்சிகளின் வருவாய் திட்டத்தட்ட நிலையாக இருக்கையில், பொருட்களின் விலை ஏற்றம், பணியாளரமைப்புச் செலவுகள் ஆகியவற்றில் உயர்வு ஏற்பட்டதன் விளைவாக நகராட்சிகளின் செலவு அதிகரித்து வருகின்றது. இதன் பயனாக, 1984-85 ஆம் ஆண்டில், மாநிலத்திலுள்ள 38 நகராட்சிகள் நிதிப் பற்றாக்குறை நிலையில் இருந்தன. இதனால், நகராட்சிகள், அடிப்படை பராமரிப்புப் பணிகளையும், வரி செலுத்துபவர்களுக்குச் செய்ய வேண்டிய இன்றியமையா அடிப்படை வசதிகளையும் வழங்க இயலாத நிலையில் உள்ளன. எனவே, பொதுமக்களுக்குத் தேவையான இன்றியமையா அடிப்படை வசதிகளை வழங்கவும், ஆதாயம் தரும் தொழில்கள், திட்டங்கள் ஆகியவற்றை மேற்கொள்வதன் மூலம் நகராட்சிகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்கவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிதியுதவி வழங்க அரசு முன் வந்துள்ளது.



நகராட்சிகளின் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள அவற்றைத் தூண்டும் வகையிலும், இன்றியமையா அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலும், அரசு ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், மொத்தம் ரூ. 3,355.84 இலட்சம் மூலதனச் செலவில் திட்டங்களைச் செயல்படுத்தக் கருதியுள்ளது. ஆறாம்—ஏழாம் ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்துள்ள விவரங்கள் வருமாறு

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடும், செலவினமும் மற்றும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விவரமும் மற்றும் 1985–86, 1986–87 மற்றும் 1987–88 ஆகிய நிதி ஆண்டுகளில் அரசின் நிதி உதவி விவரங்களும் பின்வருமாறு :—

| பகுதி தலைப்பின் விபரம். | ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு. | ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் செலவினம். | ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு. | நிதி ஒதுக்கீடு. 1985–86 ஆண்டுத் திட்டம். | 1986–87 ஆண்டுத் திட்டம். | 1987–88 ஆண்டுத் திட்டம். | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| துறை I—நகர மேம்பாடு— | | | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. தனிப்பட்ட தெருக்களை அபிவிருத்தி செய்யும் கழக நிதி திட்டம். | 25.00 | 25.00 | 50.00 | 0.01 | 0.01 | 0.01 | .. |
| 2. நகராட்சி குடிசைப் பகுதிகளில் தொலைக் காட்சி பெட்டிகள் அமைத்தல். | — | .. | 150.00 | 2.00 | 2.00 | 5.00 | .. |
| 3. நல்விளைவுத் திட்டத்தின்கீழ் நகராட்சிகளை மேம்படுத்துவதற்கு நிதியுதவி. | 1,347.50 | 1,366.49 | 1,500.00 | 500.00 | 152.50 | 0.01 | .. |
| 4. கோயம்புத்தூர், தமிழ்நாடு நகர்ப்புற பயிற்சி நிலையத்திற்கு நிதி உதவி வழங்குதல். | 5.00 | 7.17 | .. | .. | 0.01 | 5.00 | .. |
| 5. மாநகராட்சி, நகராட்சி ஆகியவற்றுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்குதல். | 50.00 | 25.00 | 250.00 | 50.00 | 50.00 | 50.00 | .. |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 6. விரிவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம். | 300.00 | 300.00 | 250.00 | 40.00 | 40.00 | 50.00 | .. |
| 7. பொது சுகாதார [illegible] வாங்குதல். | .. | .. | .. | .. | 0.01 | 35.00 | .. |
| 8. பிற்பட்ட பகுதிகள் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம். | 50.00 | 50.00 | 50.00 | .. | 22.50 | 15.00 | .. |
| 9. வட்டார நகராட்சி நிருவாக இயக்கக் கட்டிடங்கள் கட்டுவதற்கு நிதி உதவி. | 8.00 | 8.00 | .. | 5.00 | 5.00 | .. | .. |
| 10. வெள்ள நீர் வடிகால்கள் கட்டுதல். | .. | .. | 50.00 | .. | 15.00 | 35.00 | .. |
| | | | | | | 18.00 | |
| 11. நகராட்சி மருத்துவமனைகளை அபிவிருத்தி செய்தல். | .. | .. | 50.00 | .. | 11.00 | 9.00 | .. |
| 12. தாய்சேய் நல விடுதிகளின் முன்னேற்றம். | .. | .. | 50.00 | .. | 10.00 | 10.00 | .. |
| 13. நகராட்சி முக்கிய சாலைகளுக்கு தார் போடுதல். | .. | .. | .. | .. | | 10.00 | .. |
| 14. [illegible] வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டணக் கழிப்பிடம் கட்டுவதற்கு நகராட்சிகளுக்கு நிதியுதவி. | .. | .. | .. | .. | 15.00 | .. | .. |
| 15. (i) நிருவாகத்திற்குச் சிறந்த வசதிகள் செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு மேம்பாடு (5—20 PBX தொலைபேசிகளுக்கு வகை செய்தல்). | .. | | .. | .. | 6.50 | .. | .. |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| (ii) நகராட்சி நிருவாக இயக்குநர் அலுவலகத்தில் கண்காணிப்பு மதிப்பீட்டு, தணிக்கைப் பிரிவை ஏற்படுத்துதல். | .. | .. | .. | .. | 0.95 | 1.57 | .. |
| (iii) நீண்ட கால திட்டமிடல் பிரிவை அமைத்தல். | .. | .. | .. | .. | 0.80 | 1.16 | .. |
| (iv) நகராட்சி நிருவாக வட்டார இயக்குநர் அலுவலகங்களைத் [illegible] புதிதாக வட்டார அலுவலகங்கள் ஏற்படுத்துதல். | .. | .. | .. | .. | 2.56 | 4.10 | .. |
| 16. தமிழ்நாடு நகராட்சி நிதிக் கழகத்திற்கு நிதியுதவி .. .. | .. | .. | 100.00 | .. | 0.01 | 0.01 | .. |
| 17. நகரத்தில் தொழிலாளர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த உதவித் தொகை. | .. | .. | 200.00 | .. | .. | .. | .. |
| 18. நகராட்சி நகர் சுத்தித் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல். | .. | .. | 150.00 | .. | .. | .. | .. |
| [illegible] மொத்தம் | 1,785.50 | 1,779.66 | 2,850.00 | 597.01 | 312.86 | 260.86 | . |
| [illegible] | | | | | | | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| துறை II—கல்வி— | | | | | | | |
| 1. நகராட்சி தொடக்கப்பள்ளி கட்டிடங்கள் கட்ட நிதியுதவி. | 84.87 | 84.87 | 100.00 | 20.00 | 20.00 | இல்லை | .. |
| 2. நகராட்சி உயர் நிலை மேல் நிலை பள்ளி கட்டிடங்கள் கட்ட மானியம். .. .. .. | 60.00 | 60.00 | 50.00 | 10.00 | 10.00 | இல்லை | .. |
| மொத்தம் .. | 144.87 | 144.87 | 150.00 | 30.00 | 30.00 | .. | .. |
| துறை III— | | | | | | | |
| சாலைகள்-பாலங்கள் கட்டுவதற்கு நகராட்சிகளுக்கு நிதியுதவி. | 55.75 | 55.00 | 100.00 | 55.75 | 55.00 | 55.00 | .. |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| மத்திய அரசு ஆதரவுடன் செயல்படுத்தும் திட்டங்கள்— | | | | | | | |
| 1. சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கூடுதல் பணிகளை மேற்கொள்ள நகராட்சிகளுக்கு நிதியுதவி. | 102.06 | 102.06 | 200.00 | .. | .. | .. | .. |
| 2. நகராட்சி நகரங்களில் குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம். | 54.77 | 54.77 | 55.64 | 27.82 | 0.01 | 0.01 | .. |
| மொத்தம் .. | 156.83 | 156.83 | 255.64 | 27.82 | 0.01 | 0.01 | .. |
| சுருக்கம். | | | | | | | |
| துறை-I—நகர்ப்புற மேம்பாடு .. | 1,785.50 | 1,779.66 | 2,850.00 | 597.01 | 312.85 | 260.86 | .. |
| துறை-II—நகர்ப்புற கல்வி .. .. | 144.87 | 144.87 | 150.00 | 30.00 | 30.00 | .. | .. |
| துறை-III—சாலைகள் மற்றும் பாலங்கள். | 55.75 | 55.00 | 100.00 | 55.75 | 55.00 | 55.00 | .. |
| துறை-IV—மத்திய அரசு ஆதரவுடன் செயற்படுத்தும் திட்டங்கள். | 156.83 | 156.83 | 255.64 | 27.82 | 0.01 | 0.01 | .. |
| | 2,142.95 | 2,136.36 | 3,355.64 | 710.58 | 397.86 | 315.87 | .. |

[1987, ஏப்ரல் 28

நகராட்சி நகரங்களை மேம்படுத்துவதற்காக, நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 14 திட்டங்களை செயலாக்குவதற்காக ரூ. 30 கோடி ஒதுக்குவதற்கு மாநிலத் திட்டக் குழு ஒப்புதலளித்துள்ளது. இதில் 11 திட்டங்கள் நடந்தேறி வரும் திட்டங்களாகச் செயலாக்கப்பட்டு வருகின்றன. செயலாக்கப்பட வேண்டிய எஞ்சிய திட்டங்கள் வருமாறு:—

| தொடர் எண்ணும் திட்டங்களின் பெயரும். (1) | 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒப்புதல் பெற்ற நிதி ஒதுக்கீடு. (2) [ரூபாய் இலட்சத்தில்] |
|---|---|
| 1 நகராட்சி நிதிக் கழகங்களை அமைக்க நிதியுதவி .. .. .. | 100 |
| 2 துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவித்தொகை .. | 200 |
| 3 நகராட்சித் துப்புரவுப் பணியாளர்களுக்கும் குடியிருப்புகள் கட்டுவதற்காக .. | 150 |

இத்திட்டங்கள், 7-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வரவு-செலவுத் திட்டத்தின் பகுதி-II திட்டத்தின் கீழ் செயலாக்கப்படும்.

**1987-88 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:**

பின்வரும் புதிய திட்டங்கள், 1987-88-ல் நகராட்சிகளில் செயலாக்கக் கருதப்பட்டுள்ளன:—

(1) அடிப்படை வசதி மேம்பாட்டிற்காக நகராட்சிகளுக்கு ரூ. 200 இலட்சம் உதவித் தொகை வழங்க 1987-88 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) கோயம்புத்தூரிலுள்ள நகர்ப்புற பயிற்சி நிலையத்திற்கு அலுவலகம் இல்லம், பணியாளர் குடியிருப்பு மற்றும் சுற்றுச் சுவர் கட்ட 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



1987 ஏப்ரல் 28]

**குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம்:**

பொதுக் கழிப்பிடங்களைப் பராமரிக்கும் பணி, நகராட்சிகளின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். நகராட்சிகளிடம் போதிய நிதி வசதி இல்லாததாலும், பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவது அதிகக் காலமும் செலவும் ஆகக்கூடிய திட்டமாக இருப்பதாலும், நகராட்சிகள் அனைத்திலும் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்தைச் செயலாக்க இயலவில்லை. நகராட்சி நகரங்களில் உள்ள அனைத்துத் தர மக்களுக்கும், உதவி செய்யும் நோக்கத்துடனும், நடுத்தர, குறைந்த வருமானமுள்ள மக்களின் நலனுக்காகவும், "குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம்" என்கிற புதிய திட்டமொன்று, இம்மாநிலத்திலுள்ள நகர்ப் பகுதி அனைத்திலும் செயலாக்கப்பட்டு வருகிறது. துப்புரவுப் பணியாளர்கள், மலத்தை அகற்றி அவற்றைத் தலை சுமையாக எடுத்துச் செல்லும் வெறுக்கத்தக்க பணியை செய்வதிலிருந்து அவர்களை விடுவிப்பதும், நகர்ப் பகுதியை அனைத்து வகைத் துப்புரவுக் கேடுகளிலிருந்து நீக்கி, துப்புரவான சுற்றுப்புறச் சூழ்நிலையை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பணித் திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன:

| | ஒதுக்கீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1 மத்திய அரசு உதவியுடன் உடுமலைப்பேட்டை நகராட்சியில் துப்புரவுத் தொழிலாளர்களின் வெறுக்கத்தக்க பணியிலிருந்து விடுவிக்கும் திட்டம் | 54.77 |
| குறிப்பு.—(பணி முடிவுற்றது. 45 துப்புரவுத் தொழிலாளர்கள் வெறுக்கத்தக்க பணி செய்வதிலிருந்து விடுவிக்கப்பட்டு அவர்களுக்கு மாற்று வேலை வழங்கப்பட்டுள்ளது). | |
| 2 உலக வங்கி உதவியுடன் 14 நகராட்சிகளில் குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம் | 709.55 |

| | ஒதுக்கீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| குறிப்பு:—15,811 அகற்று முறைக் கழிப்பிடங்களையும், 2,461 பக்கெட் வகைக் கழிப்பிடங்களையும் நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நீரடிக் கழிப்பிட வசதியுடன், 11,535 புதிய கழிப்பிடங்களும் சமுதாயக் கழிப்பிடங்களில் 1,201 இருக்கை வசதியும் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. | |
| 3 குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் குறைந்த செலவிலான துப்புரவு வசதி, அம்பத்தூர் நகரியம், விழுப்புரம் மற்றும் நாகர்கோயில் நகராட்சிகள் ஆகிய 3 நகராட்சிகளில் செய்யப்பட்டுள்ளது. (50 சதவீத மத்திய அரசு உதவியுடன்). | 111.28 |
| 4 சிறு மற்றும் நடுத்தர நகர்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஆறு நகராட்சிகளில் குறைந்த செலவிலான துப்புரவு வசதித் திட்டம், மத்திய அரசு நிதி உதவியுடன் செயலாக்கப்பட்டு வருகின்றது. | 150.00 |
| மொத்த ஒதுக்கீடு | 1,035.60 |

**சிறப்புக் காலங்களில் நகராட்சிகளுக்கு நிதி உதவி:**

நகராட்சிகளில் சிறப்புக் காலங்களில் அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கான நிதிப் பற்றாக்குறை இருக்கையில், அத்தகைய காலங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக அரசு நிதி உதவி அளிக்கின்றது.



1. திருநெல்வேலி மாவட்டம் இரண்டாகப் பிரித்து, சிதம்பரனார் மாவட்டம் அமைக்கப்பட்ட தருவாயில், சாலைகள், சாக்கடை, பொதுச் சுகாதாரம், குடிநீர் வழங்கல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக, தூத்துக்குடி நகராட்சிக்கு அரசு "பாதிக் கடன், பாதி மான்யம்" என்கிற முறையில் ரூ. 25 இலட்சம் அனுமதித்துள்ளது.

2. அருள்மிகு தில்லை நடராஜர் திருக்கோயிலின் குடமுழுக்கு விழா 1987 பிப்ரவரியில் நடந்ததையொட்டி, சிதம்பரம் நகரில் பின்வரும் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக அரசு, "பாதிக் கடன், பாதி மான்யம்' என்கிற முறையில் ரூ. 13.83 இலட்சம் அனுமதித்துள்ளது.

| தொடர் எண்ணும் பணியின் பெயரும். | ஒப்புதலளிக்கப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1 குடிநீர் வழங்கலை மேம்படுத்தல் | 1.30 |
| 2 பொதுக் கழிப்பிட வசதிகள் | 1.84 |
| 3 தெரு விளக்குகள் போடுதல் | 1.00 |
| 4 சாலைகள் | 6.60 |
| 5 பொதுச் சுகாதாரம் | 2.50 |
| மொத்தம் | 13.83 |

3. 1987 மார்ச்சில் நடைபெற்ற திருவரங்கம் அருள்மிகு ஸ்ரீரங்கநாதசாமி திருக்கோயில் கும்பாபிஷேக விழா தொடர்பாக, அவ்விழாவினையொட்டி, திருத்தலம் காண வரும் பயணிகளின் பயனுக்காக, ஸ்ரீரங்கம் மற்றும் திருச்சிராப்பள்ளி நகராட்சிகளில் சுகாதார வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ரூ. 16.93 இலட்சம் நிதி உதவி பாதி மானியமாகவும் பாதி கடனாகவும் வழங்கப்பட்டது.

[1987 ஏப்ரல் 28

5 (3) இணைப்புச் சிற்றம்பலின்போது (வறட்சி நிவாரணம்) நிதி ஒதுக்கீடு:

1986 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணம்:

1985 அக்டோபர் முதல் டிசம்பர் வரை, தமிழ்நாட்டின் பெரும் பான்மையான பகுதிகளில் வட கிழக்குப் பருவ மழை போதிய அளவு இல்லாததால், இம் மாநிலத்தைச் சேர்ந்த மாவட்டங்களி லுள்ள எல்லா நகராட்சிகளும் கடும் குடிநீர் பற்றாக்குறை ஏற் பட்டது. நகராட்சிகளில் குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற் காக, வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, அரசு எல்லா நகராட்சிகளுக்கும் ரூ. 565.07 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது. ரூ. 565.07 இலட்சம் பின்வரும் பணிகளுக்காக நகராட்சிகளால் பயன்படுத்தப்பட்டது:—

| தொடர் எண் பணிகளின் பெயர். (1) | ஒப்புதல் அளிக்கப் பட்ட தொகை. (2) (ரூபாய் இலட்சத்தில்) | பயனடைந்த நகராட்சி களின் எண் ணிக்கை. (3) |
|---|---|---|
| 1. புதிய துளைக் கிணறுகள் தோண்டுதல் .. .. | 185.35 | 90 |
| 2. லாரிகள் மூலமாக நீர் வழங்கல். | 101.00 | 81 |
| 3. வழிவகை முன் பணங்கள் (தற் போதுள்ள நீர் ஆதாரங்களை மேம்படுத்தல்.) | 54.65 | 28 |
| 4. புதிய கிணறுகள் தோண்டுதல் .. | 41.77 | 31 |
| 5. தனி குடிநீர் குழாய்கள் போடுதல் | 18.50 | 92 |
| 6. தற்போதுள்ள கிணறுகளை ஆழப் படுத்தல். | 41.86 | 28 |
| 7. தற்போதுள்ள நீர் ஆதாரங்களை மேம்படுத்தல். | 122.50 | 25 |
| மொத்தம் .. | 565.07 | |



1987 ஏப்ரல் 28]

1987 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணப் பணிகள்:

1986 ஆம் ஆண்டிலும் தென்மேற்குப் பருவமழையும் வட கிழக்குப் பருவமழையும் பொய்த்துவிட்டதாலும், தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் கடும் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்நிலைமையின் கடுமையைத் தணிக்க, நகராட்சிகளில் பின்வரும் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக, அரசு ரூ. 60.50 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது—

| தொடர் எண்ணும் பணிகளின் பெயரும். (1) | ஒதுக்கீடு செய்யப் பட்ட தொகை. (2) (ரூபாய் இலட்சத்தில்.) | குறிப்புகள். (3) |
|---|---|---|
| 1. 174 புதிய துளைக் கிணறுகள் தோண்டுதல். | 43 50 | அனைத்து மாவட்டங் களுக்கும். |
| 2. குடிநீரை லாரிகள் மூலம் கொண்டு செல்லுதல். | 4.00 | கன்னியாகுமரி மாவட்டம். |
| 3. குடிநீர் வழங்கு குழாய் இணைப் பாதைகளைத் தனியே அமைத்தல். | 13.00 | ஷை |
| | 60.50. | |

குடிநீர் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு, கூடுதல் தொகை ரூ. 12.92 கோடி அனுமதிப்பதற்கான செயற்குறிப்புகள், நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து வரப்பெற்றன. அச்செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

[1987 ஏப்ரல் 28

**நகராட்சிகளுக்கு நிதியுதவி அளித்தல், அகவிலைப்படி உதவித் தொகை வழங்குதல்:**

நகராட்சி ஊழியர்களுக்கு அவ்வப்போது அரசு ஊழியர்களுக்குச் சமமான அகவிலைப்படி அனுமதித்ததன் விளைவாக ஏற்படும் கூடுதல் செலவைச் சமாளிப்பதற்காக, நிதி பற்றாக்குறை உள்ள நகராட்சிகளுக்கு அகவிலைப்படி உதவித்தொகை வடிவில் நிதியுதவி அளிப்பதற்காக, அரசு கொள்கை அளவில் ஒரு முடிவு எடுத்துள்ளது. நகராட்சிகளுக்கு அகவிலைப்படி உதவித் தொகை அனுமதிப்பதற்காக ரூ. 1,276.97 இலட்சம் அளவிற்கு நிதியுதவி அளிப்பதற்கு நகராட்சி நிருவாக இயக்குநரிடமிருந்து வரப்பெற்ற செயற்குறிப்புகள் அரசால் பரிசீலிக்கப்பட்டன. ரூ. 250 இலட்சம் அளவிற்கு, அகவிலைப்படி உதவித் தொகையை முன்பணமாக அரசு அனுமதித்தது. இந்த நடவடிக்கையினால் எதிர்காலத்தில் அவ்வப்போது திருத்த அகவிலைப்படி வழங்குவதைச் செயல்படுத்தவும், நகராட்சிகளில் நிதி நெருக்கடி ஓரளவு குறையவும் ஏதுவாகும். எனவே, அதன் விளைவினால் ஏற்படும் மீதங்கள் பொது மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் செய்து கொடுப்பதற்கு நகராட்சிகளால் பயன்படுத்தப்பட இயலும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**அன்றாட நிருவாகத்தை நடத்துவதற்கு நகராட்சிகளுக்கு வழிவகை முன்பணமாக நிதியுதவி வழங்குதல்:**

நிதிப் பற்றாக்குறையை எதிர் நோக்கியுள்ள பெரும்பாலான நகராட்சிகள், அவற்றின் பணியாளர்களுக்கு (ஆசிரியர்கள், பொது சுகாதாரப் பணியாளர்கள் உட்பட) சம்பளம், பண்டிகை முன்பணம் முதலானவற்றை வழங்குவதற்காக வழிவகை முன்பணம் அனுமதிக்குமாறு அரசிடம் கோரியுள்ளன. இதற்கு முன்பணமாக அரசு ரூ. 200 இலட்சம் அனுமதித்தது. இந்த தொகை ரூ. 200 இலட்சம், 48 நகராட்சிகளுக்கு, அவற்றின் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காகவும், மின் கட்டணங்கள் முதலானவற்றின் நிலுவைகளைச் செலுத்துவதற்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

**நகராட்சி நிதி நிலைமையைப் பெருக்குதல்.**

**நகராட்சிகளின் நிதி நிலைமையைப் பெருக்கும் வகையில் அரசு,**

பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:—

**1. மோட்டார் வண்டிகள் வரியின் பங்கு ஒதுக்கீட்டை அதிகரித்தல்:**



1987 ஏப்ரல் 28]

மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் கிடைக்கும் வருவாயிலிருந்து நகராட்சிகளுக்குச் சேர வேண்டிய பங்கு ஒதுக்கீட்டைத் திருத்தியமைக்க அரசு, தனிக்குழு ஒன்றை அமைத்துள்ளது. தற்போது, நகராட்சிகளில் சாலைப் பராமரிப்புக்காக நகராட்சிகளுக்கு, சுங்க ஈட்டுத் தொகையிலிருந்து ரூ. 14.66 இலட்சம் மானியமும், உரிம கட்டணங்களிலிருந்து ரூ. 1.92 இலட்சமும், ரூ. 12.00 இலட்சம் தனி மானியமாகவும் வரையறுக்கப்பட்ட ஈட்டுத் தொகைகள் கிடைக்கின்றன. இக்குழு தனது பரிந்துரைகளை அரசுக்குத் தெரிவித்துள்ளது.

இத்தனிக் குழுவின் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்ட பின்னர் நகராட்சிகளுக்கு, வரும் ஆண்டுகளில் மோட்டார் வண்டிகள் வரி வருவாய் ஒதுக்கீட்டில் அதிக அளவு பங்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2. கேளிக்கை வரி பங்கு ஒதுக்கீட்டை அதிகரித்தல்:**

தற்போது கேளிக்கை வரி குறித்த இணக்க வரிவிதிப்பு ஏற்பாட்டு மூலம் அரசுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் கிடைக்கும் கேளிக்கை வரி வருவாய் பங்கு ஒதுக்கீடு குறித்த விவரங்கள் வருமாறு:—

| தொடர் எண்ணும் உள்ளாட்சி மன்றத்தின் பெயரும். | அரசின் பங்கு. | உள்ளாட்சி மன்றங்களின் பங்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. II, III நிலை நகராட்சிகள். | 40 சதவீதம். | 60 சதவீதம். |
| 2. தேர்வு நிலை, I நிலை நகராட்சிகள். | 35 சதவீதம். | 65 சதவீதம். |

கேளிக்கை வரி குறித்த இணக்க வரி விதிப்பு ஏற்பாட்டின்கீழ் II, III நிலை நகராட்சிகளைப் பொறுத்தவரையில் 10 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகவும், தேர்வு நிலை மற்றும் I நிலை நகராட்சிகளைப் பொறுத்த வரையில் 10 சதவீதத்திலிருந்து 35 சதவீதமாகவும் வரி வசூல் கட்டணங்களின் பங்கை அரசு உயர்த்தியுள்ளது.

[1987 ஏப்ரல் 28

கேளிக்கை வரி குறித்த இணக்க வரிவிதிப்பு ஏற்பாடு, செயலில் இல்லாத பகுதிகளைப் பொறுத்தவரையில் (அதாவது சிறப்பு நிலை நகராட்சிகளும் மாநகராட்சிகளும்) அரசுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்குமிடையிலான வரி வருவாய் பங்கு ஒதுக்கீடு வருமாறு :—

| தொடர் எண்ணும் வரியின் பெயரும். | | அரசின் பங்கு. | உள்ளாட்சி மன்றங்களின் பங்கு. |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| | | (சதவீதம்) | |
| 1. அடிப்படை கேளிக்கை வரி | .. | 10 | 90 |
| 2. அடிப்படை கேளிக்கை வரி மீதான மேல் வரி .. | .. | .. | 100 |
| 3. அடிப்படை கேளிக்கை வரி மீதான கூடுதல் மேல் வரி | .. | 100 | .. |
| 4. காட்சி வரி .. | .. | 100 | .. |
| 5. காட்சிவரி மீதான மேல் வரி | .. | .. | 100 |
| 6. காட்சி வரி மீதான கூடுதல் மேல் வரி. | | 100 | .. |

இணக்க வரி விதிப்பு ஏற்பாடு செயல்படுத்தப்படாத மற்றும் இணக்க வரி விதிப்பு ஏற்பாடு செயல்படுத்தப்படும் பகுதிகளில் மேற்கூறிய அனைத்து இனங்களையும் பொறுத்தவரையில் அரசுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்குமிடையே பங்கு ஒதுக் கீட்டை முறையே 10 சதவீதம், 90 சதவீதம் என்ற வீதத்தில் ஒதுக்கீடு செய்வதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

3. நகராட்சி பள்ளிகளைப் பராமரிக்கும் பொறுப்பை அரசு தன் பொறுப்பில் எடுத்துக் கொள்ளுதல்:

நகராட்சிகளும், நகரிய குழுக்களும் பராமரித்து வந்த பள்ளி கனை அரசு தன் பொறுப்பில் எடுத்துக் கொள்ளவும், பள்ளிகளை பராமரிக்கும் பொறுப்பிலிருந்து நகராட்சிகளை விடுவிக்கும் வகையில் நகராட்சி ஆசிரியர்களையும், ஆசிரியர் அல்லாத பணி யாளர்களையும் அரசுப் பணியாளர்களாகக் கருதும் வகையிலும் அரசு கொள்கை முடிவு ஒன்றை எடுத்துள்ளது. நகராட்சிகளும் நகரியங்களும் நடத்தி வந்த கல்வி நிறுவனங்களை அரசு



1987 ஏப்ரல் 28]

தன் பொறுப்பில் எடுத்துக் கொள்வதற்கான வழி முறைகளை வகுப்பதற்காக தனிக்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. நகராட்சிப் பள்ளிகள் நிருவாகம் அரசுக்கு மாறும்போது, நகராட்சிகள், நிதிப் பொறுப்பிலிருந்தும், பள்ளிகளை நடத்தும் நிருவாகப் பொறுப்புகளிலிருந்தும் பெரும் அளவில் விடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4. ஆதாயம் தரத்தக்க தொழில் திட்டங்கள் :

நிதிநிலை மோசமாகவுள்ளவையும், சொந்தமாக நிலங்களை வைத்துள்ளவையுமான நகராட்சிகள், பேருந்து நிலையங்கள், அங் காடிகள், கடைகள் முதலியவை போன்ற ஆதாயம் தரத்தக்கத் தொழில்களை மேற்கொள்ளும்வகையில் நிதியுதவி அளிக்க வகைசெய்யும் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது நகராட்சிகள், மக்களுக்குத் தேவையான சுகாதார வசதிகளை செய்து கொடுக்கும் வகையில் போதிய அளவுக்கு வருவாய் அதிகரிக்கும்.

நகராட்சி நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு மேற்படி நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதன்மூலமும், VII ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தையும் செயல்படுத்துவதன்மூலமும், நகராட்சிகளின் நிதி ஆதாரங்கள் பெரும் அளவில் மேம்பாட்டை யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசு மேற்கொள்ளும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் நகராட்சிகளும் நகரியங்களும் முக்கிய பங்கு வகிக்கும்.

சென்னை மாநகராட்சி.

நாட்டின் பெருமை வாய்ந்த மாநகராட்சிகளுள் ஒன்றான சென்னை மாநகராட்சி 1635 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29 ஆம் நாளில் உருவாக்கபட்டு தனது 300-வது ஆண்டை 1987-88 ஆம் ஆண்டில் எய்துகிறது. சுமார் 174 ச.கி.மீட்டருக்கும் அதிகமான பரப்பளவுள்ள இந்நகரில் 42.50 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இம்மாநகர் தனது 300-வது ஆண்டு விழாவினை சிறப்பாகக் கொண்டாடவிருக்கிறது. 1919 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட (அவ் வப்போது திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது) சென்னை மாநகர் முனிசிபல் மாநகராட்சி சட்டத்தின்கீழ் மாநகராட்சி தனது பணிகளை இயக்கி வருகின்றது.

**நிருவாகம்:**

1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ஆம் நாள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மன்றம் கலைக்கப்பட்டது. அந்நாள் முதல் மாநகராட்சி மன்றம் மற்றும் நிலைக் குழுக்களது பணியினை கவனிப்பதற்காக சிறப்பு அலுவலர் நியமிக்கப்பட்டார். மாநகராட்சியின் தலைமை நிர்வாக அலுவலர் ஆணையாளராவார்.

**நிதிநிலை:**

சொத்து வரி, சொத்து மாற்றத்திற்கான தீர்வை, கேளிக்கை வரி, விற்பனை வரி மீதான கூடுதல் வரி ஆகியவை மாநகராட்சிக்கு வருவாய் தரும் முக்கிய இனங்களாகும். 1987-88 ஆம் ஆண்டில் சொத்து வரி வசூலில் ரூ. 26.50 கோடி இலக்கை அடையும் வகையில் வரி வசூல் பணி தீவிரமாக்கப்பட்டுள்ளது. சொத்து வரியை ஒழுங்குபடுத்துவதன் மூலமும் மற்றும் இதர திட்டங்கள் மூலமாகவும் மாநகராட்சியின் வருவாயினை அதிகரிக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**போக்குவரத்து :**

**பேருந்து தடச்சாலைகள்:**

1,600 கி.மீ. சாலைகள் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 300 கி.மீ. சாலைகள் பேருந்து தடச்சாலைகளாகும். 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 200 லட்சம் செலவில் சுமார் 40 கி.மீ. சாலைகளைப் புதுப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மிகவும் பழுதடைந்துள்ள சாலைகள் மட்டுமே புதிய முறைகள் மூலம் புதுப்பிக்கப்படவுள்ளன. புதுப்பிக்கப்படவிருக்கும் முக்கியமான சாலைகள் பின்வருமாறு:—

1. புரசைவாக்கம் நெடுஞ்சாலை (செங்கற்சூளை சாலை முதல் கெல்லீஸ் வரையில்).

2. ஆவடி சாலை (மூன்றாவது அவென்யூ முதல் எம்.டி.எச். சாலை வரையில்).

3. அண்ணா நகர் 2-வது அவென்யூ (10-வது மெயின் ரோடு முதல் கால்வாய் வரையில்).

4. யானைக்கவுனி பாலம் சாலை (சைடன் ஹாம்ஸ் சாலை முதல் கால்வாய் வரையில்).



5. டாக்டர் நடேசன் சாலை (இராதாகிருஷ்ணன் சாலை முதல் ஐஸ் ஹவுஸ் காவல் நிலையம் வரையில்).

6. அவ்வை சண்முகம் சாலை (மௌபரேஸ் சாலை முதல் இராமசாமி சாலை வரையில்).

7. முட்டுக்காடு சாலை (திருவள்ளுவர் சாலை முதல் நகர எல்லை வரையில்).

8. சி.பி. இராமசாமி சாலை (டி. டி. கே. சாலை முதல் ஆர். ஏ. புரம் 3-வது மெயின் சாலை வரையில்).

**உட்புறச் சாலைகள் :**

பேருந்து தடச்சாலைகளல்லாத இதர சாலைகளையும் விஸ்தரிக்கப்பட்ட பஞ்சாயத்து பகுதிகளிலுள்ள சாலைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு ரூ. 240 லட்சம் நடப்பு நிதியாண்டில் செலவிடப்படும்.

**பாலங்கள் /தரைப்பாலங்கள்/சுரங்கப்பாதைகள் :**

கடந்த 10 ஆண்டுகளில் நகரில் போக்குவரத்து மிகவும் அதிகரித்துள்ளது. தற்போதுள்ள பாலங்கள் மிகவும் குறுகியவைகளாக இருப்பதால் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன. எனவே தற்போதுள்ள பாலங்களை படிப்படியாக அகலப்படுத்த மாநகராட்சி உத்தேசித்துள்ளது. இதன் முதற் கட்டமாக குக்ஸ் சாலை பாலமும் முண்டக்கண்ணி அம்மன் கோவில் பாலமும் அகலப்படுத்தப்பட்டுள்ளன. பாந்தியன் சாலை, கமாண்டர் இன் சீப் சாலை, கிரீம்ஸ் சாலை, மூர் சாலை, ஆகியவைகள் சந்திக்கும் இடத்தில் கூவம் நதியின் மேலுள்ள ஆண்டர்சன் பாலத்தை ரூ. 70.00 லட்சம் செலவில் அகலப்படுத்த இப்பொழுது திட்டமிடப்பட்டுள்ளது.

மேட்லி சாலையில் இருப்புப்பாதையை கடக்குமிடத்தில் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்காக ரூ. 155.00 இலட்சம் செலவில் சுரங்கப்பாதை கட்டும் பணி துவக்கப்பட்டுள்ளது. இதற்காக 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 50.00 லட்சமும், 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 105.00 லட்சமும் நிதி ஒதுக்கப்பட்டது. 1987-88 ஆம் ஆண்டில் இச்சுரங்கப் பாதை கட்டி முடிக்கப்படும்.

1987-88-ஆம் ஆண்டில், புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கெல்லிஸ் சாலை, ஹார்லேஸ் சாலை, மேட்டவாக்கம் நெடுஞ்சாலை ஆகிய சாலைகள் சந்திக்கும் இடத்தில் உள்ள கெல்லிஸ் பாலத்தை ரூ. 100 லட்சம் செலவில் அகலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தனியார் தெருக்கள்:**

தனியார் தெருக்களிலுள்ள வீட்டுச் சொந்தக்காரர்கள் சாலை தெரு விளக்கு, வடிகால்கள் ஆகியவைகள் அமைப்பதற்காகும் செலவில் 25 சதவிகிதம் தொகையை முன்னதாக செலுத்த வேண்டும் என்ற விதியை அரசு தளர்த்தியுள்ளபடியால் தனியார் தெருக்களில் இவ்வசதிகளை அமைக்கும் பணியை தீவிரப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக வரும் 5 ஆண்டுகளில் அரசு ரூ. 430 லட்சம் சென்னை மாநகராட்சிக்கும், குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் ஒதுக்கீடு செய்யும். சாலைகள் அமைத்தபின் தோண்டப்படுவதைத் தவிர்ப்பதற்காக குடிநீர் வடிகால் வாரியத்தோடு தொடர்பு கொண்டு இத்தெருக்களில் வடிகால் அமைத்த பின்பே சாலைகள் மற்றும் தெருவிளக்கு அமைக்கப்படும். 1987-88 ஆம் ஆண்டில் சுமார் 300 தனியார் தெருக்கள் அபிவிருத்தி செய்யப்படும்.

**போக்குவரத்து பொறியியல்:**

சென்னை நகர சாலைகளில் பேருந்து மற்றும் இதர வாகனங்களின் போக்குவரத்து மிகவும் அதிகரித்துள்ளது. இயன்ற வரையில் குறுகிய சாலைகள், பாலங்கள் ஆகியவைகள் அகலப்படுத்தப்படுகின்றன. சீரான போக்குவரத்திற்கு இடையூறு அளிக்கும் விதத்தில் அமைந்துள்ள இதர பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டு இவ்விடையூறுகளைக் களைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

**தெரு விளக்குகள்:**

பழுதடைந்த மின்கம்பிகள்/தெரு விளக்குகள், உடனுக்குடன் மாற்றியமைக்கின்றன. சோடியம் ஆவி விளக்குகள் அதிக ஒளிச் சக்தியை தருவதாலும் மின் சக்தியை குறைவாகப் பயன்படுத்துவதாலும் முக்கியமான தெருக்களில் குழல் விளக்குகளுக்குப் பதிலாக சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்படுகின்றன. பழுதடைந்த புதை மின் கம்பிகளுக்குப் பதிலாக புதிதாக



மின் கம்பிகள் அமைப்பதற்காகவும், பல்வேறு இடங்களில் புதிய தெரு விளக்குகள் அமைப்பதற்காகவும் முக்கியமான பேருந்து தடச் சாலைகளில் சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதற்காகவும் 1987-88-ஆம் ஆண்டில் ரூ. 160.00 லட்சம் செலவு செய்யப்படும். ஜெமினி மேம்பாலத்தில் ரூ. 9.00 லட்சம் செலவில் ஒளிமிகும் விளக்குகள் நேர்த்தியான முறையில் அமைக்கப்படும். இம்மாதிரியான ஒளிமிகு விளக்குகள் சென்னை நகரத்தின் இதர பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

**மழைநீர் வடிகால்:**

1,600 கி.மீ. சாலைகள் சென்னை மாநகரில் உள்ளன. அவற்றிற்கு 1,040 கி.மீ. நீள மழைநீர் வடிகால்கள் அமைக்க வேண்டும். ஆனால் 507 கி.மீ. நீளத்திற்கு மட்டுமே தற்போது மழைநீர் வடிகால் வசதியுள்ளது. திருவான்மியூர், சாலிக் கிராமம், கொளத்தூர் போன்ற இடங்களில் இணைக்கப்பட்ட பகுதிகளிலும் 1987-88-ல் கூடுதல் மழைநீர் வடிகால் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வழங்குகின்ற நிதியைக் கொண்டு ரூ. 13.11 லட்சம் மதிப்பீட்டில் தெங்கு ரெட்டி சுரங்கப்பாதையில் மழைநீர் வடிகால் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேவைகளை முன்னிட்டு மழைநீர் வடிகால்கள் புதியதாக அமைக்கப்பட இருக்கின்றது. இதற்கென 1987-88-ல் ரூ. 316.17 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**துப்புரவு:**

நகரை சுத்தமாக வைத்துக் கொள்வதில் துப்புரவு முக்கியமான பங்கு வகிக்கின்றது. மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக நகரைச் சுற்றிலும் புதிய குடியிருப்புகளும் குடிசைப் பகுதிகளும் தோன்றியபடியாலும் அதிகமான குப்பை நாளொன்றுக்கு 2,000 டன் வரை சேருகிறது. இக்குப்பைகளை அகற்றுவது மிகவும் முக்கியமான காரியமாகும். நகர எல்லைகளுக்குள் குப்பைகளைக் கொட்டி வைப்பதற்கான இடம், அவ்விடத்திற்கு குப்பைகளைக் கொண்டு செல்வதற்குத் தேவையான வண்டிகள் ஆகியவைகள் போதுமானதாக இல்லையென்ற போதிலும் இப்பணிகள் இயன்றவரையில் சிறப்பாக செய்யப்பட்டு வருகின்றன. குப்பைகளை எடுத்துச் செல்லும் வண்டிகளது எண்ணிக்கையை அதிகரிக்கவும், காம்பாக்டர்களை ...

துப்புரவுப் பணியினை இயந்திரமயமாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1987-88-ஆம் ஆண்டில் ரூ. 8.00 லட்சம் செலவில் பரிசோதனைக்காக ஒரு காம்பாக்டர் வாங்கப்படும். சோதனை வெற்றிகரமாக அமைந்தால் மேலும் காம்பாக்டர்கள் வாங்கப்படும்.

திடக் கழிவுகளைப் பயன்படுத்தி மின்சக்தி தயாரிக்கும் வாய்ப்பு உள்ளபடியால் இதற்கான இயந்திரம் ஒன்றினை வெளிநாட்டு உதவியுடன் நகரில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. குப்பைகளை எரிக்கும் சாதனம் மூலம் மின் உற்பத்தி செய்யும் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்யும் பணி பாரத் ஹெவி எலெக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**முதலமைச்சர் சத்துணவுத் திட்டம்:**

மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவுத் திட்டம், சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் 15—9—1982 முதல் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. இதன் மூலம் 1,16,712 பள்ளி செல்லும் சிறுவர்கள் பயனடைகிறார்கள். இதற்காக 1987-88-ஆம் ஆண்டில் ரூ. 150.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மரம் நடுதல்:**

நகரைப் பசுமையாக வைத்துக் கொள்வதுடன் சுற்றுப்புறச் சூழல்களை மேம்படுத்தும் முயற்சியாக சாலைகள் மற்றும் பூங்காக்களில் பெருமளவில் மரங்கள் நடப்பட்டு வருகின்றன. 1986-87-ஆம் ஆண்டில் நகரில் சுமார் 10,000 மரங்கள் நடப்பட்டன. 1987-88-ஆம் ஆண்டில் இதைப்போல் மரங்கள் நடப்படும். இம் மரங்களை பாதுகாப்பதற்கும் அவைகளை நன்கு வளர்ப்பதற்குமாக தக்க பாதுகாப்பு அமைக்கப்பட்டு போதுமான நீர் ஊற்றுவதற்காக இரண்டு ஊர்திகளும் பயன்படுத்தப்பட உள்ளன.

**நிர்வாகத்தை மாற்றி அமைத்தல்:**

மக்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்யும் பொருட்டும், அவர்களுடைய குறைகளை துரிதமாகக் களையும் பொருட்டும் மாநகராட்சி நிர்வாகத்தைச் சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியின் 300-வது ஆண்டு நிறைவு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் மாநகர மக்களுக்கு இதர பணிகளை மேற்கொள்ளும் ஏனைய அரசுத் துறை நிறுவனங்களுடன் இணைந்து மாநகராட்சி பல நீண்ட கால அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்த உள்ளது. இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் ஓர் உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.



**மதுரை மாநகராட்சி.**

1971-ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதி முதல், மதுரை நக
ராட்சி மாநகராட்சியாக ஆக்கப்பட்டது. மதுரை மாநகரின் பரப்பு
51.85 சதுர கிலோ மீட்டர் ஆகும். மக்கட்தொகை 1986-ஆம்
வருடத்தில் மதுரை மாநகராட்சியின் மக்கட் தொகை 9.4[illegible] லட்சங்
களாகும். இதன் பரப்பளவு 51.85 சதுர கிலோ மீட்டராகும்.
பெரிய அளவிலான வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றிட
மாநில அரசு நிதி உதவிகள் வழங்கி வருகிறது.

**முதல் அமைச்சரின் சத்துணவுத் திட்டம்:**

மாநகராட்சி, அரசின் முழு நிதி உதவியுடன் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. 1986-87-ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்த மாநகராட்சிக்கு ரூ. 19 லட்சம் வழங்கியது. இதன் மூலம் 24,[illegible]44 குழந்தைகள் பயன் பெற்றனர். 1987-88-ஆம் ஆண்டிற்கு ரூ. 19 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**வருவாய் தரும் இனங்கள்:**

ஓர்க்ஷாப் சாலையில் புதிய மார்க்கெட் ஒன்றை ரூ. 10 லட்சம் செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1987-88-ஆம் ஆண்டில் கோரிப்பாளையத்தில், தேவர் சிலை அருகில் கூடுதலாக ஓர் அங்காடி மையம் கட்டும் பணி ஆரம்பிக்கப்படும்.

**கல்வி:**

மதுரை மாநகராட்சி, தனது நிர்வாகத்தின்கீழ் 58 ஆரம்பப் பாடசாலைகளையும் 12 நடுநிலைப் பள்ளிகளையும் 8 மேல்நிலைப் பள்ளிகளையும் நடத்தி வருகிறது. ரூ. 36 லட்சம் செலவில் கூடுதல் கட்டிடங்கள் 1987-88-ஆம் ஆண்டில் கட்டி முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மகப்பேறு மனைகள் மற்றும் மருந்தகங்கள்:**

பகுதி 2 திட்டத்தின்கீழ் 1987-88-ஆம் ஆண்டு ரூ. 5 லட்சம் செலவில் அருள்தாஸ்புரத்தில் மகப்பேறு நிலையம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 28

**சுகாதாரம் :**

இவ்வாண்டில் தற்போதுள்ள 37 மாட்டு வண்டிகள், 39 இதர வண்டிகளுடன் கூடுதலாக 100 மாட்டு வண்டிகளும், நான்கு லாரிகளும், ரூ. 17 லட்சம் செலவில் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் குப்பை கழிவுகளை விரைவாகவும் துப்புரவாகவும் அப்புறப்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மின் மயானம் அமைத்தல்:**

ரூ. 25 லட்சம் செலவில் தத்தனேரி புதைகுழி மையத்தில் மின் மயானம் கட்டும் பணி பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**சாலைகள்:**

மதுரை மாநகராட்சி கீழ்க்கண்ட சாலைகளை பராமரித்து வருகிறது.

| | நீளம் (கி.மீ.) |
|---|---|
| 1. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் | 4.190 |
| 2. பி.டி. சாலைகள் | 238.364 |
| 3. மெட்டல் ரோடு | 83,276 |
| 4. கிராவல் ரோடு | 55.616 |
| 5. கல்தளம் பாவப்பட்ட சந்துகள் | 51,739 |
| 6. கல்தளம் சிமெண்ட் சிலாப்புகள் பாவப்பட்ட நடைபாதைகள். | 41,450 |

கிராவல் மற்றும் மெட்டல் சாலைகளில், 20 கிலோ மீட்டர் நீளத்திற்கு தார்ச்சாலைகளாக 1987-88-ல் மாற்றி அமைக்கப்படும்.

**பாலங்கள்:**

அருப்புக்கோட்டை சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணியை அரசு பொதுப்பணித் துறையினர் துவக்கியுள்ளனர்.



1987 ஏப்ரல் 28]

## குடிநீர் விநியோகம் மற்றும் சாக்கடை திட்டங்கள்.

**குடிநீர் :**

நகருக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட நீர் விநியோகம், வைகை ஆற்றிலுள்ள கீழ்க்கண்ட நீரேற்று நிலையங்களிலிருந்து பெறப்படுகிறது:—

| | நாள் ஒன்றுக்கு. |
|---|---|
| 1. மேலக்கால நீரேற்று நிலையம் | 55 லட்சம் காலன் |
| 2. கோச்சடை நீரேற்று நிலையம் | 45 லட்சம் காலன் |
| 3. கோச்சடை சேகரிப்பு கிணறு | 25 லட்சம் காலன் |
| 4. மணலூர் நீரேற்று நிலையம் | 5 லட்சம் காலன் |
| மொத்தம் | 110 லட்சம் காலன் |

தினசரி நகருக்கு மொத்தத்தில் 110 லட்சம் காலன் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. இந்த 110 லட்சம் காலன்கள் குடிநீரை பொதுமக்களுக்கு 2,583 பொதுக் குழாய்கள் மற்றும் 47,864 வீட்டு இணைப்புக் குழாய்கள் மற்றும் 20 லாரிகள் மூலமாக விநியோகிக்கப்படுகிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் தலா ஒவ்வொரு நபருக்கும் 12 காலன்கள் ஆகும். பாதுகாக்கப்பட்ட நீர் விநியோகத்துடன் 272 ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் 19 பம்ப் செட்டுகள் இணைந்த கிணறுகள் 430 குழாய்க் கிணறுகள் மற்றும் 4,154 குழாய்கள் மூலமும் 65 லட்சம் காலன்கள் கிணற்று நீர் வழங்கப்படுகிறது. கிணற்று நீர் விநியோகம் நாள் ஒன்றுக்கு தலா எட்டு காலன்கள் ஆகும்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலை அபிவிருத்தி செய்யும் பொருட்டு கீழ்க்கண்ட அபிவிருத்திப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன:—

ரூபாய் 332 இலட்சம் மதிப்பீட்டில் மதுரை நகருக்கு உடனடியாக குடிநீர் வழங்குதலை அதிகமாக்கும் பணிகள்.

(i) மணலூர் நீரேற்று நிலையம்.

( ) திருப்புவனம் நீரேற்று நிலையம்.

(iii) தச்சமூர்த்து நீரேற்று நிலையம்.

[1987 ஏப்ரல் 28

இந்த மூன்று நீரேற்று நிலையங்களின் பணிகள் முடிக்கப்பட்டு, மின் வழங்குதல் பெற்றவுடன் விரைவில் செயல்பட உள்ளன. மேற்கண்ட மூன்று நிலையங்களிலிருந்தும் மொத்தத்தில் நாள் ஒன்றுக்கு 30 லட்சம் காலன் தண்ணீர் எதிர்பார்க்கப்படுகிறது. [illegible] லிருந்து மூன்னோடி நீர் வழங்குதல் மூலம் தினசரி [illegible] காலன் பெறப்படுகிறது.

**வைகை அணையிலிருந்து மதுரை மாநகராட்சிக்கு நீர் வழங்குதலை அதிகம் ஆக்குதல்:** (மதிப்பீடு ரூ. 32.51 கோடி).

இந்தத் திட்டத்தை உலக வங்கியின் உதவியுடன் ரூ. 32.51 கோடி மதிப்பீட்டில் செய்து முடிக்க ஒப்பளிப்பு ஆகியுள்ளது. திட்டத்தின் மொத்த மதிப்பீட்டில் 80 சதவிகிதம் 5 வருடங்களுக்கு நிறுத்தி வைப்பு உட்பட 8.5 சதவிகித வட்டி மற்றும் 25 வருடங்களில் திருப்பிக் கொடுக்கும்படியான கடன் மற்றும் உலக வங்கி நிதியிலிருந்து ஈடு செய்யப்படும். எஞ்சியுள்ள 20 சதவிகிதமாக மாநில அரசிடமிருந்து பெறப்படும். தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மூலமாக இப் பணி நிறைவேற்றப்படும். அடுத்த நான்கு ஆண்டுகளில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டம் முடிவானவுடன் [illegible] இத்திட்டம் மூலமாகவும் மற்றும் தற்போது இயங்கி வரும் நிலையங்கள் மூலமாகவும் மொத்தத்தில் நாள் ஒன்றுக்கு 200 இலட்சம் காலன் குடிநீர் கிடைக்கும்.

**[illegible] பணிகள்:**

[illegible] நீர் விநியோகம் சம்பந்தமாக கீழ்க்கண்ட பணிகள் செய்யப்பட்டுள்ளன:

1. நகரின் [illegible] பகுதிகளில் ரூ. 1.50 இலட்சம் மதிப்பீட்டில் 5,000 மீட்டர் நீளத்திற்கு குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டன.

2. ரூ. 8.50 இலட்சம் மதிப்பீட்டில், 17,000 மீட்டர் நீளத் [illegible] குழாய்கள் அமைக்கும் பணியை எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் அங்குல அளவுள்ள 15 ஆழ் குழாய் கிணறுகளும் [illegible] அங்குல அளவுள்ள 24 ஆழ் குழாய்க் கிணறுகளும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1987 ஏப்ரல் 28]

[illegible] ரூ. 1.50 இலட்சம் மதிப்பீட்டில் 300 பொதுக் குழாய் [illegible] கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5. தற்போது 20 லாரிகள் உள்ளதில் 8 வண்டிகள் ஓடும் [illegible] 12 வண்டிகள் [illegible] இணைக்கப்பட்ட பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட நீர் விநியோகம் செய்வதற்கு 12 லாரிகளை ரூ. [illegible] இலட்சம் செலவில் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**வடிகால்:**

1929-ஆம் ஆண்டு முதற்கொண்டு மதுரை நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் உள்ளது. அது முதல், வைகை ஆற்றின் தென் பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டு, ஆறு பாதாளச் சாக்கடை பிளாக்குகளாகப் பிரிக்கப்பட்டும் உள்ளது. பின்பு 1965 முதல் கூடுதலாக மூன்று பிளாக்குகள் இயக்கப்பட்டன. பிறகு, வைகை ஆற்றின் வடகரைப் பகுதிக்கும் ரூ. 190.08 இலட்ச மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஒன்றினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு 1983-ஆம் ஆண்டு முதல் இயக்கப்பட்டுள்ளது. மேலும் கீழ்க்கண்ட பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தால் [illegible] நிதியின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**மதுரை சாக்கடைத் திட்டம்:**

இஸ்மாயில்புரம்—மதிப்பீடு ரூ. 24.60 இலட்சம்.

இத்திட்டத்தில், 249 மீட்டர் நீளத்திற்கு குழாய்கள் அமைக்கும் பணி நீங்கலாக எல்லாப் பணிகளும் முடிவுற்றன. உப பிளாக் பணி [illegible] குடிசை ஆக்கிரமிப்புகள் காரணமாகவும், உப பிளாக் [illegible] நிலத்தைக் கையகப்படுத்துவதன் காரணமாகவும் பணி தடைபட்டுள்ளது. ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்துதல் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் பணிகள் நிறைவேற்றிட விவரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சந்தைப்பேட்டையில் கூடுதலாக நீர் இறைக்கும் நிலையும் [illegible] படுத்துதல்:**

மதிப்பீடு ரூ. [illegible] இலட்சம்.

பம்ப் செட்டு நிறுவ வேண்டியுள்ளது. ஏனைய பணிகள் நிறைவுற்றுள்ளன. இப்பணியை விரைவில் நிறைவேற்றிட குடிநீர் வடிகால் வாரியத்தினர் நடவடிக்கைகள் எடுத்துள்ளனர்.

**ஆவடியாபுரத்தில் கழிவுநீர்ப் பண்ணை அபிவிருத்திப் பணிகள்:**

மதிப்பீடு ரூ. 30.31 இலட்சம்.

இரண்டு நீர்த் தேக்கங்கள் (லகூன்) கட்டும் பணி முடிவடைந்துள்ளது. பம்பு செட்டுகள் நிறுவப்பட்டு விரைவில் செயல்படவுள்ளது.

நகரில் உள்ள 65 வார்டுகளில் 27 வார்டுகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டு விட்டது. 12 வார்டுகளில் பகுதியாகச் செய்யப்பட்டுள்ளது.

ரூபாய் 7.31 கோடி செலவில் நகரின் பல்வேறு பகுதிகளில் மழை நீர் வடிகால் கட்டும் பணி உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆய்வுப் பணிகளை தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

**கழிவு நீர் அகற்றும் பணிகள்:**

1987-88-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட கழிவுநீர் அகற்றும் பணிகளை மாநகராட்சி மூலம் நிறைவேற்றிட உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

1. ரூபாய் 16 இலட்சம் செலவில் 8,000 மீட்டர் நீளத்திற்கு திறவைச் சாக்கடை கட்டுதல்;

2. ரூபாய் 2 இலட்சம் செலவில் 1,000 மீட்டர் நீளத்திற்கு பாதாளச் சாக்கடை கட்டுதல்.

**கொசு ஒழிப்புப் பணி:**

நீர்த் தேக்கங்களில் மருந்து தெளிப்பதுடன், கப்பி அல்லது கம்பூசியா போன்ற மீன்கள் வளர்க்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. முதிர்ச்சி பெற்ற கொசுக்களை அழிப்பதற்கு மாலத்தியான் புகை அடிப்பதும் நடைபெற்று வருகிறது. மலேரியா நோய் பற்றி தகவல் வந்தவுடன் பென்சைல் ஹெக்சா குளோரைடு



கலப்பு மருந்தினை பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து 300 கஜம் தூரத்தில் வீடுகள் மற்றும் மாட்டுத் தொழுவங்கள் முதலியவற்றிற்கு தெளிக்கப்படுகிறது. 1987-88 ஆம் ஆண்டிற்கு இப் பணிக்காக ரூபாய் 5 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

**மின்சாரம்:**

கீழ்க்கண்ட வகைப்படி உரிமம் பெற்ற மாநகராட்சிப் பகுதியில் 16,761 தெரு விளக்குகளை பராமரித்து வருவதுடன் கூடுதலாக சேர்க்கப்பட்ட பகுதிகளில், 4,387 தெரு விளக்குகளையும் மாநகராட்சி பராமரித்து வருகிறது:—

| | |
|---|---|
| 1. சோடியம் ஆவி விளக்குகள் | 1,152 |
| 2. மெர்க்குரி ஆவி விளக்குகள் | 1,852 |
| 3. டியூப் விளக்குகள் | 12,651 |
| 4. இதர விளக்குகள் | 1,106 |
| மொத்தம் | 16,761 |

நகரின் முக்கியமான பகுதிகளில் ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் நல்ல வெளிச்சத்தை ஏற்படுத்திட 50 சோடியம் ஆவி விளக்குகள், 300 மெர்க்குரி ஆவி விளக்குகள் மற்றும் 500 டியூப் விளக்குகள் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மின் விநியோகத்தை அபிவிருத்தி செய்ய 2? டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கவும் தற்போதுள்ள 20 டிரான்ஸ்பார்மர்களின் திறனை அதிகப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள நிலைக்கு மேலாகச் செல்லும் லைன்களையும், தரைக்கு கீழாகச் செல்லும் கேபிள்களையும் ரூ. 40 லட்சம் செலவில் மாற்றி புதுப்பிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. தெரு விளக்குகள் பராமரிப்புக்காக ரூ. 15 லட்சம் 1987-88-ல் ஒதுக்கப்பட்டுள்ளது.

**[illegible]**

கோவை நகராட்சி வளர்ச்சியுற்று 1981 ஆம் ஆண்டின் கோவை மாநகராட்சி சட்டத்தின்படி 1981 ஆம் ஆண்டு மே திங்கள் முதல் நாள் முதல் மாநகராட்சியாக உயர்நிலை எய்தியது. நகரத்தின் மொத்த பரப்பளவு 105.60 சதுர கிலோ மீட்டர். 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரின் மொத்த

[1987 எப்ரல் 28

மக்கள் தொகை 7,04,514 ஆகும். 1987-88 ஆம் ஆண்டின் திட்ட
வரவு ரூ. 2,015.26 இலட்சம், செலவு ரூ. 2,230.32 இலட்சம் ஆகும்.
மாநகராட்சி கீழ்க்கண்ட பல்வகை திட்டங்களை 1987-88-ல் செயல்
படுத்த முடிவு எடுத்துள்ளது.

### முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டத்தின்படி
ஐந்து முதல் ஒன்பது வயது, பத்து முதல் பதினொன்று வயதுள்ள
தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் படித்து வரும் 33,898
மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். 1987-88 ஆம் ஆண்டி
லும் நகராட்சிகளின் இயக்குனரின் நிர்வாகத்தின் கீழ் இத்திட்டம்
தொடர்ந்து செயல்படும். இப்பணிக்காக 95 உணவிடும் மையங்
களை இம்மாநகராட்சி நடத்தி வருகிறது.

**சாலைகள்:**

இம்மாநகராட்சி கீழ்க்கண்ட வகைகளில் 450.108 கி.மீ. சாலை
களை பராமரித்து வருகிறது.

| | |
|---|---|
| | கி.மீ. |
| 1. சிமென்டு கற்சாலை, தார் சாலை சந்துகள் முதலியன | 410.650 |
| 2. கற் சாலைகள் | |
| 3. மண் சாலைகள் | 33.678 |
| | 5,780 |
| | 450.108 |

1987-88 ஆம் ஆண்டில் 155 லட்ச ரூபாயில் தற்போது உள்ள
கற்சாலை மற்றும் மண் சாலைகளையும், மேலும் புதியதாக கற்
சாலைகள் அமைத்து மொத்தம் 80 கி.மீ. நீளம் தார்தளமிட திட்ட
மிட்டுள்ளது. ரூ. 120 லட்சத்தில் தற்போதுள்ள சாலைகளும்
பராமரிக்கப்படும். இதைத் தவிர சுழல் நிதியிலிருந்து சுமார்
5 கி.மீ. நீளத்திற்கு சாலையினை புதியதாக அனுமதிக்கப்பட்ட
நகர் பகுதிகளில் அமைத்திட திட்டமிட உள்ளது.



1987 எப்ரல் 28]

**கட்டிடங்கள்:**

மேட்டுப்பாளையம் சாலையிலுள்ள காலி மனையில் சுமார் ரூ.
150 இலட்சத்தில் நவீன வசதிகளுடன் மன்றக் கூடம், மாநாட்டுக்
கூடம், கம்ப்யூட்டர் அறை முதலியவை உள்ளடங்கிய கட்டிடம்
கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதனை மூன்று பகுதிகளாக
கட்ட திட்டமிட்டு 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 50 இலட்சம் ஒதுக்க
உள்ளது. மாநகராட்சி ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்ட
ரூ. 66 லட்சம் 1987-88-ல் ஒதுக்கப்பட்டுள்ளது.

**தண்ணீர் விநியோகம்:**

1934 ஆம் ஆண்டு முதல் பாதுகாக்கப்பட்ட சிறுவாணி ஆற்று
நீர் கோவை நகர மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ரூ. 21.65
கோடியில் தண்ணீர் வழங்க சிறப்புத் திட்டம் முடிந்த பிறகு
நாள் ஒன்றுக்கு 340 லட்சம் லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டதை
நாள் ஒன்றுக்கு 630 லட்சம் லிட்டராக உயர்த்தப்பட்டது. இதனை
மேலும் தேவைக்கேற்ப நாள் ஒன்றுக்கு 1,014 லட்சம் லிட்டராக
உயர்த்த இயலும். 550 கி.மீ. நீளம் குழாய்கள் அமைக்கப்பட்டு
நகர் முழுதும் தண்ணீர் வழங்குவதுடன், குழாய்கள் இல்லாத
பகுதிகளுக்கு தண்ணீர் லாரிகள் மூலமும் வழங்கப்படுகிறது. 784
பொதுக் குழாய்களும் 40,300 வீட்டுக் குழாய்களும் தரப்பட்டுள்
ளன. நகரில் புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கும் நகரின்
விடுபட்ட பகுதிகளுக்கும் குழாய்கள் அமைக்கப்பட்டு வருகிறது.
இப்பணி 1987, ஜூன் திங்களுக்குள் முடிக்கப்பட உள்ளது.

**கழிவுநீர் திட்டம்:**

சுகாதார நிலையினை நன்கு பேண பாதாள சாக்கடைத்
திட்டம் மிக அவசியமாகிறது. இதனை குடிநீர் வாரியம் செயல்
படுத்தி வருகிறது. முதல் இரண்டு பகுதித் திட்டங்கள் முடிந்து
நன்கு இயங்கி வருகிறது. மூன்றாம் பகுதியின் பணி முன்னேற்
றத்தில் உள்ளது. நகரில் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்
கும், விடுபட்ட பகுதிகளுக்கும் பாதாள சாக்கடைத் திட்டத்
தினை விரிவுபடுத்த ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. நகரில்
புதியதாக சேர்க்கப்பட்ட பகுதியில் பாதாள சாக்கடை வசதி
கள் இல்லை. பாதாள சாக்கடை கட்ட சுமார் 600 இலட்சம் செல
வாகும். நிதி நிலைமை போதுமானதாக இல்லாததால் சாக்கடை

கட்டும் பணியினை பகுதி பகுதியாகவே எடுத்து முடிக்க வேண்டியுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் மழை நீர் வடிகால்கள் கட்டவும், இருக்கும் சாக்கடைகளை பராமரிக்கவும் ரூ. 140 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது.

**பொதுச் சந்தைகள்:**

மௌலானா முகமது அலி சந்தை நகரின் நெருக்கடியான பகுதியில் அமைந்துள்ளதாலும், போக்குவரத்திற்கு இடைஞ்சலாக உள்ளதாலும், உக்கடத்தில் காலியாக உள்ள பகுதிக்கு ரூ. 50 இலட்சம் செலவில் மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் சிங்காநல்லூரிலும், காளிங்கராயர் தெருவிலும் தினசரி சந்தைக்கான கட்டிடம் 1987-88-ல் ரூ. 7 இலட்சம் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**வியாபாரக் கூடம்:**

வருவாய் தரும் இனங்களில் முதலீடு செய்து வருவாயைப் பெருக்க நகரின் முக்கிய இடங்களில் வியாபாரக் கூடங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 1987-88-ல் ரூ. 130 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**நகரமைப்பு நிலம் கையகப்படுத்துதல்:**

கீழ்க்கண்ட பணிக்காக நிலங்கள் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக 1987-88-ல் ரூ. 17 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

| பணி. | எண்ணிக்கை. |
|---|---|
| 1. சாலை அமைத்தல் மற்றும் அகலப்படுத்துதல் | 13 |
| 2. இடுகாடு | |
| 3. உரக் கிடங்கு | 2 |
| 4. தினசரி சந்தை | 1 |
| 5. பொதுக் கழிப்பிடம் | 1 |
| 6. சாக்கடை அமைத்தல் | 1 |
| 7. பிரிவு அலுவலக விரிவாக்கம் | 1 |
| 8. பொருள் போக்குவரத்து உந்து (லாரிகள்) நிலையம் | 1 |
| மொத்தம் | 21 |



**தெரு விளக்குகள்:**

மாநகராட்சியால் கீழ்க்கண்டவாறு 8,325 தெரு விளக்குகள் பராமரிக்கப்படுகின்றன:—

| | எண்ணிக்கை. |
|---|---|
| 1. சோடியம் ஆவி விளக்குகள் | 906 |
| 2. பாதரச ஆவி விளக்குகள் | 1,274 |
| 3. குழாய் விளக்குகள் | 5,966 |
| 4. இதர விளக்குகள் | 179 |
| மொத்தம் | 8,325 |

நகரின் முக்கிய சந்திப்புகளில் உள்ள 325 பாதரச ஆவி விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாகவும், 400 குழாய் விளக்குகளை பாதரச ஆவி விளக்குகளாகவும் மாற்ற திட்டமிட்டு இதற்காக ரூ. 10 லட்சம் 1987-88-ல் ஒதுக்கப்பட்டு உள்ளது.

மேலும், ரூ. 20 லட்சம் செலவில் 20 மின் மாற்றிகள் அமைத்திடவும், 1987-88 ஆம் ஆண்டு திட்டத்திலும் வகை செய்யப்பட்டுள்ளது. தெரு விளக்குகளை பராமரிக்கவும் ரூ. 30 லட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. நகரின் புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு மின் வாரியத்தினால் கீழ்க்கண்டவாறு தெரு விளக்குகள் நிர்வகிக்கப்படுகின்றன:—

| | எண்ணிக்கை. |
|---|---|
| 1. சோடியம் ஆவி விளக்குகள் | 5 |
| 2. பாதரச ஆவி விளக்குகள் | 71 |
| 3. குழாய் விளக்குகள் | 5,778 |
| மொத்தம் | 5,854 |

சென்னை-600 008.

**பொது சுகாதாரம்:**

மாநகராட்சியின் வருவாயில் பெரும் பகுதி பொது நலப்
பணிக்கும், கழிவுப் பொருள்களை அகற்றும் பணிக்காகவும்
செலவிடப்படுகிறது. தற்போது 1,708 சுகாதாரப் பணி
யாளர்கள் உள்ளனர். நகரின் பரப்பளவு மற்றும் மக்கட்
தொகையினை கணக்கில் கொண்டால், நகரத்தைத் தூய்மை
யாகப் பேண இந்தச் சுகாதாரப் பணியாளர்கள் போதுமான
தாக இல்லை. தற்போது அவசர சுகாதார தேவையைப் பூர்த்தி
செய்ய சேரன் போக்குவரத்துக் கழகத்திடம் பழைய ஐந்து
பேருந்துகள் வாங்கி மூடியுடன் கூடிய லாரிகளாக மாற்றிட
உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுகாதாரப் பணியாளர்களுக்கு குடி
யிருப்பும், பொதுக் கழிப்பிடம், மருந்தகங்கள் கட்ட மேலும்
ரூ. 30 லட்சம் 1987-88 ஆம் ஆண்டில் திட்டத்தில் ஒதுக்கப்பட்
டுள்ளது. கோயம்புத்தூர் நகரில் கொசுக்களை ஒழிக்கும் பணி
தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. நவீன மின்சார சுடுகாடு ஒன்று
சத்தி சாலையில் ரூ. 20 இலட்சத்தில் கட்ட திட்டமிடப்
பட்டுள்ளது.

**பலவகை:**

**அ. கம்ப்யூட்டர்:**

சொத்து வரி வசூலினை மேம்படுத்தவும், துரிதமாக கேட்புப்
பட்டியல் தயார் செய்யவும், மற்றும் இதர கணக்கிடும் பணிகளை
துரிதமாகச் செயல்படுத்தவும் ஒரு கம்ப்யூட்டர் ரூ. 10 இலட்சம்
செலவில் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**ஆ. கல்யாண மண்டபம்:**

ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு உதவும் வகையில் குறைந்த
வாடகையில் நான்கு கல்யாண மண்டபங்கள் 1987-88-ல் கட்ட
திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காகவும், தற்போதுள்ள கல்யாண
மண்டபங்களை நிர்வகிக்கவும் ரூ. 50 லட்சம் வரும் ஆண்டு திட்டத்
தில் ஒதுக்க உள்ளது.

**இ. நீச்சல் குளம்:**

வ.உ. சிதம்பரனார் பூங்காவில் ரூ. 10 இலட்சம் செலவில் நீச்சல்
குளம் அமைக்க வரும் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஈ. கேளிக்கை:**

பொதுமக்களின் வசதிக்காக ரூ. 20 இலட்சம் செலவில் வ. உ.
சிதம்பரனார் பூங்காவில் தொங்கும் கம்பி ஊர்தி ஒன்று அமைத்
திட 1987-88-ல் வகை செய்யப்பட்டுள்ளது.



**உ. நகரை அழகுபடுத்தும் திட்டம்:**

நகரை தூய்மைப்படுத்தவும், அழகுபடுத்தவும் நகரில் பரவ
லாகக் குவிந்துள்ள கற்கள், மண் இவைகளை தானே அகற்றிச்
சேர்க்கும் தானியங்கி பொறி ஒன்றினை ரூ. 20 லட்சத்தில் வாங்க
திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், நகரில் பல இடங்களில் குவிக்கப்பட்டுள்ள குப்பை
களை துரிதமாக அப்புறப்படுத்த தானே அகற்றி பொது எருக்
கிடங்கிற்குள் சேர்க்கும் பொறி ஒன்றினை ரூ. 15 லட்சத்தில்
வாங்கப்படவுள்ளது.

**ஊ. மரம் நடுதல்:**

1987-88-ல் நகரின் முக்கியமான சாலைகளில் மரக்கன்றுகள்
நட்டு வளர்க்க ரூ. 2 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.